விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

64—

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 13413—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூர் பிள்ளையார் கோயில் தெருவில் 1992-93-ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

65—

கா.உஞ்சி விடுதியில் மேல்நிலைத்தொட்டி அமைத்தல்

வினா எண் 13436—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் கா. உஞ்சி விடுதியில் 1992-93-ல் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா.உஞ்சி விடுதிக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்பட்ட மின்விசைத் திட்டத்தின் அனைத்து கட்டுமானப் பணிகளும் நிறைவுற்றன. மின்இணைப்பு பெறப்பட்டவுடன் திட்டம் விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

66—

பெருமகளூர் பேரூராட்சியில் கையிறைப்பான் அமைத்தல்

வினா எண் 14020—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, பெருமகளூர் பேரூராட்சி, வள்ளுவர் நகரில் கையிறைப்பான் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

67—

மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வடகாட்டில் அமைத்தல்

வினா எண் 14030—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு ஆதி திராவிடர் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நடப்பு நிதியாண்டில் வடகாடு ஆதிதிராவிடர் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதுமில்லை. வடகாடு ஆதி திராவிடர் தெருவிலுள்ள கையிறைப்பான் ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் இருப்பதால் அப்பழுதை நிவர்த்தி செய்து கொடுக்க ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவரங்குளம் அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

68—

பின்னவாசல் ஊராட்சியைப் பிரித்தல்

வினா எண் **14034—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பின்ன வாசல் ஊராட்சியைச் சேர்ந்த சித்தாதிக்காட்டை தனி ஊராட்சியாகப் பிரிக்க 1992-93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

69—

எட்டாம்குளத்திற்கு நீர்த்தேக்க மேல்நிலைத் தொட்டி கட்டுதல்

வினா எண் **14055—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, எட்டாங்குளம் கிராமத்திற்கு நீர்த்தேக்க மேல்நிலைத் தொட்டி கட்டித்தர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆலங்குளம் தொகுதி, எட்டாங்குளம் கிராமத்திற்கு குடிநீர்த் திட்டம் அமைக்க இரண்டு ஆழ்துளைக் கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட 1992-93-ஆம் நிதியாண்டில் திட்டமிடப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நீர் உந்து நிலையம், நீர் உந்து குழாய் மற்றும் பகிர்மானக் குழாய் பதித்தல் முதலிய வேலைகள் அனைத்தும் 1993-94-ஆம் நிதியாண்டில் செய்து முடிக்கப்பட்டது. ஒரு ஆழ்துளைக் கிணற்றில் மின்விசை மோட்டார் பொருத்தப்பட்டு திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இரண்டாவது ஆழ்குழாய்க் கிணற்றில் மின் மோட்டார் பொருத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

70—

பாலகிருஷ்ணாபுரத்திற்குத் தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 14056—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஒன்றியம் பாலகிருஷ்ணாபுரத்திற்கு தார்ச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆயின்குடி தெற்கிலிருந்து மாத்தூர் ராமசாமிபுரம்வரை தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாத்தூர் இராமசாமிபுரத்திலிருந்து பாலகிருஷ்ணாபுரம்வரை தார்ச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை.

71—

சின்னரெட்டவயல் மெயின் சாலையில் நிழற்குடை அமைத்தல்

வினா எண் 14303—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சின்னரெட்டவயல் மெயின் சாலையில் 1992-93-ல் நிழற்குடை ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

72—

சாந்தாம்பேட்டையில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் 14311—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவசத்திரம் ஒன்றியம், சாந்தாம் பேட்டையில் தென்பாதியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சாந்தாம் பேட்டையில் நிறுவப்பட்டுள்ள குடிநீர்த்திட்டத்தின் மூலம் சாந்தாம்பேட்டை தென் பகுதிக்கும் குடிநீர் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளதால், இப்பகுதிக்கு தனியாக ஆழ்க்குழாய்க் கிணறு அமைக்கத் தேவையில்லை.

73—

காயாவூர் ஊராட்சியைப் பேராவூரணி ஒன்றியத்துடன் இணைத்தல்

வினா எண் 14323—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஊராட்சியைப் பிரித்து 1992-93-ல் பேராவூரணி ஒன்றியத்தில் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

74—

நாடியம் கிராமத்தில் கைப்பம்பு அமைத்தல்

வினா எண் 14343—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, நாடியம் கிராமத்தில் 1-வது வார்டில் குளக்கரை அருகில் கைப்பம்பு அமைக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சி, நாடியம் கிராமம் 1-வது வார்டு குளக்கரையின் அருகில் 100 மக்கட் தொகை உள்ளது. இப்பகுதியில் நாடியம் குடிநீர் திட்டத்திலிருந்து ஒரு குடிநீர் மேடை அமைக்கப்பெற்று குடிநீர் விநியோகமாகிறது. இதுவே போதுமானதாகும்.

75—

பேராவூரணி ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 14793-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆத்தூரில், 1992-93-இல் பெரிய அளவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

76—

திருவிடைமருதூர் ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 14800—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருப்பந்துறை, மாத்தூர், பெரப்படி ஆகிய ஊராட்சிகளில் 1992-93-இல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பந்துறை மற்றும் பெரப்படி ஆகிய இரு குடிநீர் திட்டங்களும் 1994-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளும், மாத்தூர் குடி நீர் திட்டம் 1995-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளும் முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

77—

செங்கிப்பட்டியில் குடிதண்ணீர் வழங்கத் திட்டம்

வினா எண் 15045—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஒன்றியத்தில் செங்கிப்பட்டியில் உள்ள ஆதி திராவிடர் காலனிகளுக்கு குடிதண்ணீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செங்கிப்பட்டி குடியிருப்புக்கு எல்.ஐ.சி. மூலம் ரூ. 7.40 இலட்சத்திற்கு குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் காலனியில் 750 மீட்டர் நிலத்திற்கு பகிர்மானக் குழாய் பதித்தும், 5 எண்ணிக்கை பொதுக் குழாய்கள் அமைத்தும் குடிநீர் வசதி தரப்பட உள்ளது.

78—

சாதயம்பட்டியில் குடி தண்ணீர் வழங்கும் திட்டம்

வினா எண் 15046—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஒன்றியம், ஆவாரம்பட்டி ஊராட்சி சாதயம் பட்டியில் உள்ள ஆதிதிராவிடர் காலனிக்கு குடிதண்ணீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

79—

பூதலூர் ஒன்றியத்தில் குடிநீர் வழங்கத் திட்டம்

வினா எண் 15048-திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) பூதலூர் ஒன்றியம், ஆதிதிராவிடர் காலனிக்கு குடி தண்ணீர் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பூதலூர் குடியிருப்புக்கு 1992-93-இல் எல்.ஐ.சி. திட்டத்தின் கீழ் ரூ. 6.64 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயலுக்கு

எடுத்துக் கொள்ளப்பட்டு 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு வருகின்றது. அதில் ஆதி திராவிடர் காலனியில் 600 மீட்டர் நீளத்திற்கு 63 மி.மீ. விட்ட முள்ள பகிர்மானக் குழாயும் 6 பொது குடிநீர்க் குழாயும் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. விரைவில் திட்டம் செயலாக்கத்திற்குக் கொண்டுவரப்படும்.

80—

மாதாம்பட்டினத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 15474-திரு. து. மூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் மாதாம்பட்டினம் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

81—

உபயவேதாந்தபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயந்திரப் பழுதினை நீக்குதல்

வினா எண் 15678- டாக்டர் க. கோபால்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, உபயவேதாந்தபுரம் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நீண்ட நாட்களாக இயங்காமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை இயக்க வைக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நீரேற்று இயந்திர பழுது காரணமாக மின் இறைப்பான் சில நாட்களாக ஓடவில்லை. அதனைப் பழுது நீக்கம்

செய்து திட்டத்தை இயக்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. துரிதமாகச் செயல்பட்டு, விரைவில் மக்களுக்குப் பயன்படும் வகையில் உள்ளாட்சி நிர்வாகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

82—

சீர்காழி தொகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் **15734**-*திரு. து. மூர்த்தி:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியிலுள்ள எடமணலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

83—

தலைக்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் **15855**-*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், தலைக்காடு கிராமத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தலைக்காடு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

84—

கண்ணன்மேட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வழங்குதல்

வினா எண் **15856**—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், கண்ணன்மேடு கிராமத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

85—

உலகாச்சிக்காடு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் **15887**-திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், உலகாச்சிக்காடு கிராமத்தில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

86—

நாணத்திடலில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் **16200**—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம், இரண்டாம் புளிக்காடு ஊராட்சி, நாணத்திடல் ஆதிதிராவிடர் தெருவிற்கு 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

87—

செந்தலையிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுதுபார்த்தல்

வினா எண் 16203-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் செந்தலையிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை 1992-93-ல் பழுதுபார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

88—

ஊமத்த நாட்டிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டியின் மின் மோட்டாரைப் பழுதுபார்த்தல்

வினா எண் 16204-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்த நாட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் 1992-93-ல், 5 குதிரை சக்தி உள்ள மோட்டார் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

89—

பாட்டாங்கண்ணி ஆற்றங்கரையில் போர்வெல் அமைத்தல்

வினா எண் 16211—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புளிக்காடு மேல் பகுதியில் பாட்டாங்கண்ணி ஆற்றங்கரையில் குடியிருக்கும் மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு 1992-93-ல் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

90—

அனந்தகோபாலபுரத்தில் போர்வெல் அமைத்தல்

வினா எண் 16214—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரம் தொடக்கப் பள்ளிக்கு அருகில் ஒரு போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் 1992-93-ல் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

91—

மேலசித்தர்காட்டில் குடிநீர் வழங்க நடவடிக்கை

வினா எண் 16775—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மேலசித்தர்க்காடு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி செயல்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : 1992-93-ம் ஆண்டில் ரூ. 32.20 லட்ச மதிப்பீட்டில் முழுமையாக குடிநீர் திட்டம் அனுமதிக்கப்பட்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. திட்டம் விரைவில் மக்கள் பயனுக்கு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

92—

ஏனாதிமங்கலத்தில் குடிதண்ணீர் கைப்பம்பு அமைத்தல்

வினா எண் 16790—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி, கங்கனாம்புத்தூர் வட்டத்திலிருக்கும் ஏனாதிமங்கலம் கிராமத்திற்கு குடிதண்ணீர் கைப்பம்பு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. 1989-90-ம் ஆண்டு 10,000 லிட்டர்கள் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மற்றும் இதர பணிகள் முடிக்கப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டது. தற்பொழுது செயல் பட்டு வருகிறது. இதுவே போதுமானதாகும்.

93—

சம்மந்தம் கிராமத்தை பெரியகுமட்டி ஊராட்சியில் சேர்த்தல்

வினா எண் 17383—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், பெரியகுமட்டி ஊராட்சி மற்றும் மஞ்சக்குழி ஊராட்சிகளில் உள்ள சம்மந்தம் கிராமத்தை பெரியகுமட்டி ஊராட்சியில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சேர்க்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

94—

நன்னிலம் தொகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல்

வினா எண் 17390—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, இடையாத்தாங்குடி பஞ்சாயத்து, கிடாமங்கலத்திற்கும் ராசாத்திமங்கலம் பஞ்சாயத்திற்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கிடாமங்கலம் குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பரிசீலனையிலுள்ளது. இந்த நிதியாண்டுக்குள் (1994-95) இத்திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

ராசாத்திமங்கலத்திற்கு வரும் நிதி ஆண்டுகளில் நிதிநிலைமைக்கு ஏற்ப குடிநீர்த் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

95—

நாகமநாயக்கன் பாளையத்தில் சுகாதாரக் கழிப்பிட வசதி செய்தல்

வினா எண் **19493—திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், ஆவுடையார்பாறை கிராமம், நாகமநாயக்கன் பாளையத்தில் சுகாதார கழிப்பிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆவுடையார் பாறை கிராமம் நாகமநாய்க்கன் பாளையம் குடியிருப்பில் ஒரு பொதுக் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது.

96—

ஏமகண்டனூரில் பெண்களுக்கு கழிப்பிட வசதி செய்தல்

வினா எண் **19506—திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொடுமுடியிலுள்ள ஏமகண்டனூர் கிராமத்தில் பெண்களுக்கு கழிப்பிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்ட மன்ற வினாவில் கேட்கப்பட்டவாறு 1992-93 ஆம் ஆண்டில் பெண்களுக்கு ஒரு நவீனக் கழிப்பிடம் கட்டப்பட்டு தற்போது பொது மக்கள் உபயோகத்தில் உள்ளது.

1995 மார்ச் 14]

97—

கழுநீர்குளத்தில் கழிவு நீர் வடிகால் கட்டுதல்

வினா எண் 20632—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், தெற்கு கழுநீர்குளத்தில், பாரதியார் தெரு, காந்தியார் தெருவிற்கு கழிவுநீர் தேங்காமல் இருக்க வடிகால் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய தெற்கு கழுநீர் குளத்தில் பாரதியார் தெரு, காந்தியார் தெருவிற்கு கழிவுநீர் தேங்காமல் இருக்க வடிகால் கட்டித் தரும் பணியை 1993-94-ம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் செய்ய (ரூ. 12,500 மதிப்பீட்டில்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

98—

வீரகேரளம்புதூரில் நவீன கழிப்பிடம் கட்டுதல்

வினா எண் 20692—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் வீரகேரளம்புதூரில் கழிப்பிடம் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், விரகேரளம்புதூர் நகராட்சியில் 6 இருக்கை உள்ள நவீன கழிப்பிடம் ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் நவீன கழிப்பிடம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

99—

கீழக்கலங்கலில் அடிபம்பு அமைத்தல்

வினா எண். 20721-*திரு. எஸ். எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கீழக்கலங்கல் கிராமத்தில் 5-வது வார்டில் அடி பம்பு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆலங்குளம் ஒன்றியம், கிழக்கலங்கல் கிராமத்தில் மூன்று அடிபம்புகளும், ஊராட்சியால் செயல்படுத்தப்பட்ட விசை பம்பு திட்டம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில் மேலும் ஒரு விசைபம்பு திட்டம் இக்கிராமத்திற்கு அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 5-வது வார்டு பயன்பெறும். எனவே இக்கிராமத்தில் 5-வது வார்டில் தனியாக ஒரு அடிபம்பு அமைக்க வழி இல்லை எனத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் தெரிவிக்கின்றார்.

100—

மருக்கலான்குளம் சலவைத் தொழிலாளர்களுக்கு தொட்டி அமைத்தல்

வினா எண். 20722-*திரு. எஸ். எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், மருக்கலான்குளம் சலவைத் தொழிலாளர்களுக்கு அரியநாச்சியம்மன் குளத்தருகில் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், மருக்கலான்குளம் சலவைத் தொழிலாளர்களுக்கு அரியநாச்சியம்மன்

குளத்தருகில் தொட்டி அமைத்துக் கொடுக்க தற்சமயம் அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

இரண்டாம் பட்டியல்

1—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 21052—திரு. டி. வேலையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் எத்தனை?

(ஆ) அவைகள் எந்தெந்த இடங்களில் உள்ளன?

(இ) கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ஏற்படுத்த என்னென்ன அம்சங்கள் கவனத்தில் மேற்கொள்ளப்படுகின்றன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) தற்போது பயனில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூன்று.

(ஆ) 1. தென்காசி, குற்றாலம், இலஞ்சி மேலகரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

2. சங்கரன்கோயில், புளியங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

3. சங்கர் நகர், நாரணம்மாள் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

(இ) நகராட்சி அல்லது பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் வழங்க திட்டம் தயாரிக்கப்படும் பொழுது அதன் அருகிலுள்ள முழு அளவு குடிநீர் வசதி பெறாத நகராட்சி அல்லது பஞ்சாயத்துக்களையும் நீரேற்று குழாய் செல்லும் வழித்தடத்தில் 2 கி.மீ. தொலைவுக்குள் உள்ள முழு அளவு குடிநீர் வசதி பெறாத கிராமங்களையும் தலைமைப் பணியிடத்தில் நீரின் கொள்திறன் மற்றும் தனிநபர் செலவு (per capita cost) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களையும் பஞ்சாயத்துக்களையும் இணைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயாரிக்க

கவனத்தில் கொள்ளப்படுகிறது என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் தெரிவிக்கின்றார்.

2—

ஜவ்வாது மலை ஊராட்சியை ஊராட்சி ஒன்றியமாக்குதல்

வினா எண் **21842—***திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை ஊராட்சியை ஊராட்சி ஒன்றியம் என்று தனியாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

3—

மாம்பட்டு கிராமத்தில் குடிநீர் வழங்க நடவடிக்கை

வினா எண் **21938—***திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

போளூர் வட்டம், மாம்பட்டு, கிராமத்தில் மேநீர் தேக்கத் தொட்டி மூலம் போதிய குடிநீர் வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

போளூர் வட்டத்தைச் சார்ந்த மாம்பட்டு ஊராட்சிக்குட்பட்ட மாம்பட்டு மற்றும் ஜடதாரிக்குப்பம் குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி அளிக்க 1987-88-ஆம் ஆண்டில் ரூ. 2.783 இலட்ச மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேநீர்த் தேக்கத் தொட்டி ஒன்றும் 13 பொதுக் குழாய்களும் அமைக்கப் பட்டு திட்டம் முடிக்கப்பட்டு ஊராட்சி வசம் பராமரிப்புக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் போளூர் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ளதால் இக்குடியிருப்புக்குக்

1995 மார்ச் 14]

கூடுதலாக குடிநீர் வசதியளிக்க ஊராட்சி ஒன்றியமே மாற்று ஆழ்துளைக் கிணறு அமைத்து நடவடிக்கை எடுக்கலாம்.

4—

சிக்கத்தம்பூரில் கழிப்பிடம் கட்டுதல்

வினா எண் 22069—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிக்கத்தம்பூரில் ஆண்களுக்குத் தனியாகவும் பெண்களுக்கு, தனியாகவும் கழிப்பிடம் கட்டித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்.

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நிதிப் பற்றாக்குறை காரணமாக சிக்கத்தம்பூரில் ஆண்களுக்குத் தனியாகவும் பெண்களுக்குத் தனியாகவும் கழிப்பிட வசதி செய்து கொடுக்க இயலாது உள்ளது.

5—

சிக்கத்தம்பூரில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 22070-திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிக்கத்தம்பூரில் அண்ணா நகரில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டித் தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

6—

நவாப்பேட்டை-மடுவங்கரை சாலையைச் சீர்செய்தல்

வினா எண் 22079—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், நவாப்பேட்டை-மடுவங்கரை சாலை பழுதடைந்துள்ளதை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிட்ட சாலை பழுது பார்க்கும் வேலை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது.

7—

பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் சாலையைச் சீர் செய்தல்

வினா எண் 22083—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், சிதம்பரநாதன் பேட்டை வசப்புத்தூர் (வழி சித்தலப்பாடி) சாலை பழுதடைந்துள்ளதை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பழுதுபார்க்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : நிதிப் பற்றாக்குறை காரணமாக சாலை பழுது பார்க்கும் வேலை செய்ய இயலவில்லை.

8—

அம்பாபுரத்தில் சாலையை சீர்செய்தல்

வினா எண் 22090—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், அம்பாபுரம் கிராமத்தில் உள்ள பெரியார் தெரு சாலை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : நிதிநிலை சரியில்லாத காரணத்தால் சாலை சீர் செய்யும் பணி எடுத்து செய்ய இயலவில்லை.

9—

ஜெயங்கொண்டானில் மயான பாதை அமைத்தல்

வினா எண் 22091—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், ஜெயங்கொண்டான் கிராமத்தில் ஆதிதிராவிடர் தெருவிற்கு மயானப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜெயங்கொண்டான் அரிசனக் காலனிக்கு மயானப்பாதை தற்போது உள்ளது.

10—

மன்னம்பட்டு வாய்க்காலில் நடைப்பாலம் கட்டுதல்

வினா எண் 22099—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், வடுகத்தெரு மேட்டிலிருந்து வசப்புத்தூர் செல்ல மன்னம்பட்டு வாய்க்கால் வழியே நடைப்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வரும் ஆண்டில் எடுத்துச் செய்யப்படவுள்ளது.

11—

சின்னகுமட்டி சாலையைச் சீர்செய்தல்

வினா எண் 22100—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், அரியகோஷ்டி-சின்னகுமட்டி சாலையை (வழி சில்லாங்குப்பம்) சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இந்த ஆண்டில் வெள்ளசேதம் பராமரிப்பு வேலை திட்டத்தில் எடுத்துச் செய்ய பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

12—

சிண்ணாண்டிக்குழி சாலையைச் சீர்செய்தல்

வினா எண் 22101—செல்வி கோ.மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், சக்கரபள்ளி மண்டபம்-சிண்ணாண்டிக்குழி சாலையை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைப்பணி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

13—

மதுவானமேடு சாலையைப் பழுதுபார்த்தல்

வினா எண் 22102—*செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், மதுவானமேடு சாலையை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பழுதுபார்க்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : நிதி பற்றாக்குறைக் காரணமாக சாலை பழுதுபார்க்கும் வேலை செய்ய இயலவில்லை.

14—

தச்சம்பாளையம் சாலையைப் பழுதுபார்த்தல்

வினா எண் 22104—*செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், தச்சம்பாளையம் சாலையை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பழுதுபார்க்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): வரும் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் எடுத்து செய்யப்படவுள்ளது.

15—

கிள்ளை தஞ்சமகத்து வாழ்க்கை சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 22105—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், கிள்ளை தஞ்சமகத்து வாழ்க்கை சாலை பழுதடைந்துள்ளதை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பழுதுபார்க்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வரும் ஆண்டில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 80 சதவிகிதம் வேலையில் எடுத்து செய்யப்படவுள்ளது.

16—

கிள்ளை-வடக்கு சாவடி சாலையைச் சீர்செய்தல்

வினா எண் 22108—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், கிள்ளை-வடக்கு சாவடி சாலையை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வரும் ஆண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 80 சதவிகிதம் வேலையில் எடுத்துக்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

17—

கொற்றவன்குடியில் குழாய்ப்பாலம் அமைத்தல்

வினா எண் 22234—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் கொற்றவன்குடியில் குழாய்ப்பாலம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாக்களில் கேட்கப்பட்ட வேலை நடப்பு நிதியாண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத்திட்ட 80 சதவிகிதம் திட்டத்தில் எடுத்து செயல்படுத்த பரிசீலனையில் உள்ளது.

18—

கொற்றவன்குடியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 22382—*செல்வி கோ. மல்லிகா :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், கொற்றவன்குடி கிராமத்தில் குடிநீர் மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): 1994-95-ம் ஆண்டில் இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

19—

அம்பாபுரம் மயான பாதையைச் சீர்செய்தல்

வினா எண் 22391—*செல்வி கோ. மல்லிகா :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், அம்பாபுரம் கிராமத்தில் மயானத்திற்குச் செல்லும் ப்பாதையை சரிசெய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நிதி பற்றாக்குறை காரணமாக சாலை சீர் செய்யும் பணி எடுத்து செயலாற்ற இயலவில்லை.

20—

திருப்பத்தூர் தொகுதியில் மயானப்பாதை அமைத்தல்

வினா எண் **22572**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கந்திலி, நாட்றம்பள்ளி, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் ஒன்றியங்களில் பெரும்பாலான பஞ்சாயத்துக்களில் மயானப்பாதை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கந்திலி, ஜோலார்பேட்டை, நாட்றம்பள்ளி, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் 1993-94-ம் ஆண்டு கூடுதல் ஜவகர் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ஊராட்சிகளில் மயானப்பாதை அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

21—

பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் சாலைகளைப் பழுதுபார்த்தல்

வினா எண் **22591**—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம் செப்புத்தூர் நடராஜபுரம் சாலை ஆதிவராகநல்லூர் மணல்மேடு, அருண்மொழிக் கவரப்பட்டு-

கீழப்பெரம்பைசாலை, தேவன்சாலை, வடக்கு பிச்சாவரம் சாலை தொத்தங்குடி மீதிக்குடி கிழக்கு காலனி சாலை ஆகிய சாலைகளைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாக்களில் கேட்டுக் கொண்ட கவரப்பட்டு கீழ்பெரம்பை சாலை முதல் லேயர் (First layer) ஜல்லி 1991-92-ல் பரத்தப்பட்டுள்ளது. அதன் பராமரிப்பு வேலை நடப்பு நிதியாண்டில் எடுத்து செய்ய பரிசீலிக்கப்படுகிறது.

ஏனைய சாலை பராமரிப்பு வேலைகள் நடப்பு நிதியாண்டில் ஜவகர் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்த பரிசீலனையில் உள்ளது.

22—

புவனகிரி ஒன்றியத்தில் பாலத்தைச் சீர்செய்தல்

வினா எண் 22596—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், மிராலூர் மானம்பாத்தான் வாய்க்காலில் குறுக்கே பழுதடைந்த நிலையிலுள்ள பாலத்தை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாக்களில் கேட்கப்பட்ட பாலம் சீர் செய்ய ரூ. 5 லட்சம் மதிப்பீட்டுக்கு அரசால் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வேலை நடப்பு நிதியாண்டில் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

23—

பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் சாலைகளைச் சீர்செய்தல்

வினா எண் 22597—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், பெரியபட்டியிலிருந்து பெரியாண்டிக்குழி சாலை கிள்ளி-குட்சிபாளையம் ஆகிய சாலைகளைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் செய்யும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாக்களில் கேட்கப்பட்ட வேலை நடப்பு நிதியாண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் 80 சதவிகிதம் திட்டத்தின் கீழ் நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.

24—

புவனகிரி ஒன்றியத்தில் சாலைகளைச் செப்பனிடுதல்

வினா எண் 22599—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம், சித்தேரி சாலை குறுக்கு ரோடு ஊராம்பூர் நெடுஞ்சாலை ஆகிய சாலைகளைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சீர் செய்யப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலை 1993-94-ல் சீர் செய்யப்பட்டு விட்டது.

1995 மார்ச் 14]

25—

பள்ளபாளையத்தில் நிழற்குடை அமைத்தல்

வினா எண் 23574—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாந்தோணி ஒன்றியம், பள்ளப்பாளையத்தில் கைகாட்டி பிரிவு பாதையில் பேருந்து நிற்கும் இடத்தில் நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பள்ளப்பாளையம் பிரிவு பாதையில் பேருந்து நிற்கும் இடத்தில் 1992-93-ம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிழற்குடை அமைக்கப்பட்டு விட்டது.

26—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 23756—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், வெஞ்சமான் கடலூர் கீழ்பாகம் கிராமம், மாதுரெட்டிப்பட்டியில் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச்

செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

27—

வீராவந்தபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 23792—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தொகுதி வீரானந்தபுரம் கிராமம் பெரிய காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம்.

28—

அண்ணாமலை நகரிய சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 23795—திரு. என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் தொகுதி அண்ணாமலை நகரீய மண் ரோடு சாலை செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாக்களில் கேட்கப்பட்ட சாலை செப்பனிடும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு வேலை நடப்பு நிதியாண்டில் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

29—

காட்டுமன்னார் கோயில் பேரூராட்சியில் சாலையைச் சீர்செய்தல்

வினா எண் **23801—**திரு. என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் பேரூராட்சி 12-வது வார்டு குப்புப்பிள்ளைச் சாவடிக்கு செல்லும் சாலை சீர் செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலை சீர்செய்யும் வேலை நடப்பு நிதியாண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

30—

சாலைகளை காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியில் மேம்பாடு செய்தல்

வினா எண் **23802—**திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோவில் தொகுதியில் காட்டுமன்னார் கோவில் பேரூராட்சி வார்டு 11-ல் துணை மின் நிலையத்தில் இருந்து பிள்ளையார் கோவில் தோலியத் தெரு வரையில் சாலை மேம்பாடு செய்து தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட வேலை நடப்பு நிதியாண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

31—

கோலியத் தெருவிற்கு சாலை மேம்பாடு செய்தல்

வினா எண் 23803—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் பேரூராட்சி வார்டு 11-ல் கோலியத் தெருவிற்கு சாலை மேம்பாடு செய்து தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்டுள்ள சாலைப் பணி நடப்பு நிதியாண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

32—

காட்டுமன்னார் கோவில் 12-வது வார்டு சாலையைப் பராமரித்தல்

வினா எண் 23807—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோவில் பேரூராட்சி 12-வது வார்டு கோவில்பத்து குளத்துத் தெருவிற்கு சாலை பராமரிப்பு செய்து தரப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலை பராமரிப்பு பணி 1994-95-ம் ஆண்டு சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1995 மார்ச் 14]

33—

அண்ணாமலை நகரியத்தில் சாலை ஓரங்களில் மரங்கள் நடுதல்

வினா எண் 23810—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோவில் தொகுதி, அண்ணாமலை நகரியம் நடராஜபுரம் சாலையிலிருந்து திடல் வெளிதெரு வரையிலுள்ள சாலை ஓரங்களில் மரங்கள் நடப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காட்டுமன்னார் கோவில் தொகுதி அண்ணாமலை நகர் நடராஜபுரம் சாலையிலிருந்து திடல் வெளி தெரு வரையுள்ள சாலை ஓரங்களில் அண்ணாமலை நகர் நகரியக் குழுவின் மூலம் மரங்கள் நடும் திட்டம் எதுவும் இல்லை.

34—

கரூர் தாலுக்காவில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 23841—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தாலுக்கா, காருடையாம்பாளையம், வால் நாயக்கன்பட்டியில் ஆதி திராவிடர்களுக்கென தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும்

அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

35—

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் **24060—**திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நெடுங்கூர், கார்வழி, அத்திப்பாளையம், மற்றும் தொக்குப்பட்டி ஆகிய இடங்களில் பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெடுங்கூர், கார்வழி, அத்திப்பாளையம் மற்றும் தொக்குப்பட்டி ஆகிய இடங்களில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடங்கள் 1993-94-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

36—

செந்தாரப்பட்டி பேரூராட்சியில் ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் **24120—**திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, செந்தாரப்பட்டி பேரூராட்சி குறும்பர் தெருவில் ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்க ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தலைவாசல் தொகுதி, செந்தாரப்பட்டி பேரூராட்சி 5-வது வார்டு குறும்பர் தெரு மிகவும் குறுகிய தெருவாக இருப்பதால்

ஆழ்துளை கிணறு அமைக்கும் ரிக் வண்டி, போக வரமுடியாத நிலையில் உள்ளது. எனவே அப்பகுதிக்கு ஆழ்துளை கிணறு அமைக்க இயலாத நிலை உள்ளது. அப்பகுதியில் ஒரு பொது குடிநீர்க்குழாய் உள்ளது.

37—

நரிக்குறவர் வீடுகளைப் புதுப்பித்தல்

வினா எண் 24121—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் ஒன்றியம் வீரகனூர் பேரூராட்சி, நரிக்குறவர் காலனியில் இடிந்து போன நரிக்குறவர் வீடுகளை புதுப்பித்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுது பார்த்து தர வழி வகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுதுபார்த்து தருவது என்றால் புதிதாக தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

38—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 24177—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், பள்ளமருதப்பட்டி, அத்திபாளையம், வல்லாகொளத்துப்பாளையம், வெள்ளியம்பாடி பாளையம், அம்மாப்பட்டி செல்வி நகர், கோடந்தூர் கிராமம், வடகரை காட்டுமுன்னூர் ஆகிய இடங்களில் ஆதி திராவிடர்களுக்காக இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

39—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **24182**— *திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சாந்தப்பாடி, சேந்தமங்கலம் கிராமம், குறிக்காரன்வலசு, வெஞ்சமான்கடலூர் கிழக்கு ஊராட்சி ஒத்தையூர் பெரிய மஞ்சுவளி கிராமம், நத்தால் நாயக்கனூர், திருமாணிக்கம்பட்டி ஆகிய இடங்களில் ஆதி திராவிடர்களுக்காக இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்படுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

40—

நாராயணபுரம் – மயில்பாறை தார்சாலை அமைத்தல்

வினா எண் **24414**—*திரு. ஏ. கே.சி.சுந்தரவேல்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வின்ாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

திருப்பத்தூர் தொகுதி நாராயணபுரம்-மயில்பாறை வரை 3 கிலோ மீட்டருக்குத் தார்ச் சாலை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள இடம் பட்டா நிலங்களாக உள்ளதால் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

41—

குறும்பட்டியில் பால்வாடிக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் **25301**—திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், குறும்பட்டியில் புதிதாக பால்வாடிக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், குறும்பட்டியில் ஏற்கெனவே உள்ள பால்வாடி சத்துணவு மையம் ஊராட்சி ஒன்றியம் மூலம் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தில் இயங்கி வருகிறது. புதிதாக பால்வாடிக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

42—

விராலிமலைப் பேருந்து நிலையத்தைச் செப்பனிடுதல்.

வினா எண் **25305**—திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை பேருந்து நிலையம் பழுதடைந்து இருப்பது அரசிற்கு தெரியுமா? ஆம் எனில் பழுது பார்க்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆம். விராலிமலை ஊராட்சி ஒன்றியம் விராலிமலையில் உள்ள பேருந்து நிலைய கட்டிடத்தில் உள்ள பழுதுகள் தற்சமயம் பழுது பார்க்கப்பட்டு விட்டது. மேலும் வெள்ளையடிக்கப்பட்டு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அப்பேருந்து நிலையத்தில் தற்சமயம் ரூ.21,000 மதிப்பீட்டில் புதிதாக ஓர் ஆழ்குழாய் கிணறு தோண்டப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட்டும் வருகிறது.

43—

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனடைந்தோர் விவரம்

வினா எண் 25306—திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதியில் 1992-93-ஆம் நிதியாண்டில் எத்தனை நபர்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் பெற்றுள்ளனர்?

(ஆ) ஆதி திராவிடர் எத்தனை பேர்? பிற்படுத்தப்பட்டோர் எத்தனை பேர்?

(இ) வரும் நிதியாண்டில் எத்தனை நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் கடன் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) குளத்தூர் தொகுதியில் 1992-93-ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தம் கடன் பெற்றவர்கள் 907 பேர்.

(ஆ) ஆதிதிராவிடர்கள் 426 பேர், பிற்படுத்தப்பட்டோர் 481 பேர்.

(இ) வரும் நிதியாண்டில் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் வழிகாட்டு நெறிமுறைக்கு உட்பட்டு இதேபோன்று ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் கொடுக்கப்படும்.

44—

வனச்சேரிப்பட்டியில் தொடக்கப்பள்ளிக் கட்டிடத்தைப் பழுதுபார்த்தல்

வினா எண் **25472—**திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, வெள்ளாள விடுதி ஊராட்சி, வனச்சேரிப்பட்டியில் இருக்கும் தொடக்கப்பள்ளிக் கட்டிடத்தைப் பழுது பார்க்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வனச்சேரிப்பட்டியில் இருக்கும் தொடக்கப்பள்ளி கட்டிடம் நல்ல நிலையில் உள்ளது. இக்கட்டிடம் சிறிய அளவில் உள்ளதால் 1994-95-ஆம் நிதியாண்டில் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் அல்லது வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

45—

மருங்கூரணிக்குத் தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் **25542—**திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, சுந்தம்பட்டி ஊராட்சியில் உள்ள மருங்கூரணிக்கு புதிதாகத் தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சுந்தம்பட்டி ஊராட்சி மருங்கூரணி கிராமத்தில் தற்போது 4 தெரு விளக்குகள் நல்ல முறையில் எரிந்து கொண்டிருக்கின்றன. மேலும்

1993-94-ஆம் ஆண்டு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் கூடுதலாக இரண்டு தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

46—

புதுக்கோட்டையில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல்

வினா எண் 25570—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் லாரிகள் மூலம் குடிதண்ணீர் கொடுப்பதற்கு 1992-93-ஆம் ஆண்டு ஆன செலவு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1992-93-ஆம் ஆண்டில் புதுக்கோட்டையில் லாரிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்ததில் மொத்தம் ரூ. 42,03,502 செலவாகியுள்ளது. இத்தொகையில் ரூ. 19.70 லட்சம் அரசு மானியமாகும்.

47—

புதுக்கோட்டை ஒன்றியத்தில் பள்ளிக்கட்டிடங்களைப் புதுப்பித்தல்

வினா எண் 25584—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், ஆட்டங்குடி மற்றும் சம்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள பள்ளிக் கட்டிடத்தைப் புதுப்பிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆட்டங்குடி பள்ளி நல்ல நிலையில் உள்ளது. சம்பட்டி விடுதி பள்ளிக் கட்டிடத்தில் கூரை பழுதாகி உள்ளது. கூரை மராமத்து செய்யும் வேலை ரூ. 5,000 மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1995 மார்ச் 14]

48—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் துரைச்சாமியாபுரம் என்ற கிராமம் அமைந்துள்ளது. இவ்வூருக்குத் தற்போது 2 நகரப் பேருந்துகள் வாயிலாக 22 சுற்றுக்கள் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போதைய பயணிகள் விகிதாச்சாரத்திற்கு இதுவே போதுமானதாகும்.

12—

சங்கரன்கோவில் – மருதன் கிணறுக்குக் கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் 27000—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், குருவிக்குளம் ஒன்றியம், சங்கரன்கோவிலில் இருந்து மருதன்கிணறு கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், குருவிக்குளம் ஒன்றியம், மருதன்கிணறு கிராமத்திற்குத் தற்போது கட்டபொம்மன் போக்குவரத்துக்

கழகத்தால் சங்கரன்கோவிலிலிருந்து ஒரு நகரப் பேருந்து மூலம் தினசரி 8 சுற்றுக்கள் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பேருந்திலேயே பயணிகள் விகிதாச்சாரம் போதிய அளவு இல்லாமல் வருவாயும் குறைவாக உள்ளது. ஆகவே, கூடுதல் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

13—

மேலநீலித நல்லூர் ஒன்றியத்தில் பேருந்து வசதி அளித்தல்

வினா எண் 27001—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம், தோணுகால் ஆதிதிராவிட கிராமம், கிருஷ்ணபுரம், மருதப்புரம், சில்லிகுளம் ஆகிய கிராமங்களுக்கு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், தோணுக்கால் கிராமத்தின் ஜனத்தொகை சுமார் 150 மட்டுமே உள்ளது. சாலையும் மணல் சாலையாகவும், குறுகியதாகவும் உள்ளதால் இங்கு பேருந்து இயக்க இயலாது. கிருஷ்ணபுரம், மருதப்புரம் ஆகிய கிராமங்களுக்கு தடம் எண் 13 சங்கரன் கோவிலிலிருந்து தினசரி 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. சில்லிகுளம் கிராமத்திற்கு ஒரு நகரப் பேருந்து தினசரி 4 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, சில்லிகுளம் கிராமத்திற்கு இந்தப் பேருந்து வசதியே போதுமானது.

14—

கோவில்பட்டி-ஆலங்குளத்திற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 27016—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டியிலிருந்து கழுகுமலை, சாயமலை, மடத்துப்பட்டி, பனவடலிச்சந்திரம், சொக்கலிங்கபுரம், வீரகேரளம்புதூர் வழியாக

ஆலங்குளத்திற்கு கட்டமொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

இவ் வழித்தடத்தில் அனைத்து ஊர்களுக்கும் தனித்தனியாக பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த வழித்தடத்தில் சொக்கலிங்கபுரத்திலிருந்து மேற்கொண்டு செல்ல சாலை வசதி இல்லை. ஆகவே இந்த வழித் தடத்தில் புதிதாக பேருந்து இயக்க இயலாது.

15—

மருதப்புரத்திற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 27020—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மேலவீதி நல்லூர் ஒன்றியம் மருதப்புரம் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

மருதப்புரம் கிராமம் சுமார் 400 மக்கள் தொகை கொண்ட சிறிய கிராமமாகும். இக்கிராமத்திலிருந்து சுமார் 1.0 கி.மீ. தூரத்திற்குள்ளேயே அமைந்துள்ள நவநீதகிருஷ்ணபுரம் என்ற கிராமத்திற்கு தற்போது 1 நகரப் பேருந்து நாளொன்றுக்கு 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போதுள்ள அரசு விதிகளின்படி மருதப்புரம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது.

16—

பரமக்குடி-சென்னைக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்

வினா எண் 27258—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலிருந்து சென்னைக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் விரைவுப் பேருந்துவிட நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

தற்பொழுது அரசு ஆணையின்படி மாவட்ட தலைநகரங்களிலிருந்தும் போக்குவரத்துக் கழக தலைமையிடத்திலிருந்தும், சென்னைக்கு தலா இரண்டு பேருந்துகள் இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலிருந்து சென்னைக்கு 250 கி.மீ.-க்கு மேல் உள்ள வழித்தடத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டுமே அனுமதியுள்ளது. பரமக்குடி சென்னை வழித் தடத்தின் தூரம் 498.2 கி.மீ. ஆகும். எனவே மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தினால் பரமக்குடியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க இயலாது.

17—

சுந்தரநாயகிபுரத்திற்கு நகரப்பேருந்து இயக்குதல்

வினா எண் 27259—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து ராசியன்காடு வழியாக சுந்தரநாயகிபுரம் வரை இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட நகரப் பேருந்தை மீண்டும் இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 17 பட்டுக்கோட்டையில் இருந்து ராசியன்காடு வழியாக மஞ்சவயல் கிராமத்திற்கு 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. செங்கப்படுத்தான் காடு என்ற இடத்தில் இருந்து சுந்தரநாயகிபுரம் 1 கி.மீ. தூரத்தில் உள்ளதால் பேருந்துவசதி பெற்ற ஊராக கருதப்படுகிறது. செங்கப்படுத்தான் காட்டிலிருந்து சுந்தரநாயகிபுரம் உள்ள 1 கி.மீ. சாலை பேருந்து

இயக்கத்திற்கு தகுதியற்றதாக உள்ளது. ராசியங்காட்டிலிருந்து சுந்தரநாயகிபுரம் 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. இச்சாலையும் பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்றதாக உள்ளது. எனவே, இவ்விரு தடங்களில் நடப்பாண்டில் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

18—

சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து ஈஸ்வரன் நகர் வரை நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 27260—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து திருநின்றவூர் வரை இயக்கப்படும் டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகப் பேருந்தை ஈஸ்வரன் நகர் வரை நீட்டித்து விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

ஈஸ்வரன் நகர் சென்னை பெருநகர் எல்லைக்கு வெளியே உள்ளதால் திருநின்றவூர் வரை இயக்கப்படும் டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழக பேருந்தை ஈஸ்வரன் நகருக்கு நீட்டிக்க இயலாது.

19—

பேராவூரணி-இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 27264—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு நடப்பாண்டில் தொலைதூரம் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

பேராவூரணியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு நடப்பாண்டில் தொலைதூரப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1995 மார்ச் 14]

20—

சங்கரன்கோவில் ஒன்றியம் வடக்கு ஆலங்குளத்திற்குப் பேருந்துகளை இயக்குதல்

வினா எண் 27269-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன் கோவில் ஒன்றியம், வடக்கு ஆலங்குளத்திற்கு மீண்டும் பேருந்துகளை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

சங்கரன் கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வடக்கு ஆலங்குளம் கிராமத்திற்கு தற்போது கட்டபொம்மன் போக்கு வரத்து கழக புறநகர் பேருந்து ஒன்று 6 சுற்றுகளும், தனியார் புறநகர் பேருந்து ஒன்று இரண்டு சுற்றுகளும், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்று 2 சுற்றுகளும், ஆக தினசரி 10 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது இப்பேருந்துகள் முறையாக இயக்கப்பட்டு வருகின்றன.

21—

திருப்பத்தூர் தொகுதியில் மகளிரும் சிறுவரும் செல்லப் பேருந்து இயக்குதல்

வினா எண் 30150—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் மகளிர், சிறார் பள்ளி செல்ல தனிப்பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் அனைத்து நகரப் பேருந்துகளிலும் மகளிர் மற்றும் சிறார்களுக்கெனத்

தனி இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே மகளிர் சிறுவர்களுக்கென தனிப்பேருந்து இயக்க சாத்திய மில்லை.

22—

கீரனூரிலிருந்து புதியதாகப் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் **30181—**திரு. *சி. குழந்தைவேலு:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி கீரனூரிலிருந்து விராலிமலை, உப்பிலிகுடி, இலுப்பூர் ஆகிய இடங்களுக்கு புதியதாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: **போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கீரனூரிலிருந்து விராலிமலைக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் துறை பேருந்துகள் 28 நடைகள் இயங்கி வருகின்றன. அதேபோல் கீரனூரிலிருந்து உப்பிலிக்குடிக்கு 13 நடைகளும், கீரனூரிலிருந்து இலுப்பூருக்கு 24 நடைகளும் இயங்கிவருகின்றன. தற்போது வசதி பெறாத கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

எனவே குளத்தூர் தொகுதி கீரனூரிலிருந்து விராலிமலை, உப்பிலிக்குடி, இலுப்பூர் ஆகிய இடங்களுக்கு புதிதாக (கூடுதல்) பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

23—

திருவான்மியூர்-எழும்பூருக்குக் கூடுதல் நகரப் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் **33018—**திரு. *ஆர். தங்கராசு:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவான்மியூரிலிருந்து எழும்பூருக்கு இயக்கப்பட்ட 23-ஏ பல்லவன் பேருந்து நிறுத்தப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

. (அ) மற்றும் (ஆ): பேருந்து தடம் எண் 23-ஏ திருவான்மியூரிலிருந்து எழும்பூருக்கு ரயில் நிலையம் வரை-3 பேருந்துகளைகொண்டு இப்பொழுதும் இயக்கப்பட்டு வருகிறது. இது மட்டுமல்லாமல் தடம் எண். ஜே. 23 ஏ-ல் 3 பேருந்துகள் பாலவாக்கத்திலிருந்து எழும்பூர் ரயில் நிலையம் வரை திருவான்மியூர் வழியாக இயக்கப்பட்டு வருகிறது.

24—

பெரியதாழைக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 33746—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான் குளம் தொகுதி சாத்தான் குளத்திலிருந்து முதலூர் பொத்தகாளன்விளை நடேசன் குடியிருப்பு மணிநகர் வழியாக பெரியதாழைக்கு புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சாத்தான் குளத்திலிருந்து முதலூர் போத்தகாளன்விளை நடேசன் குடியிருப்பு மணிநகர் வழியாக பெரிய தாழைக்கு தனியார் பேருந்துகளும் கட்டபொம்மன் போக்குவரத்து பேருந்துகளும், பல வழித்தடங்கள் மூலமாக இயக்கப்பட்டு வருகின்றன. இந்த பகுதியில் இயக்கப்படும் நகரப் பேருந்துகள் அனைத்தும் பயணிகளின் போதிய ஆதரவின்றி குறைந்த வருவாய் ஈட்டுகிற படியால் சாத்தான்குளம்-பெரியதாழை என புதிதாக நகரப் பேருந்து இயக்கத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

25—

பேட்மா நகருக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 33754—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி பேருந்து நிலையத்திலிருந்து பேட்மா நகருக்கு இயக்கப்பட்ட நகர பேருந்து தடம் எண் 15, நிறுத்தப்பட்டு உள்ளதால் அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

தடம் எண் 15 நகரப்பேருந்து மூலம் பேட்மா நகரத்திற்கு 12 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வந்தது. போதிய பயணிகள் இல்லாமையாலும் குறைந்த வருவாய் ஈட்டியதாலும் இப்பேருந்து நிறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக தூத்துக்குடியிலிருந்து பேட்மா நகரம் வழியாக ஸ்ரீவைகுண்டம் வரை 1 புறநகர் பேருந்து இதே வழித்தடத்தில் 6 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது பேட்மா நகரத்திற்கு மொத்தத்தில் 11 புறநகர் பேருந்துகள் மூலம் 54 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகிறது. எனவே போக்குவரத்து விகிதாச்சாரத்திற்கு இந்த பேருந்துகளே போதுமானதாகும் எனக் கருதலாம்.

26—

பட்டுக்கோட்டை-சென்னைக்கு கூடுதல் சொகுசுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 33760—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரத்திலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகக் கூடுதல் சொகுசுப் பேருந்து நிறுத்தப்பட்டதால், அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டைக்கும், பட்டுக்கோட்டை வழியாகவும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் 9 பேருந்துகள் 18 நடைகள் தொடர்ந்து இயக்கப்படுகின்றன. கோடை காலத்தில் ஏற்படும் அதிக போக்குவரத்து நெரிசலை சமாளிக்க கூடுதலாக ஒரு சொகுசு பேருந்து இயக்கப்பட்டு கோடை காலம் முடிந்து நெரிசல் குறைந்ததால் இது நிறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து இயக்கும் திட்டம் ஏதும் இல்லை.

27—

கொடுமுடி-சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 33765—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுமுடியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

கொடுமுடி சென்னையிலிருந்து 413 கி.மீ. தொலைவில் உள்ளது. கொடுமுடியிலிருந்து, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் விரைவுப் பேருந்து இயக்குவதற்கு இந்த ஊரில் பராமரிப்பு மற்றும் பணிமனை வசதிகள் இல்லை. எனவே, இக்கழகத்தின் பேருந்துகளை கொடுமுடியைத் தொடங்கும் இடமாகக் கொண்டு இயக்குவது சாத்தியமில்லை. ஈரோடு மற்றும் கரூரிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழக விரைவு பேருந்துகள் இயங்கி வருகின்றன. மேலும் கொடுமுடி ஈரோட்டிலிருந்து 39 கி.மீ. தொலைவிலும், கரூரிலிருந்து 28. கி.மீ. தொலைவிலும் உள்ளது. கொடுமுடியிலிருந்து கரூருக்கும், ஈரோட்டிற்கும் அடிக்கடி பேருந்து வசதிகள் உள்ளன. அதனால் கொடுமுடி மக்கள் கரூர் அல்லது ஈரோடு வந்து சென்னைக்கு பயணம் மேற்கொள்ளலாம்.

28—

மேட்டுப்பாளையம்-கன்னியாகுமரிக்கு திருவள்ளுவர் போக்கு வரத்துக்கழகப் பேருந்து இயக்குதல்

வினா எண் 33766—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்திலிருந்து கன்னியாகுமரிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலம் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தற்பொழுது ஊட்டிக்கும் கன்னியாகுமரிக்கும் இடையே வழித்தடம் எண் 663 இரண்டு விரைவுப்

பேருந்துகள் இரண்டு ஒரு வழிப் பயணங்களுடன் மேட்டுப்பாளையம் வழியாக இயக்கப்படுகின்றது. இத்தடத்தின் நீளம் 521 கிலோமீட்டராகும். ஊட்டிக்கும் மேட்டுப்பாளையத்திற்கும் இடையே உள்ள தூரம் 55 கி.மீ. ஆகும். மேலும் 36 கி.மீ. தொலைவிலுள்ள கோவையிலிருந்து பேருந்துகள் கன்னியாகுமரிக்கும் நாகர்கோவிலுக்கும் விடப்பட்டிருக்கின்றன. மேட்டுப்பாளையத்திலிருந்து கன்னியாகுமரிக்கு பயணம் செய்ய விரும்புவோர் இத்தடத்திலுள்ள பேருந்துகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். தனியாக ஒரு வழித்தடம் இயக்குவது அவசியம் இல்லை என கருதலாம்.

29—

கொடுமுடியில் ஜீவா போக்குவரத்துக்கழகப் பணிமனை அமைத்தல்

வினா எண் 34162—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடுமுடியில் ஜீவா போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு தாலூக்கா, கொடுமுடி கிராமத்தில் க.ச.எண்699/6 பி நிலத்தில் பணிமனை அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஆனால் நிலச் சொந்தக்காரர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் கையகப்படுத்தலுக்கு எதிராக தடையுத்தரவு வாங்கியிருந்தார்கள். ஆனால் இத்தடையுத்தரவு நிலச் சொந்தக்காரரின் தரப்பில் வழக்குக்கு யாரும் ஆஜராகாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது அந்நிலத்தினை ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் உடைமையாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு 1995-96-ம் ஆண்டில் பணிமனையினை துவங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

30—

திருப்பத்தூர்-சென்னைக்கு ஆலங்காயம் வழியாகப் பேருந்து இயக்குதல்

வினா எண். 35187—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் 102 வி பேருந்தை ஆலங்காயம் வழியாக இரவு 12 மணிக்கு இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக்கழக பேருந்து 102வி ஆலங்காயம் சென்னை (வழி) முல்லை என தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இத்தடம் காலை 3.50 மணிக்கு ஆலங்காயத்தில் புறப்பட்டு சென்னை சென்று திரும்பி பின் ஆலங்காயத்தில் இரவு தங்குகிறது. இப்பேருந்தை இரவு 12 மணிக்கு ஆலங்காயத்தில் நடையெடுப்பதன் மூலம் காலை 3.50 மணிக்கு எடுக்கப்படும் நடை ரத்தாவதோடு அப்பொழுது வழக்கமாக செல்லும் பயணிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதால் மேற்படி கோரிக்கை சாத்தியமில்லை.

31—

பல்பநத்தத்திற்கு பேருந்து இயக்குதல்

வினா எண். 35437—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து பல்பநத்தம் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருப்பத்தூர் - ஆலங்காயம் பிரதான சாலையிலிருந்து பல்பநத்தம் கிராமம் 3.4 கி.மீ. தூரத்தில் உள்ளது. இந்த 3.4 கி.மீ. தூரம் உள்ள சாலையின் தன்மை மிகவும் மோசமாக பேருந்து செல்ல இயலாத

நிலையில் மேடுபள்ளங்களாக உள்ளது. அந்த சாலையின் குறுக்கே ஒரு காட்டாறு ஓடுகிறது. மூன்று இடங்களில் சாலையின் குறுக்கே மிகப்பெரிய பாறைகளும் ஒரு இடத்தில் பெரிய கிணறு ஒன்றும் சாலை ஓரத்தில் அமைந்துள்ளன. இந்நிலையில் திருப்பத்தூரிலிருந்து பல்பநத்தத்திற்கு புதிய பேருந்து இயக்க சாத்தியமில்லை.

32—

ஜவ்வாது மலை நெல்லிவாசல் வரை பேருந்து இயக்குதல்

வினா எண் **35447**-திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து புதுநாடு, புலியூர் வழியாக ஜவ்வாதுமலை நெல்லிவாசல் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

கோரிக்கை தடத்தில் காணும் மேற்படி சாலை பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் நேரடி ஆய்வு செய்யப்பட்டது. புதூர்நாடு-நெல்லிவாசல் வரை உள்ள சாலையின் நீளம் 17.6 கி.மீ. ஆகும். இதனிடையே மொத்தம் 16 கிராமங்கள் உள்ளன. மேற்படி சாலையில் ஆங்காங்கே மண் அரிப்பு ஏற்பட்டு சாலை சரிந்து மிக மோசமாக உள்ளது. சாலை முழுவதும் பெரும் ஜல்லிகள் நிரப்பப்பட்டு சாலை மிக குண்டும் குழியுமாக இருப்பதால் கனரக பேருந்துகள் இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி வழித்தடத்தில் தற்போது பேருந்து இயக்க சாத்தியமில்லை.

33—

வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல்

வினா எண் **35499—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முன்னறிவிப்பு இல்லாமல் வேலை நிறுத்தம் செய்வதால் மக்கள் படும் துன்பங்களைப் போக்க தொழிலாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

முன்னறிவிப்பு இல்லாமல் ஏற்படும் வேலை நிறுத்தங்கள் குறிப்பாக பயணிகள் மற்றும் கழக நடத்துனர்களுடன்/ஓட்டுனர்களுடன் ஏற்படும் தகராறு காரணமாக ஏற்படுகின்றன. இதுபோன்ற சூழ்நிலைகளில் சம்பந்தப்பட்ட இடத்திற்கு விரைந்து சென்று பிரச்சனை தொடர்பான பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் பேசி, உடனடியாக வேலை நிறுத்தங்கள் விலக்கிக் கொள்ளப்படுகின்றன. இத்தகராறுகளில் பணியாளர்களின் தவறு இருப்பின் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

34—

செவ்வாய்ப்பேட்டை வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு வரை நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 35665—*திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநின்றவூர் வரை இயக்கப்படும் 71 ஜெ டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகப் பேருந்தை செவ்வாய்ப்பேட்டை வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு வரை நீட்டித்து அங்கு பணிமனை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செவ்வாய்ப்பேட்டை வீட்டுவசதி காலனி சென்னை பெருநகர் எல்லைக்கு வெளியே உள்ளது. எனவே, டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் வழித்தடம்

71ஜெ பேருந்துகளை செவ்வாய்ப்பேட்டை வரை நீட்டிக்கவோ அங்கு பணிமனை ஏற்படுத்தவோ செயற்குறிப்பு ஏதும் இல்லை.

35—

அபிஷேகப்பட்டினம் ஊருக்குள் சென்றுவர நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 35815—திரு. டி. வேலையா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி அபிஷேகப்பட்டினம் ஊருக்குள் சென்று வர நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சுமார் 500 மக்கள் தொகை கொண்ட அபிஷேகப்பட்டி என்ற இச்சிறிய கிராமம் திருநெல்வேலி-தென்காசி பிரதான சாலையிலிருந்து பிரிந்து உட்புறம் சுமார் 1.2 கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ளது. அபிஷேகப்பட்டி கிராமத்தில் தனியார் நகரப் பேருந்து ஒன்றின் மூலம் 18 சுற்றுக்கள் உள்ளன. இது தவிர அபிஷேகப்பட்டி விலக்கு வழியாக ஏராளமான புறநகர் பேருந்துகளுடன் 8 நகரப் பேருந்துகள் 72 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே ஏற்கனவே பேருந்து வசதி பெற்ற இக்கிராமத்திற்குள் சென்று வரும்படியாக பேருந்து இயக்க அவசியம் எழவில்லை எனக் கருதப்படுகிறது.

36—

நாராணம்மாள்புரத்திற்கு நகரப்பேருந்து இயக்குதல்

வினா எண் 35822—திரு. டி. வேலையா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, நாராணம்மாள்புரத்திற்கு இயக்கப்பட்டு பின்பு டீசல் தட்டுப்பாட்டால் நிறுத்தி வைக்கப்பட்ட தடம் எண் 46-ஏ கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து மீண்டும் இயக்கப்படுமா?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

எரிபொருள் தட்டுப்பாடு காலத்தில் குறைந்த வருவாய் ஈட்டிய காரணத்தால் தடம் எண் 46/46-ஏ பேருந்து நிறுத்தப்பட்டது. ஆயினும், இந்த நகரப் பேருந்து மூலம் நாராணம்மாள்புரத்திற்கு இயக்கப்பட்ட 6 சுற்றுக்களை ஈடு செய்யும் பொருட்டு தடம் எண் 29-ஏ வாயிலாக கூடுதலாக 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டது. எனவே, தற்போது இவ்வூருக்கு தடம் எண் 29-ஏ மூலமாக 16 சுற்றுக்களும் தனியார் நகரப்பேருந்து மூலமாக 16 சுற்றுக்களுமாக மொத்தத்தில் 32 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள பயணிகள் விகிதாச்சாரத்திற்கு இந்த 32 சுற்றுக்களே போதுமானதாக கருதப்படுவதால் தடம் எண் 46-ஏ பேருந்தை மீண்டும் இயக்க வேண்டிய தேவை இல்லை எனக் கருதலாம்.

37—

திருப்பத்தூர் தொகுதியில் நகரப்பேருந்து வசதி அளித்தல்

வினா எண் 35848—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, கருபலூர், சின்னபெங்காயப்பள்ளி, பாலகுப்பம், பெரிய கம்மியப்பட்டு, மேல் முஸ்லிம் தெரு, பல்பநத்தம் லாலாபேட்டை ஆகிய ஊர்களுக்கு ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகத்தால் சாலையை ஆய்வு செய்யப்பட்டதில், பாலகுப்பம், பெரியகம்மியப்பட்டு, மேல் முஸ்லிம் தெரு, பல்பநத்தம், லாலாபேட்டை ஆகிய ஊர்களில் சாலையின் தன்மை மிகவும் பழுதடைந்து மேடு பள்ளமாக பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. சாலையின் இருபுறமும் அரிப்புகள் ஏற்பட்டும் சாலையின் குறுக்கே பாலம் கட்டும் வேலை நடைபெறுவதாலும் மிகவும்

குறுகலாகவும் இருப்பதால் கனரகப் பேருந்து இயக்கத்திற்கு பாதுகாப்பற்ற நிலையில், பேருந்து இயக்க சாத்தியமில்லை.

38—

காட்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பேருந்துகள் நின்று செல்லுதல்

வினா எண் **35868**—*திருமதி. கே. எம். கலைச்செல்வி:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரிலிருந்து சித்தூர் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் காட்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

காட்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அதன் நகர எல்லைக்குள்ளேயே உள்ளது. அதற்கு நகரத் தடம் 2ஏ, 2எம், 2ஜி, 1ஜி பேருந்துகள் மூலம் மொத்தம் 26 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. இதுவே போதுமானதாகும். மேலும் நீண்ட தூரம் செல்லும் மாவட்டத் தடப் பேருந்துகளான திருப்பதி, காளஸ்திரி (வழி) சித்தூர் பேருந்துகளை அங்கு நிறுத்தி சென்றால் தொலை தூரப் பயணிகளின் பயணம் தாமதப்படும் என்பதால் இது சாத்தியமில்லை.

39—

அருமனை—மதுரைக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் **36121**—*திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி, அருமனையிலிருந்து திருவரம்பு-குலசேகரம் வழியாக மதுரைக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும்?

1995 மார்ச் 14]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : அருமனை, மார்த்தாண்டத்திலிருந்து 11 கி.மீ. தொலைவில் உள்ளது. மார்த்தாண்டத்திலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், மதுரை வழியாக திருச்சிக்கும், சென்னைக்கும் தினசரி 42 நடைகள் பேருந்துகள் இயக்கி வருகின்றது. அருமனைக்கும் மார்த்தாண்டத்திற்கும் இடையே அடிக்கடி பேருந்து வசதிகள் உள்ளதால், மார்த்தாண்டத்திலிருந்து இயக்கப்படும் பேருந்துகளை பயன்படுத்திக் கொள்ளலாம். தனியாக வழித்தடம் இயக்குவது சாத்தியமில்லை.

40—

ஆலங்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைத்தல்

வினா எண் **38541—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி – கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

ஆலங்குளம் பகுதியில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க தேர்ந்தெடுத்த நிலம் தகுதியற்றது என கண்டறியப்பட்டதால் அந்நிலங்களை பெறுவதற்கான தொடர் நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. தகுதியான மாற்று இடம் தேர்ந்தெடுக்கப்படும்போது பணிமனை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

41—

திசையன்விளையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்

வினா எண் **38542—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1995 மார்ச் 14

திருநெல்வேலி, திசையன்விளையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒன்றினை திசையன்விளையில் அமைக்க செல்வமருதூர் கிராமம், நிலபுல எண் 241/1 பகுதியில், 1.25 ஏக்கர் நிலத்தினை 1-2-1993 முதல் பத்தாண்டு காலத்திற்கு குத்தகை அடிப்படையில் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. இந்நிலம் செல்வமருதூர், முகைதீன்காதர் சாகிப் ஆண்டவர் ஜும்மா பள்ளிவாசலுக்கு சொந்தமானதாகும். இந்நிலத்தை குத்தகை அடிப்படையில் பெற தமிழ்நாடு வஃபு வாரியத்தின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. இந்நிலத்தில் தேவைப்படும் கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டு 11-7-1993 முதல் பணிமனை செயல்பட்டு வருகின்றது. இப்பணிமனையின் தற்போதைய பேருந்துகளின் எண்ணிக்கை 20 ஆகும்.

42—

அக்னி ஆற்றின் வாய்க்காலைப் பராமரித்தல்

வினா எண் **13747**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், குறிச்சி ஏரிக்கு அக்னி ஆற்றிலிருந்து வரும் வாய்க்காலை 1992-93-இல் பராமரித்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள வாய்க்கால் ஏற்கனவே சீரான நிலையில் இருந்தது. கடந்த வடகிழக்கு பருவ மழையின் போது 1993-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் பாசன வாய்க்காலில் மண்படிந்து உள்ளது. வரும் கோடையின் நிதி நிலைமைக்கேற்ப இதில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

43—

ஆலத்துடையான்பட்டி ஏரியைத் தூர் எடுத்தல்

வினா எண் 19130—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, ஆலத்துடையான்பட்டி ஏரியை தூர் எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : ஆலத்துடையான்பட்டி ஏரி ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் நிதி உதவியோடு சீரமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏரியின் தற்போதைய கொள்ளளவே பதிவு செய்யப்பட்ட பாசன ஆயக்கட்டு நிலத்தின் தேவைக்கு மேல் இருப்பதால் இவ்வேரியில் தூர் வார வேண்டிய அவசியமில்லை.

44—

ஒசூர் வட்டத்திலுள்ள ஏரிகள் மற்றும் குளங்களின் விவரம்

வினா எண் 20362—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் வட்டத்தில், பொதுப்பணித்துறை பராமரிப்பில் எத்தனை ஏரிகள், குளங்கள் உள்ளன?

(ஆ) அவற்றில், எத்தனை ஏரிகள் பாசன வசதி அளிக்கிறது?

(இ) ஜமீன் ஏரிகள் எத்தனை உள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், ஒசூர் வட்டத்தில் பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் மொத்தம் 7 ஏரிகள் உள்ளன.

(ஆ) 7 ஏரிகளும் பாசன வசதி அளிக்கின்றன. மொத்தம் பாசனம் பெறும் ஆயக்கட்டு சுமார் 1335.51 ஏக்கர் ஆகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(இ) ஒசூர் வட்டத்தில் முன்னாள் ஜமீன் ஏரிகள் 68 உள்ளன. அதில் 93-94-ம் ஆண்டில் 4 முன்னாள் ஜமீன் ஏரிகள் தரப்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்கொண்டு தரப்படுத்த எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஏரிகளை நிதி நிலைக்கு ஏற்ப வரும் ஆண்டுகளில் தரப்படுத்தப்படும்.

45—

பட்டுக்கோட்டையில் துணை மின்நிலையம் அமைத்தல்

வினா எண். 20743-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் 110 கிலோவாட் துணை மின்நிலையம் அமைக்க பட்டுக்கோட்டை நகராட்சி இடத்தை ஒதுக்கித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

ஆம். தற்பொழுது உள்ள பட்டுக்கோட்டை 66 கி.வோ. துணை மின் நிலையத்தினை 110 கி.வோ. துணை மின் நிலையமாக மேம்படுத்த வாரியம் ரூ.466.19 லட்சம் திட்டம் மதிப்பீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், பணிகள் துவக்கப்படும்.

46—

நொய்யல் நீர்த்தேக்கத்தை மேம்படுத்துதல்

வினா எண் 21718—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நொய்யல் நீர்த்தேக்க பாசன பகுதியில் உடைந்த மதகுகளின் ஷட்டர்களை சரிசெய்து கடைக்கோடி வரை பாசனம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

நொய்யல் கால்வாயில் உடைந்த மதகுகளின் ஷட்டர்கள், தற்காலிகமாக சரிசெய்து தற்போது கால்வாயின் தலைப்பிலிருந்து கடைக்கோடி வரை பாசனத்திற்காக தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது.

47—

ஏழாயிரம் பண்ணையிலிருந்து கோவில்பட்டி சாலையைச் சீராக்குதல்

வினா எண் 22008—திரு. ஜே. பாலகங்காதரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழாயிரம் பண்ணையிலிருந்து கோவில்பட்டி செல்லும் சாலையைச் சீராக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

ஆம், வினாவில் குறிப்பிடப்படும் சாலையில் ஏற்பட்டுள்ள மேடுபள்ளங்கள், நொடிகள், சேதமடைந்த பகுதிகள் சீர்செய்யப்பட்டு சாலை நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

48—

சிவகாசி - விஸ்வநத்தம் சாலை அமைத்தல்

வினா எண் 22012—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியிலிருந்து விஸ்வநத்தம் செல்லும் சாலையை மீண்டும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சிவகாசியிலிருந்து விஸ்வநத்தம் செல்லும் சாலையை கிணற்றுச்சரள் நிரப்பி கற்சாலையாக அமைக்கும் பணி வாகன போக்குவரத்துக்கு ஏற்றவகையாக 31-3-1994 ஆம் தேதியில் முடிக்கப்பட்டுவிட்டது. இருப்பினும் இச்சாலையில் சிலபகுதிகள் தனி பழுதுபார்த்தலுக்கு ரூ. 5.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் முடிக்கத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

49—

நன்னிலம் ஒன்றியத்தில் மின் அழுத்தத்தைச் சரி செய்தல்

வினா எண் 23686—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் ஒன்றியத்தின் பெரும்பாலான கிராமங்களில் மாலை நேரங்களில் சரியான அளவு மின் அழுத்தம் இன்மையால் தெருவிளக்குகள் எரிவதில்லை என்று அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மின் அழுத்தத்தைச் சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நன்னிலம் ஒன்றியத்திலுள்ள கிராமங்களில் மின் அழுத்தக் குறைவைச் சரி செய்ய நன்னிலத்தில் 66 கே.வி.துணை மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துணைத் திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளது. இத் துணைத் திட்டத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் நிலம் கையப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த துணை மின் நிலையம் இயக்ககத்திற்கு வந்தவுடன் நன்னிலம் ஒன்றியத்திலுள்ள கிராமங்களில் மின் அழுத்தம் சீராக இருக்கும்.

1995 மார்ச் 14]

50—

தென்பெண்ணை ஆற்றுப்படுகையைப் பராமரித்தல்

வினா எண் 24676—திரு. கா. ப. முனுசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி அணையை அடுத்த தென்பெண்ணை ஆற்றுப் படுகையில் அசுத்தங்களும் அடைப்புகளும் நிறைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவற்றை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) கிருஷ்ணகிரி அணையை அடுத்த தென்பெண்ணை ஆற்றுப் படுகையில் தற்போது அடைப்புகளோ அசுத்தங்களோ ஏதும் இல்லை. ஆற்று நீர்ப் போக்குக்கும் பாதிப்பு இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பு இல்லை.

51—

கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகளைப் பராமரிக்க கூடுதல் தொகை அதிகரித்தல்

வினா எண் 5881—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் செயல்பட்டு வரும் கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகளின் பராமரிப்பு தொகையை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஊராட்சிகளுக்கு, கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகளின் பராமரிப்புச் செலவுகளுக்காக, ஏற்கனவே, ஆழ்குழாய்க் கிணறு கைப்பம்புகளுக்கு ரூ. 350-ம் வடிமுனை குழாய்களுக்கு ரூ. 50-ம் மின்மோட்டார் பம்புகள் ரூபாய் 1,000-ம் அரசு மானியமாக வழங்கப்பட்டது. அத்தொகை தற்பொழுது, ஊராட்சி ஆண்டு வருவாய் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

ஆழ்குழாய்க் கிணறு கைப்பம்புகள்	ரூ. 700 00
வடிமுனைக் குழாய்	ரூ. 100 00
மின்மோட்டார் பம்புகள்	ரூ. 2,000 00

52—

புதுக்கோட்டைத் தொகுதியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

வினா எண் 6318-திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில் தெற்குவான்டான்விடுதி, மங்களாக் கோவில், கொத்தகம் போன்ற இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தெற்குவாண்டான் விடுதி, மங்களாக் கோவில், கொத்தகம் ஆகிய மூன்று கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விசையிறைப்பான் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

53—

விளம்பரப் பலகைகள் மீது வரிவிதித்தல்

வினா எண் 11674—திரு. எம். கே. பாலன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் முக்கிய சந்திப்பில் பெரிய அளவிலான விளம்பரப் பலகைகள் தனியாரால் வைக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு வரி ஏதேனும் வசூலிக்கப்படுகிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம். அறியும்.

(ஆ) 34 தனியார் நிறுவனங்கள் இத்தகைய விளம்பரப் பலகைகளை நிறுவியுள்ளனர். இவற்றில் 27 நிறுவனங்கள் சென்னை மாநகராட்சி

விதித்த வரியை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றுள்ளதால் இவர்களிடமிருந்து விளம்பர வரி வசூலிக்கப்படுவதில்லை. எஞ்சியுள்ள 7 நிறுவனங்களிடமிருந்து விளம்பரவரி வசூல் வசூலிக்கப்படுகிறது.

54—

மின்கம்பங்களைச் சீர்செய்தல்

வினா எண் 13643-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை 62-வது வட்டம் தெற்கு மாடவீதி பஜனைகோயில் தெரு, மேட்டுத்தெரு ஆகிய தெருக்களில் 4 மாதங்களுக்கு முன்பு விழுந்த மின் கம்பங்கள் இன்னும் சீர் செய்யப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிகை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சென்னை 62-வது வட்டம், தெற்கு மாடவீதி பஜனைகோயில் தெரு, மேட்டுத்தெரு ஆகிய தெருக்களில் மின்கம்பங்கள் எதுவும் 1991-92 ஆம் ஆண்டு முதல் விழவில்லை. ஆனால் மேற்குறிப்பிட்ட தெருக்களில் 13 கான்கீரீட் மின்கம்பங்களின் (R.C.C. Pole) அடிப்பகுதி மட்டும் சேதமடைந்திருந்தன. சேதமடைந்த 13 மின்கம்பங்களுக்குப் பதிலாக புதிய மின்கம்பங்கள் நிறுவப்பட்டுள்ளன.

55—

பாகநத்தம் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 34990—திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாந்தோன்றி ஊராட்சி ஒன்றியம் பாகநத்தம் ஊராட்சி, முஷ்டகிணத்துப்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச்

செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

56—

வெள்ளியணை ஊராட்சியில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் 34991—திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாந்தோன்றி ஊராட்சி ஒன்றியம், வெள்ளியணை ஊராட்சி, மேட்டுப்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

57—

எண்ணூர் ஊராட்சியில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 34992—திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாந்தோன்றி ஊராட்சி ஒன்றியம், எண்ணூர் ஊராட்சி சித்தப்பட்டியில ஆதி திராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச்

செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

58—

குமாரபாளையத்தில் இலவச வீடு, தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 34993-திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாந்தோன்றி ஊராட்சி ஒன்றியம், வெள்ளியணை ஊராட்சி, குமாரபாளையத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:*

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

59—

செல்விநகரில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 34995—திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், செல்விநகரில் ஆதி திராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

60—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **34997**—திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், நாகம்பள்ளி கிராமம், முத்துக்கவுண்டன் பாளையம், ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

61—

சணப்பிரட்டியில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **34999**—திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாந்தோன்றி ஊராட்சி ஒன்றியம், சணப்பிரட்டி கிராமம், எஸ்.வெள்ளாளப்பட்டியில் இலவச தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

62—

திருமாணிக்கம் பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35001—திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், வெஞ்சமான்கடலூர் மேல்பாகம் கிராமம் திருமாணிக்கம் பட்டியில் வீட்டு மனைப்பட்டாக்கள் பெற்றுள்ள 20 ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வ்கணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[1995 மார்ச் 14

63—

அரங்கபாளையத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35004—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கடலூர் கீழ்பாகம் கிராமம் அரங்கபாளையத்தில் தொகுப்பு வீடு கிடைக்காத ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

64—

குறிக்காரன்வலசில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35005—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சேந்தமங்கலம் கிழக்கு ஊராட்சி, குறிக்காரன்வலசு ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச்

செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

65—

மானார்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35006—*திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், மொடக்கூர் மேல்பாகம் கிராமம், மானார்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, **உள்ளாட்சித் துறை** *அமைச்சர்:*

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

66—

தொக்குப்பட்டி புதூரில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35007—*திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், தொக்குப்பட்டி புதூர் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

67—

நந்தால்நாயக்கனூரில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35008—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், பெரிய மஞ்சுவளி கிராமம், நந்தால்நாயக்கனூரில் வசிக்கும் 20 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

68—

சின்னதாராபுரத்தில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35011—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், சின்னதாராபுரத்தில் கிழக்கு தெருவிலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

1995 மார்ச் 14]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

69—

மீனாட்சிவலசில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35013—*திருமதி கே. மரியம் உல் ஆசியா :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், தென்னிலை அடுத்துள்ள மீனாட்சிவலசில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

70—

புஞ்சைக்காளக்குறிச்சியில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35014—*திருமதி கே. மரியம் உல் ஆசியா :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், புஞ்சைக்காளக்குறிச்சி கிராமம், வாணிக்கரை ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

71—

டி. வெங்கிடாபுரம், நடுபாளையம் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35015—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், டி. வெங்கிடாபுரம் கிராமம், நடுபாளையம் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

72—

அம்மாபட்டியில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35016—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், அம்மாபட்டி கிராமத்தில் மேலும் 15 ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

73—

புரவிபாளையத்தில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35017—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், புரவிபாளையம் ஆதிதிராவிடர் மக்களுக்கு மேலும் 40 இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

74—

பழமாபுரம் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35018—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி, புன்னம் ஊராட்சி, பழமாபுரம் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

75—

வெரிச்சனம்பட்டியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35019—திருமதி கே. *மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், வெரிச்சனம்பட்டியில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கிடைக்காதவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

76—

நடுப்பாளையத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35022—திருமதி கே. *மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி, ஊராட்சி டி.வெங்கடாபுரம் கிராமம் நடுப்பாளையம் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செய்யாலூர் கிராமம், இராமநாதபுரம்-பரமக்குடி பிரதான சாலையில் இருந்து பிரிந்து 1.6 கி.மீ. தூரத்தில் உள்ளது. அந்த கிராமத்தின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 775 ஆகும். தற்சமயம் 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகிறது. செய்யாலூர் கிராமம், 1,000-க்கு குறைவான மக்கள் தொகை உள்ள கிராமமாக இருப்பதால் முன்னுரிமை அடிப்படையில் செய்யாலூர் கிராமத்திற்கு தற்சமயம் உடனடியாக பேருந்து வசதி செய்வதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

41—

ஜாப்ராப் பேட்டைக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 35869—திருமதி கே.எம். கலைச்செல்வி : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்பாடித் தொகுதி திருமணி, வேலூர் வழியாக இயக்கப்படும் பேருந்தை ஜாப்ராப்பேட்டை வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

தற்போது நகரத் தடம் 16 (கட்) மூலம் வேலூர்-லத்தேரி ரயில்வே கேட் என 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இந்த நடைகளை ஜாப்ராப்பேட்டை சென்று வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் கோரிக்கைப்படி இயக்கப்படும்.

42—

ஊரந்தாங்கல் ஊராட்சிக்கு கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 35874—திருமதி கே.எம். கலைச்செல்வி : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்பாடித் தொகுதி, ஊரந்தாங்கல் ஊராட்சிக்கு இயக்கப்படும் 10 பி பேருந்தினை மேலும் 4 நடைகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

நகரத்தடம் 10 பி வேலூர்-குப்பிரெட்டித்தாங்கல் (வழி) ஏரந்தாங்கல் என 4 நடைகள், வேலூர்-குப்பிரெட்டித்தாங்கல் (வழி) இராமநாதபுரம் என 4 நடைகளும், வேலூர்-குப்பிரெட்டித் தாங்கல் (வழி) திருவலம், பூட்டுதாக்கு என 2 நடைகளும், வேலூர்-குப்பிரெட்டித்தாங்கல் (வழி) காட்பாடி சர்க்கரை ஆலை என 2 நடைகளும் என பல முனை தடங்களாக பல கிராம மக்கள் பயன்படும்படி இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி கோரிக்கைப் படி தற்போது ஏரந்தாங்கல் வழியாக இயக்கப்படும் நடைகளில் பயணம் செய்யும் பயணிகள் விகிதாச்சாரம் (or) 60 சதவீதம் மட்டுமே உள்ளது. வருவாயும் மிகக் குறைவாகவே உள்ளது மேற்படி மொத்த நடைகளுக்குரிய (or) பயணிகள் விகிதாச்சாரம் 73 சதவிதம் இபிகேஎம் (வருவாய்) 6.28 சதவீதமும் உள்ளது. இந்நிலையில் கோரிக்கைப்படி இயக்கப்பட்டால் மேற்படி அனைத்து கிராம மக்களும் பாதிக்கப்படுவதோடு வருவாயும் குறைந்துவிடும் என்பதால் மேலும் 4 நடைகள் இயக்குவது சாத்தியமில்லை.

43—

திருநெல்வேலி அல்வன்தான்குளம் இடையே நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 35887—திரு.எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மாண்பு ஒன்றியம், அலவன்தான்குளம் கிராமத்திற்கு திருநெல்வேலியிலிருந்து இரவு 8 மணிக்கு சென்று கொண்டிருந்த தடம் எண் 34 டி என்ற பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன். போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ):பயணிகள் விகிதாச்சாரம் மிகக் குறைவாக இருந்த காரணத்தினால் தடம் எண் 34 இ நகரப் பேருந்து மூலம் இரவு 8-30 மணிக்கு திருநெல்வேலியிருந்து அலவன்தான் குளத்திற்கு இயக்கப்பட்ட சுற்று நிறுத்தப்பட்டது. தற்போது இக்கிராமத்திற்கு திருநெல்வேலியிருந்து 4 நகரப் பேருந்துகள் மூலம் 38 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு சுற்று இரவு 9-15 மணிக்கு திருநெல்வேலியிலிருந்து அலவன் தான்குளம் வழியாக தெற்கு செழியநல்லூருக்கு இயக்கப்பட்டு வருகிறது. எனவே இரவு 8.30 மணிக்கு இயக்கப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கும் தேவை எழவில்லை எனக் கருதலாம்.

44—

ஆலங்குளம்-கீழப்பட்டமுடையார் இடையே புதிய வழித்தடம் வழியாக நகரப்பேருந்து இயக்குதல்

வினா எண் **35893**—திரு.எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியம் கீழ்ப்பட்டமுடையார் புரத்திற்கும் நல்லூர் வழியாக ஆலங்குளத்திற்கும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சுமார் 500க்கு குறைவான மக்கள் தொகை கொண்ட கீழ்ப்பட்டமுடையார் என்ற இச்சிறிய கிராமம் ஆலங்குளம், நெட்டூர் பிரதான சாலையிலிருந்து பிரிந்து 0.5. கி.மீ. தொலைவில் நடந்து செல்லும் தூரத்திலேயே அமைந்துள்ளது. இந்தப் பிரதான சாலையில் 6 புறநகர் பேருந்துகள் 37 சுற்றுக்களும், 5 நகரப் பேருந்துகள் 40 சுற்றுக்களும் இயக்கப்படுகின்றன. எனவே இக்கிராம மக்கள் பிரதான சாலைக்கு வந்து மேற் சொன்ன பேருந்துகளைப் பயன்படுத்தி ஆலங்குளம் செல்வதற்கு போதுமான வசதிகள் உள்ளன. தவிர நல்லூர் வழியாக ஆலங்குளம்

செல்வதற்கு தற்போது 5 நகரப் பேருந்துகளால் 26 சுற்றுக்கள் உள்ளன. கீழப்பட்டமுடையார் புரத்திலிருந்து நல்லூர் செல்வதற்கு பேருந்து இயக்கத்தக்க அளவில் சாலை வசதி இல்லை யாதலால் இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

45—

பரமகுடி செய்யாலூருக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 36216—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியிலிருந்து செய்யாலூருக்கு பேருந்து இயக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் பேருந்து இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன் போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : செய்யாலூர் கிராமம் இராமநாதபுரம் பரமக்குடி பிரதான சாலையிலிருந்து பிரிந்து 1.6. கி.மீ. தூரத்தில் உள்ளது. அக்கிராமத்தின் மக்கள் தொகை 775 ஆகும். தற்சமயம் 1000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகிறது. செய்யாலூர் கிராம மக்கள் தொகை 1000 க்கு குறைவாக இருப்பதால் முன்னுரிமை அடிப்படையில் தற்சமயம் பேருந்து இயக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

46—

பெரம்பூர் அய்யனார் ஆலயத்திற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 38235—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார் கோவில் ஒன்றியம் பெரம்பூர் அய்யனார் ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்காக பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தற்போது மருது பாண்டியர் போக்குவரத்து கழக ஒரு நகரப் பேருந்து பல்முறை வழித்தடத்தில் புதுக்கோட்டை வந்தனா கோட்டை சென்று வரும் 2 நடைகளில் பெரம்பூரை தொட்டு இயங்கி வருகின்றது. இரண்டு நடைகளிலும் பயணம் செய்யும் பயணிகளின் விகிதாச்சாரம் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. மேலும் புதுக்கோட்டையிலிருந்து பெரம்பூர் விலக்கு வழியாக மருது பாண்டியர் போக்குவரத்து கழக நகரப் பேருந்துகள் 26 நடைகளும் தனியார் புறநகர் பேருந்துகள் 14 நடைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. புதுக்கோட்டை பெரம்பூர் வரை தனியாக நகரப் பேருந்து இயக்குமளவிற்கு பயணிகள் நெரிசல் கிடையாது. எனவே புதுக்கோட்டையிலிருந்து பெரம்பூர் வரை நகரப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

47—

நத்தம் தொகுதியில் புதிய அணைகள் கட்டுதல்

வினா எண் 3738—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதியில் பாசனவசதி பெருகிட பஞ்சந்தாங்கி அணை, சங்குசக்கரபாறை அணை, பெத்தாங்குளி அணை, ஐயனார் அருவி அணை, பாலாறு அணை ஆகியவற்றைக் கட்ட அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் திட்டம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பஞ்சந்தாங்கி மற்றும் அய்யனார் அருவி நீர்த்தேக்கத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது. பெத்தாங்கினி அணை மற்றும் பாலாறு நீர்த்தேக்கத் திட்டங்கள் சிக்கனமற்றது என்பதால்

அரசால் கைவிடப்பட்டன. சங்குச் சக்கரபாறை அணை தொடர்பாக எவ்வித திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை.

48—

பரம்பிக்குளம் ஆழியாறு கால்வாய்களில் தண்ணீர் விடுதல்

வினா எண் 5431—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு விஸ்தரிப்புக்காக வாய்க்கால்கள் வெட்டப்பட்டும் அவற்றில் பாசனத்திற்காக தண்ணீர் விடப்படாமல் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அரசு இனியேனும் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தில் தற்பொழுது உள்ள மண்டலப் பாசன முறையை மாற்றி புதிய ஆயக்கட்டு விரிவாக்கப் பகுதிகளையும் சேர்த்து நான்கு மணடல முறை ஏற்படுத்த சட்டம் எண் 20/93 இயற்றப்பட்டுள்ளது. இந்த நான்கு மண்டல முறையை அமுல்படுத்தும் செயற் குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையிலுள்ளது.

49—

திருமலைராஜன் ஆற்றில் தடுப்புச்சுவர் கட்டுதல்

வினா எண் 22280—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம் பிரதாபராமபுரம், வட்டம் "பூவாம்பூர் வாய்க்கால் தலைப்பில்" திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் கட்டித்

தந்து அப்பகுதிக்கு முறையாக தண்ணீர் பாய்வதற்காக உதவிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பூவாம்பூர் வாய்க்கால் தலைப்பின் கீழ் மைல் 650–1 இல் கூகூர் ரெகுலேட்டர் அமைந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் பூவாம்பூர் வாக்காலில் தண்ணீர் நல்ல முறையில் பாய்ந்து பாசனம் நடைபெற்றுள்ளது. ஆகவே, பூவாம்பூர் வாய்க்கால் தலைப்பில் திருமலைராசன் ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் சுட்டும் அவசியம் எழவில்லை.

50—

வேம்பனூரில் பாசனத் தலைப்பு வாய்க்காலாகச் செப்பனிடுதல்

வினா எண். 23262—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், வேம்பனூர் கிராமத்தில் உள்ள பாசன தலைப்பு வாய்க்காலைத் தூர் வாரி செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம் வேம்பனூர் கிராமத்தில் உள்ள பாசன தலைப்பு வாய்க்காலை இந்த ஆண்டு குடிமராமத்து திட்டத்தின் கீழ் தூர் அகற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடு மாவட்ட ஆட்சியரிடமிருந்து கிடைக்கப்பெற்ற உடன் மேற்படி வாய்க்காலில் தூர் அகற்றும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

51—

மங்களம் ஏரியைச் செப்பனிடுதல்

வினா எண் 23533—திரு. என். ஆர் சிவபதி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினவிற்கு விடையளிப்பாரா —

தொட்டியம் தொகுதி, தாத்தையங்கார்ப்பேட்டை மங்களம் கிராம ஏரியைத் தூர் எடுத்து செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

தொட்டியம் தொகுதி தாத்தையங்கார்ப்பேட்டை மங்களம் கிராமத்தில் உள்ள மங்களம் ஏரி பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ளது. மேற்படி ஏரியைத் தூர் எடுத்து செப்பனிட தற்போது திட்டம் எதுவும் இல்லை.

52—

ஆதிதிராவிடர் வீடுகளுக்கு மின்வசதி செய்தல்

வினா எண் 26080—*திரு. இராம. இராமநாதன்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், செம்பிய வரம்பில் ஆதிதிராவிடர் மக்கள் வாழும் பகுதியில் வீடுகளுக்கு மின்வசதி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், செம்பியவரம்பில் ஆதிதிராவிடர் மக்கள் வாழும் பகுதியில் வீடுகளுக்கு மின்வசதி செய்யப்பட்டு, விண்ணப்பித்தோருக்கெல்லாம் மின் வசதி வழங்கப்பட்டு விட்டது.

53—

பெரியகுளத்தை மராமத்து செய்தல்

வினா எண் 26410—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி காட்டுநாவல் பெரிய குளத்தை மராமத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

புதுக்கோட்டை தொகுதி கந்தர்வகோட்டை தாலூக்கா காட்டுநாவல் பெரிய குளத்திற்கான மராமத்துப்பணி 1993-94 ஆம் ஆண்டு விரைவு சிறு பாசனத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

54—

கோயம்புத்தூர்-மேட்டுப்பாளையம் சாலையில் பாலத்தை விரிவுபடுத்துதல்

வினா எண் 28438—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர்—மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலையில் பெரிய நாயக்கன் பாளையம் அருகே உள்ள பெரிய பாலத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

இல்லை.

55—

கலிங்குபோக்கு கால்வாயைச் செப்பனிடுதல்

வினா எண் 28973—*திரு. சி. சுவாமிநாதன் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி புத்தாம்பூர் பஞ்சாயத்திற்கு உட்பட்ட செம்பாட்டூர் பெரிய குளத்தில் கலிங்குபோக்கு கால்வாயை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

செம்பாட்டூர் பெரிய குளத்திற்கு அவ்வப்போது மராமத்துப்பணிகள் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 1992-93 ஆம் ஆண்டில் மதகுகள் புதுப்பித்து கட்டப்பட்டுள்ளது. தற்போது பெரிய குளம் கரையினை சிறப்பு மராமத்து செய்வதற்கும், கலிங்கு மராமத்து செய்வதற்கும்

1995 மார்ச் 14]

இரண்டு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு நடப்பாண்டில் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. பெரியகுளத்தில் கலிங்கு போக்குக் கால்வாயைச் செப்பனிட தள ஆய்வு செய்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நடப்பாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்குத் தக்கவாறு பணி மேற்கொள்ளப்படும்.

56—

அறந்தாங்கி மின்சார வாரியத்தின் மூலம் வேளாண்மைக்கு மின் இணைப்பு வழங்கிய விவரம்

வினா எண் 30212—*திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி மின்சார வாரியத்தின் மூலம் 1993 ஆம் ஆண்டு விவசாயத்திற்குக் கொடுத்த மின் இணைப்புகள் எத்தனை?

(ஆ) 1993 ஆம் ஆண்டு வரை மின் இணைப்பு பெற பதிவு செய்த நபர்கள் எத்தனை?

(இ) 1994-ஆம் ஆண்டுக்கு எத்தனை பேருக்கு அறந்தாங்கி அலுவலகம் மூலம் மின் இணைப்பு கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி மின் கோட்டத்தில் 1993-94 ஆம் ஆண்டில் 677 விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டன.

(ஆ) இந்த மின் கோட்டத்தில் விவசாய மின் இணைப்பு பெற 1993 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 973 ஆகும்.

(இ) 1994-95-ஆம் ஆண்டில் அறந்தாங்கி மின் கோட்டத்தில் 630 விவசாய மின் இணைப்புகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

57—

தண்டாவிலுள்ள மாணவியர் விடுதிக்கு மின்வசதி அளித்தல்

வினா எண் 33338—*டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி பொரசப்பட்டு தண்டாவிலுள்ள சீர்மரபினர் மாணவியர் நலவிடுதிக்குக் குறைந்த அளவு மின் அழுத்தம் கிடைப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் விடுதிக்கு அருகில் தனி மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செங்கம் தொகுதி பொரசப்பட்டு தண்சாவிலுள்ள சீர் மரபினர் மாணவியர் நல விடுதிக்கு அரட்டவாடி (S.S.IV) மின் மாற்றலிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. இங்கு மின் அழுத்தம் குறைவாக காணப்பட்டதால், மாணவியர் நல விடுதி மற்றும் சில வீட்டு மின் இணைப்புகள் பொரசப்பட்டு (S.S.IV) மின்மாற்றிக்கு மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. இம்மாற்றத்திற்குப் பிறகு மாணவியர் நலவிடுதியில் மின் அழுத்தம் சீராக உள்ளது. எனவே, மாணவியர் நல விடுதிக்கு அருகில் தனியாக மின்மாற்றி அமைக்கத் தேவை எழவில்லை.

58—

STEPSTAKEN TO EVICT THE UNAUTHORISED CAR WORKSHOP AND GARAGE

Q. No. 22876 Dr. Beatrix D' Sosa : – Will the Hon'ble Minister for Housing and Urban Development be pleased to state—

(a) Whether the Government is aware that an unauthorised Car Workshop and Garage is functioning with on residential area Foreshore Estate; and

(b) Whether steps have been taken to evict the owner.

Answer—

Hon'ble Thiru S. Raghupathy, Minister for Housing and Urban Development:

(a) Tamil Nadu Housing Board allotted in 1986 an open space (20x15') at Foreshore Estate to Thiru Keerthi for running a Car Workshop on lease basis, Based on the complaints received from the Welfare Associations of this area, the allotment was cancelled in 2-2-1987. The allottee had filed a Writ petition No `6766/90 in the High Court, Madras and a Civil Suit No. 3763/90 in City Civil Court, Madras and the cases and pending disposal.

(b) In the meantime, the petitioner Thiru Keerthi expired in an accident. This fact will be made known to the Court and speedy action pursued to dispose off the cases. Soon after this, possession will be taken over by the Board after evicting the present occupants.

59—

சென்னை நகரை விரிவுபடுத்துதல்

வினா எண் 26924—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகர எல்லையை திருநின்றவூரிலிருந்து திருவள்ளூர் வரை விரிவாக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : சென்னை பெருநகர் எல்லையை திருநின்றவூரிலிருந்து திருவள்ளூர் வரை விரிவாக்கும் திட்டம் பற்றிய செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

60—

டான்சி நிறுவனம் முன்னேற்ற விவரம்

வினா எண் 33636—திரு. ம. சுந்தரதாஸ்: Will the Honurable Minister for Rural Industries be pleased to state—

(a) Whether TANSI has registered any improvement in their performances during the year 1993-94?

(b) The details thereof.

விடை—

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) டான்சி நிறுவனம் தொடங்கியதிலிருந்து, 1993-94-ஆம் ஆண்டில்தான் உயர்வான செயல்பாட்டை அடைந்துள்ளது.

(ஆ) விவர அறிக்கை:—

வருடம்.	உற்பத்தி.	விற்பனை.	செயல் விளைவு. (+)இலாபம் (-)இழப்பு
(1)	(2)	(3)	(4)
			(ரூபாய் இலட்சத்தில்)
1965-66	389	342	+7.04
1966-67	479	417	+12.88
1967-68	493	419	-30.33
1968-69	562	483	-22.41
1969-70	662	661	-18.80
1970-71	757	746	+3.30
1971-72	818	828	+11.52
1972-73	814	833	+18.58
1973-74	919	904	+26.78
1974-75	1,022	969	+1.03
1975-76	1,029	947	-45.28
1976-77	1,062	1,022	-81.98
1977-78	1,187	1,121	-100.28
1978-79	1,537	1,497	-37.66
1979-80	1,835	1,661	+17.53
1980-81	2,065	2,016	+31.60
1981-82	2,333	2,339	-94.46
1982-83	2,216	2,985	-176.32
1983-84	2,514	2,342	-211.29
1984-85	2,368	2,392	-443.36

1985-86	2,479	2,420	-420.46*
1986-87	2,389	2,774	-280.63*
1987-88	2,492	2,472	-303.77*
1988-89	2,919	3,106	-222.45*
1989-90	2,815	3,033	-259.82*
1990-91	2,340	2,659	-681.26
1991-92	2,596	2,524	-967.21
1992-93	2,485	2,552	-240.42*
1993-94	3,723	3,570	-150.00*
(உத்தேசமாக)			

*அரசாங்க கடன்களின் மீதான வட்டி நீங்கலாக.

61—

ஆம்பூர் வெள்ளக்குட்டை சாலை அமைத்தல்

வினா எண் 19808—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் ஆம்பூரிலிருந்து வெள்ளக் குட்டை கிராமத்திற்குச் செல்லும் கரும்பு ஆலைச்சாலைப் பணி நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சாலை அமைக்கும் பணி முடிக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1. வடாற்காடு மாவட்டத்தில் அரியலூர் முதல் வெள்ளக்குட்டை வரை கி. மீ. 0/0—5/0 சாலை அமைத்தலும் மேம்பாடு

செய்தலும் பணிக்கான மதிப்பீடு ரூ. 16 இலட்சத்திற்கு தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு வேலை எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி பணியில் 0/0-4/0 வரை மேம்பாடு பணிகள் முடிக்கப்பட்டு தார்ச் சாலையாக்கப்பட்டுள்ளது.

2. கி.மீ. 4/0–5/0 வரை கீழ்க்கண்ட காரணங்களால் பணி செய்யப்படவில்லை.

(அ) கி.மீ. 4/0–4/2 வரை உள்ள பகுதியில் நில உரிமையாளர்கள் சம்மதம் கிடைக்காததால் பணிகள் செயற்படுத்த இயலவில்லை.

(ஆ) கி.மீ. 4/2–5/0 பகுதி பாதுகாக்கப்பட்ட வனச் சரகப் பகுதியில் அடங்கியுள்ளது. இதற்கு வனத்துறை அனுமதி கிடைக்காத காரணத்தால் பணிகள் செய்ய இயலவில்லை.

3. வனத்துறையினர் மேற்படி பகுதியில், (வனசரகப் பகுதியில்) சாலை அமைக்க வேண்டுமானால், வனத்துறை 3.20 ஹெக்டேர் நிலகாடு அல்லாத பகுதியை தேர்வு செய்து வனத்திற்கு கொடுத்தால்தான் சாலை அமைக்க அனுமதிக்காக அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என வனத்துறை தெரிவித்துள்ளது.

4. ஆனால், போதிய நிலம் ஒதுக்கப்படாமையால் வனத்துறையின் அனுமதி கிடைக்கப் பெறாமையாலும் 7-12-91 இல் நடத்தப்பட்ட சர்க்கரைத்துறை ஆணையர் அலுவலக ஆய்வுத் திட்டத்தில் இவ்வேலைகள் முடிக்க இயலாது என்பதால் கி.மீ. 4/0 உடன் முடித்துக் கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது.

5. இச்சாலைப் பணிக்காக ரூ. 13,78,035 செலவிடப்பட்டுள்ளது.

62—

பரமக்குடி தாலுகாவில் மண்வளப் பாதுகாப்பு பணி விவரம்

வினா எண் 35519—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1993-94 ஆம் ஆண்டு வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தில் மண்வளப்பாதுகாப்புதுறை மூலம் பரமக்குடி தாலுக்காவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

1993-94-ஆம் ஆண்டு வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுக்காவில் மண்வளப் பாதுகாப்பு பிரிவின்கீழ் செய்யப்பட்ட வேலைகள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

உதவி செயற்பொறியாளர் (வே.பொ.)

குழாய்க்கிணறு திட்டம் (கட்டுமானம்)

பரமக்குடி

வரிசை எண்ணும் கிராமமும்.	மேற்கொள்ளப்பட்ட பணிகள்.	செலவு செய்யப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்)
(1)	(2)	(3)
1. மோசுகுடி	4 எண்கள் பெரியதடுப்பு அணைகள்	2.370
2. வழிமறிச்சான்	2 எண்கள் பெரியதடுப்பு அணைகள்.	1.422
3. வீரவனூர்	2 எண்கள் பெரியதடுப்பு அணைகள்.	1.434
4. போகலூர்	1 எண் பெரியதடுப்பு அணைகள்.	0.633
5. கீழக்கோட்டை	2 எண்கள் பெரியதடுப்பு அணைகள்.	1.350
	11	**7.209**
1 போகலூர்	11 சிறிய தடுப்பு அணைகள்	1.210

இராமநாதபுரம் வேளாண்மை இணை இயக்குநரால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்.

வரிசை எண்ணும் திட்டமும்	பஞ்சாயத்து யூனியன்.	கிராமம்.	குறியீடு செயல் இலக்கு	சாதனை செயல் இலக்கு	சாதனை பொருள் இலக்கு
1. கோடை உழவு.	பரமக்குடி	எஸ். அண்டக்குடி	35 எக்	100 எக்	20,000.00
		பெருமாள் கோவில்	40 எக்		
		ஊரக்குடி	25 எக்		
	போகலூர்	மஞ்சக்கொல்லை	35 எக்	75 எக்	15,000.00
		பொட்டிதட்டி	40 எக்		
			மொத்தம்.	**175 எக்**	**35,000.00**
2. தொழில் நுட்ப விளக்கப் பண்ணை.					
1. சிறுதானியம்	பரமக்குடி	எஸ். அண்டக்குடி	35 எக்	100 எக்	50,000.00
		பெருமாள் கோவில்.	40 எக்		
		ஊரக்குடி	25 எக்		
	போகலூர்	மஞ்சக்கொல்லை	35 எக்	75 எக்	37,500.00
		பொட்டிதட்டி	40 எக்		
			மொத்தம்	**175 எக்**	**87,500.00**
			நிகர மொத்தம்	**350 எக்**	**1,22,500.00**

உதவி இயக்குநர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவு விற்பனைச் சம்மேளனம், இராமநாதபுரம்

வரிசை எண்ணும் கிராமப்பெயரும்	பனை எண்ணம்.	விதைகள் நடவு/ தொகை.
(1)	(2)	(3)
1. கமுதக்குடி	2.50 லட்சம்	1.87 லட்சம்
2. பொட்டிதட்டி	1.00 லட்சம்	0.75 லட்சம்
மொத்தம்	**3.50**	**2.62**

1993-94 ஆம் ஆண்டு 50 சதவீத மானிய விலையில் பழக்கன்றுகள் விநியோகம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியம்

வரிசை எண்ணும் ஊராட்சி மற்றும் கிராமத்தின் பெயரும்.	பழக்கன்றுகள். கொய்யா, மா, எலுமிச்சை.	மொத்த விலை
(1)	(2)	(3)
1 கீழப்பாத்திபனூர்	119	700.00
2. பீர்க்கங்குறிச்சி	170	990.00
3. மோசுகுடி	150	820.00
4. பெருங்கரை	267	1,655.00
5. பாம்பூர்	119	700.00
6. கச்சாத்தநல்லூர்	240	1,410.00
7. இலந்தைக்குளம்	114	598.00
8. நேருநகர்	47	267.00
9. கமுதக்குடி	289	1,438.00
10. தினைக்குளம்	352	2,050.00
11. தெ. பொதுவக்குடி	165	890.00
12. பார்த்திபனூர்	352	1,914.00
13. கீழப்பெருங்கரை	155	842.00

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)		(2)	(3)
14. சரஸ்வதி நகர்		75	375.00
15. பி.பி.ஏந்தல்		180	900.00
16. பிள்ளையார்யேந்தல்..	..	144	720.00
17. வாகையேந்தல்		100	500.00
18. ஒத்தவீடு		200	1,350.00
19. லட்சுமிபுரம்		341	2,405.00
20. எம். நெடுங்குளம்		311	2,283.00
21. எ. புத்தூர்		75	375.00
22. விளத்தூர்		210	1,120.00
23. உரப்புலி		270	1,490.00
24. வெங்கட்டங்குறிச்சி ..	..	202	1,360.00
25. கலையூர்		30	185.00
மொத்தம்	..	**4,677**	**27,340.00**

63—

திருவெட்டார் தொகுதியில் வேளாண்மைத் துறை அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 38096—*திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெட்டார் தொகுதி, செருப்பாலூர் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைத் துறை அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

திருவெட்டார் தொகுதியில் செருப்பாலூர் என்ற ஊர் திருவெட்டாரிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருவெட்டாரில் ஏற்கெனவே ஒரு வேளாண்மை விரிவாக்க மையம் உள்ளதால், செருப்பாலூரில் தனியாக வேளாண்மை விரிவாக்க மையம் தேவை இல்லை. மேலும் செருப்பாலூரில் வேளாண்மைத் துறையைச் சார்ந்த

அலுவலகம் ஏதும் இல்லை என்பதால், அங்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் பிரேரணை ஏதும் இல்லை.

64—

கபிலர் மலைத்தொகுதியில் பனைமரங்கள் வளர்த்தல்

வினா எண் 38428—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர் மலை தொகுதியில் ஆற்றுப் புறம்போக்கு பகுதிகளில் எண்ணெய் பனை மரங்களை வளர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) பொதுப்பணித்துறையிடமிருந்து ஆற்றுப்புறம்போக்கு நிலத்தைப்பெற்று இம்மரங்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாட்டில் எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மைய அரசின் அனுமதியின் பேரிலும் மைய அரசின் தேர்வின் அடிப்படையிலும் தஞ்சாவூர், திருச்சி மற்றும் காயிதே மில்லத் மாவட்டங்களில் மட்டும் மைய அரசின் 75 விழுக்காடு மானிய உதவியுடன் எண்ணெய்ப்பனை சாகுபடி திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது மேற்படி திட்டம் மூன்று மாவட்டங்களில் மட்டும் விவசாயிகளின் விளை நிலங்களில் செயல்படுத்தப்படுவதால் பொதுப்பணித் துறையிலிருந்து ஆற்றுப் புறம்போக்கு நிலங்களைப் பெற்று மரங்களை வளர்க்க சாத்தியக்கூறு இல்லை.

65—

பால்பண்ணை தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்

வினா எண் 27478—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மாதவரம் பால் பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித்தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே உள்ள சுமார் 500 குடியிருப்புகளை, பால் வளத்துறை ஆணையர் அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு வழங்குவதோடு, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய ஊழியர்களுக்கும் குடியிருப்புகள் வழங்கப்பட்டு வருவதால் மாதவரம் பால் பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

66—

வணிகவரித்துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு கூடுதல் வசதி

வினா எண் 35139—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வணிக வரித் துறையின் சுற்றும்படை (Roving Squad) பிரிவுகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு என்னென்ன கூடுதல் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறதா?

(இ) சுற்றும்படை மூலம் 1993-94 ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்ட முக்கிய வரி ஏய்ப்பு விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:

(அ) ஒவ்வொரு சுற்றும்படைக்கும் (Roving Squad) அரசு ஈப்பு ஊர்தி (ஓட்டுநருடன்) வழங்கப்பட்டிருப்பதுடன், ஓர் அலுவலக உதவியாளரும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சென்னை நகர்ப்பகுதியில் இயங்கும் சுற்றும்படை ஈப்பு ஊர்திகளில் வயர்லெஸ் (Wireless) தொடர்பு சாதனம் பொருத்தப்பட்டுள்ளது.

(ஆ) சுற்றும்படை அலுவலர்களுக்கென சிறப்பு பயிற்சி, ஏதும் அளிக்கப்படுவதில்லை.

(இ) சுற்றும்படை மூலம் 1993-94 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட் முக்கிய வரி ஏய்ப்பின் விவரம்:-

வரிசை மற்றும் செயலாக்கக் கோட்டம்.	வசூலிக்கப்பட்ட இயக்கத் தொகை மற்றும் முன்வரி (ரூபாய் இலட்சங்கள்)
(1)	(2)
1 சென்னை	346.74
2 திருச்சி	85.88
3 கோவை	129.79
4 மதுரை	84.10

67—

இருவழிச் சோதனைச் சாவடிகள் அமைத்தல்

வினா எண் 35151—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்து அதிகம் உள்ள சாலைகளிலுள்ள சோதனைச் சாவடிகளை இருவடி சோதனைச் சாவடிகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(அ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்து எங்கெங்கு அதிகம் உள்ளனவோ அங்கெல்லாம் பெரும்பாலும் இருவழி சோதனைச் சாவடிகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. தற்போது எட்டு இடங்களில் இரு வழிச் சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. எனினும், வாகனத் தணிக்கையை விரைவுபடுத்தி போக்குவரத்து இடையூறுகளைத் தவிர்க்க 28-3-1994-ல் நடந்த அமைச்சர்களின் உயர்நிலைக் கூட்டத்தில் பூந்தமல்லி மற்றும் இது போன்ற போக்குவரத்து இடையூறு ஏற்படுத்தும் இதர சோதனைச் சாவடிகளிலும் ஆய்வு செய்து அறிக்கை வழங்க செங்கை-எம்.ஜி.ஆர்., தர்மபுரி, . கன்னியாகுமரி, கோயம்புத்தூர், மற்றும்

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் காவல், வணிகவரி போக்குவரத்து, தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலை துறைகளின் அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக் குழுவின் அறிக்கை பெறப்பட்டதும், பரிந்துரைகளைப் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

68—

போளூரில் வணிகவரித்துறை அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் **36607** *திரு. த. வேடியப்பன்: மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *போளூரில் இயங்கிவரும் வணிகவரித்துறை அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது கட்டப்படும்?*

விடை—

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம் போளூரில், துணை வணிகவரி அலுவலர் அலுவலகம் தற்பொழுது தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. போளூரில் இந்த அலுவலகத்தைத் தவிர வணிகவரித் துறையைச் சார்ந்த வேறு அலுவலகங்கள் எதுவும் இல்லை. எனவே தற்போது மேற்படி அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அங்கு தற்போது அரசுக் கட்டிடம் கட்ட உத்தேசமில்லை.

69—

சேலம் இரும்பாலையை விரிவுபடுத்துதல்

வினா எண் **1352**—*திரு. மு. நடேசன், மற்றும் திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *சேலம் இரும்பாலைத்திட்டம் விரிவுபடுத்த மாநில அரசால் மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படுமா?*

(ஆ) *ஆம் எனில், விவரம் என்ன?*

விடை—

மாண்புமிகு திரு ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சேலம் இரும்பாலைத் திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களையும், மைய அரசினையும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

அதன் தொடர்பாக, மைய அரசின் எஃகு துறை அமைச்சர் அவர்கள் தமது கடிதத்தில் சேலத்தில் சுற்றுப் பகுதிகளில் தேவையான தரமிக்க இரும்பு நிறைந்த தாதுப் பொருட்கள், சுண்ணாம்புக் கற்கள் கிடைக்காத நிலையில், மைய அரசு 425 கோடி ரூபாய் செலவில் வெப்பத்தைப் பயன்படுத்தி, கம்பி, பட்டை தகடுகள் தயாரிக்கும் வசதி படைத்த வெப்பச்சுழல் இயந்திரங்களை நிறுவ உள்ளது என்றும், இத்திட்டம் வரும் ஏப்ரல் திங்கள் 1995 ஆம் ஆண்டுக்குள் நிறைவுபெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார். மேலும் வேண்டிய விரிவாக்கங்கள், தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள கூடுதல் வசதிகளினால், உற்பத்தி செயற்பாடுகள் நிரந்தரப்படுத்தப்பட்டபின் கவனிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

70—

அந்நிய தொழில்நுட்பத்துடன் தொழிற்சாலைகள் அமைத்தல்

வினா எண் **4228**-திரு. கே. முனிவேங்கடப்பன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி வட்டம், போலுப்பள்ளி அருகே (High Tech) ஜப்பான் உதவியோடு ஆரம்பிக்க இருந்த ஏற்றுமதி பொருள்களை தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் பணி இந்த ஆண்டு துவங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் துவங்க உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

(அ) துவங்காது.

(ஆ) 'டிட்கோ' தர்மபுரியில் ஒரு பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கக் கருதி 29-7-1991 அன்று கூட்டு தொழில் முனைவோர்

தேர்ந்தெடுக்க கருதி தினசரிகளில் விளம்பரம் செய்தது. இத்திட்டத்திற்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் விற்பனை வாய்ப்பு அறிக்கை (Market Survey-cum-Feasibility Report) டாடா எக்கனாமிக் சர்வீஸஸ் மூலம் தயாரிக்கப்பட்டது. இவ்வறிக்கையில் மணி ஒன்றுக்கு 15 டன் உற்பத்தி திறன் கூடிய திட்டத்தை அந்நிய தொழில் நுட்பத்துடன் அமைக்கவும், உற்பத்தி முழுவதையும் ஏற்றுமதி செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. திட்ட முதலீடு ரூ. 32.00 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு அதிகமான அளவு தண்ணீர் தேவைப்படுவதாலும், தர்மபுரி ஒருவறட்சியான பகுதி ஆனதாலும் இத்திட்டத்தை பொன்னையாறு ஆற்றின் அருகில் அமைக்கக் கருதியுள்ளது. இத்திடத்திற்கேற்ற அமைவிடங்களில் ஒன்றாக. தேசிய நெடுஞ்சாலையில் கிருட்டிணகிரியிலிருந்து ஹோசூர் செல்லும் வழியில் 8 கி.மீ. தொலைவில் போலுப்பள்ளி கிராமம் கிருட்டிணகிரி வட்டம் தேர்தெடுக்கப்பட்டுள்ளது. இது தவிர இத்தொழிற்சாலையை தர்மபுரி மாவட்டம், பர்கூரில் அமைக்கவும் ஒரு திட்டம் உள்ளது. எனினும், எல்லா வகையான சாத்தியக் கூறுகளையும் நன்கு பரிசீலித்த பின்புதான் இத்தொழிற்சாலைக்கான இடம் முடிவு செய்யப்படும்.

71—

டிட்கோவின் புதிய திட்டங்கள்

வினா எண் 7746—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 3 ஆண்டுகளில் டிட்கோ செயல்படுத்திய புதிய திட்டங்களின் விவரம் என்ன?

(ஆ) அவற்றிற்கான மூலதனச் செலவு என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1989 ஆம் ஆண்டில் செயற்படுத்திய புதிய திட்டங்கள்

தொடர் எண். (1)	திட்டத்தின் பெயர் மற்றும் இடம். (2)	கூட்டுத்தொழில் முனைவோரின் பெயர். (3)	உற்பத்திப் பொருளின் பெயர். (4)	உற்பத்தித் திறன் (ஆண்டொன்றுக்கு (5) (டன்னில்)
1	தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம் —கற்குழாய் பிரிவு, விருத்தாச்சலம்— தொன்னாற்காடு மாவட்டம்.	..	கற்குழாய்கள்	7,200
2.	உஸ்தா-டீ-பையோடெக் இன்டஸ்டீரிஸ் லிமிடெட், கடலூர்— வள்ளலார் மாவட்டம்.	கே.என்.டேனிடா (பி) லிமிடெட் கல்கத்தா.	ஸ்டாக்	7,400
			ஃப்ரக்டோஸ்சிரப்	6,600
			குளுக்கோஸ் சிரப்	6,270
			டெக்ஸ்ட்ரோஸ் மோனோ ஹைடிரேட்.	36,300
			டெக்ஸ்ட்ரோஸ் அன்ஹைடர்ஸ்.	1,115
			கால்நடைத் தீவனம்	22,440

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1989 ஆம் ஆண்டில் செயற்படுத்திய புதிய திட்டங்கள்

தொடர் எண். (1)	திட்டச் செலவு. (6) (ரூபாய் கோடியில்)	டிட்கோவின் முதலீடு. (7) (ரூபாய் லட்சத்தில்)	வேலை வாய்ப்பு. (8)	உற்பத்தித் தொடங்கும் நாள். (9)	குறிப்புரை. (10)
1.	0.90	20.00	100	நவம்பர் 1989	இது தமிழ்நாடு மட்பாண்டத் தொழில் நிறுவனத்திடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இது நலிந்த தொழிற் பிரிவான படியால் இது தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டது.
2.	29.77	230.00	200	டிசம்பர் 1992	டிட்கோ நிறுவனம் தொழில் முனைவோருக்குச் சாதகமாக, அதன் பங்குகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1990 ஆம் ஆண்டில் செயற்படுத்திய புதிய திட்டங்கள்

தொடர் எண். (1)	திட்டத்தின் பெயர் மற்றும் இடம். (2)	கூட்டுத்தொழில் முனைவோரின் பெயர். (3)	உற்பத்திப் பொருளின் பெயர். (4)	உற்பத்தித் திறன் (ஆண்டொன்றுக்கு). (5) (டன்னில்)
1.	சதர்ன் அயர்ன் மற்றும் நிறுவனம் (சிப்காட்) மேட்டூர்-சேலம் மாவட்டம்.	லட்சுமி மெசின் ஓர்க்ஸ்.	வார்ப்பட ரக தேனிரும்பு.	1,80,000
2.	ஜே.கே.ஃபார்மா கெம் லிட், கடலூர்-வள்ளலார் மாவட்டம் .	ஜே.கே.இன்டஸ்ட்ரீஸ், புதுடில்லி.	பென்சிலின் ஜி	600
3.	இன்டக்கிரேட்டட் வாட்டர் புரூஃபிங் லிட்., பொன்னேரி. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்.	கேப்டன் ஏ.கே. பென்சால் அண்டு அசோசியேட்ஸ்.	பாலிதிலீன் அடிப் படையாகக் கொண்ட, நீலக் கீல் பூசப்பட்ட நீர்க்காப்பு சவ்வு.	1.35 மில் ச.மீட்டர்.
4.	டைட்டன் இன்டஸ்ட்ரீஸ் லிட், நிறுவனத்தின் கேசின் திட்டம் (விரிவாக்கம்), ஓசூர் தர்மபுரி மாவட்டம்.	டைட்டன் இன்டஸ்டீரீஸ், நிறுவனத்தின் விரிவாக்கம்.	கேசஸ், பிரேஸ் லெட்ஸ் பாகங்கள்.	1.5 மி. கேஸ்களும் 1 மி. பிரேஸ்லெட் பாகங்களும்.

(1)	(2)	(3)	(4)	(5) (டன்)
5.	யு.ப்.பெட்ரோ புராடக்ட் லிட். மணலி-செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்.	தி/வா யு.பி.லிட் மற்றும் அதன் கூட்டாளிகள்.	புரோப்ளின் ஆக்ஸைடு.	12,000
			புரோட்டின் கிளைக்கால் மற்றும்	8,000
			பாலியால்.	7,000

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1990 ஆம் ஆண்டில் செயற்படுத்திய புதிய திட்டங்கள்.

தொடர் எண்.	திட்டச் செலவு. (6)	டிட்கோவின் முதலீடு. (7) (ரூபாய் கோடியில்)	வேலை வாய்ப்பு. (8) (ரூபாய் லட்சத்தில்)	உற்பத்தித் தொடங்கும் நாள். (9)	குறிப்புரை. (10)
1.	159.05	578.00	335	1995-ஆம் ஆண்டு மத்தியில்.	இத்திட்டம், இணைத்துறையின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது தொழிலகப் பணிதொடங்கிவிட்டது.
2.	210.00	900.00	200	செப்டம்பர் 1994	இத்திட்டம் இணைத்துறையின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவுறும் நிலையில் உள்ளது.
3.	4.63	43.00	70	12-10-1990	கூட்டுத் துறையின் கீழ் இயங்கும் இத்திட்டத்தில் உற்பத்திப்பணி நடைபெற்று வருகிறது.
4.	30.00	358.80	400	25-9-1990	டைட்டன் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் விரிவாக்க திட்டத்தின் ஒரு பகுதியாக, கூட்டுத் துறையின் கீழ் இயங்கும் இத்திட்டத்தில் உற்பத்திப் பணி நடைபெற்று வருகிறது.

	(6)	(7)	(8)	(9)	(10)
5	81.00	747.50	209	1-9-1990	கூட்டுத் துறையின் கீழ் இயங்கும் இத்திட்டத்தின் உற்பத்திப் பணி நடைபெற்றுவருகிறது.
		2,877.50			

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1991 ஆம் ஆண்டில் செயற்படுத்திய புதிய திட்டங்கள்

தொடர் எண்.	திட்டத்தின் பெயர் மற்றும் இடம்.	கூட்டுத்தொழில் முனைவோரின் பெயர்.	உற்பத்திப் பொருளின் பெயர்.	உற்பத்தித் திறன் (ஆண்டொன்றுக்கு).
(1)	(2)	(3)	(4)	(5) (டன்)
1.	சங்கம் அலுமினியம் லிட்., ஓசூர் வட்டம்-தர்மபுரி மாவட்டம்.	தி அருள் கே. மால்பானி மற்றும் அசோசியேட்ஸ்.	அலுமினியம் அல்லாயிஸ் எக்ஸ்ட் ரூ சன்ஸ்.	7,000
2.	தமிழ்நாடு தொலைத் தொடர்பு நிறுவனம் அரக்கோணம்-வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம்.	தி/வா. டெலி கம்யூனிகேசன்ஸ் கன்சல்டன்ஸ் இந்தியா லிட்.,	ஜெல்லி நிரப்பப் பட்ட தொலைத் தொடர்பு கம்பிவடங்கள்.	6.25 இலட்சம் கி.மீ.
3.	தமிழ்நாடு தொழில் வெடி மருந்துகள் நிறுவனம், வேலூர்-வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம்.	..	ஸ்லரி வெடி மருந்துகள்.	3,000

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1991 ஆம் ஆண்டில் செயற்படுத்திய புதிய திட்டங்கள்

தொடர் எண். (1)	திட்டச் செலவு. (6)	டிட்கோவின் முதலீடு. (7) (ரூபாய் கோடியில்)	வேலை வாய்ப்பு. (8) (ரூபாய் லட்சத்தில்)	உற்பத்தித் தொடங்கும் நாள். (9)	குறிப்புரை. (10)
1.	11.00	92.00	182	2-5-1991	கூட்டுத் துறையின் கீழ் இயங்கும் இத்திட்டத்தில் உற்பத்திப் பணி நடைபெற்று வருகிறது.
2.	29.00	293.00	232	9-9-1991	-மேற்படி-
3.	1.40	(தமிழ்நாடு தொழிற் சாலை வெடி மருந்துகள் நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதி).		டிசம்பர் 1991	பொதுத் துறையின்கீழ் இயங்கும் இத் திட்டத்தில் உற்பத்திப்பணி நடைபெற்று வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1992 ஆம் ஆண்டில் செயற்படுத்திய புதிய திட்டங்கள்

தொடர் எண்.	திட்டத்தின் பெயர் மற்றும் இடம்.	கூட்டுத்தொழில் முனைவோரின் பெயர்.	உற்பத்திப் பொருளின் பெயர்.	உற்பத்தித் திறன் (ஆண்டொன்றுக்கு).
(1)	(2)	(3)	(4)	(5) (டன்)
1.	லேக்டோ கெம். லிட்., கக்கலூர், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம்.	திரு. எம்.எல். என். சாஸ்திரி மற்றும் திருமதி எஸ்.ஸ்ரேயா சென்னை.	லேகடிக் அமிலம்	1,000
2.	நவோதயா மாஸ் என்டர் டைன்மென்ட்ஸ், லிட்., தாம்பரம், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம்.	திரு.எம்.சி.புன் னூஸ் மற்றும் அசோசியேட்ஸ்.	தீம்பார்க் (கேளிக்கை பூங்கா.)	நாளொன்றுக்கு 10,000 பார்வை யாளர்கள்.
3.	ஃபோட்டோ காப்பியிங் கெமிக்கல்ஸ் லிட்., (இடம் முடிவாகவில்லை).	சௌத் இந்தியா விஸ்கோஸ்.	டோனர்ஸ் மற்றும் டெவலப்பர்ஸ்.	300

(1)	(2)	(3)	(4)	(5)
4	சதர்ன் அயர்ன்ஸ் மற்றும் ஸ்டீல் நிறுவனம் (சிஸ்கால்) மேட்டூர், சேலம் மாவட்டம்.	லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் லிட்.	மெட்டலார்ஜிகல் கோக்.	2,50,000
5.	சதர்ன் அலுமினியம் லிட்., செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்.	திரு. என். ராம்குமார் மற்றும் அசோசியேட்ஸ்.	அலுமினிய உருளைப் பொருள்கள், (தகடுகள், பட்டைகள் சுருள்கள்).	2,500

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1992 ஆம் ஆண்டில் செயற்படுத்திய புதிய திட்டங்கள்

தொடர் எண்.	திட்டச் செலவு. (6)	டிட் கோவின் முதலீடு. (7) (ரூபாய் கோடியில்)	வேலை வாய்ப்பு. (8) (ரூபாய் லட்சத்தில்)	உற்பத்தித் தொடங்கும் நாள். (9)	குறிப்புரை. (10)
1.	5.60	49.40	50	ஜனவரி 1994	கூட்டுத் துறையில் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தில் உற்பத்திப் பணி நடைபெற்று வருகிறது.
2.	15.15	82.50	225	ஆகஸ்டு 1994	இணைத்துறையின்கீழ் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பார்க் முடிவுறும் தருவாயில் உள்ளது. 1994 ஆகஸ்ட் இறுதியில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
3.	25.00	10.00	120	..	திட்டம் கைவிடப்பட்டு விட்டது.
4.	142.65	628.00	300	1996	இத்திட்டம், இணைத் துறையின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தேனிரும்பு திட்டம் அருகில் இத்திட்டத்திற்கு இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
5.	100.00	660.00	200	1995 மத்தியில்	இத்திட்டம், இணைத் துறையின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1993 ஆம் ஆண்டில் செயற்படுத்திய புதிய திட்டங்கள்

தொடர் எண்.	திட்டத்தின் பெயர் மற்றும் இடம்.	கூட்டுத்தொழில் முனைவோரின் பெயர்.	உற்பத்திப் பொருளின் பெயர்.	உற்பத்தித் திறன் (ஆண்டொன்றுக்கு).
(1)	(2)	(3)	(4)	(5)
1.	ஹாரிசன் யுனிவர்சல் பிளான்ட்ஸ் லிட் (100 சதவிகிதம் இ.ஓ.யு.) மலர்ச் செடி வளர்ப்பு, ஓசூர், தர்மபுரி.	ஹாரிசன் மலையாளம் லிட்., பெங்களூர்.	ரோஜாக்கள்.	2 மில்லியன்.
2.	சப்தரிஷி அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் லிட். (100 சதவிகிதம் இ.ஓ.யு.) காளான்.	ஆர்.கே. ஜாஜு அசோசியட்ஸ், நொய்டா, உ.பி.	டப்பிகளில் அடைக்கப்பட்ட வெண் காளான்.	3,000 மெ. ன்
3.	விளக்குகள், விளக்கு பாகங்கள் (டைனா லாம்ப்ஸ் மற்றும் கிளாஸ் ஓர்க்ஸ் லிட்.)	திரு. பி.ஒபுல். ரெட்டி மற்றும் அசோசியேட்ஸ்.	ஒளியுமின் விளக்குகள் ஜி.எஸ்.எஸ். பல்புகள். பெட் கிளாஸ் டியூபிங்ஸ் மற்றும் விளக்கு பாகங்கள்.	எஃப்.டி. எல். 12.53 மில்லியன்; டியூப்லர் ஷெல்ஸ் 16.80 மில்லியன்.
4.	டைட்டன் இண்டஸ்டரீஸ் லிட், (விரிவாக்கம்).	டைட்டன் இன்டஸ்ட்ரீஸ் லிட்., நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம்.	ஜூவெல்லரி; கடிகாரங்கள் ஈரோக் கடிகாரங்கள்.	2 முதல் 3 மில்லியன்.

(1)	(2)	(3)	(4)	(5)
5.	செஸ்லிண்ட் டெக்ஸ் டைல்ஸ் லிட்.	மதனபள்ளி நூற்பாலை.	பருத்தி நூல்.	25,200 கதிர்கள்.
6.	ஸ்கைலைன் லெதர் இண்டஸ்ட்ரீஸ் லிட்.	திரு. பீட்டர் ஜே.ஆர். பிரபு அசோசியேட்ஸ்.	தோல் ஷூக்கள்	6 இலட்சம் ஜோடி.
7.	ஏசியன் பேரிங்ஸ் லிட்.	திரு. எஸ்.எம். பழனியப்ப செட்டியார். அசோசியேட்ஸ் ஏசியன் பேரிங் நிறுவனத்தின் விரிவாக்கம்.	உருண்டை/டேப்பர் உருளை பேரிங்குகள்.	4.9 மி.
8.	ஸ்கொயர்டீ பிவரேஜிஸ் லிட்.	திரு. தினேஷ் டால்மியா ஸ்கொயர்டி சாப்ட் வேர் லிட். சென்னை.	எக்ஸ்ட்ரா நியூட்ரல் ஆல்கஹால்.	5 இலட்சம் லிட்டர்.
9.	(மென் இரும்பு)ஸ்பாஞ்ச் அயர்ன்.	திரு. பி.எம். பச்சை செட்டியார்.	மென் இரும்பு.	30,000 டன்.
10.	அக்லோமேரேட்டட் கிரனைட் ஓடுகள்/பாளங்கள்.	பேக்லைட் ஹைலம் லிட்.	ஓடுகள்/பாளங்கள்	2,500 ச.மீ.

(1)	(2)	(3)	(4)	(5)
11.	நைட்ரோ பாஸ்பேட் காம்ளெக்ஸ்.	திரு. இரலாக் சிங், அப்பலோ டீயூப் லிட்.	நைட்ரோ பாஸ் பேட்	2,25,000 டன்.
			கால்சியம், அமோனியம் நைட்ரேட்.	2,12,000 டன்.
12.	மெரைன் பிரைட் கள் டைனர்கள் (100 சதவிகிதம் விகிதம் இ.ஒ.யு.)	டீசி.எம். ஸ்ரீராம் இன்டஸ்ரீஸ் லிட்., புதுடில்லி.	மெரைஃபிரைட் கன்டைனர்கள்.	18,000 டி.இ.யு.
13.	சின்-ஏ கெமிக்கல்ஸ் (இந்தியா) லிட்.	திரு. வி. ரமேஷ் நவபாரத் மற்றும் பியர்டு ஷெல் குரூப்.	விரிவடையும் பாலிஸ்ட்ரெயின் (இரலாக்சிங்) ரெசின்.	6,000 டன்.
14.	ஆர்.ஆர். மேதிஃபார்மா லிட்.	வி. இராமன் மற்றும் அசோசியேட்ஸ்.	ஐ.வி. ஃபுளுயிட்	14 மி.
15.	அமெரிக்கன் டிராக் டயர்கள் லிட். (ஆட்டோ மொபைல் டையர், டியூப்கள்).	அமெரிக்கன் டயர்ஸ் லிட்., அமெரிக்கா.	மோட்டார் வாகனங் களுக்கான டயர்கள் டியூப்கள்.	1.5 மி.
16.	தேட்கொ ஆர்கானிக் லிட்., பல்க் டரக் இன்டர் மீடியேட் காம்ளக்ஸ்.	என்வி சௌத்ரி தேட்கோ குரூப், ஹைதராபாத்.	டிரை எதி லாத்கோ ஃபார் மேட்.	150 டன்
			என்.எம்.எஸ்.எம்.	600 டன்.

(1)	(2)	(3)	(4)	(5)
17.	சி.ஜி. பால் கிரீட் லிட். (பாலிமர் கான்கிரீட்).	கிராம்டன் கிரிவ்ஸ் லிட்., பம்பாய்.	பாலிமர் கான்கிரீட்	2,500 டன்.
18.	வீடியோ கேசட்ஸ் லிமிடெட்.	இராம. சுப்பிரமணியன், சென்னை.	வீடியோ கேசட்டுகள்.	5. மீ.
19.	ஜெயங்கொண்டம் லிக்னைட் பவர் கார்ப்பரேஷன் லிமிடெட்.	ஒருங்கிணைந்த நிலக்கரிச் சுரங்க மின் உற்பத்தி நிறுவனம்.	மின்சாரம்	1,500 மெகா வாட்.
20.	கோடார் பெட்ரோ கெமிக்கல் லிமிடெட்.	இராஜஸ்தான் பெட்ரோசிந் தெட்டிக்ஸ், புதுடெல்லி.	பாலியஸ்டர் நூலிழை.	600 டன்.
21.	இண்டரா ஆக்குலர் லென்ஸ்	டிராக்டர் பார்ம்ஸ் கருவிகள் நிறுவனம், சென்னை.	இன்டரா ஆக்குலர் லென்ஸ்.	1 இலட்சம்
22.	'பெட்' ஃபிலிம்ஸ்	மப்பத்லால் லிட்., பம்பாய்.	'பெட்' ஃபிலிம்ஸ்	5,000 டன்.
23.	'சன்ரைஸ்' ஃபுட்ஸ் லிட்	கேசவ் பூபால் அசோசியேட்ஸ், ஹைதராபாத்.	பழங்களைப் பதப்படுத்தல்.	மணிக்கு 10 டன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)
24.	டால்கோ டிஸ்டிலரிஸ் கெமிக்கல் லிட். (ஆத்தூர்).	எல்.எல்.கே. சாஸ்த்ரி மற்றும் அசோசியேட்ஸ்.	எக்ஸ்ட்ரா நியுட்ரல் ஆல்கஹால்.	5 மில்லியன் லிட்டர்.
25.	தமிழ்நாடு கெமிக்கல்ஸ் லிட்.	ஏ.டி.எல். பிரசாத் வி.கே. மாரிமுத்து	வினைள் பைரிடிஸ் லேட்டக்ஸ்.	750 டன்.
26.	நூற்பாலை (பர்கூர்).	தேவி டி.என்.கே. குருப் கம்பெனி.	நூற்பாலை.	25,000 கதிர்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1993 ஆம் ஆண்டு செயற்படுத்திய புதிய திட்டங்கள்

தொடர் எண். (1)	திட்டச் செலவு. (6) (ரூபாய் கோடியில்)	டிட்கோவின் முதலீடு. (7) (ரூபாய் லட்சத்தில்)	வேலை வாய்ப்பு. (8)	உற்பத்தித் தொடங்கும் நாள். (9)	குறிப்புரை. (10)
1.	5.85	3.00	150	டிசம்பர் 1993	இத்திட்டம் எஸ்கார்ட் துறையின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. உற்பத்தி நடைபெற்று வருகிறது.
2.	21.40	273.00	200	மே 1994	பயிர் பணிகள் ஸ்திரமடைந்து வருகின்றன. ஏற்றுமதி தொடங்கி விட்டது (இணைத் துறை).
3.	46.25	544.00	203	ஜனவரி 1993	கூட்டுத் துறையின் கீழ்வரும் இத் திட்டம் உற்பத்தியைத் தொடங்கி விட்டது.
4.	170.00	1,811.16	1,700	மார்ச் 1994	டைட்டன் இன்டஸ்டிரீஸ் லிட்., நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக, இத்திட்டம் கூட்டுத் துறையின்கீழ் செயற்படுத்தப்படுகிறது. பணிகள் முடிவடைந்துவிட்டன.
5.	46.89	206.25	429	பிப்ரவரி 1994	இணைத் துறையில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டம் உற்பத்தியை தொடங்கிவிட்டது.

(1)	(6) (ரூபாய் கோடியில்)	(7) (ரூபாய் லட்சத்தில்)	(8)	(9)	(10)
6.	11.20	62.70	500	ஜூன் 1994	இணைத் துறையில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டம், 1994 ஜூன் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியது.
7.	5.22	80.00	75	ஜூன் 1994	இது ஏசியன் பேரிங் லிட். நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தினுடைய ஒரு பகுதியாக கூட்டுத் துறையின்கீழ் செயற்படுத்தப்படுகிறது. விரிவாக்கத் திட்டம் நிறைவுற்றுவிட்டது.
8.	52.00	286.00	300	1995 மத்தியில்	இத்திட்டம் இணைத் துறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.
9.	27.19	146.80	150	..	இத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.
10.	53.00	இன்னும் செய்யப் படவில்லை.	70	1995 மத்தியில்	இத்திட்டம், கூட்டு/இணைத்துறையின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் முனைவோர் உடன்படிக்கை 3-6-1994 அன்று கையெழுத்தாகியது.
11.	615.00	2500	1000	1995 மத்தியில்	இத்திட்டம், இணைத் துறையின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது.
12.	75.40	2.96	100	1995 மத்தியில்	இத்திட்டம் இணைத் துறையின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.

53/485–17a

(1)	(6) (ரூபாய் கோடியில்)	(7) (ரூபாய் லட்சத்தில்)	(8)	(9)	(10)
13.	14.36	50.00	150	டிசம்பர் 1993	இணைத்துறையில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் உற்பத்திப் பணி நடைபெற்று வருகிறது.
14.	12.00	50.00	100	ஏப்ரல் 1993	இணைத்துறையில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் உற்பத்திப் பணி நடைபெற்று வருகிறது.
15.	400.00	42.00	800	1996	இத்திட்டம் கூட்டுத் துறையின்கீழ் செய்படுத்தப்பட்டு வருகிறது.
16.	25.00	1.50	200	1995	இத்திட்டம் கூட்டுத் துறையின்கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது.
17.	4.00	2.03	40	1995	இத்திட்டம், இணைத் துறையின்கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது.
18.	30.00	1.83	200	1995	ஷை
19.	7,480.00	5.10	4000	2000	ஷை
20.	110.00	5.00	240	1995	ஷை
21.	15.00	0.81	50	1995	ஷை
22.	75.22	3.24	250	1995	ஷை

(1)	(6) (ரூபாய் கோடியில்)	(7) (ரூபாய் லட்சத்தில்)	(8)	(9)	(10)
23.	21.00	2.00	100	1994 இறுதியில்	மேற்படி
24.	18.00	0.58	200	1995	மேற்படி
25.	7.00	0.45	200	1995	மேற்படி
26.	48.00	இன்னும் முடிவு செய்யப் படவில்லை.	300	1995	இத்திட்டம், கூட்டு/இணைத் துறையின் கீழ் செயற்படுத்தப் படுகிறது.

டிட்கோ மூலதன செலவு விவரம்

72—

வினா எண் **7747—***திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நடப்பு நிதியாண்டில் எங்கெங்கு புதிய தொழில் திட்டங்களை டிட்கோ செயல்படுத்த திட்டமிட்டுள்ளது?

(ஆ) அவற்றிற்கான மூலதன செலவு என்ன?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1993 ஆம் ஆண்டில் செயற்படுத்திய புதிய திட்டங்கள்

தொடர் எண்.	திட்டத்தின் பெயர் மற்றும் இடம்.	கூட்டுத்தொழில் முனைவோரின் பெயர்.	உற்பத்திப் பொருளின் பெயர்.	உற்பத்தித் திறன் (ஆண் டொன்றுக்கு).
(1)	(2)	(3)	(4)	(5)
1.	ஹாரிசன் யுனிவர்சல் பிளான்ட்ஸ் லிட் (100 சத விகிதம் இ.ஓ.யு.) மலர்ச் செடி வளர்ப்பு, ஓசூர்-தர்மபுரி.	ஹாரிசன் மலையாளம் லிட். பெங்களூர்.	ரோஜாக்கள்.	2 மில்லியன்.
2.	சப்தரிஷி அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் லிட். (100 சத விகிதம் இ.ஓ.யு.) காளான்	ஆர்.கே. ஜாஜு அசோசியேட்ஸ் நொய்டா, உ.பி.	டப்பிகளில் அடைக்கப்பட்ட வெண் காளான்.	3,000 மெ.டன்.
3.	விளக்குகள், விளக்கு பாகங்கள் (டைனா லாம்ப்ஸ் மற்றும் கிளாஸ் ஒர்க்ஸ் லிட்.)	திரு. பி. ஒபுல் ரெட்டி மற்றும் அசோசியேட்ஸ்.	ஒளியுமின் விளக்குகள் பல்புகள், ஜி.எஸ்.எஸ். பல்புகள், லெட் கிலால் டியூபிங்ஸ் மற்றும் விளக்கு பாகங்கள்.	எப்.டி. எல் 12.35 மில் லியன் டியூப்லர் ஷெல்ஸ் 16.80 மில்லியன்.

தொடர் எண். (1)	திட்டச் செலவு. (6) (ரூபாய் கோடியில்)	டிட்கோவின் முதலீடு. (7) (ரூபாய் லட்சத்தில்)	வேலை வாய்ப்பு. (8)	உற்பத்தித் தொடங்கும் நாள். (9)	குறிப்புரை. (10)
1.	5.85	3.00	150	டிசம்பர் 1993	இத்திட்டம் எஸ்கார்ட் துறையின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. உற்பத்தி நடைபெற்று வருகிறது.
2.	21.40	273.00	200	மே 1994	பயிர் பணிகள் ஸ்திரமடைந்து வருகின்றன. ஏற்றுமதி தொடங்கி விட்டது (இணைத் துறை).
3.	46.25	544.00	203	ஜனவரி 1993	கூட்டுத்துறையின் கீழ் வரும் இத்திட்டம், உற்பத்தியைத் தொடங்கி விட்டது.

(1)	(2)	(3)	(4)	(5)
4.	டைட்டன் இன்டஸ்ட்ரீஸ் லிட்., (விரிவாக்கம்).	டைட்டன் இன்டஸ்ட்ரீஸ் லிட், நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம்.	ஜீவல்லரி: ஜீவல்லரி கடிகாரங்கள் ஈரோ கடிகாரங்கள்.	2 முதல் 3 மில்லியன்.
5.	செஸ்லின்ட் டெக்ஸ்டைல்ஸ் லிட்.	மதனபள்ளி நூற்பாலை.	பருத்தி நூல்	25,200 கதிர்கள்.
6.	ஸ்கைலைன் லெதர் இன்டஸ்ட்ரீஸ் லிட்.	திரு. பீட்டர், ஜே.ஆர். பிரபு மற்றும் அசோசியேட்ஸ்.	தோல் ஷூக்கள்	6 இலட்சம் ஜோடிகள்.
7.	ஏசியன் பேரிங்ஸ் லிட்.	திரு. எஸ். எம். பழனியப்ப செட்டியார் மற்றும் அசோசியேட்ஸ் ஏசியன் பேரிங் நிறுவனத்தின் விரிவாக்கம்.	உருண்டை: பேப்பர் உருளை பேரிங்குகள்.	4.9 மீ.
8.	ஸ்கொயர் மற்றும் பிவரேஜஸ் லிட்.	திரு. தினேஷ் டால்மியா ஸ்கொயர் மற்றும் சாப்ட் வேர் லிட். சென்னை.	எக்ஸ்ட்ரா நியூட்ரல் ஆல்கஹால்.	5 இலட்சம் லிட்டர்.

(1)	(6)	(7)	(8)	(9)	(10)
4.	170.00	1,811.16	1700	மார்ச் 1994	டைட்டன் இன்டஸ்ட்ரீஸ் லிட். நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக, இத்திட்டம் கூட்டுத்துறையின் கீழ் செயற்படுத்தப் படுகிறது. பணிகள் முடிவடைந்து விட்டன.
5.	46.89	206.25	429	பிப்ரவரி 1994	இணைத் துறையில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டம் உற்பத்தியை தொடங்கி விட்டது.
6.	11.20	62.70	500	ஜூன் 1994	இணைத்துறையில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டம், 1994 ஜூன் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியது.
7.	5.22	80.00	75	ஜூன் 1994	இது ஏசியன் பேரிங் லிட். நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தினுடைய ஒரு பகுதியாக கூட்டுத் துறையின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. விரிவாக்கத் திட்டம் நிறைவுற்று விட்டது.
8.	52.00	286.00	300	1995 மத்தியில்.	இத்திட்டம் இணைத்துறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(1)	(2)	(3)	(4)	(5)
9.	(மென் இரும்பு) ஸ்பாஞ்ச் அயர்ன்.	திரு. பி.எம்.பச்சை செட்டியார்.	மென் இரும்பு	30,000 டன்.
10.	அக்லோமெரேட்டட் கிரனைட் ஓடுகள்/பாளங்கள்.	பேக்லைட் ஹைலம் லிட்.	ஓடுகள்/பாளங்கள்.	2,500 ச.மீ.
11.	நைட்ரோ பாஸ்ஃபேட் காம்ப்ளெக்ஸ்.	திரு. இரலாக் சிங், அப்பலோ டியூப் லிட்	நைட்ரோஃபாஸ் பேட்	2,25,000 டன்.
			கால்சியம், அமோனியம் நைட்ரேட்.	2,12,000 டன்.
12.	மெரைன் மற்றும் ஃபிரைட் கன்டைய்னர்கள் (100 சத விகிதம் இ.ஓ.யு.)	டிசி.எம்.ஸ்ரீராம் இன்டஸ்ரீஸ் லிட் புதுடெல்லி.	மெரைன் ஃபிரைட் கன்டைய்னர்கள்.	18,000 டி.இ.யூ.
13.	ஷின்-ஏ கெமிக்கல்ஸ் (இந்தியா) லிட்.	திரு. வி. ரமேஷ் நவபாரத்/மற்றும் பியர்டு ஷெல் குரூப்.	விரிவடையும் பாலிஸ்ட்ரெயின் (இ.நி.எஸ்.) ரெசின்	6,000 டன்
14.	ஆர்.ஆர். மேதி பார்மா லிட்.	வி. இராமன் அசோசியேட்ஸ்.	ஐ.வி. புளூயிட்.	14 மீ.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(1)	(6)	(7)	(8)	(9)	(10)
9.	27.19	146.80	150	..	இத்திட்டம் கைவிடப்பட்டு விட்டது.
10.	53.00	இன்னும் முடிவு செய்யப்படவில்லை.	70	1995 மத்தியில்.	இத்திட்டம், கூட்டு/இணைத் துறையின்கீழ் செயற்படுத்தப் பட்டு வருகிறது. தொழில் முனைவோர் உடன்படிக்கை 3-6-1994 அன்று கையெழுத்தாகியது.
11.	615.00	2,500	1000	1995 மத்தியில்	இத்திட்டம் இணைத் துறையின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.
12.	75.40	2.96	100	1995 மத்தியில்	மேற்படி
13.	14.36	50.00	150	டிசம்பர் 1993	இணைத் துறையில் செயற்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் உற்பத்திப்பணி நடைபெற்று வருகிறது.
14.	12.00	50.00	100	ஏப்ரல் 1993	மேற்படி

(1)	(2)	(3)	(4)	(5)
15.	அமெரிக்கன் டிராக் டயர்கள் லிட்., (ஆட்டோமொபைல்ஸ் டையர், டியூப்கள்).	அமெரிக்கன் டயர்ஸ் லிட்., அமெரிக்கா.	மோட்டார் வாகனங்களுக்கான டயர்கள், டியூப்கள்.	1.5 மீ.
16.	நேட்கோ ஆர்கானிக் லிட்., (பல்க் ட்ரக் இன்டர்மீடியட் காம்ப்ளக்ஸ்).	எஸ்.வி. சௌத்ரி நேட்கோ குரூப், ஹைதராபாத்.	டிரை எதிலாத்தோ பார்மேட் என்.எம்.எஸ்.எம்.	150 டன் 600 டன்.
17.	சி.வி. பாலி கிரீட் லிட் (பாலிமர் கான் கிரீட்)	கிராம்டன் கிரீவீஸ் லிட்., பம்பாய்.	பாலிமர்கான் கிரீட்	2,500 டன்
18.	வீடியோ கேசட்ஸ் லிமிடெட்.	இராமசுப்பிரமணியன், சென்னை.	வீடியோ கேசட்டுகள்	5 மீ.
19.	ஜெயங்கொண்டம் லிக்னைட் பவர் கார்ப்பரேஷன் லிமிடெட்.	ஒருங்கிணைந்த நிலக்கரிச் சுரங்க மின் உற்பத்தி நிறுவனம்.	மின்சாரம்	1,500 மெவாட்.
6.	மருதையன், த.பெ. காளி ..	65/3என்	0.02.5
7.	மதியழகன், த/பெ. காளிமுத்து ..	65/3ஓ	0.02.0

வரிசை எண்ணும் பெயரும் (1)		புல எண். (2)	பரப்பு. (3)
8. ஜெயபால் த/பெ. காமாட்சி	..	65/3ப்பி	0.01.0
9. பாண்டியன், த/பெ. ஆறுமுகம்	..	65/3க்யூ	0.02.5
10. ஆறுமுகம், த.பெ. தூண்டி	..	65/3 எஸ்	0.03.0
11. லெட்சுமி, க/பெ. காமாட்சி	..	65/3 ப்பி	0.03.0
12. முனுசாமி, த/பெ. சாமிநாதன்	..	65/3 வி	0.01.0
13. காசியம்மாள், க/பெ. சீனுவாசன்	..	65/3 டபிள்யூ	0.01.0
14. மாணிக்கம் த/பெ. பிச்சை	..	65/3எக்ஸ்	0.01.0
15. வீரமணி, த/பெ. நல்லான்	..	65/3 எ3	0.01.5
16. நல்லான், த/பெ. சாமிநாதன்	..	65/3 எ4	0.02.5
17. நடேசன், த/பெ. சோலைமலை	..	65/3 எ5	0.02.0
18. சிவகாமி, க/பெ. சோலைமலை	..	65/3 எ7	0.02.0
19. காளியப்பன், த/பெ.குருசாமி	..	65/3 எ8	0.02.0
20. கோவிந்தராஜன், த/பெ. வெள்ளையன்	..	65/3 எ9	0.01.5
21. முருகையன், த/பெ. சோலைமலை	..	65/3எ10	0.01.0
22. சின்னக்கண்ணு த/பெ. வீரப்பன்	..	65/3 எ11	0.01.5

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்ணும் பெயரும் (1)		புல எண். (2)	பரப்பு. (3)
23. ஆடவச்சி, க/பெ. பிச்சை	..	65/3 எ13	0.02.5
24. ஆராயி, க/பெ. கருப்பையன்	..	65/3 எ15	0.02.5
25. நாகராஜன், த/பெ. கருப்பையன்	..	65/3எ17	0.01.5
26. ஜெகநாதன், த/பெ. வீரன்	..	65/3 எ 18	0.02.5
27. வருவாம்பாள், க/பெ. கண்ணையன்	..	65/3எ19	0.02.0
28. அஞ்சலை, க/பெ. கோவிந்தராசன்	..	65/3 எ20	0.02.5
29. பாக்கியம், க/பெ. காலையன்	..	65/3 எ22	0.02.0
30. தங்கராசு, த/பெ. பாலையன்	..	65/3 எ23	0.01.5
31. மாரியம்மாள், க/பெ. காசிராஜன்	..	65/3எ 24	0.02.5
32. பன்னீர் செல்வம், த/பெ. பாலையன்	..	65/3 எ 26	0.02.0
33. வடுணி, க./பெ. காளிமுத்து	..	65/3எ28	0.02.5
34. கணபதி, த/பெ. சிங்காரம்	..	65/3எ30	0.03.0
35. மாரியப்பன்	..	65/3 எ31	0.02.5
36. ராஜாமணி, க/பெ. மாரி	..	65/3 எ 33	0.03.0
37. சந்திரமோகன், த/பெ. ரங்கையன்	..	65/3 எ 35	0.02.5
38. விவேகானந்தன், த/பெ. ரெங்கையன்	..	65/3 எ 36	0.02.5

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2—

மஞ்சகுழி கொடிக்கால் நகருக்கு மனைப்பட்டா வழங்குதல்

வினா எண் 7644—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், மஞ்சகுழி கொடிக்கால் நகருக்கு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மஞ்சகுழி கொடிக்கால் நகரில் மனைப்பட்டா வழங்க நத்தம் சர்வேயில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்நகரில் புல எண் 32/5 இல் உள்ள 0.54.5 ஹெக்டேர் பரப்புள்ள புலத்தில் 12 நபர்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் ஆகஸ்ட் 1993 திங்களில் மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

3—

முருகராஜ் காலனி மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல்

வினா எண் 8213—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, சம்மட்டி விடுதி, பஞ்சாயத்துக்குட்பட்ட முருகராஜ் காலனியில் வசிக்கும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

புதுக்கோட்டை தொகுதி, சம்மட்டி விடுதி கிராமத்தில் முருகராஜ் காலனி என்பது தெற்கு காலனி என்றும், வடக்கு காலனி என்றும் உள்ளன. மேற்கண்ட காலனிகள் அமைந்துள்ள பகுதி பட்டா புஞ்சை நிலங்களாகும். முருகராஜ் நகர் தெற்குக் காலனியில் குடியிருப்பவர்களுக்கு நில உடமைத் திட்டத்தின் மூலமும், வடக்குக் காலனியில் குடியிருப்பவர்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின் மூலமும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளன.

4—

ஆதிதிராவிடர் நிலங்களை ஆக்கிரமித்துள்ளவர்கள் விவரம்

வினா எண் 11561—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை மற்ற பிரிவினர் ஆக்கிரமித்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) எந்தெந்தப் பகுதிகளில் இவ்வாறு நேர்ந்துள்ளது என்று ஆய்வு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ), (ஆ) மற்றும் (இ): ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட (Depressed Class) நிலங்களை மற்ற பிரிவினர் ஆக்கிரமித்து உள்ளது தெரியவந்தால் மாவட்ட அளவில் தன்னிச்சை நடவடிக்கை எடுத்து; ஒப்படையை ரத்து செய்து, உரிய இனத்தவர்களுக்கு மீண்டும் அளிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து அனைத்து மாவட்டங்களிலும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது பெறப்பட்ட விவரங்கள்படி, சென்னை, நீலகிரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., திண்டுக்கல்-அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராஜர், திருநெல்வேலி-கட்டபொம்மன், பெரியார் மாவட்டங்களில் இப்படிப்பட்ட நிலங்கள் இல்லை என்று தெரிய வந்துள்ளது. வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 427 இனங்களில் மேற்படி நிபந்தனை மீறப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டு விதிமுறைகளின்படி ஒப்படை பெற்றவர்கள், வாங்கியவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, விசாரணை நடத்தி நிலங்களை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு, 121 இனங்களில் 30-40 ஏக்கர் மீளப் பெறப்பட்டு, மற்றவை விசாரணையில் உள்ளது. இது போன்று திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் 1024 இனங்களில் நிபந்தனை மீறல் கண்டு பிடிக்கப்பட்டு அவைகளில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, கோட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தருமபுரி மாவட்டத்தில் 368.30.5 ஹெக்டேர் நிலம் மற்ற இனத்தவர்களால் அனுபவிப்பது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இதே

போன்று இதர மாவட்டங்களில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியின் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் நில நிர்வாக ஆணையரால் ஆய்வு செய்யப்படுகின்றது.

5—

பரமக்குடி ஒன்றியத்தில் பட்டாக்கள் வழங்கிய விவரம்

வினா எண் 15136—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், பாம்புவிழுந்தான் கிராமத்தில் கொடுக்கப்பட்டுள்ள பட்டாக்கள் எத்தனை?

(ஆ) எஞ்சியுள்ள பட்டாக்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ):பரமக்குடி வட்டம், பாம்புவிழுந்தான் கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் மட்டுமே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு விவசாய நிலத்திற்கான பட்டா எதுவும் வழங்கப்படவில்லை. 88 ஆதிதிராவிடர்களுக்கு ஆதி திராவிடர் நலத்துறையின் மூலமாக வீட்டு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது தவிர இன்னும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டிய நபர்கள் யாரும் இல்லை.

6—

கருவேலம்பாளையத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 19256—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொளாநல்லி கிராமம், கருவேலம்பாளையத்தில் பொது நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், நஞ்சைக் கொளாநல்லி கிராமம் க.ச.737/2 கருவேலம்பா.ளையத்தில் நத்தம் புறம்போக்கில்

திரு. குழந்தைவேல் என்பவர் கூரை வீடு கட்டிக் குடியிருந்து வரும் ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்துவதை எதிர்த்து மேற்படி நபர், ஈரோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்ந்துள்ளார். வழக்கின் நிலையைக் கண்காணித்து நீதிமன்றத்தின் தீர்ப்பு வரப் பெற்றதும் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7—

தாமரைப்பாளையத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 19267—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், இச்சிப்பாளையம் கிராமம் தாமரைப்பாளையம் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், கொடுமுடி ஒன்றியம், இச்சிப்பாளையம் மற்றும் தாமரைப்பாளையம் ஆகிய கிராமங்களில் நத்தத்தில் வீடு கட்டி உள்ள மனைவரி தோராயப் பட்டா வழங்கப்பட்டதின் தொடர்ச்சியாக, மேற்படி கிராமங்களில் 31-8-1993 அன்று பட்டாக்கள் வழங்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு பொதுமக்கள் பயன் பெற்றுள்ளனர்:-

			நபர்கள்
1.	தாழ்த்தப்பட்ட வகுப்பினர்	..	265
2.	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்	..	699
3.	இதர நபர்கள்	..	2
			966

8—

நில அளவைப் பதிவேடுகள் துறையில் உள்தணிக்கை முறை

வினா எண் 21561—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உள் தணிக்கை முறை என்ற முறை நில அளவைப் பதிவேடுகள் துறையில் செயல்பட்டு வருகிறதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

இல்லை.

9—

வருவாய் நீதிமன்றங்களின் எண்ணிக்கை விவரம்

வினா எண் **22829**—*திரு. எஸ். எம். துரை:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது தமிழ்நாட்டில் செயல்படும் வருவாய் நீதி மன்றங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவற்றை மேலும் அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தற்போது தமிழ்நாட்டில் 11 வருவாய் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. அவற்றை மேலும் அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

குத்தகைப் பதிவுச் சட்ட வழக்குகளை விசாரணைச் செய்ய தனித் தாசில்தார் நியமனம்

வினா எண் **23632**—*திரு. என்.ஆர். ராஜேந்திரன்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் மற்றும் சிதம்பரம் தாலுக்காக்களில் குத்தகை பதிவுச் சட்ட வழக்குகள் விசாரணையில் உள்ளது எத்தனை?

(ஆ) இவற்றை விரைவாகத் தீர்க்க தனித் தாசில்தார் நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) காட்டுமன்னார் கோவில் மற்றும் சிதம்பரம் வட்டங்களில் 1-1-1994 நிலைப்படி, குத்தகை பதிவு சட்டத்தின் கீழ் முறையே 151 மற்றும் 242 மனுக்கள் நிலுவையிலுள்ளது.

(ஆ) மேற்படி வட்டங்களில் நிலுவை இனங்கள் குறைவாக இருப்பதால், தனித் தாசில்தார் நியமிக்கவேண்டிய அவசியமில்லை எனக் கருதப்படுகிறது. நிலுவையிலுள்ள வழக்குகளில் விரைந்து நடவடிக்கை எடுக்க, அவ்வப்போது வட்டாட்சியர்களுக்குத் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

11—

கிராம நிர்வாக அலுவலகக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 33077—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வெங்கம்பூர் பேரூராட்சிக்குச் சொந்தமான பழைய கட்டிடத்தை வருவாய்த் துறைக்கு அளித்து கிராம நிர்வாக அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், வெங்கம்பூர் பேரூராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்தில் பேரூராட்சியின் திட்டப் பணிக்குத் தேவையான சிமெண்ட் மற்றும் தளவாட சாமான்கள் இருப்பு வைக்க கிடங்காக பேரூராட்சி செயல் அலுவலரால் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதால், கட்டிடத்தை வருவாய்த் துறையினருக்கு அளிக்க இயலவில்லை எனச் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். எனவே, இக்கட்டிடத்தில் கிராம நிர்வாக அலுவலகம் கட்ட இயலாது.

12—

சங்ககிரி தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளில் தெரு நில அளவை நடந்த விவரம்

வினா எண் 36372—*டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளில் எப்போது Sreet Survey நடந்தது?

(ஆ) இல்லையெனில் விரைவில் நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா? விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) சங்ககிரி தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளில் அரசிராமன் பேரூராட்சி தவிர, சங்ககிரி, தேவூர் ஆகிய பேரூராட்சிகளில் 1963-ஆம் ஆண்டும், மல்லசமுத்திரம், பேரூராட்சிகளில் 1965-ஆம் ஆண்டும் தெரு நில அளவை முடிக்கப்பட்டது.

(ஆ) அரசிராமன் பேரூராட்சியில் தெரு நிலை அளவை செய்வதற்கான தீர்மானங்கள் அப்பேரூராட்சியிலிருந்து கிடைக்கப் பெறாததால் இது பற்றிய செயற்குறிப்பு அரசிடம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

13—

வலங்கைமான் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் **38247—திருமதி கே. பஞ்சவர்ணம்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வலங்கைமானில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத்துறை அமைச்சர்:

ஆம். எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் வலங்கைமான் தாலுக்காவில் உள்ள வலங்கைமான் என்ற இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டிடம் கட்டும் திட்டம் உள்ளது.

14—

தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையில் சிறப்பு மருத்துவர்களை நியமித்தல்

வினா எண் **36456—திரு. வி.பி.ஆர். ரமேஷ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையில் எல்லா துறைகளுக்கும் சிறப்பு மருத்துவர்களைக் கூடுதலாகப் பணியில் அமர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனை தற்போது 516 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இங்கு 10 (பத்து) சிறப்புப் பிரிவுகள் தற்போது இயங்கி வருகின்றன. சிறப்புப் பிரிவில் போதுமான மருத்துவர்கள் பணி புரிந்து வருகின்றார்கள். சிறப்பு மருத்துவர்களை கூடுதலாக அமர்த்தும் தேவை தற்போதில்லை.

15—

ஆத்தூர் தொகுதியில் புறம்போக்கு நிலத்தை ஒதுக்கித் தருதல்

வினா எண் 4571—திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் முருவன் பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களின் நிலங்களை அரசு எடுத்துக் கொண்டு அதற்கு ஈடாக மலை அடி வாரத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தை ஒதுக்கித் தர ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மலை வாழ் மக்கள் கோரும் நிலம் புறம்போக்கு அல்ல. அது வனநிலம். எனவே அவர்களின் கோரிக்கைப்படி நில பரிவர்த்தனை செய்ய இயலாது.

(ஆ) எழவில்லை.

16—

மாத்தூர் நிலக்குடியேற்ற சங்கத்திற்கு நிலம் வழங்குதல்

வினா எண் 19421—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, மாத்தூர் ஊராட்சி, மாத்தூர் நிலக்குடியேற்ற சங்கத்திற்கென ஒதுக்கிய நிலங்களை வனத்துறை சேர்த்துக் கொண்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிலத்தை வருவாய்த் துறைக்கு வனத்துறை ஒப்புவிக்கும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) அந்தியூர் தொகுதி, மாத்தூர் ஊராட்சி மாத்தூர் நிலக்குடியேற்ற சங்கத்திற்கென அரசு ஆணை எண் 3150, விவசாயத்துறை, நாள் 4-12-1971-ல் என்னமங்கலம் காப்புக் காட்டில் ஒதுக்கிய நிலத்தினை வனத்துறை சேர்த்துக் கொள்ளவில்லை.

(ஆ) அவ்வாறு சேர்த்துக் கொள்ளாத காரணத்தினால் மீண்டும் வருவாய்த் துறைக்கு ஒப்படைக்கும் வினா எழவில்லை.

17—

புல்லூர் கனக நாச்சியம்மன் கோயில் வரை பேருந்து இயக்குதல்

வினா எண் 21910—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், புல்லூர்-கனகநாச்சியம்மன் கோயில் வரை பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திம்மாபேட்டைக்கும் புல்லூருக்கும் இடையில் அரிப்புகள் உள்ள தண்ணீர் அதிகமாக ஓடும் ஆறு உள்ளது. அந்த ஆற்றில் இதுவரை பாலம் ஏதும் கட்டப்படவில்லை என்பதோடு அப்பாதையில் உள்ள அரிப்புகள் சரி செய்யப்படவில்லை எனவே கோரியுள்ள தடத்தில் தற்போது பேருந்து இயக்குவது சாத்தியமில்லை. இந்த ஆற்றின்மீது பாலம் கட்டியபின் பேருந்து இயக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

18—

கண்டப்பூர் கிராமத்திற்கு சாலை வசதி செய்தல்

வினா எண் 22340—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், பர்கூர் ஊராட்சி, கண்டப்பூர் என்ற ஊருக்குச் சாலை வசதி இல்லாது இருப்பதை அரசு அறியுமா? ஆம் எனில், 1993-94-இல் இப் பணி தொடர ஆவன செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே..ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், பர்கூர் பஞ்சாயத்து, சுண்டப்பூர் கிராமம், தாமரைக்கரை ஒதுக்கு காட்டில் அமைந்துள்ள ஒரு வருவாய் கிராமம் ஆகும். இக்கிராமத்திற்கு செல்ல நடை பாதை மட்டுமே உள்ளது. காப்புக் காட்டின் நடுவே சாலை அமைக்க வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன் படி மைய அரசின் முன் அனுமதி தேவை. மேலும், இச்சாலையினை புதிதாக அமைக்க நிதி நிலை பற்றாக்குறையினால், அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

19—

திருப்பத்தூரில் வனத்துறை நீதிமன்றத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண். 22512—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரில் வனத்துறை நீதி மன்றத்திற்கென சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருப்பத்தூரில் இயங்கி வரும் வனத்துறை சிறப்பு நீதி மன்றத்திற்கு சொந்த கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு எதுமில்லை. இந்நீதிமன்றம் தற்பொழுது மாதம் ரூ.2,400 வாடகையில் தனியார் கட்டிடத்தில் உள் துறையின் கீழ் இயங்கி வருகிறது.

20—

பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 23585—திரு. எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி-கும்பகோணம், பரமக்குடி-திருநெல்வேலி பேருந்துகள் இயக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி-தஞ்சாவூர் தடத்தில் 16-9-1994 முதல் சோழன் போக்குவரத்துக் கழகத்தால் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூரிலிருந்து கும்பகோணத்திற்கு பயணிகள் தேவைக்கேற்ப பேருந்துகள் இயங்கி கொண்டிருக்கின்றன. பரமக்குடி-திருநெல்வேலி வழித்தடத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் மற்றும் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தால் தலா 1 பேருந்து திருச்செந்தூர்-பரமக்குடி (வழி) தூத்துக்குடி, சாயல்குடி தடத்தில் இயங்கி வருகின்றன.

21—

பேராவூரணி-பட்டுக்கோட்டைக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 24316—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பேராவூரணியிலிருந்து முடச்சிக்காடு வெளிமடம் வழியாக பட்டுக்கோட்டைக்கு ஒரு புதிய சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

இல்லை.

22—

புதுக்கோட்டையிலிருந்து கீரமங்கலம் வரை பேருந்து நீடித்து இயக்குதல்

வினா எண். 24352—*திரு.ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலிருந்து மரமடக்கி செல்லும் நகரப் பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டித்து இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

புதுக்கோட்டையிலிருந்து மரமடக்கி, வடக்குத் திருநாளூர், குளமங்கலம் வடக்கு வழியாக கீரமங்கலம் வழித் தடத்தின் நீளம் 42.1 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தின் நீளம் நகரப் பேருந்து இயக்கிட பேருந்து செல்லாத பகுதியையும் சேர்த்து அனுமதிக்கப்பட்டிருக்கும் 35.0 கி. மீட்டரைக் காட்டிலும் அதிகமாக இருப்பதால், புதுக்கோட்டையிலிருந்து மரமடக்கி செல்லும் நகரப் பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டித்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

23—

பேராவூரணி-பட்டுக்கோட்டைக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 24356—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து முடச்சிக்காடு, வெளிமடம் வழியாக பட்டுக்கோட்டைக்கு சோழன் போக்குவரத்துக் கழகம் நகரப் பேருந்து இயக்க 1993-94-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

24—

பேராவூரணியிலிருந்து கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 24368—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து பைங்கால், சூரமங்கலம், வழியாக கொத்தமங்கலம் வரை கூடுதல் பேருந்துகள் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பேராவூரணியிலிருந்து பைங்கால், சீரமங்கலம் வழியாக கொத்தமங்கலம் வரை கூடுதல் பேருந்துகள் இயக்க இந்நிதியாண்டில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

25—

பட்டுக்கோட்டை-சென்னைக்கு கூடுதல் விரைவுப் பேருந்து இயக்குதல்

வினா எண் 24404—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து சென்னைக்குக் கூடுதலாக மற்றொரு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையிலிருந்தும், பட்டுக்கோட்டை வழியாகவும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 9 பேருந்துகள் 18 நடைகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. இவை தற்போதைய பயணிகளின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் உள்ளதால், மற்றொரு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவு பேருந்து விட செயற் குறிப்பு ஏதும் இல்லை.

26—

நத்தம்நகர்-மதுரை நத்தம்-திண்டுக்கல் வழித்தடங்களில் எல்.எஸ்.எல். சர்வீஸ் பேருந்துகள் இயங்குதல்

வினா எண் 24405—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

நத்தம் நகர்-மதுரை நத்தம்-திண்டுக்கல் வழித் தடங்களில் பாயிண்ட் (டு) பாயிண்ட் அல்லது"எல்.எஸ்.எஸ்.." சர்வீஸ் பேருந்துகள் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

இந்த வழித் தடங்களின் தொலைவு தூரம் மிகக் குறைவு, மேலும் இத்தடங்களில் கிராமங்கள் அதிகமாக இருப்பதால் பேருந்தை நிறுத்தி இடைவெளி பயணிகளை ஏற்றிச்சென்றால்தான் பயணிகளுக்கு வசதியாக இருக்கும். எனவே இத்தடங்களில் பாயிண்ட் (டு) பாயிண்ட் அல்லது எல்.எஸ்.எஸ். சர்வீஸ் இயக்க கருத்துரு ஏதும் இல்லை.

27—

பேராவூரணி-கொத்தமங்கலம் பேருந்து தடத்தில் கூடுதலாக பேருந்து இயக்குதல்

வினா எண் 24442-திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி- கொத்தமங்கலம் பேருந்து தடத்தில் கூடுதலாக ஒரு நகரப் பேருந்து இயக்க 1994-95-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

இல்லை.

28—

பேராவூரணியிலிருந்து நாகூர், வேளாங்கன்னிக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 24448—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து நாகூர், வேளாங்கன்னிக்கு ஒரு பேருந்து இயக்க 1994-95-ல் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பேராவூரணி-நாகூர் (வழி) வேளாங்கன்னி தடத்தில் புதியதாக, சோழன் போக்குவரத்துக் கழக பேருந்து ஒன்று 13-3-1994 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

29—

கந்தர்வகோட்டை யூனியன் புதுநகருக்கு பேருந்து வசதி செய்தல்

வினா எண் 25209—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை யூனியன் புதுநகருக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சோழன் போக்குவரத்துக் கழகத்தால் தஞ்சையிலிருந்து தடம் எண் பி. 60 மூலம் புதுநகர் வழியாக கந்தர்வக்கோட்டைக்கு தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன.

30—

வெட்டன்விடுதி-பேராவூரணிக்கு இயக்கப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்குதல்

வினா எண் 26045—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியிலிருந்து பேராவூரணிக்கு இயக்கப்பட்ட சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பேராவூரணி வெட்டன்விடுதி தடத்தில் சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் மூலம் நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

31—

இராமநாதபுரம்-செய்யாலூருக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 26976—*திரு ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்திலிருந்து செய்யாலூருக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

செய்யாலூர் கிராமம், இராமநாதபுரம்-பரமக்குடி பிரதான சாலையில் இருந்து பிரிந்து 1.6 கி.மீ. தூரத்தில் உள்ளது. அந்த கிராமத்தின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 775 ஆகும். தற்சமயம் 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகிறது. செய்யாலூர் கிராமம் 1,000-க்கு குறைவான மக்கள் தொகை உள்ள கிராமமாக இருப்பதால் முன்னுரிமை அடிப்படையில் செய்யாலூர் கிராமத்திற்கு தற்சமயம் உடனடியாக பேருந்து வசதி செய்வதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

32—

பட்டுக்கோட்டையிலிருந்து சீதாம்பாள்புரம் வரை பேருந்தை நீட்டித்து இயக்குதல்

வினா எண் 26977—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து உதயசூரியபுரம் வழியாக காலத்தளி துர்கையம்மன் கோவிலுக்கு செல்லும் நகரப் பேருந்தை எண்ணாளிவயல், மணவயல் வழியாக சீதாம்பாள்புரம் வரை நீட்டித்து இயக்கவும், எட்டு முறை இயக்கவும் நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

பாலத்ததளியிலிருந்து சீதாம்பாள்புரம் ரோடு வரை உள்ள 3. கி.மீ தூரம் உள்ள சாலை குறுகியதாகவும், குறுகிய திருப்பங்களை உடையதாகவும் பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்றதாகவும் உள்ளது. சாலை சீர் செய்யப்பட்ட பின்பு பேருந்து இயக்கிட சோழன் போக்குவரத்துக் கழகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33—

ஒட்டங்காடு வழியாக நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண். 26978—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒட்டங்காடு வழியாக நகரப் பேருந்து இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

சோழன் போக்குவரத்து கழகத்தின் நகரப் பேருந்துகள் தடம் எண். 4,6, 6 ஏ-பேராவூரணி-பட்டுக்கோட்டை (வழி) ஒட்டங்காடு தடத்தில்

இயக்கப்படுகின்றன. மேலும் இத் தடத்தில் கழகப் புறநகர் பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. எனவே, இத்தடத்தில் மேற்கொண்டு நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற் குறிப்பு இல்லை.

34—

குற்றாலத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்

வினா எண் 26979—*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

பேராவூரணியிலிருந்து திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், குற்றாலம் செல்ல திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

குற்றாலம் நகருக்கு எப்போதும் பயணிகள் போக்குவரத்து இராது. இது ஒரு சுற்றுலா நகரமாகும். பருவ காலங்களில் அதாவது மே முதல் ஜூலை வரை உள்ள காலத்திலேயே பயணிகள் போக்குவரத்து இருக்கும். எனவே, குற்றாலத்திற்கு பேராவூரணியிலிருந்து நிரந்தரமாக வழித்தடம் இயக்குவது திருவள்ளுவர் போக்குவரத்து கழகத்திற்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தும் என்பதால், திருவள்ளுவர் போக்குவரத்து கழகப் பேருந்து இயக்கும் சாத்திய கூறுகள் இல்லை.

35—

பட்டுக்கோட்டை-அதிராம்பட்டினத்திற்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 26983—*திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினம், ஏரிப்புறக்கரை, சீரத்தோட்டம், ராஜாமடம் வழியாக பேருந்து இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

அதிராம்பட்டினத்தில் இருந்து ஏரிப்புறக்கரை வழியாக ராஜாமடம் வரை உள்ள சாலை மிகவும் குறுகலாகவும், அரித்தும் பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்ற நிலையில் உள்ளது. எனவே, இப்பகுதியில் பேருந்து இயக்க இயலாது. பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினத்திற்கு போதிய அளவு பேருந்து வசதி உள்ளது.

36—

பட்டுக்கோட்டை-பேராவூரணி நகரப் பேருந்தை கூடுதல் நடைகள் இயக்குதல்

வினா எண் 26981—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து பள்ளத்தூர், பவானம் ஓட்டங்காடு வழியாக பேராவூரணி செல்லும் நகரப் பேருந்தை 10 முறைகள் இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பேராவூரணி-பட்டுக்கோட்டை (வழி) பள்ளத்தூர், பவானம்,ஓட்டங்காடு நகரப் பேருந்து தடம் எண். 4, எட்டு நடைகள் இயக்கப்படுகிறது. இப்பேருந்து பல்வழித் தடத்தில் இயக்கப்படுவதால், மேற்கொண்டு இரண்டு நடைகள் இயக்க இயலாது.

37—

திருநெல்வேலி மாவட்டத்தில் சில கிராமங்களுக்கு கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் 26999—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

திருநெல்வேலி மாவட்டம், மேலநீவிதநல்லூர் ஒன்றியம் மேலஇலந்தைகுளம், வடக்கு அச்சம்பட்டி, கீழந்தை நல்லூர், பெரியசாமிபுரம் ஆகிய கிராமங்களுக்கு கூடுதல் பேருந்து இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

மேல இலந்தைகுலம், வடக்கு அச்சம்பட்டி, பெரியசாமிபுரம் ஆகிய கிராமங்களுக்கு கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் பயணிகள் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப போதுமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால் மேலும் கூடுதல் பேருந்துகள் இயக்கவேண்டிய அவசியம் எழவில்லை எனக் கருதலாம்.

38—

இரும்புலிக்குறிச்சி-மயிலாடுதுறைக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 27272—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, இரும்புலிக்குறிச்சியிலிருந்து மயிலாடுதுறைக்கு மீண்டும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை-இரும்புலிக்குறிச்சி தடத்தில் சோழன் போக்குவரத்து கழகப் புறநகர் பேருந்து மூலம் தினசரி ஆறு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது.

39—

சென்னை-திருநின்றவூர் 71-ஜே பேருந்தை நீட்டித்து இயக்குதல்

வினா எண் 30128—திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து திருநின்றவூருக்கு இயக்கப்படும் டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை (71 ஜே) செவ்வாய்பேட்டை வீட்டுவசதி வாரிய காலனி வரை நீட்டித்து இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அங்கு பணிமனை (Depot) ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) செவ்வாய்ப்பேட்டை வீட்டுவசதி வாரிய காலனி, சென்னை பெருநகர் எல்லைக்கு வெளியே உள்ளது. எனவே, டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் வழித்தடம் 71 ஜே பேருந்துகளை செவ்வாய்ப்பேட்டை வரை நீட்டித்து இயக்க இயலவில்லை.

(ஆ) இவ்வினை எழ வாய்ப்பில்லை.

40—

இலுப்பூர்-சேவல்பட்டிக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் **30184—திரு. சி. குழந்தைவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, இலுப்பூரிலிருந்து மேட்டுப்பட்டி வழியாக சேவல்பட்டிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

இலுப்பூரிலிருந்து மேட்டுப்பட்டி வழியாக சேவல்பட்டி வழித்தடத்தின் நீளம் 18.7 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தின் அனைத்து பகுதிகளும் மருதுபாண்டியர் போக்குவரத்து கழகத்தாலும் மற்றும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தாலும் பேருந்து வசதி பெற்றுள்ளது. மேற்படி, நடைகளில் பயணிகளின் விகிதாச்சாரம் 45 சதவீதம் மட்டுமே உள்ளது. மேலும் தனியார் புறநகர் பேருந்து ஒன்றும் 6 நடைகள் இயங்கி வருகிறது. இவ்வழித்தடத்தில் மேலும் கூடுதல் பேருந்து இயக்கும் அளவிற்கு பயணிகள் நெரிசல் இல்லாததால் கோரிக்கை தடத்தில் பேருந்து இயக்கிட அவசியம் இல்லை எனக் கருதலாம்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

41—

பாவூர்சத்திரம்-கடையம் இடையே பேருந்து இயக்குதல்

வினா எண். 33744—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் பாவூர்சத்திரத்திலிருந்து பனையடிபட்டி, செட்டியூர் வழியாக கடையத்துக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

வினாவில் கேட்டுள்ள வழித்தடத்தில் அதாவது தென்காசியிலிருந்து பாவூர்சத்திரம், செட்டியூர், பனையடிப்பட்டி வழியாக கடையம் வரை ஒரு நகரப் பேருந்து மூலம் தினசரி 4 சுற்றுக்கள் 14-4-1994 முதல் கட்டபொம்மன் போக்குவரத்து கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது.

42—

தாழமுத்து நகருக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 33748—திரு.ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி பேருந்து நிலையத்திலிருந்து தாழமுத்துநகர் வரை இயக்கப்பட்ட 12-ஆம் எண் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதால் அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

தூத்துக்குடியிலிருந்து தாழமுத்து நகருக்கு இயக்கப்படும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 12 நகரப் பேருந்து ஏப்ரல் 1994-ல் அப்போது நிலவிய பதட்டமான நிலையினைக் கருத்தில் கொண்டு சில நாட்கள் மட்டும் பயணிகள் நலன் கருதி திரேஸ்புரம் வரை மட்டுமே இயக்கப்பட்டது. சகஜ நிலை ஏற்பட்ட பின், இப்பேருந்து மீண்டும் பழைய வழித்தடத்தில் தாழமுத்து நகர் வரை முறையாக இயக்கப்பட்டு வருகிறது.

43—

குளத்தூருக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 33750—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி பேருந்து நிலையத்திலிருந்து குளத்தூருக்கு இயக்கப்பட்ட நகரப் பேருந்து தடம் எண் 53 நிறுத்தப்பட்டுள்ளதால் அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

கட்டபொம்மன் போக்குவரத்து கழகத்தால் தடம் எண் 53-சியில் இயக்கப்பட்ட நகரப் பேருந்து அதற்குண்டான பழைய வழித் தடத்தில் தூத்துக்குடியிலிருந்து குறுக்குச் சாலை வழியாக குளத்தூருக்கு முறையாக தினசரி 6 சுற்றுக்கள் தற்போது இயக்கப்பட்டு வருகிறது.

44—

பேராவூரணி – பட்டுக்கோட்டை பேருந்து இயக்குதல்

வினா எண் 33757—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பேராவூரணியிலிருந்து முடச்சிக்காடு வெளிமடம் வழியாக பட்டுக்கோட்டைக்கு ஒரு புதிய சோழன் போக்குவரத்துக் கழக நகரப்பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பேராவூரணியிலிருந்து முடச்சிக்காடு, வெளிமடம் வழியாக பட்டுக்கோட்டைக்கு புதிய நகரப் பேருந்து இயக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

45—

பேராவூரணி-கொத்தமங்கலம் வரை பேருந்து இயக்குதல்

வினா எண் 33758—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து கீரமங்கலம் வழியாக கொத்தமங்கலம் வரை நடப்பாண்டில் மேலும் ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

செயற்குறிப்பு எதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

46—

திருப்பத்தூர்-கன்னியாகுமரி

வினா எண் 35455—*திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து கன்னியாகுமரிக்கு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருப்பத்தூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளைப் பராமரிக்க வசதிகள் இல்லை. திருப்பத்தூருக்கு அருகிலுள்ள வேலூர் நகரிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வழித்தடம் எண் 283 (வேலூர்-கன்னியாகுமரி) இயக்கப்படுகிறது. இந்த வசதியினைத் திருப்பத்தூர் பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே திருப்பத்தூரிலிருந்து கன்னியாகுமரிக்குப் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.

47—

வேலாடி பட்டியிலிருந்து துவார் வரை பேருந்து இயக்குதல்

வினா எண் 35460—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, வேலாடிபட்டியிலிருந்து துவார் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

துவார் மற்றும் வேலாடிபட்டி ஆகிய ஊர்கள் ஏற்கனவே பேருந்து வசதி பெற்ற ஊர்களாகும். துவாரிலிருந்து பிரிந்து செல்லும் சாலையில் 1.5 கி.மீ. தொலைவில் உள்ள ஆற்றில் கட்டப்பட்டுள்ள பாலம் பேருந்து இயங்கிட இயலாத அளவிற்கு முழுவதும் பழுதடைந்துள்ளது. மேலும், போடிப்பட்டி மற்றும் துவாரிலிருந்து நகரப் பேருந்து இயக்க அவை மைய நகரங்களாக அறிவிக்கப்படவில்லை. எனவே வேலாடிப்பட்டியிலிருந்து துவார் வரை நேரடியாக பேருந்து இயக்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

48—

புதுக்கோட்டை-திருக்காட்டுப்பள்ளி பேருந்து இயக்குதல்

வினா எண் 35461—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலிருந்து திருக்காட்டுப்பள்ளி வரை அண்டக்குளம், தெம்மாவூர் வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

இவ்வழித்தடத்தின் நீளம் 64.8 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் பேருந்துகள் செல்லாத பகுதி எதுவும் இல்லை. இவ்வழித் தடத்தில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் தவிர தனியார் புறநகரப் பேருந்துகளும், தீரன் சின்னமலை போக்குவரத்துக்

கழக நகர மற்றும் புறநகரப் பேருந்துகளும், சோழன் போக்குவரத்துக் கழக புற நகரப் பேருந்துகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே புது கோட்டை-திருகாட்டுப்பள்ளி (வழி) அண்டக்குளம், தெம்மாவூர் வழித்தடத்தில் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

49—

வெட்டன் விடுதி-கருக்காக்குறிச்சிக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 35462—*திரு. சி.* **சுவாமிநாதன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை தொகுதி, வெட்டன் விடுதியிலிருந்து கருக்காக் குறிச்சிக்கு புதியதாக மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

வெட்டன் விடுதியிலிருந்து கருக்காக்காடு, வானக்கன்காடு வழியாக கருக்காக்குறிச்சி வழித்தடத்தின் நீளம் 10.5 கி.மீ. ஆகும். இவ்வழித் தடத்தில் பேருந்து செல்லாத பகுதியே கிடையாது. மருது பாண்டியர் போக்குவரத்து கழக நகரப் பேருந்து ஒன்று வெட்டன்விடுதி-வானக்காடு (வழி) கடுக்காகாடு வழித் தடத்தில் 6 நடைகளும், 3 தனியார் புறநகர் பேருந்து 6 நடைகளும் இயங்கி வருகின்றன. மேலும் வானக்கன்காடு கருக்காகுறிச்சி வழித்தடத்தில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்று நான்கு நடைகளும் இயங்கி வருகின்றன. இது தவிர சோழன் போக்கவரத்துக் கழகத்தின் ஒரு நகரப் பேருந்து 4 நடைகள் இயங்கிக் கொண்டிருப்பதால் மேலும் புதிதாக பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

50—

வேளார் குளத்திற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 35811—*திரு. டி.* **வேலையா:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

திருநெல்வேலி தொகுதி, சீதபற்ப நல்லூர் ஊராட்சி, வேளார் குளத்திற்குப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதி, சீதபற்பநல்லூர் ஊராட்சியைச் சார்ந்த வேளார்குளம் என்ற சிறிய கிராமம் தற்போது பேருந்து இயக்கப்பட்டு வரும் கருவநல்லூரிலிருந்து 2.0 கி.மீ. தூரத்திலும், வெட்டுவான் குளம் கிராமத்திலிருந்து 3.0 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. கருவநல்லூரிலிருந்து வேளார் குளம் செல்லும் சாலை மிகவும் பழுதடைந்து, பேருந்து செல்லத்தக்க அளவில் இல்லாமல் இருக்கிறது. மேலும் வெட்டுவான்குளத்திலிருந்து வேளார்குளத்திற்குப் பேருந்து செல்லத்தக்க அளவில் சாலை அமைப்பே இல்லாமல் உள்ளது. இச்சூழ்நிலையில் வேளார்குளம் கிராமத்திற்கு பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

51—

பரமக்குடி-விளாத்தூர் இடையே அதிகப் பேருந்து இயக்குதல்

வினா எண் 36215—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியிலிருந்து விளாத்தூருக்கு (வழி மேலாயக்குடி) கூடுதலாகப் பேருந்து இயக்க அரசுக்குப் பரிந்துரை வந்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பரமக்குடியிலிருந்து மேலாயக்குடி வழியாக விளாத்தூருக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் 36 நடைகளும், ஒரு தனியார் நகரப் பேருந்து 14 நடைகளும் ஒரு புறநகர்ப் பேருந்து 8 நடைகளும் ஆக மொத்தம் 58 நடைகள் நாளொன்றுக்கு இயங்கி வருகின்றன. எனவே, மேலும் கூடுதலாக பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

52—

பரமக்குடி-சென்னைக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 36217—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியிலிருந்து சென்னைக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): அரசு ஆணையின்படி மாவட்ட தலைநகரங்களிலிருந்தும் போக்குவரத்துக் கழகத் தலைமையிடத்திலிருந்தும் சென்னைக்கு தலா இரண்டு பேருந்துகள் இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலிருந்து சென்னைக்கு 250 கி.மீ.-க்கு மேல் உள்ள வழித் தடத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் மட்டுமே இயக்க அனுமதியுள்ளது.

பரமக்குடி-சென்னை வழித் தடத்தின் தூரம் 498.2 கி.மீ. எனவே, மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தினால் பரமக்குடியிலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்க இயலாது.

53—

கிருட்டிணகிரியிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 36310—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருட்டிணகிரியிலிருந்து கன்னியாகுமரி, மதுரை, ராமேஸ்வரம், திருச்சி ஆகிய ஊர்களுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப்பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் கன்னியாகுமரியிலிருந்தும், மதுரையிலிருந்தும், பெங்களூருக்கு கிருஷ்ணகிரி வழியாக பேருந்துகள் இயக்கி வருகின்றது. வேளாங்கன்னி-பெங்களூர் தடமும், திருச்சி, கிருஷ்ணகிரி வழியாக இயக்கப்படுகின்றது. எனவே, வினாவில் உள்ள வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் பேருந்து இயக்க செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை.

54—

ஆரணி-அனந்தபுரத்திற்கு புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 36602—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணியிலிருந்து அனந்தபுரத்திற்கு சந்தவாசல், படவேடு, வழியூர் வழியாக புதிய பேருந்து இயக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக தடம் எண் 5 மூலம் ஆரணி, அர்ஜுனாபுரம் வழி சந்தவாசல், வழியூர், அனந்தபுரம் என 4 நடைகள் இயக்கப்பட்டு வந்தது. வழியூருக்கும்-அனந்தபுரத்திற்கும் இடையே உள்ள சாலை பழுதடைந்து விட்டதாலும், பயணிகளின் கொள்ளளவு குறைவாக இருந்ததாலும் 2 நடையாக குறைக்கப்பட்டது. இருப்பினும் மேற்படி கிராமங்கள் அனைத்திற்கும் தடம் எண் 22 மற்றும் தடம் எண். 11-சி மூலம் 2 தட பேருந்துகள் மூலமும், 3 நகரப் பேருந்துகள் மூலமும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, கோரிக்கையில் உள்ள அனைத்து கிராமங்களும் பேருந்து வசதி பெற்ற கிராமங்களாக இருப்பதால் புதிய பேருந்து இயக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதப்படுகிறது.

55—

சிவகாசியிலிருந்து ஏழாயிரம் பண்ணைக்குக் கூடுதல் நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் **37370—***திரு. ஜெ. பாலகங்காதரன்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகாசியிலிருந்து சிப்பிப்பாறை வழியாக ஏழாயிரம் பண்ணைக்குக் கூடுதலாக நகரப் பேருந்து அரசு இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சிவகாசி-ஏழாயிரம் பண்ணை வழி, சிப்பிப்பாறை வழித் தட தூரம் நகர பேருந்து வரையறுக்கப்பட்ட தூரமான 38 கி.மீ. தூரத்திற்கு மேல் வருவதால் நகரப் பேருந்து இயக்க இயலாது. சிவகாசி-ஏழாயிரம் பண்ணைக்கு வெம்பக்கோட்டை வழியாக தனி நடைகளும், சிவகாசி-சிப்பிப்பாறை வழித்தடத்தில் தினமும் 4 தனி நடைகளும் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்பட்டு வருகின்றது.

56—

சிவகாசி-சிப்பிப்பாறை பேருந்தின் நேரத்தை மாற்றி அமைத்தல்

வினா எண் **37374—***திரு. ஜெ. பாலகங்காதரன்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகாசியிலிருந்து சிப்பிப்பாறை செல்லும் பேருந்துகளின் நேரத்தை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

22-8-1994 முதல் சிவாகாசி-சிப்பிப்பாறை வழித்தடத்தில் இயங்கும் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்து சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள நேரத்தில் இயக்கப்பட்டு வருகிறது.

57—

கீரனூர்-திருவப்பூர் இடையே பேருந்து இயக்குதல்

வினா எண் 38225—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரிலிருந்து திருவப்பூருக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கீரனூர்-புதுக்கோட்டை வழித் தடத்தில் உள்ள திருக்கோகர்ணம் பேருந்து நிறுத்தத்திலிருந்து பிரிந்து செல்லும் சாலையில் 0.9 கி.மீ. தொலைவில் திருவப்பூர் அமைந்துள்ளது. அரசு ஆணையின்படி பேருந்து செல்லும் பிரதான சாலையிலிருந்து 1.0 கி.மீ. வரையிலான இடங்கள் பேருந்து வசதி பெற்ற பகுதியாக கருதப்படல் வேண்டும். கீரனூர்-புதுக்கோட்டை வழித்தடத்தில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் 90 நடைகளும், தனியார் நகரப் பேருந்து 14 நடைகளும் இயங்கி வருகின்றன. புதுக்கோட்டையிலிருந்து திருக்கோகர்ணம், திருவப்பூர் வழியாக மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள், 102 நடைகளும், தனியார் நகரப் பேருந்துகள் 28 நடைகளும் இயங்கி வருகின்றன. எனவே, புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரிலிருந்து திருவப்பூருக்கு மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்கிட செயற் குறிப்பு ஏதுமில்லை.

58—

சித்தேரி-புவனகிரி இடையே பேருந்து இயக்குதல்

வினா எண் 38370-எ-செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்திலிருந்து குறிஞ்சிப்பாடி செல்லும் பேருந்தை சித்தேரி-புவனகிரி சாலையில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : மாற்றி இயக்கிடக் கோரிடும் பகுதியான புவனகிரிக்கும் மேல்மணக்குடிக்கும் இடைப்பட்ட பகுதி இது வரை பேருந்து வசதி பெறாததாகும். இப் பகுதியின் மேல் குறியாமங்கலம், சித்தேரி ஆகிய இரண்டு கிராமங்கள் உள்ளன. இப்பகுதியில் உள்ள சாலை பேருந்து போக்குவரத்திற்கு சற்றும் தகுதியற்ற நிலையில் உள்ளது. சாலை சீரமைக்கப்பட்ட பின்பே இக்கோரிக்கை குறித்து பரிசீலிக்க இயலும்.

59—

தஞ்சாவூர்-அரவக்குறிச்சிக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 38502—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலிருந்து திருச்சி, கரூர் வழியாக அரவக்குறிச்சிக்கு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

இல்லை.

60—

ஒசூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்

வினா எண் 38682—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்டை மாநிலமான கர்நாடகாவில் கலவரங்கள் ஏற்பட்டால் அரசு நிறுவனங்களின் வாகனங்கள் பெங்களூர் போக முடிவதில்லையாதலால் ஒசூரில் திருவள்ளுவர் போக்குவரத்து கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருவள்ளுவர் போககுவரத்துக் கழகம் கர்நாடக மாநிலத்திற்கு பேருந்து இயக்கவில்லை. தற்போது புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் கர்நாடகா மாநிலத்திற்கு பேருந்துகள் இயக்கி வருகிறது. குறைந்த அளவு பேருந்துகளே இயக்கப்படுவதால் ஒசூரில் புரட்சித் தலைவி டாக்டர். ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. எனினும் கலவர காலங்களில் பெங்களூரில் இருந்து முன் பதிவு செய்த பயணிகள் பழைய பேருந்துகள் மூலம் ஓசூர் கொண்டு வரப்பட்டு, ஓசூரில் இருந்து தத்தம் இடங்களுக்கு நவீன பேருந்துகள் மூலம் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இனி வரும் காலங்களில் கலவரங்கள் ஏற்பட்டால் மேற்குறிப்பிட்ட ஏற்பாடே மேற்கொள்ளப்படும்.

61—

கீரனூர்-கந்தர்வக்கோட்டைக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் **38739**-திரு. *சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரிலிருந்து கந்தர்வக்கோட்டைக்கு மேலும் ஒரு பேருந்து இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ : மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு நகரப் பேருந்து பல்முனை வழித்தடத் திட்டத்தில் கீரனூர்-

கந்தர்வக்கோட்டை வழித்தடத்தில் 4 நடைகள் இயக்கி வருகின்றது. மேற்காணும் நடைகளில் பயணம் செய்யும் பயணிகள் விகிதாசாரம் 65 சதவீதம் மட்டுமே உள்ளது. இவ்வழித் தடத்தில் கூடுதலாக நடைகள் இயக்குமளவிற்கு பயணிகள் நெரிசல் கிடையாது. எனவே, கீரனூரிலிருந்து கந்தவர்கோட்டைக்கு மேலும் ஒரு பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

62—

முந்தா கவுண்டனூர் ராஜா வாய்க்கால் ஏரியை ஆழப்படுத்துதல்

வினா எண் 9466-திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில், பெத்தநாயக்கன் பாளையம், முந்தா கவுண்டனூர் ராஜா வாய்க்கால் ஏரி தூர் எடுத்து ஆழப்படுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம், பெத்தநாயக்கன் பாளையம் முந்தாகவுண்டனூர் ராஜா வாய்க்கால் ஏரி என்பது புத்திர கவுண்டன்பாளையம் "ஜம்பு" ஏரியாகும். இவ்வேரி பொதுப்பணித் துறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. வசிஷ்டா நதி நீர் புத்திரகவுண்டன்பாளையம் அணைக்கட்டில் இருந்து வாய்க்கால் மூலம் புத்திரகவுண்டன் பாளையம் ஜம்பு ஏரிக்கு வருகிறது. மேற்படி அணைக்கட்டுக்கும் வழங்கு வாய்க்காலுக்கும் சிறப்பு மராமத்து பணிகள் செய்ய மதிப்பீடு ரூபாய் 61,000-க்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

63—

கடைநிலை ஊழியர்களை பொதுப்பணித்துறையில் பணி நிரந்தரம் செய்தல்

வினா எண் 11426-திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதுப்பணித்துறையில் பல ஆண்டுகளாக என்.எம்.ஆர். ஆக (கடைநிலை ஊழியராக) பணியாற்றும் பணியாளர்களை நிரந்தர

ஊழியர்களாகவும், அவர்களின் ஊதியத்தை உயர்த்தவும் அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

ஆம். பொதுப்பணித்துறையில் என்.எம்.ஆர். தினப்பணியாளர்களில் 1986-ஆம் ஆண்டு வரை 10 ஆண்டுகள் பணி நிறைவு பெற்றவர்களின் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது 1987, 1988 மற்றும் 1989-ஆம் ஆண்டுகளில் 10 ஆண்டுகள் பணி நிறைவு பெற்றவர்களின் பணியை நிரந்தரம் செய்ய அரசு பரிசீலித்து வருகிறது.

64—

செங்கபடுத்தான் காட்டில் ரிவெட்மெண்ட் கட்டுதல்

வினா எண் 15288—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், செங்கபடுத்தான்காடு ஊராட்சி மரவக்காடு துவரங்குறிச்சி சாலையில் 4 கி.மீ. தூரத்தில் செங்கப்படுத்தான்காடு கிணற்று பாலத்திற்கு அருகில் ரிவெட்மெண்ட் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், செங்கப்படுத்தான்காடு ஊரார்ட்சி, மரவக்காடு துவரங்குறிச்சி சாலையில் செங்கப்படுத்தான்காடு கிணற்று பாலத்திற்கு அருகில் ரிவெட்மெண்ட் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

65—

கிருஷ்ணகிரி-பாண்டி சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 19394—*திரு. கா. பூ. முனுசாமி:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி-பாண்டி சாலையை அகலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : கிருஷ்ணகிரி-பாண்டி சாலையின் சரியான பெயர் பாண்டி-கிருஷ்ணகிரி சாலையாகும். இச்சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் ஒரு மாவட்ட பெருஞ்சாலை ஆகும். 240.8 கி.மீ உள்ள இச்சாலையில் 93.40 கி.மீ. ஒரு வழிப்பாதையாக உள்ளது. அதனை இருவழி பாதையாக மாற்றி மேம்பாடு செய்ய ரூ. 535.00 இலட்சம் தேவைப்படுகிறது. திட்டப் பணிகளுக்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு உள்ளதால் மிகவும் பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை எதிர்வரும் ஆண்டுகளில் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை. எனினும் இச்சாலையில் 130.00 கி.மீ. சாலைப் பகுதியை தேசிய நெடுஞ்சாலை தரத்திற்கு உயர்த்துவதற்கான கருத்துரு மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மைய அரசின் ஒப்புதல் பெற்ற பின் இச்சாலைப் பகுதியை நெடுஞ்சாலை தரத்திற்கு உயர்த்த வாய்ப்புள்ளது.

66—

பாட்டுவாநாச்சியார் ஏரியில் தடுப்புச்சுவர் கட்டுதல்

வினா எண் 19635—திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுக்கூர் ஒன்றியம், பாட்டுவாநாச்சியார் ஏரியில் ஒரு தடுப்புச்சுவர் கட்டும் பணி எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

மதுக்கூர் ஒன்றியம், பாட்டுவாநாச்சியார் ஏரியில் தடுப்புச்சுவர் கட்டும் திட்டம் ஏதும் தற்பொழுது இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

67—

செங்கம்-குப்பநத்தம் தார்ச்சாலையைப் புதுப்பித்தல்

வினா எண் 20896—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம்-குப்பநத்தம் வரையில் உள்ள தார்ச்சாலையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செங்கம்/குப்பநத்தம் சாலையில் செங்கம் பரமனந்தல் சாலை கி.மீ. 1/2-6/8 மற்றும் குப்பநத்தம் சாலை கி.மீ. 0/0-4/4 ஆகிய இரண்டு சாலைகள் உள்ளன. இச்சாலைகளில் ஏற்படும் குழிப் பள்ளங்கள், போக்குவரத்து நடைபெறும் வரையில் பராமரிப்பு நிதியின் கீழ் சீர் செய்யப்பட்டு வருகிறது. 1994-95-ஆம் நிதியாண்டில், நிதிநிலைக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் இச்சாலைகளில் தார் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

68—

மடப்பள்ளி ஏரியைப் புதிதாகக் கட்டுதல்

வினா எண் 21905—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றம்பள்ளி ஒன்றியம், கொண்டசிந்தனபள்ளி ஊராட்சியில் மடப்பள்ளி ஏரி புதிதாக கட்டப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மேற்படி இடத்தின் நீர்வரத்துப் பரப்பு 1.37 சதுர மைல்கள். அப்பகுதியின் வருடாந்திர நீர்வரத்து அளவு 15-08 மி.க. அடியாகும்.

மேற்படி இடத்திலிருந்து சுமார் 16.50 தொலைவில் சர்வே எண் 657-ல் பொதுப்பணித் துறையினரால் கசிவுநீர் குட்டை ஒன்று ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்காணாற்றினை ஒட்டியுள்ள மலைச்சரிவின் அடுத்த பகுதியில் சுமார் 1,700 அடி தொலைவில் சர்வே எண் 1012-ல் விவசாய பொறியாளர் துறையினர் 1990-91-ஆம் ஆண்டு ஒரு கசிவுநீர் குட்டை கட்டி முடித்துள்ளனர். எனவே பொதுப்பணித் துறை விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள வரம்பாகிய 3,000 அடி தூரத்திற்குள் மற்றொரு சிறிய நீர்த்தேக்கமோ ஏரியோ கட்ட இயலாது.

69—

நாயனசெருவு கிராமத்தில் குட்டை அமைத்தல்

வினா எண் 21906—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றம்பள்ளி ஒன்றியம், நாயனசெருவு கிராமத்தில் புதிய ஏரி கட்டப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

நாட்றம்பள்ளி ஒன்றியம், நாயனசெருவு கிராமத்தில் புதிய ஏரி கட்டுவதற்கான திட்டம் ஏதும் இல்லை. ஆனால், நாயனசெருவு கிராமத்தில் ரூ. 9.64 இலட்சத்தில் குட்டை கட்டும் திட்டம் பொதுப்பணித் துறையினரால் ஆய்வு செய்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதற்கிடையில் விவசாய துறையினர் அதே இடத்தில் குட்டை அமைத்துள்ளனர். எனவே, பொதுப்பணித் துறையினரின் குட்டை கட்டும் திட்டம் கைவிடப்பட்டது.

70—

கிருஷ்ணாபுரம் ஜலசாம்பாரை சாலையை பழுதுபார்த்தல்

வினா எண் 23078—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி கிருஷ்ணாபுரம் ஜலசாம்பாரை சாலையை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, கிருஷ்ணாபுரம் ஜலசாம்பாறை சாலையின் முடிவில் உள்ள முருகன் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் போக்குவரத்து அதிகமாக இருப்பதால் இச்சாலை பழுதடைந்துள்ளது. அரசின் நிதி நிலைக்கேற்ப போக்குவரத்துக்கு குந்தகம் ஏற்படாத வகையில் இச்சாலை பராமரிக்கப்படுகிறது. இச்சாலையில் ஒரு அடுக்கு கப்பி பரப்பி தார் சாலை புதுப்பிக்க ரூ. 15 இலட்சம் செலவாகும். அரசின் நிதி நிலைமைக் கேற்ப படிப்படியாக பழுது பார்ப்பதற்கு வழிவகைகள் செய்யப்படும்.

71—

ஒசூர்-பந்திகோடநள்ளி செல்லும் சாலையில் பாலம் அமைத்தல்

வினா எண் 21773—திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓசூரில் இருந்து பந்திகோடநள்ளி செல்லும் சாலையில் உள்ள ஓடைக்கு பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

ஓசூரில் இருந்து பந்திகோடநள்ளி செல்லும் சாலையில் உள்ள ஓடையானது தமிழ்நாடு மாநிலம், பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் வட்டத்தைச் சார்ந்த தாளவாடி ஊராட்சி ஒன்றியத்தில் மலைப் பகுதியில் அமைந்துள்ளது. பத்தேகவுண்டன் ஹள்ளி கிராமத்தில் கர்நாடக மாநில எல்லை முடிவடையும் இடத்தில் கர்நாடக மாநில எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டமன்ற வினாவில் சொல்லப்பட்ட ஓடை அதாவது பள்ளம் ஒன்றுள்ளது. இப்பள்ளத்தில் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் கர்நாடக அரசால் பாலம் கட்டும் பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

1995 மார்ச் 14]

72—

கல்வராயன் மலையில் காகிதத் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 3378—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, கல்ராயன் மலையில் மூங்கில் அதிகமாக உள்ளதால், ஒரு காகித தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

73—

நாகலாபுரத்தில் பெண்களுக்கு தையற் பயிற்சி அளித்தல்

வினா எண் 36204—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் ஒன்றியத்திலுள்ள நாகலாபுரத்தில் பெண்களுக்கு தையற் பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

74—

பவனமங்கலத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 26363—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், பவனமங்கலம் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

75—

திருவையாறு ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 32056—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஒன்றியம், வீரசிங்கம்பேட்டை, கண்டியூர், கல்யாணபுரம், முதல்சேத்தி, முகாசா கல்யாணபுரம், செம்மங்குடி, ஏலத்திராயன்பேட்டை, அன்னக்குடி, பெரமூர், திருப்பணம், சிறுபுரிவூர் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

76—

திருவிடைமருதூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 32421—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், சூரியனார்கோவில் ஆண்டலாம்பேட்டை, கிருஷ்ணாபுரம் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

77—

நத்தம் தொகுதியில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 32902—திரு. **ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சிரங்காட்டுப்பட்டி சேத்தூர், புதூர், லிங்கவாடி, புன்னம்பட்டி, முனையூர், செந்துறை, இடையபட்டி, செல்லப்பநாயக்கன்பட்டி, சாத்தாம்பாடி ஆகிய கிராமங்களில் ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மீதி வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

78—

புவனகிரி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 33587—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், சியம்பாடி, மஞ்சள்கொல்லை ஆகிய கிராமங்களில் தொகுப்பு வீடுகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்யப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

79—

சாந்திப்பாடியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35024—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், சாந்திப்பாடியில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச்

செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

80—

பெருமுகை ஆதிதிராவிட நல உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் திறந்து வைத்தல்

வினா எண் 20050—திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அருகேயுள்ள பெருமுறை கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி புதிய கட்டிடம் இன்னும் திறக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : வேலூர் அருகேயுள்ள பெருமுகை கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் கட்டப்பட்ட கூடுதல் கட்டிடம் 5-4-1993 அன்று திறந்து வைக்கப்பட்டு, 1993-94 ஆம் கல்வியாண்டில் 3-6-1993 முதல் புதிய பள்ளிக் கட்டிடத்தில் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

81—

கும்பகோணம் அருள்மிகு வேதநாராயண பெருமாள் திருக்கோயிலை விளம்பரப்படுத்துதல்

வினா எண் 14387—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(a) Whether the HR & CE administration has plans to popularise the Sri Vedanarayana Perumal Temple devoted to Brahma near Kumbakonam; and

(b) the details thereof ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகர் அருள்மிகு வேதநாராயண பெருமாள் திருக்கோயில் சட்டப் பிரிவு 46 (3)-ன்கீழ் பிரசுரிக்கப்பட்ட திருக்கோயிலாகும். இத்திருக்கோவிலுக்கு தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்றம் 1/1904-ல் நிர்வாகத் திட்டம் ஏற்படுத்தியுள்ளது. இதன்படி "சௌராஷ்டிரா" வகுப்பினர் மட்டுமே இத்திருக்கோயிலுக்கு அறங்காவலர்களாக வர இயலும். ஆகவே, இலாகா பூர்வமாக இதுவரை அறங்காவலர்கள் நியமனம் செய்யப்படவில்லை. மேற்கூறிய திருக்கோயிலை விளம்பரப்படுத்தி புகழடையச் செய்ய எந்த ஒரு திட்டமும் இல்லை.

82—

தஞ்சை மாவட்டத்தில் சில கோவில்களுக்கு உட்பட்ட ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி தரும் திட்டம்

வினா எண் 16154—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், நாச்சியார் கோவில், ஸ்ரீனிவாசபெருமாள் கோவிலுக்கு உட்பட்ட ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி தரும் திட்டத்தில் 1992-93-ல் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

83—

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 27565, 29077, 27823—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

(1) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மேற்பனைக்காடு அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோயில், செவிந்தான்காடு முனி ஆலயம், அய்யனார் கோவில், கன்னிமார் கோவில், சுப்ரமணியபுரம் ஞானவிநாயகர் கோவில், சின்ன வீரமங்கலம் சதுரங்க விநாயகர் கோவில், சிலட்டூர் ரெங்கநாதசாமி கோவில், நிலையூர் பாலசுப்ரமணியசுவாமி கோயில், தினையாக்குடி செல்வ விநாயகர் கோவில், குளத்தூர் சாம்பான் கோவில்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், முள்ளங்குறிச்சி அருள்மிகு பிடாரி அய்யனார் கோயில், கறம்பக்குடி பிள்ளையார் கோவில், பெண்ணாவில்குடி பாலசுப்ரமணியசுவாமி கோயில், கச்சிரான்பட்டி தொண்டிக்கருப்பர் கோவில், முத்தவக்குறிச்சி பிள்ளையார் கோவில், கீழையூர் பிள்ளையார் கோவில், பாத்தவன்பட்டி பட்டவன் கோவில், ஆயிப்பட்டி தொண்டி அப்பச்சி அய்யனார் கோவில், கைக்குறிச்சி அடைக்கலம் காத்த அய்யனார் கோவில்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், சிங்கவனம் அருள்மிகு பாலதண்டாயுதபாணிசுவாமி கோயில், ஆளப்பிறந்தான் பூமிஸ்வரர் ஆலயம், ஆளப்பிறந்தான் அய்யனார் கோயில், ஆவனந்தான் கோட்டை எழுவாச்சியம்மன் கோயில், ஆலடிக்காடு மாரியம்மன் கோயில், ஆவனத்தான் கோட்டை செல்வ விநாயகர் கோயில், ஆயிங்குடி கருத்தப்பெரியான் கோயில், ஆவனத்தான் கோட்டை அய்யனார் கோயில், மணவாள நல்லூர் முத்துமாரியம்மன் கோயில், காயக்காடு கருப்பர் கோயில், காரணக்கோட்டை சிவன் மற்றும் பெருமாள் கோயில் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

84—

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 27615, 27625, 27665—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மேற்பனைக்காடு அருள்மிகு மழைமாரியம்மன் கோயில்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், ஆரியூர் அருள்மிகு மெய்நாத அய்யனார் ஆலயம், மேலப்பழவஞ்சி வீரலெட்சுமியம்மன் ஆலயம், வெல்ல முத்துப்பட்டி வன்னியடிக் கருப்பர் ஆலயம், தொட்டியப்பட்டி வெட்டிக்காடு விநாயகர் ஆலயம், அம்மாசத்திரம் விசுவநாதசுவாமி ஆலயம், மகாலட்சிமியம்மன் ஆலயம், அம்மாப்பேட்டை விநாயகர் கோவில், வீரப்பட்டி பிடாரியம்மன் ஆலயம், வட்டம் பேயால் மந்தைக் கருப்பர் ஆலயம், குமரப்பட்டி கருப்பர் திருக்கோயில்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், இராஜகிரி பிடாரியம்மன் ஆலயம், சூரியூர் முத்துமாரியம்மன் ஆலயம், சீமானூர் பூமாலை அய்யனார் ஆலயம், இராசிபுரம் மாத்தூர் பிள்ளையார் மாரியம்மன் ஆலயம், மின்னாத்தூர் சன்னாசி ஆலயம், செவிட்டு முனியன் ஆலயம், மீனவேலி முக்கடம்பேசுவரர் ஆலயம், சாத்தம்பட்டி கன்னிமார் ஆலயம், கடம்பராயன்பட்டி பிடாரி ஆலயம், அடைக்கலம் காத்த அய்யனார் ஆலயம் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

85—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 27655, 27675, 28579—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், நல்லம்மாள் சமுத்திரம் அருள்மிகு அய்யனார் ஆலயம், நல்லூர் த/அ. லெட்சுமணன்பட்டி செல்லாயி கருப்பர் ஆலயம், நான்குப்பட்டி அய்யனார் ஆலயம், முத்துமாரியம்மன் ஆலயம், பேயால் அகஸ்தீஸ்வரர் ஆலயம், பிடாரி அம்மன் ஆலயம், இராஜகிரி கூத்தாண்டம்மன் ஆலயம், கன்னிமார் ஆலயம், பொய்யாமணி பட்டத்தளச்சியம்மன் ஆலயம், சத்தியமங்கலம் சாத்த அய்யனார் ஆலயம்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், ஈஸ்வரர் கோயில், அருள்மிகு பகவதியம்மன் ஆலயம், ஆரியூர் தாத்தான் கருப்பர் ஆலயம்,

குமாரமங்கலம் பிள்ளையார், மருதை வீரன் கடம்பராயன்பட்டி சிவன் கோயில் ஆலயம், கன்னிமார் பிள்ளையார் ஆலயம், பையூர் ஆலமரத்துப் பிள்ளையார் ஆலயம், கிள்ளு குளவாய்ப்பட்டி சித்தாங்காத்த அய்யனார், மாராயப்பட்டி திரௌபதியம்மன் கோவில், சோமநாதர் ஆலயம்;

(3) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், இராப்பூசல் அருள்மிகு நாயக்குளம் அய்யனார் ஆலயம், பகவதி அம்மன் ஆலயம், கலிங்கப்பட்டி மாங்குடி அய்யனார் ஆலயம், கீழக்குறிச்சி வீரமாகாளியம்மன் ஆலயம், செவிடும்பாளூர் கொங்கணிச் சித்தர் ஆலயம், கிளாப்பட்டி பிள்ளையார் ஆலயம், மூக்கணா மலைப்பட்டி அடைக்கலங்காத்த அய்யனார் ஆலயம், கோத்திராப்பட்டி உகலநாச்சியம்மன் ஆலயம், உடையாளிப்பட்டி கன்னிமார் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

86—

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 27685, 27695, 27705—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், மாத்தூர் அருள்மிகு உலகநாயகியம்மன் ஆலயம், மாங்குடி வீரலெட்சுமி அம்மன் ஆலயம், முனிச்சான் கருப்பர் ஆலயம், மாராயப்பட்டி முத்து அய்யனார் ஆலயம், மேபூதக்குடி மாரியம்மன் பிள்ளையார் ஆலயம், பிடாரி அம்மன் ஆலயம், மீனவேலி வரதராஜபெருமாள் ஆலயம், பெருஞ்சுவை வரதராஜப் பெருமாள் ஆலயம், வினைதீர்த்த அய்யனார் ஆலயம், பெரிய முனிப்பட்டி த/அ நீர்ப்பழனி அய்யனார் ஆலயம்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், பூதகுடி அருள்மிகு மாகாளியம்மன் ஆலயம், மேபூதக்குடி அய்யனார் ஆலயம், பேராம்பூர்

முத்துமாரியம்மன் ஆலயம், கைக்குடிப்பட்டி கருப்பர் ஆலயம், தெய்வநாயக்கன்பட்டி கருப்பன் பிடாரி அம்மன் ஆலயம், உடையான்பட்டி த/அ சத்தியமங்கலம் அரியநாச்சியம்மன் ஆலயம், உடையளிப்பட்டி அடைக்கலம் காத்த அய்யனார் ஆலயம், பிடாரி அழகு நாச்சியம்மன் ஆலயம், தேராவூர் கல்குறிச்சி அய்யனார் ஆலயம், தேவலி த/அ குமாரமங்கலம் பிடாரி அம்மன் ஆலயம்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், தேராவூர் அருள்மிகு கூத்தப்ப அய்யனார் ஆலயம், தென்னம்பாடி அய்யனார் ஆலயம், சொர்கவூர் முத்துமாரியம்மன் ஆலயம், செல்லுக்குடி வீரலெட்சுமியம்மன் ஆலயம், சொர்கவூர் கரைகமல் அய்யனார் ஆலயம், நெய்வேலி த/அ ஏதம்மாவூர் மாசாத்து அய்யனார் ஆலயம், நீர்ப்பழனி குளக்கரை அழகர் அய்யனார் ஆலயம், தென்னம்பாடி மூன்று பிள்ளையார் ஆலயம், கொப்பம்பட்டி த/அ தெம்மாவூர் முனியன் சந்தி வீரப்பன் ஆலயம், தெம்மாவூர் முத்து மாரியம்மன் ஆலயம், புல்வயல் உலகநாயகியம்மன் ஆலயம் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

87—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 27715, 28569, 27812—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், தாயினிப்பட்டி அருள்மிகு தொக்கங்கல்சாமி ஆலயம் தன்னங்குடி த/அ பையூர் பிடாரி ஆலயம், களிஞ்சி அகஸ்தீஸ்வரர் ஆலயம், சேந்தமங்கலம் பொன்னாளம்மன் ஆலயம், வளதாடிப்பட்டி த/அ பாக்குடி வளதாட அய்யனார் ஆலயம், பன்னிப்பட்டி அனிபையூர் பிடாரி ஆலயம், ஓடுகள்பட்டி ஆழ்வார்பட்டி சித்தி விநாயகர் ஆலயம், புல்வயல் ஈஸ்வரர் கோயில், புங்கினிப்பட்டி விநாயகர் ஆலயம், புலிப்பட்டி தன்னங்குடி பிடாரி திருக்கோயில்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், வடுகப்பட்டி அருள்மிகு குறிஞ்சிப்பட்டி பிள்ளையார் ஆலயம், தா. கீழையூர் அங்காளம்மன் ஆலயம், மேட்டுத் தெரு ஊரணிக் கருப்பர் ஆலயம், தொரக்கருப்பர் ஆலயம், மதுரை வீரன் ஆலயம், பூதக்குடி கருப்பர் ஆலயம், மேலூர் முத்துமாரியம்மன் ஆலயம், பினம்பட்டிமந்தை மாரியம்மன் ஆலயம், கிள்ளுக்கோட்டை பிள்ளையார் ஆலயம், விராலிமலை மாரியம்மன் ஆலயம்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், கூகனூர் அருள்மிகு முத்துமாரியம்மன் அய்யனார் கோயில், கோயில் கோட்டை வள்ளி விநாயகர் கோயில், சாம்பானோடை பிள்ளையார் கோயில், சாம்பானோடை சாம்பன் கோயில், சாம்பானோடை காளியம்மன் கோயில், சிதம்பரவிடுதி அன்னதான மடம், சிதம்பரவிடுதி சுப்பிரமணியசுவாமி கோயில், சிவட்டூர் பொன்னம்பலநாதர் கோயில், சிவட்டூர் அய்யனார் கோயில், சித்தக்கன்ன வீரசித்தி விநாயகர் கோயில். ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

88—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 27834, 27902, 27912—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், கம்மங்காடு அருள்மிகு பச்சையம்மன் கோயில், ஈட்டியத்தளினி மாரியம்மன் கோயில், ஊர்வளி சித்தி விநாயகர் கோயில், இடையக்காடு முனியன் கோயில், இடையர் ஆரிய மாணிக்கசாமி ஆலயம், இடையர் பள்ளராமன் காளியம்மன் கோயில் ரெத்தினக்கோட்டை அய்யனார் கோயில், ஆவனத்தாங்கோட்டை பிள்ளையார் கோயில், அழியாநிலை விநாயகர் கோயில், அத்தாணி கணேசர் கோயில், அறந்தாங்கி பால அனுமார் ஆலயம்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கிள்ளுக்குளவாய்ப்பட்டி அருள்மிகு சன்னாசி உருமானர் ஆலயம், கிளிக்குடி அய்யனார் செல்வ விநாயகர் ஆலயம், கிரகப்பெருமாள் ஆலயம், கிடவன்குடி முத்துமாரியம்மன் ஆலயம், காட்டுக் கோட்டைப்பட்டி முனியன் ஆலயம், கம்பக் குறிச்சிவயல் காஞ்சிரான் காட்டு அய்யனார் ஆலயம், கட்டக்குடி விநாயகர் ஆலயம், பிடாரி அம்மன் ஆலயம், மாத்தூர் காமாட்சியம்மன் ஆலயம், சிங்கம்பட்டி சின்னமுத்துக் கருப்பர் ஆலயம். ஆகிய திருக்கோயில்களை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

வினா எண் 27912-ல் குறிப்பிட்டுள்ள புதுக்கோட்டை மாவட்டம், கிடவன்குடி முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு திருப்பணி செய்யப்பட்டுள்ளது. மற்ற ஆலயங்கள் குறித்து செயற்குறிப்புகள் ஏதும் பரிசீலனையில் இல்லை.

89—

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 27867, 27872, 27882—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், நெய்வத்தாரி அருள்மிகு நெய்வேலிநாதர் கோயில், பஞ்சாத்தி மாரியம்மன் கோயில், நீர்விளங்குளம் சுந்தரவிநாயகர் கோயில், நீர்விளங்குளம் சுப்பிரமணியசுவாமி கோயில், நிலையூர் பாலசாஸ்திர கோயில்;

(2) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், புங்கனிப்பட்டி அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம், அய்யனார் ஆலயம், புதூர் த/அ மூக்கணாமலைப்பட்டி புதுவயல் காட்டுணிப் பிள்ளையார் கோயில், பூச்சிக்குடி வயல் அய்யனார் ஆலயம், கலகுடி விநாயகர், அய்யனார் பிடாரி ஆலயம், கடம்பராயன்பட்டி பாலையடி விநாயகர் ஆலயம், எண்ணை த/அ இலுப்பூர் அங்காளம்மன் ஆலயம், ஆதனப்பட்டி த/அ மருதம்பட்டி அய்யனார் ஆலயம், ஆயங்குடி த/அ செல்லுகுடி பத்ரகாளியம்மன் ஆலயம், இலுப்பூர் இரட்டைப் பிள்ளையார் கோயில்;

(3) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், இரும்பாளி த/அ சத்தியமங்கலம் அருள்மிகு கூத்தனிப்பட்டி கருப்பர் ஆலயம், ஆரியூர் அடைக்கலம் காத்த அய்யனார் ஆலயம், மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம், கிள்ளுகுளவாய்ப்பட்டி முனியன் ஆலயம், பேராளம்மன் ஆலயம், குரும்பட்டி த/அ இருந்திராப்பட்டி கருப்பண்ணசாமி ஆலயம், குன்னத்தூர் பிள்ளையார் ஆலயம், மேலூர் உலகநாயகி அம்மன் ஆலயம், ராசிபுரம் கன்னிமார் ஆலயம், கண்டகப்பட்டி பிள்ளையார் கோயில். ஆகிய திருக்கோயில்களை புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

90—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 27892, 28549, 28589—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், லெட்சுமணப்பட்டி அருள்மிகு பச்சை நாச்சியம்மன் ஆலயம், புளிப்பட்டி பிள்ளையார் கோயில், அன்னவாசல் கணுவிக் கருப்பர் ஆலயம், ஆத்திப்பள்ளம் அய்யனார் ஆலயம், விநாயகர் ஆலயம், ஆரியூர் பெருமாள் ஆலயம், வெட்டிக் கருப்பர் ஆலயம், விநாயகர் ஆலயம், ஆலங்குடிப்பட்டி பிள்ளாண்டிகண்ட அய்யனார் ஆலயம், அன்னவாசல் பெரிய நயினார் சவரிக்கிழவர் சங்கிலிக் கருப்பர் ஆலயம்;

(2) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கிள்ளுக்கோட்டை அருள்மிகு காட்டுக்கோட்டைப்பட்டி அய்யனார் முனியன் திருக்கோயில், கீழக்குறிச்சி அங்காளம்மன் கோயில், கருப்பர் ஆலயம், ஆரியூர் பிடாரியம்மன் ஆலயம், பெரியகுரும்பப்பட்டி காயங்குள அய்யனார், கருப்பர் ஆலயம், வீரானூர் பூம்ஸவரர் ஆலயம், முத்துமாரியம்மன் ஆலயம், காளியம்மன் ஆலயம், வீராப்பட்டி மூக்கனாமலைப்பட்டி, காலாடிப்பட்டி சத்திரம் தண்ணீர் பந்தல் தர்மம்;

(3) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம் நீர்ப்பழனி அருள்மிகு வெள்ளந்தாங்கி அம்மன் ஆலயம், நெய்தலூர் முத்துமாரியம்மன் ஆலயம், புலியூர் கல்யாண கணபதி ஆலயம், களமாவூர் கேசவப்பெருமாள் ஆலயம், உடையாளிப்பட்டி தமிர்சிராயர் அய்யனார் ஆலயம், இலுப்பூர் சுப்பிரமணிய சுவாமி ஆலயம், மதிய நல்லூர் அடைக்கலம்காத்த அய்யனார் ஆலயம், இளைய அய்யனார் ஆலயம், மேலப்பட்டி நல்லாண்டவர் ஆலயம், மதிய நல்லூர் கருப்பர் ஆலயம், மானகுடிகுழமிக்கருப்பர் ஆலயம் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

வினா எண் 28549-ல் குறிப்பிடப்பட்டுள்ள கிள்ளுக்கோட்டை அருள்மிகு காட்டுக்கோட்டைப்பட்டி அய்யனார் ஆலயம் மற்றும் கீழக்குறிச்சி அங்காளம்மன் கோயில் ஆகிய திருக்கோயில்களில் திருப்பணி நடைபெற்று வருவதாக இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் தெரிவித்துள்ளார். இதர திருக்கோயில்களில் திருப்பணி செய்ய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

91—

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 28891, 28923, 29057—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், மேட்டுப்பட்டி த/அ தேராவூர் அருள்மிகு கூத்தக்குடி அய்யனார், கருப்பர் ஆலயம், வெள்ளைரஞ்சார் மருதைக்குளம் பிடாரி ஆலயம், கோட்டுக்காரன்பட்டி விநாயகர் ஆலயம், விட்டாநிலைபட்டி ஆரவல்லி ஆலயம், விட்டாநிலைப்பட்டி கருப்பர் ஆலயம், வெலியங்குடி அய்யனார் ஆலயம், அன்னவாசல் மெய்கண்ட பெருமாள் ஆலயம், அழகம்பட்டி பிள்ளையார் ஆலயம், பேத்தாம்பட்டி கருப்பர் ஆலயம், கீழக்குறிச்சி மெய்யப் பெருமாள் ஆலயம், கண்காணிப்பட்டி போத்துக் கருப்பர் ஆலயம்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், குளத்தூர் அருள்மிகு களத்தூர் அய்யனார் ஆலயம், விளத்துப்பட்டி மெய்யப்

பெருமாள் ஆலயம், கன்னியாபட்டி பொய் சொல்லா அய்யனார் கோயில், பையூர் ஊரணி பிள்ளையார் ஆலயம், பேயால் புளியடி விநாயகர் ஆலயம், ஈஸ்வரன் கோயில், பாப்பாத்தியம்மன் ஆலயம், மாத்தூர் மதுரைவீரன் ஆலயம், மாத்தூர் பெரிய காந்தியம்மன் ஆலயம், பொத்தாம்பட்டி விநாயகர் ஆலயம், பேயால் வள்ளம்ப அய்யனார் ஆலயம்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், புளிச்சங்காடு அருள்மிகு செல்வ விநாயகர் கோவில், முக்தனாக் குறிச்சி செல்வ விநாயகர் கோயில், மாங்காடு வேணுகோபால் சுவாமி கோயில், மாஞ்சான் விடுதி விஜயகணபதி கோயில், கறம்பக்குடி அனுமார் கோயில், குளத்திரன்பட்டு கூத்தாளம்மன் கோவில், காட்டாத்தி வீரமாகாளியம்மன் கோவில், கல்லாலங்குடி சிங்கனார் ஊரணி பிள்ளையார் கோவில், சண்முகநாதபுரம் சுப்ரமணிய சுவாமி கோயில், சின்னப்பட்டி சுப்ரமணியசுவாமி கோயில் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

92—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 28902, 29184, 29194—**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், தா. கீழையூர் அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில், ஈச்சம்பட்டி வேட்டைக்காரர் கோயில், தேராவூர் கூத்தாடிக் கருப்பர் கோயில், கொப்பம்பட்டி கருப்பர் ஆலயம், கோங்குடிப்பட்டி பிடாரி ஆலயம், கீழப்பழவஞ்சி பெரிய அய்யனார் திருக்கோயில், கொப்பம்பட்டி ஆண்டியப்ப அய்யனார் திருக்கோயில், காட்டுப்பட்டி கூவாட்டு அய்யனார் ஆலயம், குன்னத்தூர் முத்துமாரியம்மன் ஆலயம், கொடும்பாளூர் முதகுஞ்சீஸ்வரர் ஆலயம்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோயில் வட்டம், பெருங்குளம் அருள்மிகு காத்தாயி அம்மன் கோவில், பூவாலூர் அய்யனார்

கோவில், பில்லுவலசை காளியம்மன்கோவில் பறையத்தூர் கருப்பாண்டீஸ்வரர் ஆலந்தூர் முனிநாதசுவாமி கோயில், இளங்கொடி காளியம்மன் கோவில், ஏனாதி மகிசாகர் மர்த்தினியம்மன் கோவில், செய்யானம் அய்யனார் கோவில், சாத்தியடி காமாட்சியம்மன் கோவில் குழுளூர் சாம்பான் கோவில்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் வட்டம், குழுமூர் அருள்மிகு பிடாரியம்மன் ஆலயம், குளத்தூர் சாம்பன் கோவில், கீரனூர் அகோபிலமடம், அறந்தாங்கி வட்டம், ரெத்தினக்கோட்டை வடகாத்த அய்யனார் கோவில், அத்தாணி சரியாளம்மன் கோவில், அழியாநிலை சட்டத்தப் பெருமாள், அய்யனார் கோவில், அறந்தாங்கி சுப்பிரமணியசுவாமி கோவில், வேதியான்குடி பழனியாண்டவர் கோவில், அத்தாணி அய்யனார் கோவில், ஆலகாடு ஜம்புலிங்க சிவசுப்பிரமணியசுவாமி கோயில் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

93—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 28912, 28933, 29104—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கொப்பம்பட்டி, அருள்மிகு சுப்ரமணிய வகையறா ஆலயம், மண்டையூர் அங்காளம்மன் திருக்கோயில், மண்டையூர் பால தண்டாயுதபாணி திருக்கோயில், சித்தன்னவாசல் மாத்ருபூதேஸ்வரர் ஆலயம், பொய்யாமணிநாயன்மார் ஆலயம், கீரனூர் பிடாரியம்மன் கொங்கருணிக் கருப்பர் ஆலயம், தாகீழையூர் அய்யனார் ஆலயம், அன்னவாசல் இருளப்பர் ஆலயம், அன்னவாசல் வயலங்கார விக்னேஸ்வரர் ஆலயம், கோங்குடிப்பட்டி பள்ளிப்பட்டி பிள்ளையார் ஆலயம், பொத்தாம்பட்டி பட்டவர் அடியார் ஆலயம்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், வைத்தூர் அருள்மிகு பிரம்மன் அய்யனார் ஆலயம், சித்தன்ன வாசல் பிடாரியம்மன் ஆலயம், அன்னவாசல் வெட்டிக் கருப்பர் ஆலயம், அன்னவாசல் கொணியம்மன் ஆலயம், திம்பிப்பட்டி விநாயகர் ஆலயம்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், செம்பூதி அருள்மிகு பிதாவூர் அய்யனார் கோயில், கொன்னயூப் பொங்கல் காளியம்மன் கோயில், செம்பூதி ஊர்க்காவல் கருடிபர் கோயில், மங்கலப்பட்டி பிள்ளையார் கோவில், சங்கரம்பட்ட பிள்ளையார் கோவில், ஆலம்பட்டி பிள்ளையார் கோவில், இடையாத்தூர் பிரமநயனார் கோவில், சிரார்த்தக்குடி சங்கிலிக் கருப்பர் கோவில், மரவா மதுரை வல்லடியார், செங்காட்டுக்காரர் கோவில், எல்லைக் கருப்பர் வகையறா கோவில் ஆகிய திருக்கோவில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

94—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோயில்களை புதுப்பித்தல்

வினா எண் 29047—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

“புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், தெற்குப்பட்டி அருள்மிகு தெற்குத் தெரு அய்யனார் கோயில், வேப்பங்குடி கீழவாசல் பெரிய அய்யனார் கோயில், கரம்பக்குடி கருப்பை யாசார் கோயில், திருவரங்குளம் இடையில் கட்டளை இணைப்பு அரங்கநாதர் கோயில், கீரமங்கலம் வீரபுத்திரசாமி கோயில், திருக்கட்டளை வல்லத்துக் காளியம்மன் கோவில், பொற்பனைக் கோட்டை வடக்குவாசல் காளியம்மன் கோவில், புதுக்கோட்டை விடுதி கரைமேல் பெரிய அய்யனார் கோயில், களக்குடி அய்யனார் கோயில், முத்தனாகுறிச்சி அடிகண்டார் கோயில்” ஆகிய கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், தெற்குப்பட்டி அருள்மிகு அய்யனார் கோயிலின் திருப்பணி வேலை நடந்து கொண்டு இருக்கிறது. இதற்கான அரசு மான்யம் ரூ. 47,700 வழங்கப்பட்டுள்ளது. இதர திருக்கோயில்களின் திருப்பணி சம்பந்தமான செயற்குறிப்புகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

95—

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 29094, 29124, 29134, 29164—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், உசிலம்பட்டி அருள்மிகு கருப்பர் கோயில், பெருந்துறை கட்டியக்கார கருப்பர், வலையப்பட்டி பிள்ளையார் கோவில், ஐவ்வாது விநாயகர் கோவில், கோட்டையூர் பெரிய கருப்பர் கோவில், கல்லூர் பிள்ளையார் கோவில், பிலிவலம் அய்யனார் கோவில், கழனிவாசல் சிதம்பர விநாயகர் கோவில், செல்வ விநாயகர் கோவில், செம்பூதி செவந்திநாண்டி கோவில், பிலிவலம் மெய்கண்ட விநாயகர் கோவில்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், அம்மன்குறிச்சி அருள்மிகு வண்ணத்தாயி அம்மன் ஆலயம், கண்ணனார் அங்காள பரமேஸ்வரியம்மன் கோயில், பேரையூர்க் கப்பத்தடியான் (என்கிற) ரெங்கநாதசுவாமி கோயில், மூலங்குடி முட்டினிக் கருப்பர், பெரிய கருப்பர் கோயில், (கொன்னயம்பட்டி கக்காண்டியம்மன் கோவில், வடக்கு தாழம்பட்டி காத்தவராய சுவாமி கோவில், பிள்ளையார் கோவில், அரிமளம் அடைக்கலம் காத்தார் கோவில், திருக்களம்பூர் கருப்பக் குடிப்பட்டி பிள்ளையார் கோவில், வரிக்கால் பள்ளம் பிள்ளையார் கோவில்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம் ஆயிங்குடி அருள்மிகு பிள்ளையார் கோயில், தாஞ்சுர் சாத்தப்பர் கோவில், பில்லமங்கலம் கோப்பிடாரியம்மன் கோவில், சடையம்பட்டி பிள்ளையார்

மேக்கருப்பர் கோவில், தாஞ்சூர் அய்யனார் கடலைக் கருப்பர் கோவில், ஊரணிப் பிள்ளையார் மாரியம்மன் கோவில், அகவயல் அய்யனார் கோவில், மரமடக்கி அரங்குள விநாயகர் கோயில், வேகுப்பட்டி ஏன மாரியம்மன் கோவில், ஆர். பாலக்குறிச்சி முத்துமாரியம்மன் கோவில்.

(4) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் வட்டம், விளத்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயில், கானாடு சுப்பிரமணிய சுவாமி கோயில், முத்தையனார் கோயில், தியத்தூர் பிள்ளையார் கோயில், அமரடக்கி சுந்தரேஸ்வரசுவாமி கோயில், ஆவுடையார் கோயில், பட்டாபிராமசாமி கோயில், அம்பிலவானேந்தல் சுப்பிரமணியசுவாமி தையல் நாயகியம்மன் கோயில், தியத்தூர் பிடாரி கோயில், திய்யூர் கண்ட தீஸ்வரக் கோட்டை கோயில் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

மேலே குறிப்பிட்டுள்ள திருக்கோயில்களில், ஆர். பாலகுறிச்சி அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு 1992-ம் ஆண்டு, கிராமப்புறத் திருப்பணியின் கீழ் நிதியுதவி பெற்று திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இது தவிர வேறு திருக்கோயில்கள் எவற்றிற்கும் திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

96—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 29114, 27575, 28559—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், காரையூர் அருள்மிகு செங்கிடாக்காரன், வைரப்பெருமாள் திருக்கோயில், கல்லம்பட்டி, கருவுடையார் கோவில், கொன்னையூர் விநாயகர் கோயில், ஆலமண்டார் விநாயகர் கோவில், மாசாண்டகருப்பர் கோயில், தேனிப்பட்டி விநாயகர் கோவில், அய்யனார் தலையாத்திவயல் விடத்துடைய அய்யனார் கோவில், தாரையூர் பிடாரியம்மன் கோவில், செம்பூர்தி பிதாவூர் குட்டிக் கருப்பர் கோவில்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், குருந்திராக்கோட்டை அருள்மிகு சித்தி விநாயகர் கோயில், மேற்பனைக்காடு ஆண்ட விநாயகர் கோவில், மேலப்பட்டு வடகாடு கருப்பர் கோவில், மருக்கோவில் (வீரமங்கலம்) அங்காளம்மன் கோவில், பிராமவயல் பிள்ளையார் கோவில், தினயாகுடி பெரிய நயினார் கோவில், திருவப்படி பத்திரகாளியம்மன் கோவில், தர்மராஜன் வயல் முத்துமாரியம்மன் கோவில், சுப்பிரமணிய சுவாமி கோவில், மன்னமுடைய அய்யனார் கோவில்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், வீரப்பட்டி த/அ இலுப்பூர் அருள்மிகு கருப்பர்சாமி ஆலயம், வீரப்பட்டி த/அ புலியூர் பிடாரியம்மன் ஆலயம், வெள்ளாளப்பட்டி த/அ தேராவூர் பிடாரி ஆலயம், வெள்ளாஞ்சேரி திரௌபதியம்மன் ஆலயம், வெம்மணி த/அ நீர்ப்பழனி அய்யனார் பிள்ளையார் ஆலயம், வெள்ளைப் பிள்ளையார்ப்பட்டி அங்காளம்மன் ஆலயம், வெட்டுக்காடு த/அ இராபூசல் ருக்மணிக்குளம் பிடாரி ஆலயம், வேலூர் பிடாரியம்மன் ஆலயம், அய்யனார் ஆலயம், கதவி விக்னேஸ்வரர் ஆலயம் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

97—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 29154, 29176, 29082—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் வட்டம், மேல்வரை அருள்மிகு விக்னேஸ்வரர் கோவில், வடவயல் அய்யனார் கோவில், மூலவயல் காளியம்மன் கோவில், மீமிசல் வீரமாகாளியம்மன் கோவில், சிங்காரப் பிள்ளையார் கோவில், விசூல் முத்துமாரியம்மன் கோவில், சிவன் பெருமாள் கோவில், வேளிமங்கலம் சீனிவாசபெருமாள்

கோவில், வேல்வரை காளியம்மன் விக்னேஸ்வரர் கோவில், வெளிவயல் ராமமுனி கோவில்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் வட்டம், கடவாக்கோட்டை அருள்மிகு அய்யனார் கோவில், ஒள்ளலூர் ஜெங்கியம்மன் கோவில், ஒக்கர் செல்லியம்மன் கோவில், கானாடு வேலுடைய அய்யனார் கோவில், கண்ணமங்கலம் மகாலிங்கசுவாமி கோவில், மீமிசல் வீர அனுமார் கோவில் மருதகோவில் அங்காளம்மன் கோவில், மணல்மேல்குடி காமாட்சியம்மன் கோவில், பட்டாபிராமன் கோவில், பேரலூர் கருப்பர் கோவில்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், குழந்தை விநாயகர் கோவில், அருள்மிகு அய்யனார் கோவில், பந்துவாக்கோட்டை அய்யனார் கோவில், மணியம்பலம் முனிக்கோயில், கச்சிரான்பட்டி பொற்பனை ஆண்டவர் கோவில், முள்ளால் பிடாரி அய்யனார் கோவில், புல்லான்விடுதி தர்மர் கோவில், பூரசக்குடி சேந்த அய்யனார் கோவில். ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

98—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கோயில்களை புதுப்பித்தல்

வினா எண்கள் 29663, 29681, 29144—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகர், மற்றும் புதுக்கோட்டை வட்டம், அருள்மிகு குருந்துடை அய்யனார் கோவில், ராமச்சந்திர விலாஸ் தர்மம் பைரவ விநாயகர் கோவில், சுப்ரமணியசுவாமி அன்னதானக் கட்டளை, கைலாச மகால் தர்மம், சுப்ரமணியசுவாமி அன்னதான தர்மம், சாயரட்சை கட்டளை இணைப்பு முத்துமாரியம்மன் கோவில்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், ராஜாம்பட்டி அருள்மிகு கண்திறந்த நாயகியம்மன் கோவில், திருமயம் வட்டம், ஆதினப்பட்டி பிள்ளையார் கோவில், கந்தர்வக்கோட்டை முத்துமாரியம்மன் கோதண்டராமசாமி கோவில், மரக்கான்பட்டி வீரபத்திரசாமி கோவில், பழைய கந்தர்வகோட்டை கஸ்தூரியம்மன் கோவில், அரைய விடுதி அடைக்கலம் காத்தர் ஆலயம், கந்தர்வக்கோட்டை அங்காள பரமேஸ்வரர் ஆலயம், வெள்ளாளவிடுதி பாலதண்டாயுதபாணி ஆலயம், பேட்டையார் மண்டகப்படி கோவில்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், வேந்தன்பட்டி அருள்மிகு ராமர் பஜனைமடம், டி. மலம்பட்டி பூமிநாத சுவாமி கோவில், சித்தி பில்ல மங்கலம் இழகிய நாச்சியம்மன் கோவில், ராங்கியம் சிதம்பரம் விநாயகர் கோவில், திருமலைராயபுரம் ஆடங்கப்பிரனகோவில், கருவேப்பிலைப்பட்டி பகவதியம்மன் கோவில், வெங்கவூர், மேலூர் ஆலவயல் வீரமாகாளி அம்மன் கோவில், வெங்கவூர் அய்யனார் கோவில், திருமயம் கலியபெருமாள் கோவில், பிலாக்குப்பட்டி சின்ன கருப்பர் கோயில். ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

இல்லை.

99—

விராலிமலை முருகன் கோவில் தேரை ஓட்ட நடவடிக்கை எடுத்தல்

வினா எண் 30178—திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை முருகன் கோவில் தேர் நீண்ட நாட்களாக ஓடாமல் இருப்பதால், அந்தத் தேரை ஓட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1995 மார்ச் 14]

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் திருத்தேர் திருப்பணிக்கு இரும்பு அச்சுகள் மற்றும் சக்கரங்கள் செய்ய உபயதாரரால் திருச்சி பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தாரிடம் ஆர்டர் கொடுக்கப்பட்டு தேவையான மரச்சாமான்கள் சேகரிக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. தேர் திருப்பணி தை மாதத்திற்குள் நிறைவு செய்யத்தக்க வகையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

100—

வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல்

வினா எண் 34297—*திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *இந்து சமய அறநிலையத் துறையில் பணியாற்றும் வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்பு ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், விவரம் என்ன ?*

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஏழாவது பட்டியல்

1—

முத்திரைத்தாள் வசூலிப்பதில் கூடுதலாக ஒருவரை நியமனம் செய்தல்

வினா எண் 20804—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முத்திரைத்தாள் வசூலிப்பதில் தொகைகளைப் பெற கூடுதல் பதிவுத்துறைத் தலைவர் ஒருவரை பதிவு அலுவலர்களுக்கு உதவியாக நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

இல்லை.

2—

செந்துறை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 25077—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை சார்பதிவாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்குவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்ட எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) செந்துறை சார்பதிவாளர் அலுவலகம் துவக்கப்பட்ட 1-4-1962 முதல் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. சொந்தக்

கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலம் கையகப்படுத்த வருவாய் துறையினருடன் 1988-லேயே தொடர்பு கொள்ளப்பட்டது. உரிமை மாற்றம் மூலமோ அல்லது குத்தகை அடிப்படையிலோ நிலம் வழங்க தகுதியான இடம் ஏதுமில்லையென வருவாய்த் துறையினர் தெரிவித்துள்ளனர். எனவே, தகுந்த இடம் கிடைக்காததால், செந்துறை சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

கிருஷ்ணகிரி மாவட்ட பதிவு அலுவலகத்திற்கு நகல் எடுக்கும் இயந்திரம் வழங்குதல்

வினா எண் 35859—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டப்பதிவு அலுவலகத்திற்கு நகல் எடுக்கும் இயந்திரம் (Xerox Machine) வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

ஒவ்வொரு சார்பதிவாளர் மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கும் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும் சான்றிட்ட நகல்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஜெராக்ஸ் இயந்திரம் வழங்கப்பட்டு வருகிறது. 1993-94 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் வடசென்னை மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கோடம்பாக்கம் மற்றும் செம்பியம் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் 1994-95 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் 5 ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்கப் பெற்று, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலும் மற்றும் தென் சென்னை அசல் பத்திரப் பிரிவு மற்றும் பெரியமேடு சார்பதிவாளர் அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து மிகக் குறைவான அளவிலேயே சான்றிட்ட நகல்கள் வழங்கப்படுவதால், கிருஷ்ணகிரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரம் வழங்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் பரிசீலனையில் இல்லை.

4—

பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல்

வினா எண் **33532**—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், மடவாப்பள்ளம் மற்றும் கோவிலாப்பூண்டி ஆகிய கிராமங்களில் இதுவரை வழங்கப்படாதவர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு வள்ளலார்-மாவட்டம், பரங்கிப்பேட்டை ஒன்றியம், மடவாப்பள்ளம் மற்றும் கோவிலாம்பூண்டி ஆகிய கிராமங்களில் குடும்ப அட்டை கோரி வரப்பெற்ற 277 மனுக்களில் தகுதியான 141 மனுக்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

5—

முத்துக்கவுண்டன் பாளையத்தில் குடும்ப அட்டைகள் வழங்குதல்

வினா எண் 34471—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், நாகம்பள்ளி கிராமம், முத்துக்கவுண்டன்பாளையம் ஆதிதிராவிடர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், நாகம்பள்ளி கிராமம், முத்துக்கவுண்டன்பாளையம் ஆதிதிராவிடர்களிடமிருந்து மொத்தம் 10 மனுக்கள் பெறப்பட்டன. 10 மனுக்களும் ஆய்வு செய்யப்பட்டு அனைத்திற்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

1995 மார்ச் 14]

ஆதிதிராவிடர்களுக்கு குடும்ப அட்டை வழங்குவதில் தேக்கம் ஏதும் இல்லை.

6—

நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள் வழங்கல்

வினா எண் 36790—திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் எல்லா நாட்களிலும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

தற்போது சென்னை, மதுரை, திண்டுக்கல் அண்ணா, தர்மபுரி மற்றும் கோவை மாவட்டங்களில் சுழல் முறைத் திட்டம் (Staggering System) அமலில் உள்ளது. இத்திட்டத்தின்படி கார்டுதாரர்கள் அவர்களுக்கென குறிப்பிட்ட நாட்களில்தான் பொருட்களை வாங்கமுடியும். எனவே இம்மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் நகராட்சிப் பகுதிகள் உள்பட குடும்ப அட்டைதாரர்களுக்கு எல்லா நாட்களிலும் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. எந்த முறையில் வழங்குவது என்பதை ஆங்காங்கு உள்ள நிலைமைக்கு ஏற்ப மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முடிவு செய்து கொள்ளலாம்.

7—

ஊமத்த நாட்டில் பிரதம சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 2969—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்த நாட்டில் பிரதம சுகாதார நிலையம் அமைக்க அரசு அனுமதி கொடுத்தும் இன்னும் தொடங்கப்படவில்லை என்பதை அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்ட ஊமத்தநாடு ஆரம்ப சுகாதார நிலையம் 23-5-1988 நாளிட்ட அரசாணை எண்.1103 சுகாதாரம் மற்றும் அரசு கடித எண் 93700/எல்.1/88, சுகாதாரம் நாள் 15-11-1988-ன்படி தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இயங்க வாடகையில்லா கட்டிடம் வழங்க ஊமத்தநாடு கிராம மக்கள் முன் வராததால் ஊமத்த நாட்டிலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ள உடையநாடு என்ற கிராமத்தில் வாடகையில்லா கட்டிடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது.

8—

நன்னிலம் தொகுதி பேரளம் மருத்துவமனையை சீர் செய்தல்

வினா எண் 17309—டாக்டர் க. கோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்னிலம் தொகுதி பேரளம் மருத்துவமனையில் கட்டிடங்கள் மதில் சுவர் மற்றும் மேற்கூரைகள் மிகவும் பழுதடைந்திருப்பதை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

பேரளம் ஆரம்ப சுகாதார நிலையம் மருந்தகக் கட்டிடம் மேற்கூரை மற்றும் மதிற்சுவர் ஆகியவை பழுது பார்க்க செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை நாகப்பட்டினம் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

9—

வேலம்பாளையம் ஆரம்பசுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 19513—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சித் தொகுதி கொடுமுடி ஒன்றியம் வேலம்பாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

வேலம்பாளையம் என்னும் கிராமம் கொடுமுடி பகுதியை சார்ந்தது அல்ல. எனினும் முக்குடி வேலம்பாளையம் பாசூரைச் சார்ந்தது ஆகும். இங்கு துணை சுகாதார நிலையம் உள்ளதால், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கத் தேவையில்லை.

10—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் 1992-ல் சேர்க்கப்பட்ட நோயாளிகள் விவரம்

வினா எண் 22675—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கால் 1992-ல் உள்-நோயாளிகளாக சேர்க்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) 1993-ல் உள்-நோயாளிகளாக சேர்க்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவ மனையில் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கில் சென்ற 1992-ஆம் ஆண்டில் உள்-நோயாளிகளாக சேர்க்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை : 2517.

(ஆ) 1993-ஆம் ஆண்டில் உள்-நோயாளியாக சேர்க்கப் பட்டவர்களின் எண்ணிக்கை : 3984.

11—

கீரனூரில் மருத்துவக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 25332—திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி கீரனூரில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இல்லை.

12—

கும்பகோணத்தில் உணவுப் பொருள் கலப்படம் செய்து தண்டனை தரப்பட்டுள்ள வழக்குகள் விவரம்

வினா எண் **25154**—திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகரத்தில் உணவு பொருள் கலப்படம் செய்த வழக்குகள் எத்தனை?

(ஆ) இதில் தண்டனை தரப்பட்டுள்ள வழக்குகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ): கடந்த மூன்று ஆண்டுகளில் கும்பகோணம் நகரில் உணவு கலப்பட சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உணவு மாதிரிகள் கலப்படம் செய்யப்பட்டதென கண்டறியப்பட்டவை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது போன்ற குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன-

ஆண்டு.	எடுக்கப்பட்ட உணவு மாதிரி எண்ணிக்கை.	கலப்படம் எனக் கண்டறியப்பட்டவை	நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவை.
1991	205	21	21
1992	54	11	11
1993	21	11	11

13—

சுகாதார ஆய்வாளர்களுக்கு உணவு தடுப்புச் சட்டத்தில் பயிற்சி அளித்தல்

வினா எண் 26343—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமத்தில் பணியாற்றும் சுகாதார ஆய்வாளர்களுக்கு உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தில் (Prevention of Food Adulteration Act) பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இச்செயற்குறிப்பு பரிசீலனையில் இருந்து மைய அரசு இசைவு தராததால் நிராகரிக்கப்பட்டு விட்டது.

14—

ஆயங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 35344—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில் ஒன்றியம், ஆயங்குடி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் எழுப்பப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் எழுப்பும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

15—

தளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 35760—திரு. மு. வெங்கடராம ரெட்டி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் தளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட போதுமான நிலம் கையகப்படுத்தப் படவில்லை. பொதுமக்கள் நன்கொடையான ரூ. **10,000**-மும் பெறப்படவில்லை. எனவே இங்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

16—

தமிழ்நாட்டில் மலேரியா ஜுரத்தை ஒழித்தல்

வினா எண் **38287—டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மலேரியா ஜுரத்தை முழுமையாக ஒழிக்க புதிதாக ஏதேனும் முறைகள் கையாளப்படுகிறதா?

(ஆ) பொதுவாகவே மலேரியா பாதிப்பு எண்ணிக்கை குறைந்துள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) ஆம். **1992**-ல் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை **15,16,333**-லிருந்து **1993**-ல் **1,48,057** ஆக குறைந்தது. (இது **1993** ஜூலை வரை கணக்குப்படி **74,627** ஆகவும் **1994** ஜூலை வரை **55,146** ஆகவும் குறைந்துள்ளது).

17—

பட்டுக்கோட்டை-ஏரிப்புறக்கரை வரை பேருந்து இயக்குதல்

வினா எண் **24362—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினம் வழியாக ஏரிப்புறக்கரை வரை மீண்டும் நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

அதிராம்பட்டினத்திலிருந்து ஏரிப்புறக்கரை வரை உள்ள 2 கி.மீ. தூரம் உள்ள சாலை மிகவும் குறுகலாகவும், அரித்தும், பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்ற நிலையில் உள்ளது. எனவே, இப்பகுதியில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும் பட்டுக்கோட்டையில் இருந்து அதிராம்பட்டினத்திற்கு போதிய அளவு பேருந்து வசதியுள்ளது.

18—

பேராவூரணி-பழனிக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் **24449**—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து பழனிக்கு ஒரு பேருந்து இயக்க 1994-95-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

பேராவூரணியிலிருந்து பழனிக்கு ஒரு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

19—

பட்டுக்கோட்டை-ஏரிப்புறக்கரை இடையே பேருந்து இயக்குதல்

வினா எண் **24461**—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் இருந்து அதிராம்பட்டினம் வழியாக ஏரிப்புறக்கரை வரை இயக்கப்பட்ட சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

அதிராம்பட்டினத்திலிருந்து ஏரிப்புறக்கரை வரை உள்ள 2 கி.மீ. தூரம் உள்ள சாலை மிகவும் குறுகலாகவும், மண் அரித்தும், பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்ற நிலையில் உள்ளது. எனவே, இப்பகுதியில் பேருந்து இயக்க இயலாது. மேலும் பட்டுக்கோட்டையிலிருந்து அதிராம்பட்டினத்திற்கு போதிய அளவு பேருந்து வசதியுள்ளது.

20—

அறந்தாங்கி-மேற்பனைக்காட்டிற்கு கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் **26987**-திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கியிலிருந்து மேற்பனைக்காட்டிற்கு மேலும் ஒரு கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசிடம் நடப்பாண்டில் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

தற்போது மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தில் பலமுனை வழித்தடத் திட்டத்தில் 2 பேருந்துகள் மூலம் 14 நடைகள் அறந்தாங்கியிலிருந்து மேற்பனைக்காடு வழியாக சென்று கொண்டிருக்கிறது. மேற்காணும் நடைகளில் பயணம் செய்யும் பயணிகளின் விகிதாச்சாரம் 63 சதவிகிதம் மட்டுமே உள்ளது. மேற்பனைக்காட்டிற்கும் மேற்பனைக்காடு புகை வண்டி நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 1.0 கி.மீ. ஆகும். அறந்தாங்கி-மேற்பனைக்காடு வழித்தடத்தில் கூடுதலாக நகரப் பேருந்து இயக்குமளவிற்கு பயணிகள் நெரிசல் கிடையாது. எனவே, அறந்தாங்கியிலிருந்து மேற்பனைக்காட்டிற்கு மேலும் ஒரு கூடுதல் நகரப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

21—

தென்காசி-கோவில்பட்டி இரவுநேரப் பேருந்து இயக்குதல்

வினா எண் **27003**—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலிருந்து புளியங்குடி சங்கரன்கோவில் வழியாகக் கோவில்பட்டிக்கு இரவு நேரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

தற்போது தென்காசியிலிருந்து புளியங்குடி சங்கரன் கோவில் வழியாக கோவில்பட்டிக்கு இரவு 20-30 மணிக்கு, ஒரு இரவு கடைசிப் பேருந்து உள்ளது. இப்பேருந்து சங்கரன் கோவிலில் 22-10 மணிக்கு புறப்பட்டு கோவில்பட்டி செல்கிறது. இப்பேருந்திலேயே பயணிகள் விகிதாச்சாரம் போதுமானதாக இல்லை. ஆகவே, இரவு நேரத்தில் தென்காசியிலிருந்து சங்கரன்கோவில் வழியாக கோவில்பட்டிக்கு புதிதாக பேருந்து இயக்க தேவை இல்லை எனக் கருதலாம்.

22—

வடக்கு அதம்மையிலிருந்து செல்லும் சாலையில் பேருந்து இயக்குதல்

வினா எண் 27266—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம் வடக்கு அதம்மையிலிருந்து செல்லும் சாலையில் நகரப் பேருந்து இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையிலிருந்து பாதிரங்கோட்டைக்கு அலிவலம், அதம்பை வடக்கு வழியாக சோழன் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்து 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கூடுதல் பேருந்தோ, கூடுதல் நடைகளோ இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

23—

சென்னைக்கு சொகுசு பேருந்து இயக்குதல்

வினா எண் 35624—டாக்டர் க. கோபால்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சென்னைக்கு சொகுசு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வழித்தடம் எண்.596 சென்னையிலிருந்து நன்னிலம் வழியாக நாகப்பட்டினத்திற்கு 9-10-1981 முதல் இயக்கப்பட்டது. இதனை பயன்படுத்திய பயணிகள் விகிதாச்சாரமும் மற்றும் ஈட்டிய வருவாயும் மிகவும் குறைவாக இருந்ததால் 12-5-1983 முதல் நிறுத்தப்பட்டு விட்டது. இதனை மீண்டும் இயக்குவதற்கு சாத்தியமில்லை.

24—

சத்தியமங்கலம் தொகுதி, வனத்துறை சாலைகளை தார்ச் சாலையாக அமைத்தல்

வினா எண் 36250—திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதியில் வனத்துறைக்கு சொந்தமான கடம்பூர்-மாக்கம்பாளையம் சாலை மற்றும் குன்றி சாலைகளை அரசு சிறப்புத் திட்டத்தில் எடுத்து தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

கடம்பூர் முதல் குன்றி வரை தரைப் பாலங்கள் பழுது பார்க்கப்பட்டு கப்பி போடும் வேலை முடிக்கப்பட்டுள்ளது. கடம்பூர்-மாக்கம்பாளையம் சாலையை பழுது பார்க்கும் பணி நிதி நிலை பற்றாக் குறையினால் தற்போது எடுத்துக் கொள்ள இயலவில்லை.

25—

வேளச்சேரி-அம்பத்தூருக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 38210—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாவட்டம், வேளச்சேரியிலிருந்து அம்பத்தூருக்கு இயக்கப்பட்ட 70 ஆர்.ஆர். பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்தை மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பல்லவன் போக்குவரத்துக் கழகம் வேளச்சேரியிலிருந்து அம்பத்தூருக்கு இயக்கப்படும் 70 ஆர்.ஆர். பேருந்து தடத்தை நிறுத்தவில்லை. பல்லவன் போக்குவரத்துக் கழகம்-பல்லவன் போக்குவரத்துக் கழகம், டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம் என இரண்டாக (18-1-1994 முதல்) பிரிக்கப்பட்ட பிறகு பல்லவன் போக்குவரத்துக் கழகம் மேற்படி தடத்தில் இரண்டு பேருந்துகளையும் டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம் இரண்டு பேருந்துகளையும் ஆக மொத்தம் 4 பேருந்துகள் வேளச்சேரியிலிருந்து அம்பத்தூர் பகுதிக்கு இயக்கி வருகிறது.

26—

கரையிருப்புக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண். 39598—*திரு. டி. வேலையா:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, கரையிருப்புக்குப் போதுமான அளவு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருநெல்வேலி மதுரை பிரதான சாலையிலிருந்து பிரிந்து சுமார்1.0 கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ள கரையிருப்பு என்ற சிறிய கிராமத்திற்குச் செல்லும் சாலை மிகவும் பழுது அடைந்து இருப்பினும், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக சிற்றுந்து மூலம் தினசரி 6 சுற்றுகள் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. ஆயினும், மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று காலை வேளையில் கூடுதலாக இரண்டு சுற்றுகள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

27—

ஊருடையார்க் குடியிருப்புக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 39599—திரு. டி. வேலையா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, தச்சநல்லூர் பேரூராட்சியிலுள்ள ஊருடையார்க்குடியிருப்பு வழியாக சிறு நகரப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

ஊருடையார் குடியிருப்பு என்ற இடம் தச்சநல்லூர் பிரதான சாலையில் இருந்து சுமார் 0.6 கி.மீ. தூரத்திலும், திருநெல்வேலி ஹைரோட்டில் இருந்து சுமார் 1.2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. நெல்லை ஹைரோட்டை இக்கிராமத்தோடு இணைக்கும் சாலையிலும் மிகவும் குறுகலாகவும், பல்வேறு சிறு வாகனங்கள் இயங்கி வரும் போக்குவரத்து நெரிசல் மிக்கதாகவும் இருக்கின்றபடியால் இச்சாலை வழியாக பேருந்து இயக்க சாத்தியமில்லை. இக்கிராம மக்கள் மிக அருகாமையில் உள்ள தச்சநல்லூருக்கு வந்துவிட்டால் அங்கே

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இயக்கப்பட்டு வரும் பேருந்துகளைப் பயன்படுத்த போதுமான வாய்ப்புகள் உள்ளன.

28—

திருநெல்வேலி தொகுதியில் நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்குதல்

வினா எண் 39600—திரு. டி. வேலையா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, துலுக்கர்குளம், சிறுக்கன்குறிச்சி பகுதிகளுக்கு இயக்கி நிறுத்தப்பட்ட 11 -டி.3- எப் தடம் நகரப் பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருநெல்வேலி தொகுதி, துலுக்கர்குளம், சிறுக்கன்குறிச்சி பகுதியில் தடம் எண் 11 டி, 3 எப் ஆகிய நகரப் பேருந்துகள் தற்போது முறையாக இயக்கப்பட்டு வருகின்றன. இதில் துலுக்கர்குளம் கிராமத்தை தொட்டுச் சென்றபடி இயக்கப்பட்ட சுற்றுக்கள் மேற்படி ஊரினுள் சென்று திரும்புவதற்கு இடவசதி இல்லாத காரணத்தினால் நிறுத்தப்பட்டுள்ளன. துலுக்கர்குளம் கிராமத்தில் பேருந்து சென்று திரும்புவதற்கு போதுமான இடவசதி ஏற்படுத்திக் கொடுத்த பின்னர் நிறுத்தப்பட்ட சுற்றுக்களை மீண்டும் இயக்க ஆவன செய்யப்படும். சிறுக்கன்குறிச்சி கிராமத்திற்கு இயக்கப்பட்ட சுற்றுக்கள் ஏதும் நிறுத்தப்படாமல் முறையாக இப்போதும் இயக்கப்படுகின்றன.

29—

கண்டியப்பேரிக்கு கூடுதல் நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 39603—திரு. டி. வேலையா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, கண்டியப்பேரிக்குக் கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

கண்டியப்பேரி கிராமத்தை தொட்டுச் செல்லுமாறு (Loop Service) ஏற்கனவே ஒரு சிற்றுந்து மூலமாக 2 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வந்தன. இக்கிராமத்திற்குச் செல்லும் சாலையானது மிகவும் பழுதடைந்து சிற்றுந்து இயக்க இயலாத நிலையிலிருப்பதால் இவ்வூருக்கு பேருந்து இயக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது காலை மாலை வேளைகளில் தினசரி 4 சுற்றுக்கள் சிற்றுந்து மூலமாக பேருந்து வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

30—

திருநெல்வேலியில் காலை மாலை சிறு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் **39604**—*திரு. டி. வேலையா:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலி சந்திப்பு நகர்மன்ற பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் பயன்பெறும் வகையில் காலை, மாலை சிறு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருநெல்வேலி சந்திப்பில் உள்ள மீனாட்சிபுரம் என்ற இடத்தில் அமைந்துள்ள இந்த நகர்மன்ற மகளிர் மேல்நிலைப் பள்ளி வழியாக கைவசம் உள்ள ஒரே ஒரு சிற்றுந்து மூலமாக பள்ளி கல்லூரி நேரத்தை அனுசரித்து, திருநெல்வேலி டவுன் குறுக்குத்துறை, சி.என்.கிராமம், மீனாட்சிபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள மாணவிகள், பயன்பெறும் வகையில் காலையில் பள்ளி கல்லூரி செல்வதற்கும், மாலையில் வீடு திரும்புவதற்கும் ஏற்ப தற்போது இயக்கப்பட்டு வருகிறது. எனவே, கூடுதல் சுற்றுக்கள் இயக்க வாய்ப்பில்லை எனக் கருதலாம்.

31—

மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் ஈட்டிய இலாப விவரம்

வினா எண் 39687—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் இலாபத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், 1992-93, 1993-94 இல் ஈட்டிய இலாபம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

32—

வாணியம்பாடியிலிருந்து சில கிராமங்களுக்கு நகரப்பேருந்து இயக்குதல்

வினா எண் 40021—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, விள்ளிப்பட்டு, அலகந்தாபுரம், அம்பலூர் ஆகிய கிராமங்களுக்கு வாணியம்பாடியிலிருந்து நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், விள்ளிப்பட்டு, அலகந்தாபுரம் அம்பலூர் ஆகிய கிராமங்களுக்கு வாணியம்பாடியிலிருந்து பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அலகந்தாபுரம் தடத்தில் உள்ள பாலம்

உடைந்துள்ளதால், தற்போது பேருந்து இயக்கப்படாமல் உள்ளது. சாலையிலுள்ள பாலம் சரி செய்தவுடன் பேருந்து இயக்கப்படும்.

33—

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் இலாபத்தில் இயங்குதல்

வினா எண் 40311—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், நட்டத்தில் இயங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் ஆய்வு செய்யப்பட்டதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் தற்போது இலாபத்தில் இயங்குகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

34—

திருப்பத்தூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பணிமனையை விரிவுபடுத்தல்

வினா எண் 40316—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருப்பத்தூரில் தற்போது உள்ள பணிமனையில் ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூறு ஆயிரம் செலவில் பராமரிப்புக்கூடம் தற்போதுதான்

விரிவுபடுத்திக் கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது. மேலும், ஆம்பூரில் இப்போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஒரு புதிய பணிமனை விரைவில் அமைய இருக்கிறது. திருப்பத்தூர் பணினையிலிருந்து சில பேருந்துகள் ஆம்பூரில் அமைய உள்ள பணிமனைக்கு மாற்றம் செய்ய வேண்டிய நிலையுள்ளது. ஆகவே, மேற்குறித்த காரணங்களால் திருப்பத்தூரில் உள்ள இக்கழகத்தின் பணிமனையை மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவை இல்லை.

35—

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு குடியிருப்பு கட்டுதல்

வினா எண் 40328—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு குடியிருப்பு கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

திருப்பத்தூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு கட்ட சங்கம் பதிவு செய்யப்பட்டு அதற்கான சான்றிதழ் பெறப்பட்ட பின்பு, இச்சங்க உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டப்படுவதற்கு உரிய இடம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும். பின்னர் அவர்கள் விரும்புகிற இடத்திலேயே வீடுகள் கட்டித்தர உரிய நடவடிக்கைகளை சங்கம் மேற்கொள்ளும்.

36—

திருவட்டார் தொகுதியிலுள்ள சானல்களில் தூர் எடுத்தல்

வினா எண் 19305—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் அனைத்து சானல்களிலும் தூர் வாராததினால் தண்ணீர் கடைவரம்பு நிலங்களுக்கு செல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சானல்களில் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருவட்டார் தொகுதியிலுள்ள அனைத்து சானல்களிலும் அவசியம் ஏற்படின் நிதி நிலைக்கேற்ப அவ்வப்போது தூர் வாரப்பட்டு வருகிறது. மேலும் கடந்த வருடம் கடைவரம்பு நிலங்களுக்கு போதிய தண்ணீர் வழங்கப்பட்டு நல்ல முறையில் பயிர் சாகுபடியாகியுள்ளது.

37—

குண்டாங்கல்காடு அருந்ததியர் தெருவிற்கு மின் இணைப்பு அளித்தல்

வினா எண் 21785—**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, குண்டாங்கல்காடு அருந்ததியர் தெருவிற்கு மின் இணைப்பு அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சங்ககிரி தொகுதி, குண்டாங்கல்காடு அருந்ததியர் தெருவில் பதிமூன்று 4 அடி 40 வாட் குழல் விளக்குகள் பொருத்தப்பட்டு 19-11-1993 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டது.

38—

புவனகிரி பயணியர் விடுதி-சேத்தியாத்தோப்பு குறுக்கு ரோடு வரை நெடுஞ்சாலையை சீர் செய்தல்

வினா எண் 22085—**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பயணியர் விடுதியிலிருந்து சேத்தியாப்தோப்பு குறுக்கு ரோடு வரை பழுதடைந்துள்ள நெடுஞ்சாலையை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) விருத்தாசலம்-பரங்கிப்பேட்டை சாலை கி.மீ. 26/8-28/0, கி.மீ.30/0,30/8, கி.மீ. 31/2-32/0, கி.மீ. 32/3-33/0, கி.மீ. 33/2-34/8, கி.மீ. 35/2-36/0 ஆகிய சாலைப் பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. கி.மீ. 28/2-28/6 மற்றும் கி.மீ. 29/0-30/0 வரை பணிகள் நடைபெற்று வருகின்றது. விரைவில் முடிக்கப்படும். மேலும் இச்சாலை கி.மீ. 25/6-26/8, கி.மீ. 28/0-28/2, கி.மீ. 28/6-29/0, 30/8-31/2, கி.மீ. 32/0-32/2, கி.மீ. 33/0-33/2, கி.மீ. 34/8-35/4 ஆகிய மொத்தம் 3.00 கி.மீ. நீள சாலைப் பகுதியில் ஒரு அடுக்கு ஜல்லி பரத்தல் செய்து தார் பரத்தும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு சுமார் ரூ. 16.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி நடப்பு நிதியாண்டில் நிதி நிலையைப் பொறுத்து எடுத்துச் செய்ய பரிசீலிக்கப்படும்.

39—

திருப்பத்தூர் நகரில் தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 22575—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகரில், ஜின்னா சாலை (கடைவீதி சாலை), மெயின் சாலை ஆகியவற்றிற்கு தார் போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளுள் திருப்பத்தூர் சிங்காரப்பேட்டை சாலை (கி.மீ. 0/0-1/2) கனரக வாகன போக்குவரத்து அதிகரித்ததால் மிகவும் பழுதடைந்து உள்ளது. எனவே, இச்சாலையை புதுப்பிக்க 1993-94-ஆம் ஆண்டில் திட்டம் சாரா பணியின் கீழ்

முன்னுரிமை அளித்து ரூ. 7.00 லட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இச்சாலையில் 0/0-1/0 வரை அகலப்படுத்தும் பகுதியில் கப்பி பரத்தும் பணியும் பியுஎஸ்ஜி, (BUSG) பணியும் முடிக்கப்பட்டுள்ளது. கி.மீ. 1/0-1/2 வரை அகலப்படுத்தும் பகுதியில் கப்பி பரத்தும் பணியும் தார் பரத்தல் மற்றும் சீல்கேட் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கி.மீ. 0/0-1/2 வரை தார் பரத்தும் பணிகள் விரைவில் முடிக்கப்படும். பெரிய மாவட்ட சாலையான தர்மபுரி, திருப்பத்தூர், வாணியம்பாடி சாலைப் பகுதியும் போக்குவரத்து மிகுதியினாலும், மழையினாலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனை பழுது பார்க்க ரூ. 8.00 இலட்சம் தேவைப்படும். மேற்படி சாலையை புதுப்பிக்கும் பணியை 1994-95-ல் நிதி ஆதாரங்களை பொறுத்து செயல்படுத்த வழி வகைகள் பரிசீலனை செய்யப்படும்.

40—

திருப்பத்தூர் தொகுதியில் தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 23016—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் ஒன்றியம், சின்ன சமுத்திரம் பஞ்சாயத்து, பிச்சானூர் கிராமத்தில் செல்லும் சாலையை தார்ச் சாலையாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திருப்பத்தூர் ஒன்றியம், சின்னசமுத்திரம் பஞ்சாயத்து, பிச்சானூர் கிராமத்திற்கு செல்லும் சாலையானது திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பஞ்சாயத்து சாலையாகும். இச்சாலையை தார்ச் சாலையாக மாற்ற திட்டம் ஏதும் இல்லை.

41—

திருப்பத்தூர் தொகுதியில் பாலங்கள் கட்டுதல்

வினா எண் 23082—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி சிங்காரப்பேட்டை சாலை, அன்னேரி கூட்டுரோட்டு அருகிலுள்ள குறுகிய பாலங்களை இடித்து விட்டு புதிதாக பாலங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலங்கள், நெடுஞ்சாலை துறையால் பராமரிக்கப்பட்டு வரும் மாவட்ட பெருஞ்சாலையான திருப்பத்தூர் சிங்காரப்பேட்டை சாலை கி.மீ. 3-8, 3-10, (i) (ii) (iii) இல் உள்ளதாகும். இச்சாலையானது வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தையும் தர்மபுரி மாவட்டத்தையும் இணைக்கின்ற சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 3-8-ல் உள்ள பாலம் 0.90 மீட்டர் அகலம் கொண்ட 7 கண்களும், கி.மீ. 3-10 (i) (ii), (iii)-ல் உள்ள பாலங்கள் முறையே 1.35 மீட்டர் அகலம் கொண்ட 4, 9 மற்றும் 4 கண்களும் கொண்ட கருங்கல் மூடுபாறை பாலங்களாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட மூடுபாறை போக்குவரத்து மிகுதியாலும், கனரக வாகனங்களின் வேகத்தினையும், எடையையும் தாங்க முடியாமல் உடைந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தற்போது தற்காலிகமாக சரி செய்யப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது. மேற்கூறிய பாலங்கள் குறுகியதாகவும், மூடுபாறைகள் உடைந்தும் பலவீனமாக காணப்படுவதாலும், இப்பாலங்களை திரும்பக் கட்ட வேண்டியது அவசியமாகும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாலங்களை உயர்மட்ட பாலங்களாக அமைக்க• வேண்டும். இதற்கு முறையே ரூ. 10.00 இலட்சம் மற்றும் ரூ. 80.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 90.00 இலட்சம் தேவைப்படும். மேற்குறிப்பிட்டுள்ள பாலங்கள் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை. ஆண்டுதோறும் திட்டப் பணிகளுக்கு மிக குறைவான அளவில் நிதி ஒதுக்கீடு உள்ளதால் இப்பாலம் பணிகளை அண்மை ஆண்டுகளில் எடுத்து செயலாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

காட்டுமன்னார் கோயில் சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 23637—*திரு. என். ஆர். ராஜேந்திரன்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம்-திருச்சி வழி காட்டுமன்னார் கோயில் சாலை மிக குறுகலாக உள்ளதை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பொருளில் கண்டுள்ள குறுகலான சாலையில் 1.06 கி.மீ. நீளம் அகலப்படுத்தும் பணி தற்சமயம் நடைபெற்று வருகிறது. மேலும் இச்சாலையில் 22.35 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியை இருவழித் தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யவும் மீதமுள்ள 8.85 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியின் ஓடுதளத்தை மேம்பாடு செய்யவும் தோராயமாக ரூ.180 இலட்சங்கள் தேவைப்படும். திட்டப் பணிகளுக்கு மிகவும் குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு உள்ளதால் பெருந்தொகை தேவைப்படும். இப்பணியை திட்டப் பணிகளின் கீழ் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

43—

பூங்கொல்லை மேடு சாலையைப் பராமரித்தல்

வினா எண் 23948—திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அத்திமூர்-பெரியகரம் போளூர் சாலை வழி பூங்கொல்லை மேடு சாலையை கிராமச் சாலைகள் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்.?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் மேம்பாடு செய்யக் கோரியுள்ள சாலையானது முன்னுரிமை மற்றும் நிதி நிலை அடிப்படையில் திட்டப்பட்டியலில் சேர்க்கப்பட்டு, 1994-95-ம் ஆண்டில் மேம்பாடு செய்வதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி) அவர்கள் தெரிவித்துள்ளார். இது குறித்து தலைமைப் பொறியாளர் அவர்களின் பரிந்துரை கிடைத்த பின்னர் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

44—

வாய்க்கால் மற்றும் ஆறுகளில் தூர் வாருதல்

வினா எண் 24336—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பாசனத்திற்குரிய வாய்க்கால்களில் மற்றும் ஆறுகளில், அணையிலிருந்து தண்ணீர் விடுவதற்கு 15 தினங்களுக்கு முன்பே தூர்வாரும் பணி குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

45—

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் கூடுதல் மின் அழுத்தம் வழங்குதல்

வினா எண் 2451—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை தெருவிளக்குகளுக்கு 1994-95-ல் கூடுதல் மின் அழுத்தம் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரை தெருவிளக்குகளுக்கு தற்பொழுது வழங்கப்படும் மின்னழுத்தம் அனுமதிக்கப்பட்டுள்ள வரம்புக்குள் உள்ளது. எனவே மேலும் கூடுதல் மின்னழுத்தம் வழங்கத் தேவை எழவில்லை.

46—

செங்கம் தொகுதியில் தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 25122—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம் காஞ்சி அரிதாரி மங்களம் கூட்டுச் சாலையில் இருந்து தாமரைப்பாக்கம் கிராமம் வரை கிராமிய நெடுஞ்சாலைத் துறை சார்பில் தார் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் வரும் நிதியாண்டில் (1994-95) இத்திட்டம் நிறைவேற்றப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாடு செய்யக் கோரியுள்ள சாலையானது, திருவண்ணாமலை காஞ்சி சாலையிலிருந்து அரிதாரிமங்கலம் செல்லும் சாலையில் கி.மீ. 1-0-ல் பிரிந்து தாமரைப்பாக்கம் செல்லும் சாலையாகும். இதன் மொத்த நீளம் 3.00 கி.மீ. ஆகும். இச்சாலை புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கிராவல் சாலை. இச்சாலையினால் பயனடையும் தாமரைப்பாக்கம் கிராமத்தில் மக்கள் தொகை 1981 ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 800. அதில் ஆதி திராவிடர் 35 சதவீதம். பயனடையும் கிராம மக்கள் தொகை 1000-க்கும் குறைவாக இருப்பதால் கிராமச் சாலைகள் திட்டத்திலும் ஆதி திராவிடர் 50 சதவிகிதத்துக்கு குறைவாக இருப்பதால் சிறப்பு உறுப்புத் திட்டத்திலும், (Special Componant Plan) பேருந்துகள் ஏதும் செல்லாததால் பேருந்து சாலை மேம்பாடு திட்டத்திலும் எடுத்து மேம்பாடு செய்வதற்கு வழிவகை இல்லை.

47—

கொடுமுடி-ஈரோடு வடக்குப் புதுப்பாளையம் சாலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 27297—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடுமுடி-ஈரோடு-வடக்குப் புதுப்பாளையம் ஆகிய சாலைகளின் ஓரத்தில் குப்பைகளைக் கொட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

கொடுமுடி-ஈரோடு வடக்கு புதுப்பாளையம் சாலையில் இருந்த ஆக்கிரமிப்புகள் மற்றும் குப்பைகள் முற்றிலும் அகற்றப்பட்டுவிட்டன.

48—

ஊஞ்சலூர் கிராமத்தில் குடிசை வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குதல்

வினா எண் 27299—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊஞ்சலூர் கிராமத்தில் குடிசை வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

ஊஞ்சலூர் ஒரு பேரூராட்சியாகும். தற்பொழுது நடைமுறையிலுள்ள அரசு ஆணைப்படி கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ள குடிசை வீடுகள் மட்டுமே "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" என்ற திட்டத்தின் கீழ் இலவச மின்சாரம் பெற தகுதி பெறுகின்றன. எனவே ஊஞ்சலூர் பேரூராட்சியிலுள்ள குடிசை வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்க இயலாது.

49—

அண்டக்குளம் அணைக்கட்டில் ஷட்டர்களை மாற்றியமைத்தல்

வினா எண் 28972—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி அண்டக்குளம் அணைக்கட்டில் உள்ள ஷட்டர்களை மாற்றி அணையை புதியதாக மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

அண்டக்குளம் அணைக்கட்டில் உள்ள பழுதடைந்த ஷட்டர்களை சரி செய்ய சிறப்பு மராமத்து தலைப்பின் கீழ் மதிப்பீடு ரூ. 71,000-க்கு தயார் செய்யப்பட்டு பழுதடைந்த ஷட்டர்கள் பழுது நீக்கப்பட்டு உபயோகப்படும் நிலையில் கொண்டு வரப்பட்டு தற்போது உபயோகிக்கும் நிலையில் உள்ளன.

50—

வெட்டன் வீடுதியில் கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

வினா எண் **30195**—திரு. எஸ். *சண்முகநாதன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி வெட்டன்விடுதி பகுதியை சார்ந்த மின்சார மோட்டார்கள் பகல் நேரங்களில் மின்பளு பற்றாக்குறையால் ஓடாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஆலங்குடி தொகுதி வெட்டன் விடுதி பகுதியில் புதியதாக எட்டு மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு மின்மாற்றி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் இங்கு இயக்கத்திலிருந்த 14 மின் மாற்றிகளுக்கு பதிலாக, கூடுதல் திறனுள்ள மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு உள்ளன. ஆகவே வெட்டன் விடுதி பகுதியில் மின் மாற்றிகளின் கொள்திறன் மின் சுமைகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு போதுமானதாக உள்ளது.

51—

எய்யலூர் பொதுப்பணித் துறை ஓய்வு விடுதியைச் செப்பனிடுதல்

வினா எண் **33052**—திரு. என். ஆர். *ராஜேந்திரன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தொகுதி எய்யலூர் கிராமத்திலுள்ள பொதுப்பணித் துறை ஓய்வு விடுதியை செப்பனிடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

காட்டுமன்னார்கோயில் தொகுதி, எய்யலூர் கிராமத்திலுள்ள பொதுப்பணித் துறை ஓய்வு விடுதியை 1994-95 ஆம் ஆண்டு பராமரிப்பு தலைப்பின்கீழ் ரூ. 50,000 நிதி ஒதுக்கீடு செய்து மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு பொதுப்பணித் துறை சிதம்பரம் கோட்டப் பொறுப்பிலேயே பணியை எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

52—

வேப்ப எண்ணெய் பிழியும் அலகிற்கு மின்சாரம் வழங்குதல்

வினா எண் 33336—*டாக்டர் பெ. வீரபாண்டியன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, தோக்கவாடியில் கதர் கிராமத்துறை சார்பில் இயங்கும் வேப்ப எண்ணெய் பிழியும் அலகிற்கு மின்சாரம் தொடர்ந்து கிடைக்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தொடர்ந்து மின்சாரம் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செங்கம் தொகுதி, தோக்கவாடியில் கதர் கிராமத் துறை சார்பில் இயங்கும் வேப்ப எண்ணெய் பிழியும் அலகிற்கு தற்சமயம் செங்கம் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து, சாத்தனூர் 11 கி.வோ. ஊரக மின்னூட்டி மூலம் தோக்கவாடி SSIV மின் மாற்றியிலிருந்து தாழ்வழுத்த மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்த அலகிற்கு 24 மணி நேரமும் தொடர்ந்து மும்முனை மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்றால், தோக்கவாடி SSIV மின் மாற்றிக்கு 11 கி.வோ. நகர்ப்புற மின்னூட்டி மூலம் மின்சாரம் வழங்கப்பட வேண்டும். இப்பணிக்கு சுமார் ரூ. 25,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள வாரிய விதிகளின்படி, இதற்கான முழுச் செலவினையும் நுகர்வோரான கதர் கிராமத் தொழில்கள் வாரியம் செலுத்த வேண்டும். இவ்வாறு முழுத் தொகை செலுத்தப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும். இதனை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், துணை இயக்குநர் கதர் கிராமத் துறை வாரியத்திற்கும், திருவண்ணாமலை-சம்புவராயர் மின் பகிர்மான வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். மதிப்பீட்டுத் தொகையை கதர் கிராமத் துறை செலுத்தியதும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு மும்முனை மின்சாரம் வழங்கப்படும்.

53—

காரப்பள்ளம்-கோழிப் பாளையம் பழுதடைந்த சாலையை சீர்செய்தல்

வினா எண் 35366—திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாளவாடி-கர்நாடகச் சாலையில் காரப்பள்ளம் கோழிப் பாளையம் வரையுள்ள பழுதடைந்த சாலையை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள மாநில நெடுஞ்சாலையான கோவை-சத்தி-சாம்ராஜ் நகர் சாலையின் தொடர்ச்சியாக கர்நாடக மாநில எல்லையில் அமைந்த கர்நாடக மாநில நெடுஞ்சாலையாகும். தமிழ்நாடு எல்லையில் இச்சாலையின் கி.மீ. 107/8-ல் காரப்பள்ளம் உள்ளது. இதிலிருந்து கோழிப் பள்ளம் வரை அமைந்த மாநில சாலைப் பகுதி முழுவதும் கர்நாடக மாநில நெடுஞ்சாலையாகும். கர்நாடக மாநில அரசால் இப்பகுதி சாலை சீர் செய்யப்படவேண்டும். எனவே காரப்பள்ளம், கோழிப் பாளையம் பகுதி தமிழ்நாடு நெடுஞ்சாலையை இத்துறையின் மூலம் மேம்பாடு செய்ய இயலாது.

54—

தச்ச நல்லூரில் மின் கட்டண வசூல் மையம் அமைத்தல்

வினா எண் 35832—திரு. டி. வேலையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, தச்சநல்லூரில் மின் கட்டண வசூல் மையம் தொடர்ந்து செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

தச்சநல்லூர் இளநிலை மின்பொறியாளர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்ததால், தற்சமயம் சத்திர புதுக்குளத்தில் புதியதாக கட்டியுள்ள மின்வாரியக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு அங்கு இயங்கி வருகிறது. மேலும் பொதுமக்களுக்கு உதவ ``Fuse off call" பிரிவு ஒன்று தச்சநல்லூர் பஞ்சாயத்து அலுவலகத்தில் இயங்கி வருகிறது. தற்போது சத்திர புதுக்குளத்தில் இயங்கி வரும் இளநிலை மின் பொறியாளர் அலுவலகம் சுமார் 3 கி.மீ. தூரத்திற்குட்பட்டிருப்பதால், புதிய வசூல் மையம் தச்சநல்லூரில் அமைக்க மின்வாரிய விதிமுறைப்படி சாத்தியமில்லை.

55—

பெருநகர வளர்ச்சிக்குழுக்கள் அமைத்தல்

வினா எண் 34524—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருப்பது போல் பெருநகர வளர்ச்சிக் குழு தமிழ்நாட்டில் முக்கிய மாநகரங்களில் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்போது, எங்கெங்கு அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : சென்னையில் இருப்பதுபோல் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களில் அமைப்பதற்கான செயற் குறிப்பு அரசால் பரிசீலிக்கப்பட்டு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி நகரங்களில் நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம் (Urban Development Authority) அமைக்க கொள்கை அளவில் முடிவு

செய்யப்பட்டுள்ளது. இதற்கான அரசின் ஆணை விரைவில் வெளியிடப்படும்.

56—

கோவை மாநகராட்சி ஹோசிமின் நகரில் அடுக்குமாடி வீடுகள் கட்டுதல்

வினா எண் **38269**—*திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோவை மாநகராட்சி, சிவானந்தா காலனிக்கு அருகில் இந்திய உணவுக் கழகத்திற்கு சொந்தமான "ஹோசிமின் நகர்" என்ற பகுதியை அரசே ஏற்றுக் கொண்டு அங்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

கோவை நகர், சங்கனூர்-கிராமம், புல எண்கள் டி.எஸ்.எண்.48/3ஏ 3பி-ஏ, 47/1 மற்றும் 2-ல் 418 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் "ஹோசிமின் நகர்" குடிசைப்பகுதி அமைந்துள்ளது. இக்குடிசைப்பகுதி அமைந்துள்ள நிலம் மைய அரசு நிறுவனமான இந்திய உணவுக் கழகத்திற்கு (Food Corporation of India) சொந்தமானதாகும். இக்குடிசைப்பகுதியினை தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேம்படுத்த, இந்நிலத்தை மாற்றித் தர தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் உணவுக் கழகத்தைக் கேட்டுக்கொண்டது. இந்நிலத்தினை மாற்றித்தர, இந்நிலத்திற்கு நிகரான மாற்று நிலம் அளிக்குமாறு மைய அரசு தெரிவித்துள்ளது. இந்திய உணவுக் கழகத்திற்கு மாற்று நிலம் வழங்க, தகுந்த நிலம் ஒதுக்கீடு செய்யுமாறு கோவை மாவட்ட ஆட்சியரை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது. மாற்று நிலம், கோவை மாவட்ட ஆட்சியாளரால் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்திய உணவுக் கழகத்திற்கு மாற்றப்பட்டபின் 'ஹோசிமின் நகர்' குடிசைப்பகுதி, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டு, குத்தகை மற்றும் விற்பனைப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

57—

சங்ககிரி பேரூராட்சியில் குடிசைமாற்று வாரியம் அடிப்படை வசதி அளித்தல்

வினா எண் 40011—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி பேரூராட்சிக்கு உட்பட்ட கோட்டை ஆதிதிராவிடர் தெருவுக்கு குடிசை மாற்று வாரியத்தின் கீழ் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சங்ககிரி பேரூராட்சி, கோட்டைத்தெரு குடிசைப் பகுதியில் உள்ள 230 குடும்பங்களுக்கு, கருங்கற்களாலான பாதை, 'யு' வடிகால்வாய், மழைநீர்வடிகால், கான்கிரீட் பலகைகளாலான நடைபாதை அமைத்தல், ஆழ்குழாய்கிணறு தடுப்புச்சுவர், தெருவிளக்குகள் மற்றும் பள்ளமான பகுதிகளை மண்ணிட்டு நிரப்புதல் போன்ற பணிகள் ரூ.3.43 இலட்சம் செலவில் செய்ய, திட்டமிடப்பட்டு, இதற்கான பணிகள் அக்டோபர் 1994 முதல் துவங்கப்பட்டுள்ளன. இப் பணிகள் மூன்று மாதங்களுக்குள் முடிக்கப்படும்.

58—

தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்டுதல்

வினா எண் 24241—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பார—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்புள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், தலைவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்புள்ள புறம்போக்கு நிலத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க சேலம் விற்பனைக்குழு செயலாளர் பராதீனம் கோரிக்கைக்கு, சேலம் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் புலத் தணிக்கை செய்யப்பட்டதில் பிரஸ்தாப நிலம் அரசு உபயோகத்திற்கு தேவைப்படும் என்பதால் இந்த நிலத்தை பராதீனம் செய்ய இயலாது எனத் தெரிவித்துள்ளார். எனவே தலைவாசல் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 5 ஏக்கர் நிலம் தேவியக்குறிச்சி கிராமத்தில் ஆர்ஜிதம் செய்ய சேலம் விற்பனைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

59—

தோட்டக்கலைத் துறையின் மூலம் பழத்தோட்டம் அமைத்தல்

வினா எண் 36149—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பச்சை மலைப் பகுதியில் தோட்டக்கலைத்துறை மூலமாக மா, பலா, கொய்யா போன்ற பழக்கன்றுகள் காலம் தாழ்த்தி வெயில் காலங்களில் தரப்படுவதைத் தவிர்த்து மழைக் காலங்களில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

ஆம்.

தமிழ்நாட்டில் தோட்டக்கலைத் துறையின் மூலம் ஊரகப் பகுதியில் ஊட்டமிகு பழத் தோட்டம் அமைக்கும் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் (1993-94) ரூ. 29.923 இலட்சம் செலவிடப்பட்டது. இதனால் 59,846 விவசாயக் குடும்பங்கள் பயன் பெற்றுள்ளனர்.

மேற்படி திட்டத்தின் மூலம் மா, பலா, கொய்யா, சப்போட்டா, பப்பாளி போன்ற பழக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன. மேற்படி

1995 மார்ச் 14]

திட்டத்திற்கான அரசாணை எண் 315, வேளாண்மைத் துறை (தோ.க.1), நாள் 7-6-1993 மற்றும் அரசாணை எண் 7, வேளாண்மைத் துறை (தோ.க.1), நாள் 4-1-1994-ல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நடப்பு நிதியாண்டில் (1994-95-ல்) மழைக் காலத்தில் மேற்படி திட்டத்தை செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் இத்துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

60—

கரும்பு ஆலைகள், கரும்பு வெட்டும் உத்தரவு வழங்குதல்

வினா எண் 37801—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு ஆலைகளுக்கு கரும்பை பதிவு செய்யும் விவசாயிகளுக்கும் காலம் கடத்தாமல் 12 மாதம் ஆனவுடன் கரும்பு வெட்டும் உத்தரவை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) 12 மாதங்கள் கடந்து விட்டால் அரசு விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க ஏற்பாடு செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு பதிவு செய்யும் விவசாயிகளுக்கு அவர்களது பதிவு முன்னுரிமையின் அடிப்படையிலும், கரும்பு முதிர்ச்சியின் அடிப்படையிலும் வெட்டு உத்தரவு வழங்கப்படுகிறது.

(ஆ) ஏதாவது எதிர்பாராத சந்தர்ப்பங்களில் அதாவது மழை, வெள்ளம், விழாக்காலம், ஆலையின் இயந்திரம் பழுதுபடுதல், மற்றும் லாரி டிராக்டர் தொழிலாளர் "ஸ்டிரைக்" சம்பந்தமாக ஆலை இயக்கத்தில் தடை ஏற்படும் காலங்களில் மட்டுமே கரும்பை வெட்டுவதில் சிறிது காலதாமதம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இதனை அந்தந்த நிலைமைக்கேற்ப ஆலையின் நிர்வாகம் மாற்று வழி வகை செய்து விவசாயிகளின் பதிவுக் கரும்பை வெட்டி, தேவைப்படின் இதர ஆலைகளுக்கும் அனுப்பி விவசாயிகளுக்கு பாதகமில்லாமல் பார்த்துக் கொள்கிறது. இதில் நஷ்ட ஈடு போன்றவற்றிற்கு வாய்ப்பில்லை.

61—

பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் விவசாய துணைக்கிடங்கு அமைத்தல்

வினா எண் 38422—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், தில்லை விடங்கன் கிராமத்தில் விவசாய துணைக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

62—

மானிய விலையில் ஜே. ஜே. நெல்விதைகளைக் கூடுதலாக வழங்குதல்

வினா எண் 38493—டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு ஒன்றியத்திலும் மானிய விலையில் ஜே. ஜே. நெல் விதைகளைக் கூடுதலாக வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

இல்லை.

63—

தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு மலர்கள் ஏற்றுமதி விவரம்

வினா எண் 38696—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு மலர்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஆம், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மல்லிகை, முல்லை, ஜாதிமல்லி, ரோஜா, கனகாம்புரம், சம்பங்கி மற்றும் சாமந்தி மலர்கள் பம்பாய், பெங்களூர், சென்னை விமான நிலையங்கள் வழியாக வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டில் நிலவும் மலர்ச்சாகுபடிக்கு உகந்த தட்பவெட்ப நிலையும், அண்மைக்காலத்தில் ஏற்பட்ட தொழில் நுட்ப முன்னேற்றமும் ஆர்கிட் மலர்கள், ரோஜா, ஆந்தூரியம், கிளாடியோலஸ், கார்னேசன் மற்றும் ஜெர்பரா போன்ற வெட்டு மலர்கள் (Cut flowers) உற்பத்திக்கு ஏதுவாக உள்ளதால், இம்மலர்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு பெங்களூர் மற்றும் சென்னை விமான நிலையங்கள் மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

(ஆ) இவ்வாறு இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் மலர்களின் அளவு, அதன் மதிப்பு மற்றும் அதன் மூலம் வருவாய் குறித்த புள்ளி விவரங்கள் அபிடா (Agricultural and Processed Food Products Export Development Authority) நிறுவனம் ஒட்டுமொத்தமாக சேகரித்து வருகின்றது. அபிடாவின் ஏற்றுமதி புள்ளி விவரத்தின்படி இந்தியாவிலிருந்து ஆண்டொன்றிற்கு சுமார் ரூ. 844.367 லட்சம் மதிப்புள்ள வெட்டுமலர்கள் ஏற்றுமதியாகின்றன. தமிழகத்திலிருந்து ஏற்றுமதியாகும் மலர்களின் மதிப்பு பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

64—

சத்துவாச்சாரி பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மூலம் வழங்கப்பட்ட கடன் விவரம்

வினா எண். 27798—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா— .

(அ) வேலூர் சத்துவாச்சாரியில் உள்ள வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மூலம் மாடு வாங்க கடன் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது ?

(ஆ) அந்த மாடுகள் மூலம் எவ்வளவு பால் கொள்முதல் பெருகி உள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வள்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : வடாற்காடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மூலமாக தாட்கோ, ஆதிதிராவிடர் நலம் மற்றும் ஆதி திராவிடர் இனத்திலிருந்து கிருஸ்தவர்களாக மதம் மாறியவர்கள் திட்டங்களில் கீழ்க்கண்டவாறு கறவை மாடுகள் வழங்கப்பட்டன. 1992-93 ஆம் ஆண்டு தாட்கோ திட்டத்தின் மூலம் 750 விவசாயிகளுக்கும், ஆதிதிராவிடர் நலத்திட்டத்தின் மூலம் 750 விவசாயிகளுக்கும் ஆதிதிராவிடர் இனத்திலிருந்து கிருஸ்தவர்களாக மதம் மாறியவர்கள் திட்டத்தின் கீழ் 8 விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டன. 1993-94 ஆம் ஆண்டில் முறையே தாட்கோ திட்டம் மூலம் 750 விவசாயிகளுக்கும், ஆதிதிராவிடர் நலத்திட்டம் மூலம் 805 விவசாயிகளுக்கும், ஆதிதிராவிடர் இனத்திலிருந்து கிருஸ்தவர்களாக மதம் மாறியவர்கள் திட்டத்தின் மூலம் 8 விவசாயிகளுக்கும் கறவை மாடுகள் வழங்கப்பட்டன.

(ஆ) வழங்கப்பட்ட இம்மாடுகள் மூலம் நாளொன்றுக்கு 10,000 முதல் 12,000 லிட்டர்கள் வரை பால் கொள்முதல் பெருகி உள்ளது. மேலும் வடாற்காடு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் மூலம் 1992-93 ஆம் ஆண்டில் 2.36 லட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் 1993-94 ஆம் ஆண்டில் 3.06 லட்சம் லிட்டர்களாக உயர்ந்துள்ளது.

65—

இலவச வேஷ்டி வழங்கும் திட்ட விவரம்

வினா எண் 35442—*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருகோடியே இருபது லட்சம் ஏழை மக்களுக்கு வழங்கப்படும் இலவச வேஷ்டி திட்டம் தமிழ்நாட்டில் மட்டும் நடைமுறையில் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஆம், 1992-ஆம் ஆண்டு முதல் நிலமற்ற ஏழை விவசாயிகள் மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்களுக்கு பொங்கல் திருநாளையொட்டி இலவசமாக சேலை மற்றும் வேஷ்டி வழங்கும்

திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது தமிழகத்தைத் தவிர இதர மாநிலங்களில் நடைமுறையில் இல்லை.

66—

ஆண்டிமடத்தில் நெசவாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 33040—திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறைத் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடத்தில் நெசவாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டவை எத்தனை?

(ஆ) அவ்வீடுகள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றனவா?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) ஆண்டிமடத்தில் உள்ள விளந்தை செங்குந்தர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 72 உறுப்பினர்களுக்கு ஹட்கோ நிதியுதவியுடன் ரூ. 13.68 லட்சம் மதிப்பீட்டில் 72 வீடுகள், 1989-90 ஆம் ஆண்டு நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கட்டித் தரப்பட்டுள்ளன.

(ஆ) அவ்வீடுகள் அவர்களது சொந்தப் பொறுப்பில் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

67—

யாதவ இன மக்களை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்தல்

வினா எண் 42223—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக யாதவ இன மக்களை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்:

யாதவ இன மக்களை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க செயற்குறிப்பு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

68—

வள்ளலாருக்கு நினைவு இல்லம் அமைத்தல்

வினா எண் 26091—திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் வள்ளலார் தங்கியிருந்த புனித இல்லத்தை (ஏழுகிணறு அம்மன் கோயில் அருகில் வீராசாமி பிள்ளை தெரு) நினைவு இல்லமாக அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:

இல்லை.

69—

போலி ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகள் மீது நடவடிக்கை எடுத்தல்

வினா எண் 12157—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் போலி ஆசிரியர் பயிற்சி பள்ளிகளை கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு எத்தனை பள்ளிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

70—

தெய்வேந்திர நல்லூரில் தொடக்கப்பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைத்தல்

வினா எண் 16845—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, போகளூர் ஒன்றியம் தெய்வேந்திர நல்லூரில் பள்ளிக்கட்டிடம் கட்டப்பட்டு தொடங்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பள்ளியைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பரமக்குடி தொகுதி போகளூர் ஒன்றியம் தெய்வேந்திரநல்லூரில் ஊராட்சி ஒன்றியப்பள்ளி 27-10-1968-ல் தொடங்கப்பெற்று 1 முதல் 5 வகுப்புகளுடன் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. 1984-85-ல் பள்ளிக்கென கிராம வேலை திட்டத்தின் நிதியில் ரூ. 1,10,000 செலவில் கட்டிடம் கட்டப்பட்டு பள்ளி இயங்கி வருகிறது.

71—

தமிழ்நாட்டில் சிறப்புப் பள்ளிகள் துவங்குதல்

வினா எண் 24728—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் சிறப்புப் பள்ளிகள் (School of Excellence) துவக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு துவக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1993-94-ம் கல்வியாண்டில் தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரில் ஏற்கெனவே சிறப்புப் பள்ளியொன்று துவங்க ஆணையிடப்பட்டு செயல்பட்டு வருகிறது.

72—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மலையாள மொழி ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 33179—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மலையாள மொழி ஆசிரியர் பணியிடங்கள் 6 நிரப்பப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியிடங்களில் ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முதனிலை மலையாள மொழி ஆசிரியர் காலிப்பணியிடம் ஒன்று மட்டுமே உள்ளது.

(ஆ) தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

73—

இராமநாதபுரம் மாவட்டத்தில் அறிவொளி இயக்கம்

வினா எண் 33826—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அறிவொளி இயக்கத்தின் மூலம் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அறிவொளி இயக்கத்தில் பங்கு கொண்ட கலைக் குழுவினர்களை இதர மாவட்டங்களிலும் பயன்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அறிவொளி இயக்கத்தின் வழியாகப் பயன்பெற்றவர்கள் 2,00,000 பேர்கள் ஆவர்.

(ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அறிவொளி இயக்கத்தில் பங்கு கொள்வதற்கென தனித்தனி கலைக்குழுவினர்கள் உள்ளனர். இருப்பினும் கலைக்குழுக்களை மாவட்டங்களுக்கிடையே பரிமாறிக்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களை கலந்தாலோசித்து, தேவைப்படின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

74—

உடையாண்டிப்பட்டி ஆரம்பப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை

வினா எண் **39958**—*திரு. சி. குழந்தைவேலு:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, உடையாண்டிப்பட்டி ஆரம்பப்பள்ளியில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் புதிதாக அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரிய பணியிடங்கள் எதுவும் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. தற்போது அப்பணியிடங்களை நிரப்ப அரசு தேர்வு இயக்ககம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணைக்குழு மூலம் இடைநிலை ஆசிரியர்கள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆசிரியர் தேர்வாணைக் குழுவிடமிருந்து இடைநிலை ஆசிரியர் தேர்வுப்பட்டியல் பெற்ற பின்பு ஆரம்பப்பள்ளியில் மாணவர்கள் சேர்க்கையின் அடிப்படையில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

75—

நெல்லிப்பட்டு நாடு நடுநிலைப்பள்ளிக்குக் கூடுதல் ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் **40534**—*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜவ்வாதுமலை நெல்லிப்பட்டு நாடு கிராமத்தில் நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

1994-95 ஆம் கல்வி ஆண்டில் கூடுதல் சேர்க்கையாக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு வழங்குவதற்காக இடைநிலை ஆசிரியர்

பணியிடங்கள் எதுவும் அரசினரால் அனுமதிக்கப்படவில்லை. எனவே மேற்குறித்த பள்ளிக்குக் கூடுதலாக இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை ஒதுக்கீடு செய்து கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க இயலவில்லை. எதிர்காலத்தில் அரசினரால் கூடுதல் சேர்க்கைக்காக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு வழங்குவதற்காக கூடுதல் ஆசிரியர்கள் பணியிடங்கள் வழங்கப்பட்டால் விதிகளின்படியும், முன்னுரிமைப்படியும் உரிய மாவட்டக் கல்வி அலுவலர் வழியாக மேற்குறித்த பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

76—

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள அரசுக் கல்லூரிகள் விவரம்

வினா எண் **40760**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் அரசுக் கல்லூரிகள் எத்தனை உள்ளன?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

மூன்று கல்லூரிகள் உள்ளன.

77—

குழந்தைத் தொழிலாளர் நலநிதி எற்படுத்துதல்

வினா எண் **38317**—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைத் தொழிலாளர் நலனுக்காக மாநில அளவில் குழந்தை தொழிலாளர் நலநிதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:

குழந்தைத் தொழிலாளர் நலனுக்காக மாநில அளவில் தொழிலாளர் நலநிதி ஏற்படுத்தும் திட்டம் ஏதுமில்லை. இருப்பினும் உச்சநீதிமன்ற

கட்டளைப்படி காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், தர்மபுரி, மதுரை, திருச்சி மற்றும் வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டங்களில் உள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஒரு நலநிதி அமுலாக்கப்பட்டு வருகிறது. இந்நிதி குழந்தைத் தொழிலாளர்களுக்கு பொழுது போக்கு, கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.

78—

பரமக்குடியில் நகரப் பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 2256—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தனியாக நகரப் பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) தற்போதுள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) பரமக்குடி நகராட்சியில் தற்போதுள்ள பேருந்து நிலைய மேம்பாட்டுக்காக உலகவங்கி நிதி உதவியுடன் செயல்படும் நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி (Municipal Urban Development Fund) திட்டத்தின் கீழ் ரூ. 10.85 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

79—

சென்னை மாநகரில் நிலங்களின் விலையை நிர்ணயம் செய்தல்

வினா எண் 4283—*திரு. கே. செல்வராஜ்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether land value for taxation purposes in Madras has been fixed higher than the actual price of sites.

(b) The basis on which the Value is fixed.

TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சென்னை மாநகரில் நிலங்களின் விலையை நிர்ணயிப்பது மாநகராட்சி அல்ல, சொத்து பதிவாளர் (Registrar) நிர்ணயிக்கும் விலையையே மாநகராட்சியும் வரி விதிப்பிற்காக எடுத்துக் கொள்கிறது.

80—

குமுளூரில் குடிநீர் வசதி செய்தல்

வினா எண் 8628—திருமதி ஜெ. லோகாம்பாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி வட்டம், குமுளூர் கிராம எல்லையில் பெருவளை வாய்க்கால், புள்ளம்பாடி வாய்க்கால் ஆகிய இரண்டு வாய்க்கால்கள் ஓடியும், மக்கள் குடிநீருக்காக மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கன்னாகுடி சென்று குடிநீர் கொண்டு வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இவ்விரு வாய்க்கால்களிலிருந்து தண்ணீரை குமுளூர் பெரிய ஏரியில் கொண்டு வந்து நிரப்பி மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இலால்குடி வட்டத்திலுள்ள குமுளூர் குடியிருப்புக்கு 1986-ம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ரூ. 4.75 இலட்சங்களுக்கு மதிப்பீட்டில் ஒரு லட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த்திட்டம் நிறைவேற்றப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

81—

கோவை கலைக் கல்லூரி சாலையை ஸ்டேட் பாங்க் சாலையுடன் இணைத்தல்

வினா எண் 12839—திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை அரசினர் கலைக்கல்லூரி சாலையை தீயணைக்கும் நிலையத்தின் வழியாக ஸ்டேட் பேங்க் சாலையுடன் இணைக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோவை கலைக்கல்லூரி மற்றும் ஸ்டேட் பேங்க் இடைப்பட்ட பகுதியில் ஏற்கெனவே கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. புதிதாக இணைப்புச் சாலை அமைக்க இடம் இல்லை. தற்போது இணைப்புச் சாலை தேனி அன் கோ வழியாக இருந்து வருகிறது. எனவே புதிதாக இணைப்புச் சாலை அமைக்க செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

82—

புனித மாதா ஆலயம் எதிரில் நிழற்குடை அமைத்தல்

வினா எண் 15308—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மந்தைவெளிப்பாக்கம் புனித மாதா ஆலயம் எதிரில் உள்ள பேருந்து நிலையத்திற்கு நிழற்குடை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சென்னை மந்தைவெளிப்பாக்கம் புனித மாதா ஆலயம் எதிரில் உள்ள பேருந்து நிறுத்த நிலையத்திற்கு நிழற்குடை அமைக்கப்படும்.

83—

சென்னை பூங்கா நகர் தொகுதியில் பழுதடைந்துள்ள சாலைகளை சீர்செய்தல்

வினா எண் 21651—திரு. *உ. பலராமன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பூங்கா நகர் தொகுதியில் மழை நீரால் பாதிக்கப்பட்டுள்ள சாலைகளை சீர் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சென்னை பூங்காநகர் தொகுதியில் 1992-93-ம் ஆண்டில் மழையினால் பாதிக்கப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை ரூ. 3,59,292 செலவில் சீர் செய்யப்பட்டுள்ளது.

84—

சங்கரன்கோவிலில் ஆட்டோ, டாக்ஸி நிலையம் அமைத்தல்

வினா எண் 24377—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன்கோவில் நகரில் புதிய ஆட்டோ, டாக்ஸி நிலையங்கள் அமைத்திட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன்கோவில் நகரில் புதிய ஆட்டோ, டாக்ஸி நிலையங்கள் அமைத்திட செயற் குறிப்பு ஏதுமில்லை. தற்போது நடைபெற்ற ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்திய பிறகு ஆட்டோக்களுக்கு நகரப் பேருந்து நிலையத்திலுள்ள காலியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கென்று கட்டணம் எதுவும் வசூல் செய்யப்படவில்லை. டாக்ஸிகள் ஏற்கனவே இருந்த ராசபாளையம்-திருநெல்வேலி சாலையில் தொடர்ந்து இருந்து வருகிறது.

85—

கபிலர் திருமண மண்டபத்தைப் பழுது பார்த்தல்

வினா எண் 26149—*திரு. ஓ.எஸ். அமர்நாத்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட கபிலர் திருமண மண்டபம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், அதை பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மதுரை ஒபுளா படித்துறையிலிருக்கும் மதுரை மாநகராட்சியின் கபிலர் திருமண மண்டபக் கட்டிடம் எவ்விதப் பழுதுமில்லாமல் நல்ல முறையில் உறுதியாக உள்ளது. நன்றாகப் பராமரிக்கப்படுகிறது.

86—

கும்பகோணம் நகரில் பேருந்து நிலையத்தை சீர் செய்தல்

வினா எண் 36048—*திரு. கி. பாலசுப்பிரமணியன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகர், மையப் பகுதியில் பழுதடைந்திருக்கும் பேருந்து நிலையத்தைச் சீர் செய்து தர அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கும்பகோணம் நகரத்தில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டதால் பழைய பேருந்து நிலையமான சாம்பசிவபுர பேருந்துநிலையம் இருந்த இடத்தில் 24 கடைகள் கொண்ட வணிக வளாகமாக உலக வங்கி நிதி உதவியுடன் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 25 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது.

87—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடப் பள்ளிகள் பற்றிய விவரம்

வினா எண் **34386**—*திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஆதிதிராவிட உறைவிடப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எத்தனை உள்ளன?

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர் விடுதிகள் எத்தனை உள்ளன?

(இ) இவற்றில் சொந்தக்கட்டிடம் இல்லாத விடுதிகள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) திருச்சி மாவட்டத்திலுள்ள பள்ளிகளின் விவரம்.

	வகைப்பாடு.	ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளின் எண்ணிக்கை	பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளிகளின் எண்ணிக்கை
1.	ஆரம்பப்பள்ளிகள்	129	26
2.	நடுநிலைப்பள்ளிகள்	11	1
3.	உயர்நிலைப்பள்ளிகள்	12	1
4.	மேல்நிலைப்பள்ளிகள்	7	1
	மொத்தம்	**159**	**29**

(ஆ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர் விடுதிகளின் விவரம்.

	வகைப்பாடு.	ஆதிதிராவிட நல விடுதிகள்.		பழங்குடியினர் விடுதிகள்.	
		ஆண்	பெண்	ஆண்	பெண்
1.	கல்லூரி விடுதிகள்.	3	1	..	..
2.	தொழில் பயிற்சி விடுதிகள்	1	..	..	..-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3.	பள்ளி விடுதிகள்	59	23	1	3
	மொத்தம்	**63**	**24**	**1**	**3**

(இ) சொந்தக் கட்டிடம் இல்லாத விடுதிகள்.

	வகைப்பாடு.	ஆண்.	பெண்.
1.	ஆதிதிராவிடர் நல விடுதிகள்	27	11
2.	பழங்குடியினர் விடுதிகள்.	-	-
	மொத்தம்	27	11

88—

திருக்கோயில்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வைப்பு நிதி விவரம்

வினா எண் 1093—திரு *சோ. இராசாராமன்:* மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் திருக்கோயில்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வைப்பு நிதி எவ்வளவு?

(ஆ) அதன் முழு விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழகத்தின் திருக்கோயில்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ள வைப்பு நிதிகளின் விவரம் பின்வருமாறு:

***1.* திருக்கோயில் மேம்பாட்டு திட்ட நிதி-**

வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ஆலய மேம்பாட்டு நிதி என்ற ஒரு வைப்பு நிதி ஐந்து கோடி ரூபாய், மூல நிதியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வைப்பு நிதி ஒரு கால பூசை செய்வதற்குக் கூட நிதி வசதி இல்லாத திருக்கோர்யில்களில் 'ஒரு கால பூசையேனும்' செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து கிடைக்கும்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வட்டியில் 50 சதவீதத்தொகை ஒரு கால பூசை செய்வதற்காக பயன்படுத்தப்படுகிறது. எஞ்சிய 50 சதவீதத் தொகை நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும், பாடப்பெற்ற திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்வதற்கும், அவற்றைப் புதுப்பிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

2. திருக்கோயில் பணியாளர் நலத்திட்டம்-

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து இந்த வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வைப்பு நிதியிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து திருக்கோயில் ஊழியர்களின் சம்பள பாக்கி, திருக்கோயில் ஊழியர்களின் குழந்தைகளின் கல்வி, மருத்துவத் தேவை மற்றும் திருமணக் கடன் ஆகியவைகளுக்கு கொடுக்கப்படுகிறது.

3. வருமானமில்லாத நிதி வசதி தேவையுள்ள கோயில்களுக்குத் திருப்பணி நிதி-

இந்த ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதி, பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உபரி நிதியினைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியின் வட்டி வருமானத்திலிருந்து நிதி வசதி இல்லாத திருக்கோயில்கள் திருப்பணிக்காக ரூ. 25,000 வீதம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

89—

நன்னிலம் தொகுதி ஆதிதிராவிடர் பகுதிகளில் ஆலயங்களை திருப்பணி செய்தல்

வினா எண் 3274—*டாக்டர் க. கோபால்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்னிலம் தொகுதியில் இந்து ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதியில் பல இடங்களில் அமைக்கப்படும் ஆலயங்களின் திருப்பணிகள், மீதி உள்ளவைகளை நிறைவேற்ற அரசு நிதி உதவி அளிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

நன்னிலம் தொகுதியில் ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதியில் பின்வருமாறு 8 திருக்கோயில்கள் உள்ளன.

1. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், மானத்தாங்குடி.

2. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், செருவரூர்.

3. அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில், மருதவாஞ்சேரி.

4. அருள்மிகு மகா மாரியம்மன் திருக்கோயில், நெம்மேலி.

5. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், குப்பம்.

6. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், நடுக்குளம்.

7. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், ஆணக்குப்பம் மற்றும்,

8. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தேப்பிராமங்கலம்.

இவற்றில் வரிசை எண் 8-ல் குறிப்பிடப்பட்டுள்ள திருக்கோயில் திருப்பணி செய்யப்பட்டு 12-9-1992 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றுவிட்டது.

வரிசை எண் 5,6 மற்றும் 7-ல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று திருக்கோயில்களும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. இத்திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்ய முதற்கட்டமாக, இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, திருப்பணிக் குழு அமைத்து மதிப்பீடு தயாரித்து, திருப்பணி வேலைகள் நடத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண் 5,6,7 மற்றும் 8-ல் குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர இதர 4 திருக்கோயில்களின் திருப்பணிக்காக, கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணித் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 85,000 வழங்கப்பட்டுள்ளது. திருப்பணி தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

90—

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்குட்பட்ட கோயில்களின் வருமான விவரம்

வினா எண் 4090—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10,000-மும் அதற்கு மேலும் வருமானம் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குட்பட்ட கோவில்கள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10,000-மும் அதற்கு மேலும் வருமானம் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்பட்ட திருக்கோயில்களின் எண்ணிக்கை 3042 ஆகும்.

91—

திருக்கோயில் மாத இதழின் விற்பனையை அதிகரித்தல்

வினா எண் 6093—திரு ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடான திருக்கோயில் மாத இதழின் விற்பனையை அதிகரிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழகத் திருக்கோயில்களின் வரலாறு, அங்கு நடைபெற்றுவரும் சிறப்புமிக்க திருவிழாக்கள் திருப்பணிகள், அவற்றால் நடத்தப்பட்டுவரும் கல்வி நிறுவனங்கள் ஆகம பாடசாலைகள் ஆகியவற்றுடன் சமய மற்றும் ஆன்மீகத் தொடர்பான விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமாயின், திருக்கோயில் திங்கள் இதழைத்தான் படிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கும் வகையில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை இந்த இதழில் விளம்பரங்கள் வெளியிடப்படுவதில்லை. தற்போது ஆன்மீகத் தொடர்புடைய விளம்பரங்கள் மட்டும் வெளியிடப்பட்டு வருகின்றன. 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் வரை 3000 பிரதிகள் விற்பனையாகி வந்த திருக்கோயில் இதழின் விற்பனை எண்ணிக்கையானது தற்போது 4000 பிரதிகளாக உயர்ந்துள்ளது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

92—

இலங்கை நாட்டவர் தர்மகர்த்தாவாக உள்ளதை நிரந்தரமாக தடைசெய்தல்

வினா எண் 8440—திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் தேவஸ்தானத்திற்கு பரம்பரை தர்மகர்த்தா என்ற பெயரில் மைய அரசின் அனுமதியின்றி, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்டதிட்டங்களுக்கு முரணாக இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இலங்கை நாட்டவர் தர்மகர்த்தாவாக உள்ளதை நிரந்தரமாகத் தடை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 26-ம் பிரிவைத் தக்கவாறு திருத்தியமைக்கப்பட்டதன் விளைவாக, இத்திருக்கோயிலுக்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சட்ட திட்டங்களுக்கு முரணாக இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் பரம்பரை அறங்காவலர்களாக தற்போது யாரும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

93—

பெரிய நிறுவனங்கள் சிறிய கோயில்களை தத்து எடுத்தல்

வினா எண் 15806—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரிய நிறுவனங்கள் சிறிய கோயில்களைத் தத்து எடுக்க முன்வந்துள்ளதா?

(ஆ) அவ்வாறு எடுக்கப்பட்ட கோவில்கள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பல முதுநிலைத் திருக்கோயில்களுடன் 144 சிறிய திருக்கோயில்கள் நிர்வாக வசதிக்காக உப கோயில்களாக இணைக்கப்பட்டுள்ளன. தனியார் நிறுவனங்கள் ஏதும் சிறிய கோயில்களைத் தத்தெடுக்கவில்லை.

94—

அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தை திருப்பணி செய்தல்

வினா எண் 15954—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தை திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

95—

மன்னார்குடி, ஒரத்தநாடு வட்டங்களில் திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண்கள் 18807, 18808, 18809, 18810, 18811, 18812, 18813, 18814, 18816, 18818—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1.நாகை காயிதேமில்லத் மாவட்டம், சேனைக்கரை, அருள்மிகு மாரியம்மன் ஆலயம்.

2.தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், கும்மிட்டிதிடம் அருள்மிகு பிரசன்ன கிருஷ்ணசாமி ஆலயம்.

3.தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஆழிவாய்க்கால் சித்தி விநாயகர் ஆலயம்.

4.தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஹந்தராயன் குடிக்காடு பத்தர காளியம்மன் ஆலயம்.

5.தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தொன்டாரம்பட்டு கங்காள ஈஸ்வரர் ஆலயம்.

6.தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கண்ணந்தங்குடி மேலையூர் விநாயகர் ஆலயம்.

7.தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், குலமங்கலம் ஆண்டியப்பசுவாமி திருக்கோயில்.

8.தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், அக்கரை வட்டம், முனீஸ்வரர் திருக்கோயில்.

9.தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், திருமக்கோட்டை பொன்னியம்மன் கோயில்.

10. தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், புத்தங்கோட்டகம், சீனிவாச பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

96—

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கோயில்களை திருப்பணி செய்தல்

வினா எண்கள் 18932, 18933, 18940, 18947, 18949, 18952, 18953, 18954, 19002, 19080-**திரு.ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்த சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்—

1. தஞ்சாவூர் மாவட்டம், நடார் கானகஸ்தீஸ்வரர் ஆலயம்.

2. ஒரத்தநாடு வட்டம், ஆலயத்தூர், அழகியநாதசாமி ஆலயம்.

3. திருவையாறு வட்டம், ஒன்பத்துவேலி செல்வராய அய்யனார் கோயில்.

4. திருவையாறு வட்டம், கூடநாணல், பிள்ளையார் கோயில்.

5. திருவையாறு வட்டம், செம்மங்குடி, பாலதண்டாயுதபாணிசாமி ஆலயம்.

6. திருவையாறு வட்டம், தில்லைஸ்தானம், இளங்காளியம்மன் ஆலயம்.

7. திருவையாறு வட்டம், தில்லைஸ்தானம், திரௌபதியம்மன் ஆலயம்.

8. திருவையாறு வட்டம், திருவையாறு காசி விஸ்வநாதசாமி ஆலயம்.

9. வலங்கைமான் வட்டம், மேலகபிஸ்தலம், அய்யனார் ஆலயம்.

10. வலங்கைமான் வட்டம், செண்பகபுரம், சிவகாளியம்மன் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

97—

ஆலய நிலங்களை குத்தகைக்கு விடுவதை ரத்து செய்தல்

வினா எண் **20962**—*திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலய நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதை ரத்து செய்துவிட்டு பகிரங்க ஏலத்தில் விட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

98—'

கோவில்களை பராமரிக்க அரசு செலவு செய்த தொகை விவரம்

வினா எண் **24237—**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இரண்டு ஆண்டுகளில் கோவில்களைப் பராமரிக்க அரசு எவ்வளவு தொகை செலவு செய்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

1992-93 மற்றும் 1993-94 ஆகிய இரண்டு ஆண்டுகளில் திருக்கோயில்களின் திருப்பணிக்காக ஏற்படுத்தப்பட்ட கீழ்க்கண்ட திட்டங்களிலிருந்து வழங்கப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு:-

நிதி. (1)		தொகை (ரூபாய் இலட்சத்தில்) (2)
1. அரசு மான்யமாக	-	91.50
2. பொது நலநிதி	-	33.03
3. ஆலய மேம்பாட்டு நிதி வட்டியிலிருந்து		29.60
4. கிராமப்புற திருக்கோயில் திருப்பணி வைப்பு நிதியிலிருந்து	-	45.75
5. முதலமைச்சர் திருக்கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ஜனவர் 1992 முதல் விடுவிக்கப்பட்ட தொகை.		101.27
மொத்தம்		**301.15**

99—

அறநிலையத் துறையினரால் நடத்தப்படும் பள்ளிகள் விவரம்

வினா எண் **37518—**டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் அறநிலையத்துறை சார்பில் நடத்தப்படும் பள்ளிகள் எத்தனை?

(ஆ) புதிதாக கல்லூரி துவங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், அறநிலையத்துறை ஆளுகையின் கீழுள்ள கல்லக்குறிச்சி அருள்மிகு கலியுக வரதராஜப்பெருமாள் திருக்கோயிலின் சார்பில், "கலியுக வரதராஜப் பெருமாள் மகளிர் உயர்நிலைப்பள்ளி" ஒன்று நடத்தப்படுகிறது.

(ஆ) தற்பொழுது திருக்கோயில்களில் உபரிநிதி வசதி இல்லாததால் புதிதாக கல்லூரி துவங்குவதற்கு திட்டம் ஏதுமில்லை.

100—

கீழவைப்பார் மீனவர் காலனி வீடுகளைப் பழுதுபார்த்தல்

வினா எண் 37902—திருமதி என். கனகவல்லி: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தாலுக்காவைச் சார்ந்த கீழவைப்பார் மீனவர் காலனி வீடுகள் இடிந்து போனதை மாற்றி புதிய வீடுகள் கட்டவோ அல்லது பழுது பார்த்துத் தரவோ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்:

விளாத்திகுளம் தாலுக்காவைத் சேர்ந்த கீழவைப்பார் மீனவர் கிராமத்தில் காலனி வீடுகள் கட்டுவதற்கோ அல்லது பழுது பார்த்து தரவோ தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

எட்டாம் பட்டியல்

1—

புதுக்கடை காவல் நிலையக் கைதியின் விவரம்

வினா எண் 1765—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

Whether any person from Marukandakan Vilai near Kappakadu under Pudukadai died under suspiciopus circumstances at Head Quarters Hospital at Nagercoil in Kanniyakumari District during July, 1991 and the details thereof.

விடை—

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா, முதலமைச்சர்:

குன்னத்தூர் தட்டான்விளை கிராமத்தைச் சேர்ந்த நேசமணி என்பவரின் மகனான ஜோசப் 23-7-1991 அன்று புதுக்கடைக் காவலரால் அவரது வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு, புதுக்கடைக் காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டார். அடுத்த நாள் அவர் நாகர்கோவில் அரசு தலைமையிட மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. காவல் துறை நிலை ஆணை எண்.145-ன்கீழ் விசாரணை ஒன்றை நடத்துமாறு பத்மனாபபுரம் மாவட்ட உதவி ஆட்சித் தலைவருக்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிட்டார்.

2. விசாரணை அதிகாரி தம்முடைய அறிக்கையில் இறந்து போன நேசமணி மகன் ஜோசப் புதுக்கடை காவல் நிலைய காவலர்களால் 23-7-1991 அன்று சட்டத்திற்குப் புறம்பான முறையில் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு மிருகத்தனமாக தாக்கப்பட்டுள்ளதாகவும், அவர் புதுக்கடை காவல் நிலையத்தில் காவலர்களால் ஏமாற்றப்பட்டோ, துன்புறுத்தப்பட்டோ விஷத்தை சாப்பிட வைக்கப்பட்டுள்ளார் என்ற முடிவுக்கு வருவதாகத் தெரிவித்துள்ளார். எனவே, இதற்கு காரணமான புதுக்கடை காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர்கள் மீது துறை நடவடிக்கை எடுக்குமாறும் பரிந்துரை செய்துள்ளார். அவரது கருத்தை ஏற்றுக் கொண்ட கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியரின் பரிந்துரைகளை அரசு கவனமாகப் பரிசீலித்த பின்னர் திரு. ஜோசப் இறந்ததில் சம்பந்தப்பட்டிருந்ததற்கான பின் வருபவர்கள் மேல் குற்றவியல் வழக்கு தொடருமாறு ஆணையிட்டது:—

(1) திரு. லாரன்ஸ், காவலர் எண் 381, புதுக்கடை காவல் நிலையம்.

(2) திரு. சுவாமி நாடார், காவலர் எண் 583, புதுக்கடை காவல் நிலையம்.

(3) திரு. விஜயன், காவலர் எண் 308, புதுக்கடை காவல் நிலையம்.

(4) திரு. மரியதாஸ், காவலர் எண் 167, புதுக்கடை காவல் நிலையம்.

(5) திரு. பிரான்சிஸ், காவலர் எண் 1116, புதுக்கடை காவல் நிலையம்.

(6) திரு. சக்கரவர்த்தி, காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர், புதுக்கடை காவல் நிலையம்.

(7) திரு. ராஜன், த.பெ.செல்லப்பன், ஆர்.சி.தெரு, புதுக்கடை, தனி நபர்.

3. மேற்கண்ட காவல் துறை அலுவலர்களின் மீதும் தனி நபர் மீதும் குற்ற வழக்கு தொடருமாறு கன்னியாமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். காவல் துறைப் பணியாளர்கள் மீது ஒரே சமயத்தில் துறை நடவடிக்கை மேற்கொண்டு ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரை அவர்களைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யுமாறும் காவல் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

4. அரசு ஆணைக்கிணங்க பத்மநாபபுரம் வருவாய் கோட்டாட்சியர் குழித்துறை நீதிமன்றத்தில் 24-9-1993 அன்று வழக்கு தொடுத்துள்ளார். அவ்வழக்கு எண் 2660-93, நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

5. அரசு ஆணைக்கிணங்க, மேலே குறிப்பிட்டுள்ள காவலர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஆயினும் காவலர்கள் நிர்வாகத் தீர்ப்பாயத்தில் ஓ.ஏ.எண்.654-659-93-ல் தற்காலிக பணி நீக்கம் தடையாணை பெற்றமையால் அவர்கள் மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். எதிர் மனுக்கள் தயாரிக்கப்பட்டு நிர்வாகத் தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. துறை நடவடிக்கையைப் பொறுத்த வரை குற்றப்பத்திரிக்கை 16-9-1993 அன்று சம்பந்தப்பட்ட காவலர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

LEGISLATIVE ... ALONE TRIUMPHS

2—

தமிழகத்தின் மூலம் மத்திய அரசுக்கு செலுத்தும் வரிகள் விவரம்

வினா எண் 24042—திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் மூலம் மத்திய அரசுக்கு செலுத்தும் சுங்க வரி, ஆயத்தீர்வை வரிகள் எவ்வளவு?

1995 மார்ச் 14]

(ஆ) அதில் எத்தனை சதவீதம் மீண்டும் தமிழக அரசுக்கு மத்திய அரசு அளிக்கிறது?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) தமிழ்நாடு மாநிலத்திலிருந்து பெறப்பட்ட வருவாய்:

	1991-92	1992-93
(1)	(2)	(3)
	(ரூபாய் கோடியில்)	
1. மத்திய ஆயத்தீர்வை	2,130	2,278
2. சுங்கத் தீர்வை	3,019	3,348

சுங்கத் தீர்வை வருவாய் என்பது, நம் நாட்டினுள் செய்யப்படும் இறக்குமதிகள் தொடர்பாக, தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள சுங்கத்துறை அலுவலகங்கள் மூலம் பெறப்படும் வருவாய் ஆகும். இந்த இறக்குமதிகள், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள இறக்குமதியாளர்களால் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.

(ஆ) (i) சுங்கத்தீர்வை, பிரித்துக் கொடுக்கத்தக்க தொகுப்பு நிதியின் கீழ் வரவில்லை. இது, மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுவதில்லை.

(ii) மத்திய அடிப்படை ஆயத்தீர்வைகளைப் பொறுத்தமட்டில், பிரித்துக் கொடுக்கத்தக்க தொகுப்பு நிதியில், 1978 ஆம் ஆண்டு கூடுதல் ஆயத்தீர்வைகள் (தொழில் மற்றும் துணிப் பொருள்கள்) சட்டத்தின் விதித் துறைகளின் கீழ் வசூலிக்கப்படும் தீர்வைகளும், ஒதுக்கீடு செய்யப்பட்ட தீர்வைகளும் அடங்காது. நிகர வருவாயில், 45 சதவீதம் மாநிலங்களின் பங்காகும். இது, அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். பிரித்துக் கொடுக்கத்தக்க தொகுப்பு நிதியில் 6.379 சதவீதம் தமிழ்நாட்டுப் பங்களவின் சதவீதம் ஆகும். தமிழ்நாட்டிற்கு இந்த வகையில் பிரித்துக் கொடுக்கப்பட்ட தொகை 1991-92-ல் ரூ. 648.61 கோடி; 1992-93-ல் ரூ. 779.60 கோடியாகும்.

(iii) கூடுதல் ஆயத்தீர்வையைப் பொறுத்தமட்டில், பிரித்துக் கொடுக்கத்தக்க தொகுப்பு நிதி என்பது மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கான 1.903 சதவீதம் நீங்கலாக கூடுதல் ஆயத்தீர்வையின் நிகர வசூலாகும். தமிழ்நாட்டுப் பங்களவின் சதவீதம், பிரித்துக் கொடுக்கத்தக்க தொகுப்பு நிதியில் 7.064 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டிற்கு இந்த வகையில் பிரித்துக் கொடுக்கப்பட்ட தொகை 1991-92-ல் ரூ. 136.13 கோடி, 1992-93-ல் ரூ. 158.90 கோடி.

3—

தமிழ்நாடு அரசின் லாட்டரி சீட்டு வகைகளின் விவரம்

வினா எண் 42142—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் எத்தனை வகை லாட்டரி சீட்டு நடத்தப்படுகிறது?

(ஆ) 1993-94 ஆம் ஆண்டு வருமானம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) தமிழக அரசால் கீழ்க்கண்ட வகை லாட்டரி சீட்டு நடத்தப்பட்டு வருகிறது:-

வரிசை எண். (1)	குலுக்கலின் பெயர் (2)	வகையின் பெயர். (3)
1.	புதையல்	வாரம் ஒரு முறை
2.	பொன்மாரி	மாதம் இரு முறை
3.	வைகை	மாதம் இரு முறை
4.	பொன்னி	மாதம் இரு முறை
5.	திருமகள் சிறப்பு குலுக்கல்	மாதம் ஒரு முறை
6.	மாவட்டச் சிறப்புக் குலுக்கல்	மாதம் ஒரு முறை

பண்டிகைச் சிறப்பு குலுக்கல் ஆண்டுக்கு நான்கு பண்டிகை காலங்களில் (பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி) சிறப்பு குலுக்கல்கள் நடத்தப்படுகின்றன.

(ஆ) 1993-94 ஆம் ஆண்டு தமிழ்நாடு லாட்டரிச் சீட்டின் மூலம் கிடைக்கப் பெற்ற நிகர வருமானம் ரூ. 4,03,27,432 (ரூபாய் நான்கு கோடியே மூன்று லட்சத்து இருபத்தியேழாயிரத்து நானூற்று முப்பத்திரண்டு மட்டும்).

4—

தமிழ்நாடு அரசு லாட்டரி சீட்டு மூலம் கிடைத்த வருவாய் விவரம்

வினா எண் 42790—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு லாட்டரி சீட்டின் மூலம் 1993-94 ஆம் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

(ஆ) புதிய லாட்டரி சீட்டுத் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

(அ) 1993-94 ஆம் ஆண்டு தமிழ்நாடு லாட்டரி சீட்டின் மூலம் கிடைக்கப் பெற்ற நிகர வருமானம் ரூ. 4,03,27,432 (ரூபாய் நான்கு கோடியே மூன்று லட்சத்து இருபத்தியேழாயிரத்து நானூற்று முப்பத்திரண்டு மட்டும்).

(ஆ) பொது மக்களின் விருப்பப்படி தினசரி லாட்டரி சீட்டுத் திட்டம் நடத்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

5—

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் முறையீடுகளை கவனிக்க சிறப்புத் திட்டம்

வினா எண் 43418—திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் குறைகள், முறையீடுகளை கவனிக்க அரசிடம் சிறப்புத் திட்டம் இருக்கிறதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் :

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களின் குறைகள், முறையீடுகளை கவனிப்பதற்காக என்றே "ஓய்வூதிய இயக்ககம்" என்ற புதிய துறை ஏற்படுத்தப்பட்டு அத்துறை 1-9-1994 முதல் செயல்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6—

கிறிஸ்தவர்களின் விவாகரத்துச் சட்டத்தில் திருத்தங்கள் ஏற்படுத்துதல்

வினா எண் 22816—*டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா* : Will the Honourable the Minister for Law be plaesed to State —

Whether there is a proposal with the Government to bring in amendments to the Christian Divorce Law ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:

ஆம். கிறிஸ்தவர்களின் விவாகரத்து, 1869 ஆம் ஆண்டு இந்திய விவாகரத்து சட்டத்தின் கீழ் தீர்மானிக்கப்படுகிறது. இது மத்திய அரசு இயற்றிய ஒரு சட்டமாகும். கிறிஸ்தவர்கள் விவாகரத்து பெறுவதில் ஏற்படும் இடர்ப்பாடுகளை தவிர்க்கும் பொருட்டு, 1869 ஆம் ஆண்டு இந்திய விவாகரத்துச் சட்டத்தில் தகுந்த திருத்தங்களை கொண்டு வருமாறு 1994 மே திங்களில் மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

7—

சிங்காநல்லூர் சிறைச்சாலையை விரிவாக்க நடவடிக்கை

வினா எண் 36570—*திரு. சிங்கை கோவிந்தராசு* : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் திறந்தவெளி சிறைச்சாலையில் கைதிகளை அடைக்க அறைகள் கட்டவும், சிறைச் சாலையை விரிவாக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

சிங்காநல்லூர் திறந்தவெளிச் சிறையில் தற்போது அங்கீகரிக்கப்பட்ட இடவசதி அங்கிருக்கும் சிறைவாசிகளுக்கு போதுமானதாகும். தற்போது அடைப்பு அளவினை விட குறைவான சிறைவாசிகளே இருந்து வருவதால் சிங்காநல்லூர் திறந்தவெளிச் சிறையினை விரிவாக்கம் மற்றும் அறைகள் கட்டுவது சம்பந்தமான எவ்வித திட்டமும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

8—

கோயம்புத்தூரில் பூங்கா அமைத்தல்

வினா எண் 4261—திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையைச் சுற்றிலும் இருக்கும் பயனற்ற நிலத்தில் அழகிய பூங்கா அமைக்க, அந்த நிலப் பகுதியை கோயம்புத்தூர் மாநகராட்சி வசம் ஒப்படைக்க அரசு முன் வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

கோவை மத்திய சிறைச்சாலை கோவை நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. ஏற்கெனவே கோவை மத்திய சிறைக்கு சொந்தமான நிலம் பல்வேறு அரசுத் துறைகளின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், கோவை மத்திய சிறைக்கு சொந்தமான காலியிடங்கள் சிறைத் துறை மற்றும் அரசின் பல்வேறு துறைகளுக்கு முழுமையான அளவில் பயன்படுத்தயிருப்பதால், மேற்படி நிலப் பகுதியினை பூங்கா அமைக்க கோயம்புத்தூர் மாநகராட்சி வசம் ஒப்படைக்க இயலாது.

9—

ஐவேலியில் வாகன ஆய்வாளர் அலுவலகம் மற்றும் எடை போடுதல் பாலம் கட்டுதல்

வினா எண் 14131—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி வட்டம், ஐவேலி கிராமம் ச.எண். 77/1 நிலம் வாகன ஆய்வாளர் அலுவலகம் மற்றும் எடை போடுதல் பாலம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) நிலம் இன்னும் அரசினால் ஒதுக்கப்படவில்லை. இப்பொருள் சம்பந்தமான செயற்குறிப்பு அரசுக்கு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மூலமாக கிடைக்கப் பெற்றது.

(ஆ) மேற்குறிப்பிட்ட செயற்குறிப்பு இத்துறையினால் நன்கு பரிசீலிக்கப்பட்டதில் நில மாற்றம் கோரியுள்ள நிலம் குட்டை புறம்போக்கு அதாவது நீர் நிலைப் புறம்போக்கு என்பதால் அந்நிலங்களை நிலமாற்றம் செய்வதற்கு அரசின் தடையாணை அமுலில் உள்ளதாலும், நிலத்தடி நீரை அதிகப்படுத்த நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் இச்செயற்குறிப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது.

10—

விஜயபுரம் மக்களுக்கு பட்டா வழங்குதல்

வினா எண் 22722—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் நகர் விஜயபுரம் பகுதி மூன்றாவது தெருவில் வசிப்பவர்களில் தகுதி உடையவர்களுக்கு பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யும்.

(ஆ) கள்ளக்குறிச்சி வட்டம், சின்னசேலம் நகரம், விஜயபுரம் பகுதி, மூன்றாவது தெருவில் வசிப்பவர்களில், தகுதியுடைய அனைவருக்கும் பட்டா வழங்கும் நிலையில் ஆவணங்கள் தயாரித்து வைக்கப்பட்டுள்ளது. நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் சின்னசேலம் நகரில் வீடுகள் கட்டி ஆக்ரமணம் செய்துள்ளவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும்போது, விஜயபுரம் பகுதி மூன்றாவது தெருவில் வசிப்பவர்களுக்கும் தகுதியின் அடிப்படையில் வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும்.

11—

திருப்பத்தூரில் வட்டாட்சியர், உதவி ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 23302—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

திருப்பத்தூர் நகரில் வட்டாட்சியர் உதவி ஆட்சியர் (Sub-Collector) அலுவலகம் ஆகியவற்றுக்குப் புதிய கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் நகரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் சார் ஆட்சியர் (Sub-Collector) அலுவலகம் ஆகியவற்றிற்கு புதிய கட்டிடம் கட்டுவது தொடர்பாக செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மேற்படி அலுவலகங்கள் தற்போது நகரில் மையப் பகுதியில் பொது மக்களுக்கு வசதியான இடத்தில் போதுமான இடவசதியுடன் கூடிய கட்டிடங்களில் தான் இயங்கி வருகின்றன.

12—

டி.எம்.ஆர். சமுத்திரக் கிராம மக்களுக்குக் குடிமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 26027—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை யூனியன், டி.எம்.ஆர். சமுத்திரம் கிராம மக்களுக்கு குடி மனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ், திருமலைராயசமுத்திரம் கிராமத்திலுள்ள மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

13—

அருவிக்கரை கிராம நிர்வாக அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 36095—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி அருவிக்கரை கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் இல்லாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : எல்லா கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் குடியிருப்பு மற்றும் அலுவலகம் கட்ட கொள்கையளவில் ஏற்கப்பட்டு, பகுதி பகுதியாக ஆண்டுதோறும் நிதி நிலைக்கு ஏற்ப கட்டலாம் என்ற அரசின் முடிவின்படி, மலைப் பிரதேசங்களில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஆரம்பத்தில் குடியிருப்பு மற்றும் அலுவலகக் கட்டிடம் கட்ட உத்தேசித்து, 1993-94 பகுதி இரண்டாம் திட்டத்தில் 25 குடியிருப்புகளும், 1994-95-ல் 25 குடியிருப்புகளும் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி வரும் காலங்களில் திருவட்டார் தொகுதி அருவிக்கரை கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் குடியிருப்பு மற்றும் அலுவலகம் கட்டப்படும்.

14—

மொடக்குறிச்சி லக்காபுரத்தில் பட்டா வழங்குதல்

வினா எண் 36300—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி லக்காபுரத்தில் சாலை ஓரக் குடிசைகளில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

ஈரோடு வட்டம், மொடக்குறிச்சி உள்வட்டம், லக்காபுரம் கிராமம், சாலைப் புறம்போக்கில் வசிக்கும் 40 குடும்பத்தைச் சேர்ந்த விவசாயக் கூலிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, லக்காபுரம் கிராமம் ரீ சர்வே 18/1 களம் புறம்போக்கு மற்றும் 18/2 பாறை புறம்போக்கு இவைகளை தேர்வு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1995 *மார்ச்* 14]

15—

பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் பட்டா வழங்குதல்

வினா எண் 38297—*செல்வி கோ. மல்லிகா :* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பரங்கிப்பேட்டை கருணாநிதி சாலை, ஆற்றங்கரை சாலை பகுதியில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மேற்படி ஆற்றங்கரை சாலை பகுதி நீர்வழிப் புறம்போக்காகும். நீர்வழி புறம்போக்கில் ஒப்படை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிலத்தில் உள்ள ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தி வீட்டு மனைப் பட்டா வழங்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

16—

சர்குணேஸ்வரபுரத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 38631—*திரு. எஸ். ஆசைமணி :* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் வட்டம், சர்குணேஸ்வரபுரம் கிராமம், ஊராட்சி பிள்ளையார் கோயில் தெருவில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் வட்டம், சர்குணேஸ்வரபுரம் பிள்ளையார் கோயில் தெருவில் வசிக்கும் மக்கள், புல எண் 93/2-இல் பட்டா எண் 656-ல் திரு. நாராயணசாமி மற்றும் 24 நபர்களுக்குச் சொந்தமான பட்டா புஞ்சை நிலத்தில் குடியிருந்து

வருகிறார்கள். மேற்படி மக்களுக்கு குடியிருப்பு சட்டத்தின் கீழ் பட்டா வழங்க மாவட்ட வருவாய் அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

17—

துலுக்க விடுதி சோதனைச் சாவடியை மேற்கு பகுதிக்கு மாற்றுதல்

வினா எண் 20772—*திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, ஆவணத்தைச் சேர்ந்த துலுக்க விடுதி கீழ்ப்பகுதியில் அமைந்திருக்கும் சோதனைச் சாவடியை மேற்கு பகுதிக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

பேராவூரணி வட்டம், துலுக்க விடுதி (கிழக்கு) கிராமத்தில் குடிமைப் பொருள் வழங்கல் சோதனைச் சாவடி ஒன்று இயங்கி வந்தது. ஏகபோக நெல் கொள்முதல் திட்டம் 1-5-1993 முதல் விலக்கிக் கொள்ளப்பட்டதின் பேரில் மேற்படி சோதனைச் சாவடியும் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது. மேற்படி சோதனைச் சாவடி இயங்கி வந்த காலத்தில் அந்தச் சோதனைச் சாவடியை மேற்குப் பகுதிக்கு மாற்ற திட்டம் ஏதும் இருக்கவில்லை. வேறு எந்தத் துறையின் கீழும் மேற்படி இடத்தில் சோதனைச் சாவடி ஏதும் இயங்கவில்லை.

18—

குச்சிப்பாளையம் மக்கள் கிள்ளை மெயின் ரோட்டிலுள்ள நியாயவிலைக் கடையில் வாங்க அனுமதித்தல்

வினா எண் 20850—*செல்வி கோ. மல்லிகா :* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், குச்சிப்பாளையம் மக்கள் கிள்ளையில் நியாயவிலைக் கடையில் வாங்கி வந்த உணவுப் பொருள்களை மெயின் ரோட்டிலுள்ள நியாயவிலைக் கடையில் வாங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பரங்கிப்பேட்டை ஒன்றியம், குச்சிப்பாளையம் கிராமத்தில் உள்ள 98 குடும்ப அட்டைகள் கிள்ளை நியாயவிலைக் கடையிலிருந்து நீக்கி, கிள்ளை மெயின் ரோட்டிலுள்ள நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டு 1-5-1994 முதல் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

19—

போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடித்தல்

வினா எண் 36972—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலி குடும்ப அட்டைகளைக் கண்டறிந்து அகற்றும் பணி நடந்து கொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு (1-1-1993 முதல் 31-12-1993 வரை) அவ்வாறு அகற்றப்பட்ட குடும்ப அட்டைகள் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) கடந்த ஆண்டு 1-1-1993 முதல் 31-12-1993 முடிய முதல் 10 மாதங்களில் புதிய குடும்ப அட்டை கோரும் மனுக்கள் பரிசீலனை செய்யும் பணியைத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டமையால், போலி குடும்ப அட்டைகள் நீக்கும் பணியில் அதிக கவனம் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், கடந்த 1993 ஆம் ஆண்டில் 18,701 போலி குடும்ப அட்டைகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

20—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனை கழிப்பிடங்களைச் சீரமைத்தல்

வினா எண் 27769—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் அரசு மருத்துவமனை கழிப்பிடங்களைச் சீரமைக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் அரசினர் மருத்துவமனை கழிப்பிடங்களைச் சீரமைக்க சிறப்பு மராமத்து பணியில் ரூ. 38,000-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித்துறை செயற் பொறியாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்பணி பொதுப்பணித் துறையால் விரைவில் மேற்கொள்ளப்படும்.

21—

செட்டிபாளையத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 35906—திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி, நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், செட்டிபாளையத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டத் தேவையான நிலம் இன்னும் கையகப்படுத்தப்படாததால், இங்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

22—

பரமக்குடி தாலுக்கா அரசு மருத்துவமனையில் மயக்க மருந்து அலுவலர் நியமனம்

வினா எண் 36711—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

(அ) பரமக்குடி தாலுகா அரசு மருத்துவமனையில் மயக்க மருந்து மருத்துவரை நியமிக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிரப்பப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பரமக்குடி தாலுக்கா அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட ஆறு பதவிகளிலும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்கள். இவர்களைத் தவிர மூன்று மருத்துவர்கள் சுழற்சி முறையில் (Turn) பணிபுரிகின்றார்கள். இம்மூவரில் மயக்க மருத்துவ அலுவலரும் ஒருவர்.

23—

தமிழ்நாடு மூலிகைப் பண்ணை, மூலிகை மருத்துவக் கழகத்தின் மூலம் உணவுப் பொருள் தயாரித்தல்

வினா எண் 39471—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மூலிகைப் பண்ணை, மூலிகை மருத்துவக் கழகத்தின் மூலம், நுகர்வோர் உணவுப் பொருள் தயாரிக்கப்படவுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன நுகர்பொருள் தயாரிக்கப்பட உள்ளன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

24—

அத்தாணி ஆரம்ப சுகாதார மையத்தில் தொழுநோய் மருத்துவரை நியமனம் செய்தல்

வினா எண் 39751—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம், அத்தாணி ஆரம்ப சுகாதார மையத்தில் ஒரு தொழுநோய் மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

தொழுநோய்க்கு என தனியே மருத்துவ அலுவலர் எந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இல்லை. மாவட்டத்தில் உள்ள மாவட்ட தொழுநோய் மருத்துவ அலுவலர் தொழுநோய் ஒழிப்புப் பணியினை கவனித்து வருகிறார். எனினும், அத்தாணி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு தொழுநோய் ஆய்வாளரின் உதவியுடன் ஒரு கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றது.

25—

சீர்காழியிலிருந்து சில இடங்களுக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 15789—*திரு. எம். பூராசாமி* : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தில், சீர்காழியிலிருந்து தெல்லைக்குடி, இடக்குடி, வடபாதி, வைத்தீஸ்வரன் கோவில், மயிலாடுதுறை வரைக்கும் நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சீர்காழி - வைத்தீஸ்வரன் கோவில் நேர் வழித்தடத்திலும் சீர்காழியிலிருந்து சட்டநாதபுரம், சூரக்காடு, தெல்லைக்குடி வழியே பொறையார் வரை செல்ல போதிய அளவு புறநகர் மற்றும் நகரப் பேருந்து வசதி உள்ளது. இடக்குடி மற்றும் வடபாதி சாலை குறுகலாக பேருந்து இயக்க தகுதியற்ற சாலையாக உள்ளதால் சாலைத் தகுதி சான்றிதழ் கிடைக்கப்பெற்ற பின்னர் இத்தடத்தில் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

26—

பெரியார் நகரிலிருந்து தடம் எண் 38-ஐ இயக்குதல்

வினா எண் 16310—திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் நகரிலிருந்து மூலக்கடை, வியாசர்பாடி, கவியரசு கண்ணதாசன் நகர், பாரதிநகர் மற்றும் எருக்கஞ்சேரி செல்ல பேருந்து வசதியில்லாததால், தடம் எண் 38-ஐ பெரியார் நகரிலிருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : பெரியார் நகர் பகுதி மக்கள், பெரியார் நகர் பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள பெரவள்ளூர் சாலை சந்திப்பு பேருந்து நிறுத்தத்திலிருந்து வழித் தடம் 38 பேருந்துகள் மூலம், மூலக்கடை, பாரதிநகர் சந்திப்பு வியாசர்பாடி, எருக்கஞ்சேரி ஆகிய பகுதிகளுக்கு நேரடியாகச் செல்லலாம். வழித்தடம் 38 பேருந்துகளை பெரியார் நகர் வரை நீட்டித்து இயக்கினால் அதன் பயண நடைகள் குறைவதுடன், திரு. வி. க. நகர் பகுதியில் அப்பேருந்துகளை பயன்படுத்தி வரும் மக்களுக்கு பாதகமாக அமையும் என்பதால் தற்பொழுது பெரியார் நகர் வரை நீட்டிக்க வாய்ப்பில்லை.

27—

திருப்பத்தூர் சந்தன ஆலையை மீண்டும் திறத்தல்

வினா எண் 21390—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் சந்தன ஆலை எப்போது திறக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

திருப்பத்தூர் சந்தன ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட சுமார் ரூ. 40 இலட்சம் மதிப்புள்ள சந்தனத் தைலம் இருப்பில் சேர்ந்து விட்டதன் காரணமாகவும், மேற்படி சந்தனத் தைலத்திற்கு விற்பனை வாய்ப்பு இல்லை என்ற நிலையின் காரணமாகவும் சுற்றுச் சூழல் வனத் துறையின் 5-11-1990 ஆம் நாளிட்ட 752 ஆம் எண் அரசாணையின்படி, இத்தொழிற்சாலை உடனடியாக மூடப்பட்டு தொழிலாளர்கள் அனைவரும் பணியிலிருந்து விலக்கப்பட்டனர். மேற்படி தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையெனத் தெரிய வருகிறது.

28—

ஒந்தனை கிராமத்திற்கு சாலை வசதி

வினா எண் 22339—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒந்தனை என்ற ஊருக்கு சாலை வசதி இல்லாது இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வனத்துறை மூலம் கப்பிச் சாலை அமைத்துக் கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

(அ) தாமரைக்கரை முதல் ஒந்தனை கிராமம் வரை உள்ள சாலை ஈரட்டி வழியாக செல்கிறது. தாமரைக்கரை முதல் ஈரட்டி வரையுள்ள வனச்சாலை 1985-86-ல் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டது. இந்த தார்ச் சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. ஈரட்டியிலிருந்து ஒந்தனை வரையிலுள்ள பஞ்சாயத்து சாலை வருவாய்த்துறை நிலத்திலுள்ளது.

(ஆ) தாமரைக்கரை முதல் ஈரட்டி வரையிலான வனச் சாலையினை மேம்படுத்த இந்த நிதியாண்டில் அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

29—

பேராவூரணி - சிங்கவனம் இடையே பேருந்து இயக்குதல்

வினா எண் 24276—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து சிங்கவனத்திற்கு பெருமகளூர் காரைக்கோட்டை வழியாக நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

பேராவூரணி - கட்டுமாவடி (வழி) பெருமகளூர், திருவப்பாபு தடம் நிறைந்த அளவு பேருந்து வசதி பெற்ற பிரதான சாலைத் தடமாகும். மேலும், மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் அறந்தாங்கி காரைக் கோட்டை 6 நடைகள் இயக்கி வருகிறது. ஆகவே, அந்தத் தடத்தில் மேற்கொண்டு பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

30—

பேராவூரணியில் புதிய நகரப் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 24319—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணியில் இயக்கப்படும் நகரப் பேருந்துகள் பழுதுபட்டுள்ளதால் அனைத்து நகரப் பேருந்துகளையும் மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

பேராவூரணிக் கிளையில் இயக்கப்படும் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 17 பேருந்துகள் 2 முதல் 5 ஆண்டுகளுக்குள்ளான வயதுடையவை ஆகும். 2 பேருந்துகள் மட்டுமே 8 ஆண்டுகள் வயதுடைய

பேருந்துகளாகும். இந்த இரண்டு பேருந்துகளையும் இந்த நிதி ஆண்டுக்குள்ளாக மாற்றம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இயக்கத்திலுள்ள பேருந்துகளில் ஏற்படும் சில குறைபாடுகளை அவ்வப்போது சரி செய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

31—

பட்டுக்கோட்டையிலிருந்து நகரப் பேருந்துகளை நீட்டித்து இயக்குதல்

வினா எண் 24341—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி ஒன்றியம், பட்டுக்கோட்டையிலிருந்து பாலத்தளி வரையில் வருகின்ற நகரப் பேருந்தை மணவியல், சீதாம்பாள்புரம் வரை நீட்டித்து இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

பாலத்தளியிலிருந்து சீதாம்பாள்புரம் ரோடு வரை உள்ள 3 கி.மீ. தூரம் உள்ள சாலை குறுகியதாகவும், குறுகிய திருப்பங்களை உடையதாகவும் பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்றதாகவும் உள்ளது. சாலை சீர் செய்யப்பட்ட பின்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32—

அஞ்சனப் பிரிவிலிருந்து குன்றி வரையுள்ள சாலையை தார்ச் சாலையாக்குதல்

வினா எண் 24355—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் ஒன்றியம், குத்தியாலத்தூர் மலைப்பகுதி அஞ்சனப் பிரிவிலிருந்து குன்றி வரையுள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

1995 மார்ச் 14]

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

சத்தியமங்கலம் ஒன்றியம், குத்தியாலத்தூர் வனப்பகுதி, கடம்பூர் முதல் குன்றி வரையான சாலை அஞ்சனப் பிரிவிலிருந்து 9.0 கி.மீ. நீளம் கொண்டது. இச்சாலையில் 0/6 கி.மீ. முதல் 9/0 கி.மீ. முடிய மண் வேலைகள் செய்து பழுது பார்க்கப்பட்டது. மேலும், இச்சாலைக்கு, 5.0 கி.மீ. நீளத்திற்கு கற்கள் பரப்பும் பணி விரைவில் முடிக்கப்பட உள்ளது. இச்சாலையின் மொத்த நீளத்தை தார்ச் சாலையாக (Blacktopping) மாற்ற குறைந்த பட்சம் ரூ. 25.0 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. நிதிநிலை பற்றாக்குறையினால் அஞ்சனப் பிரிவு-குன்றி சாலையினை தார்ச் சாலையாக மாற்றி அமைக்க அரசிடம் தற்சமயம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

33—

மேல்மிடாலம் கிராமத்திற்கு மீண்டும் பேருந்து இயக்குதல்

வினா எண் 33742—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் அருகில் மேல்மிடாலம் கிராமத்திற்கு இயக்கப்பட்ட நேசமணி போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து நிறுத்தப்பட்டதால் அதனை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

நேசமணி போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை நாகர்கோவில் அருகில் மேல்மிடாலம் கிராமத்திற்கு இயக்கப்பட்டு வந்த எந்தப் பேருந்தும் துண்டிக்கப்படவில்லை. மேலும் முன்பு இருந்ததைவிட அதிகமாக பன்னிரெண்டு சுற்றுக்கள் பயணிகளின் தேவைக்கேற்றவாறு இயக்கப்பட்டு வருகிறது.

34—

பழனி மலைக்குன்றில் மூலிகைச் செடிகள் நடுதல்

வினா எண் 36949—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி மலைக்குன்றில் வனத்துறையின் மூலம் மரங்களும் மூலிகைச் செடிகளும் நடப்படுகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

(அ) பழனி மலைக்குன்றில் மரங்கள் மற்றும் மூலிகைச் செடிகள் வனத்துறையின் மூலம் நடப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

35—

பட்டுக்கோட்டை ஏரிபுறக்கரைக்குச் செல்லும் பேருந்தை மீண்டும் இயக்குதல்

வினா எண் 37554—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், கோமல் வட்டம், பெரியார் காலனியிலுள்ள ஸ்ரீமாணிக்க நாச்சியார் அம்மன்கோயில் திருப்பணி நிதியுதவி இன்றி பாதியில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இவ்வாலயத் திருப்பணியைப் பூர்த்தி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கோமல் கிராமம், பெரியார் நகரில் அருள்மிகு

மாணிக்க நாச்சியாரம்மன் என்ற பெயரில் எந்த ஒரு ஆலயமும் இல்லை. எனினும், மேற்படி நகரில் ஆதிதிராவிடர் காலனியில் புல எண்.78/2ஏ-ல் அருள்மிகு காளியம்மன் என்ற பெயரில் ஒரு புதிய கோயில் கட்டப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. தவிரவும் புதிதாக கட்டப்பட்டு வரும் திருக்கோயில்களுக்கு நிதி உதவி வழங்க இந்து சமய அறக்கட்டளை சட்டத்திலும் வழிவகை இல்லை.

91—

கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் வருமான விவரம்

வினா எண். 26377—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத வருமானம் 10 ஆயிரத்திற்கு மேல் உள்ள திருக்கோயில்கள் எத்தனை?

(ஆ) எந்தெந்த கோயில்கள்?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத வருமானம் பத்தாயிரத்திற்கு மேல் வருமானம் உள்ள திருக்கோயில்கள் மூன்று உள்ளன.

(ஆ) (1) அருள்மிகு மெய்நின்ற விநாயகர் திருக்கோயில், ஆரல்வாய்மொழி, தோவாளை தாலுக்கா.

(2) அருள்மிகு நயினார் குலசேகர விநாயகர் திருக்கோயில்
3 ஆரல்வாய்மொழி, தோவாளை தாலுக்கா.

(3) அருள்மிகு இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம், சுசீந்தரம்.

92—

ஊஞ்சலூர் கோவில்களுக்கு திருப்பணி செய்தல்

வினா எண் 26665—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊஞ்சலூர் மாரியம்மன், ஸ்ரீசெல்லாண்டியம்மன் கோவில்களுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

ஊஞ்சலூர் மாரியம்மன், ஸ்ரீசெல்லாண்டியம்மன் கோயில்களுக்கு திருப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திருப்பணி குழு அமைக்கவும் திருப்பணி குறித்து மதிப்பீடு தயாரித்து நிர்வாக அனுமதி பெற்று திருப்பணி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

93—

பூஜை பொருட்கள் பொது ஏலத்தில் விடுதல்

வினா எண் 27315—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினவிற்கு விடையளிப்பாரா—

அருள்மிகு கொடுமுடி மருடேஸ்வர் வீரநாராயணப் பெருமாள் கோவிலில் எள், தேங்காய் மூடி ஆகியவற்றின் விற்பனையை பொது ஏலத்தில் விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

அருள்மிகு கொடுமுடி மருடேஸ்வரர் வீரநாராயணப் பெருமாள் கோயிலில் பக்தர்களின் நலனை முன்னிட்டும், திருக்கோவிலுக்கு வருமானம் அதிகரித்து வருவதை முன்னிட்டும், ஏலதாரர் கூடுதல் விலை கேட்பதாக வரும் புகார்களை தவிர்க்கும் பொருட்டும் எள்ளுப் பொட்டலம், தேங்காய் மூடி விற்பனை ஆகியவற்றை திருக்கோயில் நிர்வாகமே நேரடியாக நடத்தி வருகிறது.

94—

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண்கள் 27845, 27856—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

(1) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், அறந்தாங்கி நகர் அருள்மிகு கிருஷ்ணன் கோவில், கோட்டை முனீஸ்வரர் கோயில், ஆமாஞ்சி விநாயகர் கோயில், ஆளப்பிறந்தான் சாம்பன் கோயில், இராசேந்திரபுரம் கருப்பண்ண சாமி கோயில், ரெத்தினக்கோட்டை மாரியம்மன் ஆலயம், தர்மராஜன் வயல் மன்னமுடைய அய்யனார் கோயில், தாந்தாவி தண்டாயுதபாணி சுவாமி கோயில், தினையாகுடி காமாட்சியம்மன் கோயில், திருநாவூர் விஸ்வநாதசுவாமி கோயில், செங்கமாரி பிலிக்குத்தியம்மன் கோயில்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், தனிக்கோட்டை அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில், சுப்பிரமணியபுரம் ஆத்மநாதசுவாமி கோயில், சுப்பிரமணியபுரம் சிவகிரிநாதசுவாமி கோயில், கடவாக்கோட்டை விநாயகர் கோயில், பிராமணவயல் இடும்பர் கோயில், பூவற்றுக்குடி பிம்மர் சுவாமி கோயில், பேட்டிவயல் அய்யனார் கோயில், பிராமணவயல் பணிக்குத்தி அய்யனார் கோயில், பரவாக்கோட்டை பாலசுப்பிரமணியசுவாமி கோயில், பாக்குடி உச்சிப்பிள்ளையார் கோயில், பரமந்தூர் பிடாரியம்மன் கோயில் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(1) மற்றும் (2) இல்லை.

95—

சுசீந்திரம் கோயில் தேருக்குத் தேவையான துணிகள் வழங்குதல்

வினா எண் 35600—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்தரம் கோயில் தேரில் திருவிழா காலங்களில் அணிவிக்கப்படும் துணிகள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் புதிதாக தேவையான துணிகளை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சுசீந்திரம் அருள்மிகு தாணு மலையான் கோயில் தேருக்கு திருவிழாக் காலங்களில் அணிவிக்க புதிய தேர் பட்டுகள் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

96—

வாணியம்பாடி வட்டத்திற்குட்பட்ட அறநிலையத்துறை பகுதிகளை வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் சேர்த்தல்

வினா எண் **38494**—*டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்திற்குட்பட்ட அறநிலையத்துறைப் பகுதிகள் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதை மாற்றி வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திற்கு மீண்டும் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இச்செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

97—

இறால் வளர்ப்பு தொழில் பேட்டைகள் அமைத்தல்

வினா எண் **44449**—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இறால் வளர்ப்புத் தொழில் பேட்டைகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும்?

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) முதல் கட்டமாக சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், தருவைக்குளம் கிராமத்தில் சுமார் 50 ஹெக்டேர் நிலத்தில் பெரிய இறால் வளர்ப்பு தொழில்பேட்டை ஒன்று அமைக்க, 1994-95-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் தற்சமயம் துவக்கப்பட்டுள்ளன.

98—

மேட்டூர் மீன்பண்ணையில் மீன் உற்பத்தி மற்றும் வருமான விபரம்

வினா எண் 44467—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மீன்பண்ணையில் எவ்வளவு மீன் உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) இதனால் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): 1993-94 மற்றும் 1994-95 ஆகிய வருடங்களில் மேட்டூர் அணை மீன் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட மீன்குஞ்சுகள் எண்ணிக்கை மற்றும் அதன்மூலம் அரசுக்கு கிடைத்த வருவாய் கீழ்வருமாறு:—

ஆண்டு.	நிர்ணயிக்கப் பட்ட இலக்கீடு. (இலட்சத்தில்)	உற்பத்தி செய்யப் பட்ட மீன்குஞ்சுகளின் விவரம். (இலட்சத்தில்)	
		கட்லா	ரோகு
(1)	(2)	(3)	(4)
1993-94	300	208.25	183.50
1994-95 (30-11-1994 முடிய)	350	168.00	189.25

ஆண்டு.	உற்பத்தி செய்யப்பட்ட மீன்குஞ்சுகளின் விவரம். (இலட்த்தில்) மிரிகால்	கண்ணாடி கெண்டை.	மொத்தம்.	அரசுக்குக் கிடைத்த வருவாய். (ரூபாய் இலட்த்தில்)
(1)	(5)	(6)	(7)	(8)
1993-94	51.75	31.50	475.00	3.40
1994-95 (30-11-94 முடிய)	66.75	24.00	448.00	5.44

99—

வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்தைச் சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் **22300**—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம் சுற்றுலாத் தலமாக்கப்படுமா?

(ஆ) இல்லை என்றால் தனியார் அமைக்க அரசு உதவி செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

100—

சுற்றுலாத்துறைப் பேருந்துகளை தனியாருக்கு வாடகைக்கு வழங்குதல்

வினா எண் **23278**—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுற்றுலாத் துறையின் கீழ் இயங்கும் பேருந்துகளை தனியாருக்கு வாடகை அடிப்படையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பேருந்துகளை அக்கழகம் நடத்தும் சுற்றுலாக்களுக்கு அனுப்புவதுடன் மீதமுள்ள பேருந்துகளைத்

தனியார்களுக்கு அவர்களது விருப்பப்படி சென்றுவர தனிப்பட்ட சுற்றுலாக்களுக்காகவும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிவுற்றது.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. இரங்கல் தீர்மானங்கள்-தொடர்ச்சி

(உ) 12-3-1995 அன்று சுங்குவார் சத்திரம் அருகில் சாலை விபத்தில் பலர் உயிரிழந்தமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், சுங்குவார்சத்திரம் அருகில் தமிழகத்தில் இதுவரை நடந்திராத விபத்து, நடந்த விபத்துகளிலே மிகக் கோரமான விபத்தாக, 12-3-1995 அன்று நிகழ்ந்த ஒரு கொடூரமான சாலை விபத்தில் பலர் கோரமாக உயிரிழந்துள்ள செய்தியை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கீழப்பொடவூர் என்னும் கிராமத்திலிருந்து டிராக்டரில் சென்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் கோரமான முறையில் இறந்துள்ளனர்; பெரிதும் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

செய்தி அறிந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று அரசின் சார்பிலும், தன் சார்பிலும் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மலர்வளையம் வைத்துள்ளார்கள். மேலும், பாதிக்கப்பட்ட கிராமத்திற்கும், மருத்துவமனைக்கும் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு தன் ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்கள்; எல்லாவித உதவிகளையும் செய்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

மிகக்கொடிய இவ்விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து இரண்டு மணித்துளிகள் அமைதியாக நிற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

தனியார்களுக்கு அவர்களது விருப்பப்படி சென்றுவர தனிப்பட்ட சுற்றுலாக்களுக்காகவும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிவுற்றது.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. இரங்கல் தீர்மானங்கள்-தொடர்ச்சி

(உ) 12-3-1995 அன்று சுங்குவார் சத்திரம் அருகில் சாலை விபத்தில் பலர் உயிரிழந்தமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், சுங்குவார்சத்திரம் அருகில் தமிழகத்தில் இதுவரை நடந்திராத விபத்து, நடந்த விபத்துகளிலே மிகக் கோரமான விபத்தாக, 12-3-1995 அன்று நிகழ்ந்த ஒரு கொடூரமான சாலை விபத்தில் பலர் கோரமாக உயிரிழந்துள்ள செய்தியை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கீழப்பொடவூர் என்னும் கிராமத்திலிருந்து டிராக்டரில் சென்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் கோரமான முறையில் இறந்துள்ளனர்; பெரிதும் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

செய்தி அறிந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று அரசின் சார்பிலும், தன் சார்பிலும் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மலர்வளையம் வைத்துள்ளார்கள். மேலும், பாதிக்கப்பட்ட கிராமத்திற்கும், மருத்துவமனைக்கும் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு தன் ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்கள்; எல்லாவித உதவிகளையும் செய்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

மிகக்கொடிய இவ்விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து இரண்டு மணித்துளிகள் அமைதியாக நிற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

4. தகவல் கோரல்

முன் அனுமதியின்றி எழுப்புதல்

* **திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் ஒரு தகவல் வந்து கொண்டிருக்கிறது; நமக்கெல்லாம் கவலை அளிக்கக்கூடிய தகவல் வந்துகொண்டிருக்கிறது. சென்னை மத்திய சிறையிலே (மணிஅடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) இரங்கல் தீர்மானம்தான் கேட்டீர்கள் (குறுக்கீடுகள்) மேற்கொண்டு என்ன தகவல் இப்போது வந்துகொண்டிருக்கிறது என்று நீங்கள் என்னிடம் ஏதாவது அறிவிப்புக் கொடுத்துவிட்டு இங்கே வந்து கேட்டால், அதற்கு நான் பதில் அளிப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியும். (குறுக்கீடுகள்) இது நன்றாக இல்லை. (குறுக்கீடுகள்) இருந்தாலும், என்னுடைய கவனத்திற்கு நீங்கள் கொண்டுவந்து பிறகுதான் இதை எழுப்ப வேண்டும். அப்படி எதுவும் இல்லாமல் எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) இப்போது ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் விவாதத்திற்கு வர இருக்கிறது. அதில் பேசுகிறவர்கள் பேசலாம். (குறுக்கீடுகள்) பொதுவாக, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின்மீது நடைபெறுகிற விவாதத்தின்போது, வேறுவகையான விவாதம், அதற்கு முன்னர் அனுமதிப்பதுமில்லை. (குறுக்கீடுகள்)

திரு.எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: தகவல்கூட கோரக் கூடாதா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் நீங்கள் கொடுத்துவிட்டு, நான் அனுமதித்தால்தான் கேட்கலாம். இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமியும் திரு. தம்புசாமியும் என்னிடம் ஒரு அறிவிப்புக் கொடுத்து, அதையேகூட பொது விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று நான் அனுமதி மறுத்து இருக்கிறேன். நீங்கள் தகவல் எதுவும் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) இல்லை, அதை நீங்கள் வேறுவகையில் எழுப்பலாம். (குறுக்கீடுகள்) இப்போது, இந்த நேரத்தில் நீங்கள் எழுப்ப வேண்டுமென்றால் என்னுடைய அனுமதியை முன்கூட்டியே பெற்றிருக்கவேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சி (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதுவாக இருந்தாலும் என்னிடம் முன்அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்கிற முறையை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அந்த முறையை மீறி இப்போது நடந்து கொள்வதற்கு இயலாது. (குறுக்கீடு) நீங்கள் தகவல் கோருவதாக இருந்தால், என்னிடம் முன்கூட்டியே அனுமதி கேட்டிருக்க வேண்டும். அந்த முறையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற, முன்கூட்டியே என்னிடம் அனுமதி பெற்று எழுப்ப வேண்டும் என்கிற அந்த முறையைப் பின்பற்றுங்கள் என்றுதான் சொல்கிறேன்; உட்காருங்கள்.

முற்பகல் 11-20

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். இதிலே வேண்டாம். (குறுக்கீடு) பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு நிமிடம் அவகாசம் அளிக்க வேண்டும். பொடவூர் கிராமத்தில் ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை வேறுவகையில் நீங்கள் எழுப்புங்கள்; இப்போது முடியாது. (குறுக்கீடு) நோட்டீஸ் கொடுத்து விட்டுப் பேசுங்கள்.

5. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

திரு. வி.பி. சந்திரசேகர்

திரு. எஸ். அன்பழகன்

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்

திரு. எச். எம். ராஜு

திரு. ஜி. பழனிசாமி

திரு. எஸ். ஆண்டித் தேவர்

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

முன்அனுமதியின்றி எழுப்புதல்—தொடர்ச்சி.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு பிரச்சினையை எழுப்ப அனுமதி கேட்டேன். உலகத் தமிழ் மாநாடு விஷயமாக

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் அறிவிப்புக் கொடுத்துவிட்டுக் கேளுங்கள் (குறுக்கீடு). இப்போது உட்காருங்கள் (குறுக்கீடு). என்னிடம் அறிவிப்புக் கொடுத்த பிறகு உங்களை அனுமதிக்கிறேன்.

திரு. போளூர் வரதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொடவூர் விஷயத்தில் எதையும் பிரச்சினையாகச் சொல்லப் போவதில்லை. நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு அனுதாபச் செய்தி. (குறுக்கீடு) நாளைக்கு அறிவிப்புக் கொடுங்கள். அறிவிப்புக் கொடுத்து விட்டுக் கேளுங்கள். இப்போது உட்காருங்கள்.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம், திரு. வெ. பழனிசாமி.

* *திரு. வெ. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "1995 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்",

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பழனிசாமி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

* 609 முதல் 654 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதுவாக இருந்தாலும் என்னிடம் முன்அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்கிற முறையை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அந்த முறையை மீறி இப்போது நடந்து கொள்வதற்கு இயலாது. (குறுக்கீடு) நீங்கள் தகவல் கோருவதாக இருந்தால், என்னிடம் முன்கூட்டியே அனுமதி கேட்டிருக்க வேண்டும். அந்த முறையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற, முன்கூட்டியே என்னிடம் அனுமதி பெற்று எழுப்ப வேண்டும் என்கிற அந்த முறையைப் பின்பற்றுங்கள் என்றுதான் சொல்கிறேன்; உட்காருங்கள்.

முற்பகல் 11-20

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். இதிலே வேண்டாம். (குறுக்கீடு) பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு நிமிடம் அவகாசம் அளிக்க வேண்டும். பொடவூர் கிராமத்தில் ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை வேறுவகையில் நீங்கள் எழுப்புங்கள்; இப்போது முடியாது. (குறுக்கீடு) நோட்டீஸ் கொடுத்து விட்டுப் பேசுங்கள்.

5. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

திரு. வி.பி. சந்திரசேகர்

திரு. எஸ். அன்பழகன்

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்

திரு. எச். எம். ராஜு

திரு. ஜி. பழனிசாமி

திரு. எஸ். ஆண்டித் தேவர்

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

முன் அனுமதியின்றி எழுப்புதல்—தொடர்ச்சி.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு பிரச்சினையை எழுப்ப அனுமதி கேட்டேன். உலகத் தமிழ் மாநாடு விஷயமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் அறிவிப்புக் கொடுத்துவிட்டுக் கேளுங்கள் (குறுக்கீடு). இப்போது உட்காருங்கள் (குறுக்கீடு). என்னிடம் அறிவிப்புக் கொடுத்த பிறகு உங்களை அனுமதிக்கிறேன்.

திரு. போளூர் வரதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொடவூர் விஷயத்தில் எதையும் பிரச்சினையாகச் சொல்லப் போவதில்லை. நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒரு அனுதாபச் செய்தி. (குறுக்கீடு) நாளைக்கு அறிவிப்புக் கொடுங்கள். அறிவிப்புக் கொடுத்து விட்டுக் கேளுங்கள். இப்போது உட்காருங்கள்.

6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம், திரு. வெ. பழனிசாமி.

* *திரு. வெ. பழனிசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "*1995 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்*",

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பழனிசாமி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

* 609 முதல் 654 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்தின் நான்காவது ஆளுநர் உரையின் விவாதத்தில் திருப்பூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதாரண உறுப்பினர், கிணற்றுத் தவளையாக, நுனிப்புல் அரசியல் வாதியாக இருந்த எனக்கு இந்த மாமன்றத்தில் அங்கம் வகிக்கும் வாய்ப்பினைத் தந்த, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழியும் வாய்ப்பைத் தந்த எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணக்கம் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி), பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களின் நான்காவது உரையில் இந்தச் சட்டமன்றப் பேரவையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆற்றியப் பணிகளும், ஆற்றப் போகிற பணிகளும் குறித்து நாட்டு மக்களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் நிறைவு அளிக்கக்கூடிய பேருரையாக அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பேருரை அளிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் அமைச்சர் பெருமக்கள் பல்வேறு பணிகளை மனநிறைவோடு தங்கள் துறையின் மூலமாக செய்து முடித்து, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் கடந்த 3½ ஆண்டுக்காலத்தில் பல்வேறு பணிகளை ஆற்றி மனநிறைவோடு இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்கிற சூழ்நிலையில், கடந்த காலத்தினுடைய பல்வேறு சூழ்நிலைகளை நாம் நினைத்துப் பார்க்கிறோம். இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில் இந்த அரசின் முக்கியமான பிரச்சினைகளை நாம் எப்படி முடிக்கப்பபோகிறோம் என்பது பெரும் சவாலாக இருந்த சூழ்நிலையைப் பார்க்கிறோம். பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகியவர்களின் அரசுகளைக் காட்டிலும் கடுமையான நிதிப்பற்றாக்குறையைச் சுமக்கிற சூழ்நிலையில் இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டது. எங்களை போன்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் அறிவிக்கப்பட்ட வேட்பாளர்கள் எங்கள் தலைவி அவர்களிடம் பல்வேறு குறைபாடுகளைப் போக்கித் தருகிறோம் என்று பல்வேறு வாக்குறுதிகளைத் தந்து இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்கிற சூழ்நிலையில், நிதிநிலையில் 1,222 கோடி ரூபாய் பற்றாக்குறை என்ற பெரிய பளுவைத் தாண்டி இவ்வளவு பெரிய பணிகளை செய்து முடிக்க முடியுமா என்ற மிகப் பெரிய கேள்விக் குறியோடு அமர்ந்திருந்த அந்தச் சூழ்நிலையை ஒப்பிட்டுப் பார்க்கிறோம்.

முற்பகல் 11-25

துருப்பிடித்த அரசு இயந்திரம், நிதிநிலைமைப் பற்றாக்குறை மிகு நிலைமை, நாட்டிலே சட்டம்-ஒழுங்கு சீர்குலைவு, ஆகிய கடுமையான பழுதுகள், இன்னும் சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்ததைப் போல, இந்த அரசுக்கு நடந்து வந்த பாதை, மலர்பாதைகள் அல்ல, முட்புதர்கள் என்று சொன்னார்களே, அதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவிற்கு கடுமையான பளுவை நாம் சந்திக்கிற சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டன. ஆகவே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா என்ற கேள்விக்குறிகளோடு இருந்த கடுமையான நிதி ஆதாரங்களைச் சீரமைத்து, பழுதுபட்டுக் கிடந்த துருப்பிடித்த அரசு இயந்திரத்தை சீராக்கி, செம்மையான நிர்வாகத்திறமை, சீரான நடவடிக்கை, சிக்கனத்தைக் கையாளுகிற தன்மை ஆகிய பணிகளின் மூலமாக கடுமையான வரிச்சுமையை மக்களுக்கு உருவாக்காமலும் பொருளாதாரப் பற்றாக்குறையை சீரமைத்தும், சிறந்த நிர்வாகத் திறமையின் மூலமாக, இந்தியாவில் தமிழகம் ஒரு சிறந்த மாநிலமாக இன்றைக்கு வீற்றிருக்கிறது என்று சொன்னால், அது எங்களுடைய தாய், புரட்சித்தலைவி அவர்கள் உருவாக்கியதுதான் (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு மட்டிலும் அல்ல. இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் ஆட்சி நடைபெறுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களாக நாம் அமர்ந்திருக்கிறோம் என்று சொன்னால், நாம் நினைத்துப் பார்க்க முடியுமா? 1989 ஆம் ஆண்டுக்குப் பின்னால், கழகம் இரண்டாகப் பிளவுப்பட்டு, இரட்டை இலைச் சின்னத்தை இழந்த இந்தக் கழகம் சின்னாபின்னமாகிவிடும், சிதறிவிடும் என்றெல்லாம் எக்காளமாக, ஏளனமாகப் பேசியவர்கள், வாய்விட்டுச் சிரித்தவர்கள், நையாண்டி செய்தவர்கள் ஆகியவர்களுடைய மத்தியிலே, இந்தியத் துணைக் கண்டத்திலே உடைந்த கட்சியை ஒன்றாக உருவாக்கிய வரலாறு எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்குத்தான் உண்டு என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

அதே போல், இழந்த இரட்டை இலைச் சின்னத்தை-இந்திய நாட்டிலுள்ள பல்வேறு கட்சிகள் சிதறுண்டு, பல்வேறு சின்னத்தை இழந்து இருந்தாலும், இழந்த சின்னத்தை-மீண்டும் பெற்று, இந்திய நாட்டினுடைய அரசியலிலே மகத்தான ஒரு வரலாற்றைப் படைத்தவர், புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இன்றைக்கு நாடு அறிந்து கொண்டு இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). இன்றைக்கு கிண்டலும், கேலியும் பேசியவர்கள், சிதறுண்டு, சின்னாபின்னப்பட்டு, திக்குத் தெரியாமல் போகிற சூழ்நிலையைக் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த

மாமன்றத்திலே வெளியிலே, எவ்வளவோ இயக்கங்கள் உடைபட்டு சின்னத்தை இழந்து, மீண்டும் அதை பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், இந்திய வரலாற்றிலே ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்றேற்றக் கழகத்தினுடைய அரசை மீண்டும் உருவாக்கி, இன்றைக்கு ஒரு கம்பீரம் மிக்க தலைமையாக, நாட்டு மக்கள் வரவேற்கின்ற தலைமையாக—தலைவியாக—இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இழந்த சின்னம், மீண்டும் அரசு பொருளாதாரச் சுமைகளைக் களைந்து எறிந்து, சீரான நிர்வாகத்தை உருவாக்கி, எங்களை எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆக்கி-கிணற்றுத் தவளைகளாக நுனிப்புல் மேய்கிற அரசியல்வாதிகளாக இருந்த எங்களை சட்டமன்ற உறுப்பினர்களாக ஆக்கி—இங்கே அமர வைத்து, அழகு பார்த்துக் கொண்டு இருக்கும் ஒரே தலைவி, இந்திய வரலாற்றிலே உன்னதத் தலைவி, எங்கள் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே நாங்கள் நினைத்துப் பார்க்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி).

அது மட்டுமல்ல. இந்த 3 ½ ஆண்டுக் காலத்தில், பல்வேறு இன்னல்கள், இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலே, முதுகிலே ஏறி குத்தியவர்கள் மத்தியிலே, பல்வேறு அரசியல் பிரச்சினைகளை உருவாக்கியவர்கள் மத்தியிலே செயற்கைப் போராட்டங்களை உருவாக்கியவர்கள் மத்தியிலே, கம்பீரத் தலைமையோடு, ஆணித்தரமான தலைமையோடு—இந்தஅரசை இயக்குவதோடு மட்டுமல்ல—எங்களுடைய இயக்கத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிற இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களை, இன்றல்ல எந்தக் காலத்திலும், அசைக்க முடியாத கம்பீரமிக்க தலைவி என்பதை இந்த நாடு நிரூபித்துக் காட்டியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). அப்படிப்பட்ட தலைவி, இன்றைக்கு இந்திய நாட்டின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கக்கூடிய அளவிற்கு தொன்மை வாய்ந்த பழமை வாய்ந்த தமிழ்மொழி, பண்டைத் தமிழ்மொழி, திருவள்ளுவரும், கம்பரும், பாரதியும், பாரதிதாசனும் மெருகூட்டிய தமிழுக்கு, பேரறிஞர் அண்ணாவும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் மெருகூட்டிய அருமைத் தமிழுக்கு, புதிய மெருகூட்டுகிற வகையிலே, இந்த ஆண்டு பிறக்கிற நேரத்தில், தமிழ் மணத்தோடு பிறந்தது என்கிற வகையிலே, ஜனவரி மாதத்தில், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்பாக, உலகம் வியக்கிற வகையிலே, நடத்திக் காட்டியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

சின்னஞ்சிறிய நெருக்கடியான மாவட்டம் தஞ்சைமாவட்டம். தஞ்சைமாவட்டத்திலே உலகத் தமிழ் மாநாடு நடக்கின்றபோது,— இயற்கையாக நடக்கின்ற சம்பவங்களை வைத்து அரசியல் நடத்தியவர்கள்,—

இதையும் வைத்து அரசியல் நடத்த நினைத்தவர்கள், மீண்டும் அரசியல் நடத்துவதற்கு அருமையான வாய்ப்பு என்று நினைத்து, தஞ்சையிலே மாநாடா, என்று கேட்டார்கள். சின்னஞ்சிறிய தஞ்சைத் தரணியிலே 50 லட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்களைக் கூட்டி எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு பெரும் அறிஞர்கள், தலைவர்கள் வந்த நேரத்திலே, எந்தவிதமான அசம்பாவிதமும், பிரச்சினைகளும் தோன்றாதவண்ணம், திட்டமிட்ட செயல்பாடுகள், தஞ்சை மக்களுக்கு பயன்தரும் வகையில் அடிப்படை வசதிகள், பார் போற்றும் வண்ணம், உலகத்தில் வாழும் 10 கோடி தமிழ் மக்கள் வியந்து பாராட்டும் வண்ணம், விண்ணதிர தமிழ் மாநாட்டை நடத்திக் காட்டி, தமிழுக்கு அணி சேர்த்தவர் எங்களுடைய இமயம், இதய தெய்வம், புரட்சித்தலைவி அவர்கள்தான் என்பதை இந்த மாநாடு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

தஞ்சையிலே உலகத் தமிழ் மாநாடா? இது நடக்குமா? தஞ்சை தாங்குமா? வேறு ஏதாவது நடக்காதா? ஏதாவது பிணம் விழாதா அதை எடுத்து அரசியல் நடத்தலாம். யாராவது மயக்கமுற்று விழ மாட்டார்களா? அதை எடுத்து அரசியல் நடத்தலாம் என்ற ஏக்கத்தோடு காத்துக்கொண்டிருந்தவர்கள் அங்கே சட்டம்-ஒழுங்கு பாதுகாக்கப்பட்டது மட்டுமல்லாமல், சீராக, செம்மையாக எத்தனையோ லட்சம் மக்கள் கலந்துகொண்ட அந்த 5 நாட்களில் எந்தவித அசம்பாவிதமும் இன்றி வந்த மக்கள் அனைவருக்கும் தங்கும் இட வசதி, மலிவு விலை உணவு, ஏன் குடிநீர் கூட பாதுகாக்கப்பட்ட பாக்கெட்டில் அடைக்கப்பட்ட குடிநீர், மருத்துவ வசதி என்று அனைவரும் அதிசயித்த வகையிலே அனைத்து ஏற்பாடுகளும் சீராக செய்யப்பட்டன. நிதியாதாரங்கள் அதிகமாக செலவிடப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகளை எதிர்கட்சியினர் கூறினாலும் அத்தனை நிதியாதாரங்களும் மக்களுடைய அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்குத்தான் என்பதை நிரூபித்து காட்டுகின்ற வகையிலே மேம்பாலங்கள், சாலையோர வசதிகள், சுற்றுச்சாலைப் போக்குவரத்து, அந்த ஆற்றின் குறுக்கே ராணுவத்தின் மூலமாக அமைக்கப்பட்ட தொங்கும் பாலம், காண்போர் அதிசயிக்கும் வகையிலே தஞ்சை அரண்மனை, சரஸ்வதி மகால் புதிப்பிக்கப்பட்டு, புதிய பொலிவோடு திகழக்கூடிய அளவிற்கு நாடெங்கிலும் கலந்துகொள்ள வந்திருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் தங்க புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள், பல்வேறு வகையான அடிப்படை வசதிகள் மட்டுமல்லாமல், வந்தோர்கள் வியக்கக்கூடிய அளவிற்கு சிறப்பான வசதிகள் செய்து கொடுத்தது மட்டுமல்லாமல், உலகத் தமிழ் மாநாட்டில் வரலாற்றில் இதுவரை யாரும் செய்ய முடியாத அளவிற்கு சிறப்பான

முறையிலே செய்து கொடுத்து, இன்று உலகத்தினுடைய தமிழர்கள் அத்தனை பேரும் தங்கள் நெஞ்சத்திலே பூஜிக்கக் கூடிய அளவிற்கு மிகச் சிறப்புகளை உருவாக்கினார்கள்.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு சங்கத் தமிழ் போன்ற முப்பெரும் தமிழோடு சேர்த்து அறிவியல் தமிழையும் இணைத்து, நாட்டினுடைய விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ற பிரகாரம், வளர்ந்து வருகிற விஞ்ஞானத்திற்கு ஏற்ற முறையில் மொழியும் சிறப்பு பெற வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தோடு விஞ்ஞானத் தமிழ் என்ற தமிழையும் அறிவித்து, தமிழுக்கு ஒரு புதிய மெருகூட்டி, தமிழகத்தினுடைய தமிழ்ச் சரித்திரத்திலே நிரந்தரமாக இடம் பிடித்து, உலகத்திலே உள்ள அத்தனை தமிழர்களுக்கும் இன்றைக்கு எடுத்துக்காட்டாக, சிறப்புக்கு உரியவராக, ஒப்பற்றவராக, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வீற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தமிழ் மாநாட்டில் அனைத்தையும் பார்த்துவிட்டோம். வண்ண வண்ணக் காட்சிகள், அலங்காரங்கள், அடிப்படை வசதிகள் என்று பல்வேறு பார்த்தாலும், அன்னைத் தமிழ் தாயைப் பார்க்கவில்லையே என்ற ஏக்கம். அந்த ஏக்கத்தையும் என் தாய், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய திருவுருவத்தைப் பார்த்து (மேசையைத் தட்டும் ஒலி) அன்னைத் தமிழ்த் தாயே அங்கம் வகிப்பதைப் போல சிறப்பான முறையிலே இந்த நிகழ்ச்சியை அமைத்துக் காட்டியிருந்தார்கள் என்பதை நான் இன்றைக்கு பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு தங்கத் தமிழ் மட்டுமல்லாமல், இந்திய நாட்டிலே மிக முக்கிய பிரச்சினையாக இருந்த பிரச்சினை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பரச்சினை. இந்திய நாடு சுதந்திரம் அடைந்திருக்கிறதே தவிர, தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் சுதந்திரம் அடைந்திருக்கிறார்களா என்று சொன்னால், அது கேள்விக்குறி என்று டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, இன்றைக்குப் பல்லாண்டுகள் உருண்டோடிவிட்டாலும்கூட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், சமுதாயத்திலே, மேட்டுக்குடி மக்களால் இன்றைக்கு அவர்கள் கொத்தடிமைகள் போல இருக்கின்ற சூழ்நிலையை பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே அவர்கள் வாழ்க்கை துளிர்விடவேண்டும். பட்டுப்போன வாழ்க்கை சிறப்பாக அமையவேண்டுமென்று சொன்னால், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, டாக்டர் அம்பேத்கார் அவர்களும், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் கட்டிக் காத்த இட ஒதுக்கீடு நிலையை அரசியல் அமைப்பிலே சேர்க்கப்பட வேண்டுமென்ற நிலை அமையவேண்டும். ஆகவே அந்த சட்டப் பாதுகாப்பை உருவாக்கவேண்டிய நிலையில்,

அதன் காரணமாக அந்தப் பிரச்சினை கொழுந்துவிட்டு எரிகின்ற நேரத்திலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நாங்கள் பாடுபடுகின்றோம் என்று சொல்லுகின்ற தமிழகத்தினுடைய அரசியல்வாதிகள் எந்த அளவிற்கு நடந்துகொண்டார்கள் என்பதை இன்றைக்கு காலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறது. ஆகவே தாழ்த்தப்பட்ட,

முற்பகல் 11.35

பிற்படுத்தப்பட்ட மக்களுடைய 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்காக ஒரு தனித் தீர்மானத்தை 93 டிசம்பர் திங்கள் 30-ஆம் நாள் தமிழகத்தினுடைய வரலாற்றிலே ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கும் விதத்தில் தீர்மானமாக நிறைவேற்றி, ஒன்பதாவது அட்டவணையிலே ஏற்றப்படவேண்டும். மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கபட்டன. அனுப்பி வைத்த நேரத்தில் இந்த மாமன்றத்தில் ஒத்துழைப்பு கொடுத்த பல்வேறு அரசியல் கட்சிகள், அதை ஒட்டுமொத்தமாகப் போராடிப் பெறுவதற்கு உண்டான முயற்சிகளை மேற்கொள்ளாமல் இந்தப் பிரச்சினையில் அரசு தோற்றுப் போய்விட வேண்டும். இதிலே அரசியல் ஆதாயங்கள் தேடப்பட வேண்டும். அந்த அரசியல் ஆதாயத்தில் குளிர் காயவேண்டுமென்று தனித் தனியாக பல்வேறு குரலைக் கொடுத்தது மட்டுமல்லாமல், டெல்லியிலே போராட வேண்டியவர்கள், தமிழகத்தினுடைய தெருக்களிலே போராட்டம் நடத்துகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நாம் பார்த்துவிட்டோம். ஆனால் அரசால், அசராமல் டெல்லியிலே அனைத்துக் கட்சிகளுடைய தலைவர்களைக் கூட்டிய நேரத்தில், ஒரு நாட்டினுடைய முதலமைச்சர் ஒரு முக்கிய பிரச்சினை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பிரச்சினை, இந்திய நாட்டினுடைய மெஜாரிட்டி மக்களுடைய பிரச்சினை, ஒடுக்கப்பட்ட மக்களுடைய பிரச்சினை, கொத்தடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முதலமைச்சருடைய தலைமையில், அரசியல் மன மாச்சிரியங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டு நேரிடையாக சந்தித்து முடிவு பெறலாம் என்ற ஒரு ஜனநாயகப் பண்பாடு இல்லாமல், வர மறுத்தவர்கள் எத்தனை எத்தனை எவ்வளவு பெரிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்பதும் வர மறுத்தவர்கள் அரசியல் ஆதாயத்திற்காக என்னென்ன நாடகம் ஆடினார்கள் என்பதும் நாடு மிகத் தெளிவாக அறிந்து கொண்டிருக்கிறது. ஆனால் அழைத்து வருகை தந்த தோழமை கட்சிகள் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களையெல்லாம் அழைத்து டெல்லி சென்று, பாரதப் பிரதமரை சந்தித்து அவரிடத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுடைய, ஒடுக்கப்பட்ட மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளை ஆதாரத்தோடு எடுத்துக்காட்டி, அவைகளை பாரதப் பிரதமர் ஏற்றுக் கொண்டு, இன்றைக்கு அரசியல்

சட்டத்தில் தகுந்த பாதுகாப்பு தந்து, 9-வது அட்டவணையில் சேர்க்கக் கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இது தமிழகத்தினுடைய தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மட்டும் அல்ல, இந்திய நாட்டிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி), ஒரு வரப்பிரசாதம் மட்டும் அல்ல, அத்துணை பேரும், பூரித்து பாராட்ட வேண்டிய ஒரு நிகழ்ச்சி என்பதையும், சரித்திரம் பெற்ற நிகழ்ச்சி என்பதையும், நான் இந்த நேரத்திலே நினைத்துப் பெருமைப் படுவதோடு, அப்படிபட்ட ஒரு தலைவியை, நான் தலைவியாக ஏற்றுக் கொண்டிருப்பதை, என் வாழ்க்கையில் பெரும் பாக்கியமாக கருதிக் கொண்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல. இந்திய நாட்டினுடைய வரலாற்றிலே எங்குமே இல்லாத அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, பல்வேறான சலுகைகளை இந்த அரசு தொடர்ந்து அளித்து வந்திருக்கிறது என்பதை அண்மையிலே கவர்னர் உரையிலே குறிப்பிட்டுக் காட்டியதை, இம்மாமன்றத்தினுடைய அங்கத்தினர்கள் படித்துப் பார்த்திருப்பார்கள்.

அது மட்டும் அல்ல, தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் சமூகத்திலே அந்தஸ்து பெற வேண்டும். சரியான வாழ்க்கை வசதி அளிக்கப்பட வேண்டும் என்றால், அவர்கள் பொருளாதாரத்திலே உயர வேண்டும். கல்வித் துறையிலே முன்னேற வேண்டும். ஆகவே கல்வித் துறையிலே முன்னேறுவதற்குண்டான அடிப்படை 69 சதவீத இட ஒதுக்கீடு. ஆகவே இந்த அளவிலே உயர வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இன்றைக்கு இந்த கவர்னருடைய பேருரையிலே ஆதி திராவிட மக்களுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல் தமிழகத்தினுடைய ஆதிதிராவிடர்களுடைய பல்வேறு பகுதிகளுக்கு சாலை வசதி, வீட்டு வசதி, அதேபோன்று இடுகாட்டு வசதி, இடுகாட்டிற்கு செல்லுகிற பாதை வசதி என்றும், வீட்டுக்கு ஒரு விளக்கு என்றும் பல்வேறு திட்டங்களை அறிவித்ததோடு மட்டும் அல்லாமல், அவர்கள் நாட்டிலே பொருளாதார வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 200 தொழில் பேட்டைகள், 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நினைத்தே பார்க்க முடியாத, இந்திய நாட்டினுடைய வரலாற்றில், எந்த மாநிலத்திலும் அறிவிக்க முடியாத ஒரு அருமையான திட்டம், தாழ்த்தப்பட்ட மக்கள் மாபெரும் பொருளாதார வளர்ச்சி பெறவேண்டும், அவர்கள் கல்வியிலே மட்டும் அல்லாமல் பொருளாதாரத்திலும் உயர்ந்தால்தான், ஜாதி, மத இன பேதங்கள் ஒழியும் என்ற அடிப்படை நோக்கத்தோடு அறிவிக்கப்பட்டிருக்கிறது. 200 தொழிற்பேட்டைகள், 80 கோடி

மதிப்பீட்டில் ஈரோட்டிலும், திருப்பூரிலும் கட்டுமான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நான் இந்த நேரத்திலே நினைத்துப் பார்க்கிறேன். ஆகவே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய இதய தெய்வமாக வீற்றிருக்கிற புரட்சித் தலைவி ஆயிரம் ஆதிதிராவிட இளைஞர்களுக்காக ஆயிரம் லாரிகள், 10 ஆயிரம் ஆதிதிராவிட மகளிருக்காக சுய வேலைவாய்ப்பு வசதிகள் என்று அறிவிக்கிற வகையில் பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு அறிவித்துள்ளார்கள். நாடு சுதந்திரம் அடைந்து வந்த காலத்திலேயிருந்து, தீண்டாமையாக, தீண்டத்தகாதவர்களாக வாழுகின்ற அவர்களுடைய வாழ்க்கையில், ஒரு விடிவெள்ளியாக கருதுகின்ற வகையில் ஆதித்திராவிட, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை இந்த அரசு அறிவித்தது, இன்றைக்கு இதயம் உள்ளவரை, ஒவ்வொரு ஆதிதிராவிட மனிதனும் தன்னுடைய உயிர் உள்ளவரை, இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவியை (மேசையைத் தட்டும் ஒலி) நினைத்து போற்றி துதிக்கக் கூடிய வகையிலே அமைந்திருக்கின்றன.

அது மட்டும் அல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்திலே ஒன்றை நினைத்துப் பார்க்க விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்பேற்ற நேரத்தில் நாட்டினுடைய, தொழில் துறையினுடைய நிலை எந்த நிலையில் இருந்துக் கொண்டிருந்தது என்பதை நான் நினைத்து பார்க்கிறேன். குறிப்பாக தமிழகத்திலே ஒரு காலத்திலே தொழில் தொடங்கவேண்டும் என்றால், பல்வேறு தொழில் அதிபர்கள், வெளி மாநிலத்திலேயிருந்து வந்த தொழில் அதிபர்கள், வெளிநாட்டிலேயிருந்து வந்த தொழில் அதிபர்கள் கொஞ்சம் அஞ்சுகிற நிலையிலே கடந்த காலத்திலே ஆட்சி செய்தவர்கள் அந்த நிலையை உருவாக்கியிருந்தார்கள். ஒரு வன்முறை மிக்க மாநிலமாக, விடுதலைப் புலிகளுடைய அட்டகாசத்தால் பாதுகாப்பற்ற நிலையில் இருந்த தமிழகம், தொழில் துறையில் பின் தங்கிய நிலையில் இருந்த தமிழகம் 13-வது இடத்திலிருந்த தமிழகத்தை இன்றைக்கு சிறந்த முறையில் 3-வது இடத்திற்கு கொண்டு வருவதற்கு தொழில் துறையிலே பல்வேறு புரட்சிகரமான பணிகளைச் செய்து முடித்ததை நான் இந்த நேரத்திலே நினைத்துப்பார்க்க விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, 18 மாநில அரசு நிதி உதவி கழகங்களில் 12 மாநில அரசு நிதி உதவி கழகங்கள் பின்னடைந்த நிலையிலே இருந்த நிலையில் இன்றைக்கு தமிழகம் முனைப்பாகச் செயல் பட்டு 54.8 சதவீதம் என்ற அடிப்படையில் தன்னிறைவுப் பெற்றது மட்டும் அல்லாமல் தொழில் துறையிலேயும் முன்னேறி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற சான்றாக இன்றைக்கு அமைந்திருக்கிறது.

1995 மார்ச் 14] [திரு. வெ. பழனிசாமி]

முற்பகல் 11-40

ஆக இருந்த நிலையில், தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த அரசினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்ட சில வாரங்களில் முதன் முதலாகச் செய்ததை நான் நினைத்துப் பார்க்கிறேன். தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்க வேண்டும், தொழில் வளம் பாதுகாக்கப்பட்டால் தொழிலாளர்களுடைய நலம் பாதுகாக்கப்படும், வேலைவாய்ப்பு பெருகும் என்கிற அடிப்படை நோக்கத்தோடு, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியை சிறப்பாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டதும், அனைத்து தொழில் அதிபர்களை எல்லாம் அழைத்துப் பேசியதையும் நான் இந்த நேரத்திலே நினைத்துப் பார்க்கிறேன். அதனுடைய அடிப்படையாக இன்றைக்கு தொழில் வளர்ச்சி சிறப்பாக தமிழகத்திலே இருப்பதோடு மட்டுமல்லாமல் வெளிநாட்டிலே இருக்கக்கூடியவர்கள்கூட தமிழகத்திலே தொழில் தொடங்கலாம் என்ற ஒரு ஆர்வத்தை உருவாக்கக் கூடிய அளவுக்கு இங்கே தொழில் அமைதி, சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு, தொழில் வளர்ச்சிக்குண்டான அரசினுடைய ஆதரவுகள் உரிமைகள் உடனடியாக வழங்குகிற தன்மை ஆகியவை கொண்ட ஒரு சிறப்புக்குரிய தொழில் துறையிலே சிறந்த மாநிலமாக எதிர்காலத்திலே விளங்க முடியும் என்கிற நம்பிக்கையோடு அனைத்து தொழில் அதிபர்களும் இங்கே வரக்கூடிய நல்ல சூழ்நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. மாநில தொழில் வளர்ச்சியில் சிறக்கும் வகையில் பெரிய தொழிலதிபர்கள் அனைத்து ஆலோசனைகளையும் வழங்கியது மட்டுமல்லாமல் சிறு தொழில் துவங்குவதற்கு அனைத்து அனுமதியும் ஒரே இடத்திலே பெறும் வகையிலே உயர்மட்ட குழுவை நியமித்து தொழில் துவங்க வருபவருக்கு உடனடியாக அனுமதி, நிலம், நீர் கிடைக்ககூடிய வசதியும், உடனடியாக மின்னிணைப்பு அனுமதியும் தந்து தொழில் வளர்ச்சியிலே ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்குவதற்குண்டான முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவாக இந்தத் தமிழகம் இந்திய நாட்டிலே மிகப் பெரிய தொழில் கேந்திர தமிழகம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு எதிர்காலத்திலே உருவாகின்ற வாய்ப்பு இருக்கிறது.

5 ½ கோடி மக்களுடைய எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கிற தலைமை பொறுப்பை ஏற்றிருக்கிற எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒவ்வொரு சிந்தனையும், தொலை நோக்குப் பார்வை, எதிர்கால சிந்தனை, எதிர்கால சமுதாயத்திற்காக ஆற்றுகின்ற கடைமை என்ற உணர்வோடு இப்படிப்பட்ட அற்புதமான தொழில் துறை திட்டங்கள் மூலமாக எதிர்காலத்திலே சிறந்த தொழில் கேந்திரம் தமிழகம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிச்சயமாக வருவதற்குண்டான வாய்ப்பு இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, தொழில்துறை உருவாக்கப்பட வேண்டும் என்றால் அதற்கு அடிப்படை மின்சாரம். மின்சாரத் துறையில் சிறப்புக்குரிய மாநிலமாக பல்வேறு திட்டங்களை இந்த ஆளுநர் உரையிலே அறிவித்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நான் இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், இந்த மின்சார திட்டத்தை பொறுத்தவரையில் குறிப்பாக இந்த அரசு பொறுப்பு ஏற்கின்ற நேரத்திலே பழுதடைந்திருந்த பல்வேறு மின்சார நிலையங்களை சீரமைத்து இருக்கிறதை நீங்கள் தெளிவாக அறிவீர்கள். உதாரணமாக கடந்த காலத்தினுடைய ஆட்சியில் பழுதடைந்த மின்சார நிலையங்களை விற்றுப் பார்த்தவர்களைத்தான் நாம் இந்த பேரவையில் பார்த்திருக்கிறோம். ஆனால் பழுதடைந்த காடம்பாறை மின் திட்டத்தை மீண்டும் சீரமைத்து சிறந்த நிர்வாகத் திறமையின் மூலமாக இயக்குகின்ற தன்மை இந்த அரசினுடைய காலத்திலேதான் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதே போல சமயநல்லூர் மின்சார நிலையம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த காலத்திலே சமயநல்லூர் மின்சார நிலையத்தை எப்படி விலை பேசி விற்றார்கள் என்பது எல்லாம் இந்த மாமன்றத்திலே தெளிவாக வந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இனறைக்கு இந்தியாவிலே வியந்து போற்றும் வண்ணம் துரிதமாக திட்டமிட்டு வட சென்னை அனல் மின்நிலையம் தனது உற்பத்தியைத் துவங்கிச் செயல்படுவதும் நமது ஆட்சியிலேதான்.

எதிர்காலத்திலே 30,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மின் திட்டங்கள் மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காகவும் இன்றைக்கு பணிகள் நிறைவேற்றப்பட்டு ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டிருக்கின்றன. இம்மின்சாரத் திட்டங்கள் முழுமையாக நிறைவேற்றப்படுமானால் எத்தனை ஆண்டுகளானாலும் தமிழகத்திலே மின்சார பற்றாக்குறையே இல்லை என்ற அளவுக்கு மிகச் சிறப்பான முறையிலே இன்றைகு திட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே 30,000 கோடி ரூபாயிலே உருவாக்கப்பட்ட இந்த பல்வேறு மின்சார திட்டங்களுக்கு மத்திய அரசு தன்னுடைய கடமையை முழுமையாக நிறைவேற்றுகின்ற வகையில் ஒப்புதலைத் தருவது மட்டுமல்லாமல் இதைத் தனியார்கள் மூலமாக உருவாக்குகின்ற சூழ்நிலையும் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசினுடைய பொருளாதாரத்தையே நினைத்து நாம் செய்ய முடியுமா என்று ஏங்கி செய்து முடிக்க முடியாத சூழ்நிலை இருந்தும்கூட நாட்டினுடைய பணிகளை வீணாக்குவதைக் காட்டிலும் முடிந்த வரையில் யார் செய்கிறார்களோ அவர்களைத் தட்டிக் கொடுத்து ஆதரவைத் தந்து அரசின் மூலமாக சிறப்பான பணிகளைச் செய்ய வேண்டும் என்ற

நோக்கத்தோடு இன்றைக்கு தனியார்களுக்கும் மின்சார உற்பத்தியைச் செய்கின்ற வாய்ப்பு எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதும் அது இந்த மாநிலத்து மக்களுக்கு கடந்த காலத்திலே ஒரு வரப்பிரசாதமாக அமையக்கூடிய அளவுக்கு தொழில் துறையும், மின்சாரத் துறையும் இணைந்து பல்வேறு நல்ல திட்டங்கள் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு மீனவர்களுடைய பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அண்மையிலே கோவை மாவட்டத்தின் அருகில் காட்டிலே வீரப்பன் என்ற குற்றவாளி 3 பேர்களை பிடித்து வைத்து இந்த நாட்டிற்கு இந்த மாநிலத்திற்கே ஒரு பெரிய சிக்கலான பிரச்சினையை உருவாக்கிய நிகழ்ச்சியை நாம் பார்த்தோம். 28 நாட்கள் தமிழகத்தினுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உற்றுப் பார்த்து அதற்குண்டான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் அன்றாடம் வழங்கி வருகிறார்கள். காவல் துறை பம்பரம் போல் பணியாற்றுகிறது. மாவட்ட ஆட்சியாளர்களுடைய நிர்வாகம் அதற்காக திறம்பட பணியாற்றிக்கொண்டிருக்கிறது. 28-வது நாள் 3 பேரும் மீட்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தி தமிழக மக்கள் மத்தியிலே அவர்களுடைய இதயங்களிலே பாலூட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) நிகழ்ச்சியாக அது நடந்திருக்கிறது. காரணம் 3 உயிர்கள் அல்ல, இன்று தமிழகத்தினுடைய மானப் பிரச்சினை. . .

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. அழகிரி.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், 3 பேர் மீட்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அன்றைய செய்தியிலே அந்த 3 பேர் தப்பி வந்ததாகத்தான் பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையிலும் நான் ஒரு கருத்தைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அந்தப்

பகுதிக்கும், அங்கே சில இடங்களுக்கும் நாங்கள் சென்றோம். அந்தப் பகுதியிலே அதிரடிப்படைகள் தீவிரமாக கண்காணித்து வீரப்பனுடைய கும்பலைத் துரத்துகிறபோது இவர்கள் அனைவரையும் பத்திரமாக அந்தப் பகுதியிலிருந்து கொண்டு வந்தார்கள் என்ற செய்திதான் உண்மையான செய்தியே தவிர மற்ற பத்திரிக்கைகளில் வருகின்ற தவறான செய்திகளை உங்களைப் போன்றவர்கள் இன்றைக்கு சுட்டிக்காட்டிக் கூறுவதை நான் வண்மையாகக் கண்டிக்கிறேன். காரணம் அதுபோன்ற தவறான செய்திகள் ஒரு சில பத்திரிக்கைகளில் ஒன்றிரண்டு செய்திகள் வந்திருக்கின்றன. அவர்கள் தாங்களாகவே தப்பித்து வரவில்லை. அதிரடிப்படைகள் சுற்றி சூழ்ந்ததற்குப் பிறகு அதிரடிப்படையினுடைய அதிரடி நடவடிக்கைகளின் காரணமாகத்தான் வீரப்பனோடு 4 பேர் தப்பிச் சென்று விட்டார்கள். இவர்களைப் பத்திரமாக அந்தப் பகுதியிலிருந்து அதிரடிப்படைதான் கொண்டு வந்தது என்பதை இந்த நேரத்தில் இந்த மாமன்றத்திற்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு ஆற்றல்மிக்க முதலமைச்சராக, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற, காரணத்தால்தான் இதுபோன்ற நடவடிக்கைகள் தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டும் என்றாலும்கூட, இன்றைக்கு காஷ்மீரத்தில்கூட நீங்கள் எண்ணிப் பார்க்கலாம், ஆளுநர் அங்கே சென்று கொடி ஏற்றுவதற்கு பாதுகாப்பு இல்லாத நிலை உங்கள் கட்சி ஆளுகின்ற மாநிலத்தில் இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே அது போன்ற நிலை சுதந்திர நாட்டில் சுதந்திரக் கொடி ஏற்றுவதற்கு ஆளுநரால் முடியாத சூழ்நிலை அங்கே உங்கள் மாநிலத்தில் இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் கோடிட்டு காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசியதற்கு பத்திரிக்கைச் செய்தியை அடிப்படையாக வைத்து நீங்கள் மறுப்புத் தெரிவிப்பது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது. உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர். (குறுக்கீடு)

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிக்கை செய்தி அல்ல, சம்பந்தப்பட்ட அதிகாரியே கூறியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, சில பத்திரிக்கைகளில் வேண்டுமென்றே வெளியிடப்படுகிற செய்தியாக அது இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதனால்தான் இது

பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தெரிவித்திருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர்.

* *திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிக்கைச் செய்தி என்பது அல்ல, அவர் தப்பி வந்து ஒரு வீட்டிலிருந்து தொலைபேசி மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தொடர்புகொண்ட பிறகுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் தாசில்தார் ஜீப் அனுப்பி அந்த ஜீப்பில் அவர்கள் திரும்பி வந்தார்கள் என்பதுதான் உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிக்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு தவறான தகவலை சபைக்குத் தருகிறார். அவர்கள் ஒரு இடத்திலிருந்து தப்பி வந்து ஒரு வீட்டிலிருந்து தொலைபேசியில் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தொடர்புகொண்டதாக எந்த செய்தியும் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே பத்திரிக்கைகளுக்குத் தரவில்லை. நீங்கள் ஒரு தவறான எண்ணத்தை வெளிப்படுத்தக் கூடாது. தயவு செய்து ஒரு எதிர்க்கட்சித் தலைவர் ஆதாரம் உள்ள ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால் சரியாக இருக்கும். நான் இங்கே சொல்கிறபோது சொன்னேன், உங்கள் மாநிலம் என்று சொல்வதற்குக் காரணம் காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலம் என்று சொன்னேனே தவிர நீங்கள் இருக்கிற மாநிலம் தமிழகம்தான்.

திரு. ஜி. பழனிசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன இருக்கிறது?

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது காவல்துறையினர், அந்த வீரப்பனால் கடத்திச் சென்றவர்களை மீட்டு வந்தார்களா; மீட்டு வரவில்லையா; என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகத்தான் சொன்னேன். அதிரடிப்படைகள் வீரப்பனைச் சுற்றி ஏறத்தாழ 350 பேருக்கு மேல் சூழ்ந்துகொண்டு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகத்தான் வீரப்பனோடு இருந்த ஓரிருவர் தப்பிச் சென்று விட்டார்களே தவிர வீரப்பனால் கொண்டு சென்று அங்கே வைக்கப்பட்ட மற்றவர்களை அதிரடிப்படைதான் கொண்டு வந்து சேர்த்ததே தவிர அவர்களாக தப்பி வந்த சரித்திரம் இல்லை. இந்த நடவடிக்கை தொடர்ந்து நம்முடைய ஆட்சிக் காலங்களில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரி அவர்கள் அதற்குப் பின்னாலே பத்திரிக்கையிலே தவறாக செய்திப் போட்டதற்காக அவர் ஒரு தன்னிலை விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதோடு அவர்கள்கூட காவல் துறை அதிகாரி என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. அவரும் காவல்துறை அதிகாரிதான். எனவே, அவருக்கும் அதிலே பங்கு இருக்கிறது. எல்லோரும் சேர்ந்துதான் இந்த நடவடிக்கையை எடுத்து இருக்கிறார்கள். எனவே, அந்த அதிகாரி அதற்குப் பின்னாலே முழுமையான விளக்கத்தை, என்ன நடந்தது என்பதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். பார்க்கிறபோது ஒவ்வொருவரும் ஒருவிதமாக, ஏன் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதைக்கூட சில நேரங்களில் திரித்துப் போட்டு விடுகிறார்கள். அதற்குப் பின்னாலே அதற்கு விளக்கம் சொல்லுகிற நிலை எல்லாம் ஏற்படுகிறது. அப்படியெல்லாம் இல்லையா? எனவே அதைப்போல, அந்த அதிகாரி சொல்லிய கருத்துக்களை, ஏதோ வேகத்திலே அல்லது சூழ்நிலையின் காரணமாக அல்லது ஒரு பரபரப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காக அல்லது இந்த அரசாங்கத்திற்கோ, காவல் துறைக்கோ நல்ல பெயர் வந்துவிடக்கூடாது என்பதற்காக சில பத்திரிக்கைகளிலே அந்தச் செய்தியைப்போட்ட பின்னாலே, அதுதான் உண்மை என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. அதன் காரணத்தால்தான் அந்த அதிகாரியேகூட அதற்குப் பின்னாலே அதற்கு முழுமையான விளக்கத்தைக் கொடுத்தார். அதே அதிகாரி, அந்த விளக்கத்தைக் கொடுத்ததை மட்டும் மறைத்து விட்டு, அதை விட்டு விட்டு, மற்றதை மட்டும் நீங்கள் பேசிக்கொண்டு இருப்பது அவ்வளவு சரியாகத் தெரியவில்லை. (குறுக்கீடு)

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிச்சாமி உட்காருங்கள். அது முடிந்துவிட்டது. மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) பரிதி இளம்வழுதி, உட்காருங்கள். (குறுக்கீடு) பரிதி இளம் வழுதி உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவுர் அவர்களே, அந்த சம்பந்தப்பட்ட அதிகாரி அப்படி மறுத்ததாகச் சொல்வது சரியல்ல. அடுத்தது, மீட்டு வந்தது உண்மை என்றால், ஏன் வீரப்பனை பிடிக்கவில்லை? ஏனென்றால், படை அங்கே போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேயிருந்து அதிரடிப்படை போகிறபொழுது அவன் ஓடிவிட்டான். அதைப்பற்றித் தெளிவாக, அங்கே இருக்கிற சிரமங்களைப் பற்றி, அதனுடைய பரப்பளவு என்ன; எப்படிப்பட்ட இடம் என்பதைப் பற்றியெல்லாம் தெளிவாக பல பத்திரிகைகளிலே போடப்பட்டிருக்கிறது. பல செய்திகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே போய் நம்முடைய காவல் துறையினர் அந்த இடத்திற்கே பழக்கம் இல்லாதவர்கள் போய் அங்கே பணியாற்றுவதற்கு எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எதிர்கட்சித் தலைவர் அதைப் பாராட்ட மனமில்லை என்றாலும் அங்கே போகிற (குறுக்கீடு) நான் சொல்லி முடித்து விடுகிறேன். நீங்கள்தானே பதில் சொல்லப் போகிறீர்கள்; நான் சொல்லி முடித்துவிடுகிறேன். பிறகு சொல்லுங்கள். உங்களுக்கு அவர்களைப் பாராட்ட மனம் இல்லை என்றாலும்கூட, எவ்வளவு சிரமமான இடத்திலே அவர்கள் போய் உயிரைப் பணயம் வைத்து அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதைக் குறைந்தபட்சம் மனிதாபிமானத்தோடு நாம் குறை சொல்லாமல் இருந்தால் போதும். நீங்கள் அவர்களுக்குப் பாராட்டுப் பத்திரம் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. நீங்களெல்லாம் இப்படி பேசிய பின்னாலும், இந்த நாட்டிலே ஒரு நல்ல நோக்கத்தோடு ஒரு பொதுக் காரியத்தைச் செய்யவேண்டுமென்ற தியாக உணர்வோடு அங்கே போகிறார்களே, அவர்களை நீங்கள் குறை கூறாமல் இருந்தாலே பெரிய விஷயம். அதன் காரணத்தால்தான் அவர்கள் அங்கே போய் அந்த நடவடிக்கையை எடுத்த காரணத்தால்தான், அவர்கள் அங்கே சூழ்ந்த காரணத்தால்தான், அங்கேயிருந்து அவர்கள் ஓடிவிட்டார்கள். இவர்களை மீட்டு

வருகிற வாய்ப்பு ஏற்பட்டது. எனவே, அதைச் செய்தது காவல் துறை என்பதை நீங்கள் மறுக்க முடியாது என்று நான். கருதுகிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எப்பொழுதும், யாரையும் பாராட்டத் தவற மாட்டேன். சுற்றி நின்றபோது அவர்கள் மீண்டு வருகின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டது என்று அமைச்சர் சொன்னதுதான் உண்மை என்பதை அவர் மறந்து விடக்கூடாது.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன வார்த்தையை எதிர்க்கட்சித்தலைவர் மாற்றக்கூடாது. " மீட்டு வருகிற" என்று சொன்னேன். " மீண்டு வருகிற" என்று சொல்லவில்லை. அவர்கள் போய் தாக்கிய காரணத்தால்தான் அங்கேயிருந்து வீரப்பனும் அவனுடைய கூட்டமும் ஓடியது. அதன் காரணத்தால் அதிகாரிகள் இவர்களை மீண்டு வர முடிந்தது. அதிகாரிகள் போகவில்லை என்றால் எப்படி இவர்கள் வர முடியும்? அதிகாரிகள் போகவில்லை என்று சொன்னால், இவர்கள் எப்படி தப்பித்து வர முடியும் ? இவர்கள் போன காரணத்தால்தான் நடந்தது, இந்த உண்மையிலே உங்களுக்கு என்ன பெரிய நஷ்டம் ஏற்பட்டு விட்டது ? எதற்காகப் போய் இவ்வளவு போராடிக்கொண்டு இருக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட விவரங்களுக்கு ஒருசில கருத்துக்களை மாத்திரம் நான் சொல்லலாம் என்று நினைக்கிறேன். 28 நாட்கள், மிகப்பெரிய ஒரு பிரச்சினை. கடத்திச் சென்று விடுகிறார்கள். எவ்வளவு தீர்க்கதரிசனத்தோடு, ஒரு பொறுமை உணர்வோடு, விவேகத்தன்மையோடு, அன்றைக்கு அதிகாரிகளும் இந்த அரசும் பணியாற்றியது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு சிக்கலான பிரச்சினை, யாருடைய அரசு இருந்தாலும்கூட இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றபொழுது அதில் எல்லோருக்கும்கூட பொறுப்பு இருக்கிறது. அரசுக்கு மாத்திரமல்ல; இங்கே இருக்கிற அத்தனை கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களை மீட்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருந்தாலும் அதற்கு ஆதரவு தரவேண்டிய பொறுப்பு உங்களுக்கும் இருக்கிறது. இந்த அரசு எவ்வளவு நிதானமாக நடவடிக்கைகளை எடுத்து, அவர்களோடு

பேசி, சரிக்கட்டி, அவர்களுடைய உயிருக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது என்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறது. அவர்களுடைய கஸ்டடிக்குப் போய்விட்டார்கள், ஆகவே, அவர்களை மீட்பது என்பதில் ஒரு விவேகமற்ற தன்மையிலே நாம் நடந்துகொண்டால் முரட்டுத்தனமாக முடிந்துவிடும் என்ற காரணத்தினாலே, பொறுமையாக நடவடிக்கைகளை எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு தெளிவாகச் செயல்பட்டார்கள் என்பதும், அவர்களுடைய பொறுப்பிலே இருக்கிற காவல்துறை எப்படி செயல்பட்டது என்பதையும் நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஆகவே, அந்த அடிப்படையிலே, 28 நாட்களுக்குப் பின்னாலே, வியூகம் அமைத்து, அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்ற உளவு அறிந்து, காவல் துறையினர் அவர்களோடு பேசிக்கொண்டே, சமயோசிதமாக அந்தப் பகுதியிலே நடவடிக்கை எடுத்து, துப்பாக்கிச் சூடு நடத்துகின்றபொழுது, திடீரென்று தாக்குப் பிடிக்க முடியாமல், அந்தத் தாக்குதலிலிருந்து அவர்கள் ஓடிவிடுகிறார்கள். ஆகவே, அங்கே இருந்த அதிகாரிகளை மீட்டு வந்திருக்கிறார்கள். இந்த விவரங்களெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் அவர்கள் மறைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, உண்மை அவர்களுக்கு தெரியும். ஆகவே, இதுபோன்ற விவகாரங்களில் இந்த அரசு எவ்வளவு தெளிவாக அணுகி நடவடிக்கை எடுக்கிறது என்பதை நீங்கள் பாராட்ட வேண்டும். எப்படி மீட்டாலும், அவர்களை மீட்டு வந்திருக்கிறார்கள். சமயோசிதமாக நம்முடைய தமிழக அரசும் நம்முடைய புரட்சித்தலைவி அவர்களும், நம்முடைய காவல் துறையும் நடந்து கொண்டதன் காரணமாகத்தான் அவர்கள் பிழைத்து இருக்கிறார்கள். அதை, சிறந்த முடிவு என்று அத்தனை பேரும் பாராட்டுகிறார்கள். ஆகவே, இதிலே நீங்கள் களங்கம் கற்பிக்க முற்படக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர்.

திரு.எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 உயிர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்கின்ற காரணத்தாலேதான் அந்த 28 நாட்களில் நான் எந்த விமர்சனமும் செய்யவில்லை. பத்திரிகைகள் என்னைக் கேட்டபொழுதுகூட, மூன்று உயிர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை, எனவே அரசுக்கு நாம் ஒத்துழைப்பு தர வேண்டுமே தவிர, இதிலே வேறு விதமாகப் பேசுவது சரியாக இருக்காது என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், அதே நேரத்தில் 28 நாட்களும் மனத் திண்மையோடு அவர்கள், அவர்களுடைய பிணைக்

கைதிகளாக இருந்து தப்பி வந்த அவர்களுக்கு ஒரு பாராட்டு தெரிவிக்ககூட இந்த அரசுக்கு மனம் வரவில்லையே என்பதுதான் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒப்புக் கொண்டார்கள், அவர்கள் பேசாமல் இருந்தாரே அது பெரிய புண்ணியம் என்பது புரிகிறது நமக்கு. எனவே அதற்காக நாம் நன்றிதான் சொல்ல வேண்டும்.

இப்பொழுது அந்தப் பிரச்சினை அல்ல. அவர்கள் தப்பி வந்தார்கள், தப்பி வந்தார்கள் என்று சொல்வதிலே உங்களுக்கு ஏன் அவ்வளவு ஆனந்தம் என்று எங்களுக்குப் புரியவில்லை.

இந்தப் பிரச்சினையில், அந்தப் பகுதியிலே இருக்கின்ற அத்தனை மக்களும், காவல் துறையினர் நடவடிக்கையை எவ்வளவு தீவிரமாக எடுத்தார்கள், எவ்வளவு விவேகமாக எடுத்தார்கள் என்பதை எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். உங்களால் முடியாது. பரவாயில்லை. நாங்கள் விட்டு விடுகிறோம். ஆனால் களங்கம் கற்பிக்க வேண்டாமென்றுதான் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

நீங்கள் அங்கே போய் சொல்லுகிறீர்கள். அங்கே போய் எத்தனை போலீஸ்காரர்கள் உயிர்ப் பலி கொடுத்திருக்கிறார்கள். வேண்டுமென்று செய்வார்களா ?

இவ்வளவு சிரமங்களை ஏற்றுக்கொண்டு செய்கின்ற ஒரு காவல் துறையை நீங்கள் குறை சொல்வதுதான் எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. அதிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அந்த 28 நாள் எத்தனை முறை அங்கே இருக்கிற அதிகாரிகளோடு பேசியிருப்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய ஒரு சம்பவம் நடைபெறும்பொழுது மூன்று பேர்கள் தப்பி வந்து விட்டார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி, அவர்களுக்கு இந்த அரசு பாராட்டுத் தெரிவிக்கவில்லையே என்று கூறுவது உண்மையிலேயே அவருடைய

அறியாமையைத்தான் வெளிப்படுத்துகின்றது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

நாம் இத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கும்பொழுது எத்தகைய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும்? எத்தகைய ஒரு பர்ஸ்பெக்டிவோடு பார்க்க வேண்டும் என்பது எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்களுக்குப் புரியவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

28 நாட்கள் இந்த மூன்று பேர் பிணைக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். எந்த நேரமும் அவர்கள் உயிர் பறிக்கப்பட்டிருக்கலாம். வீரப்பனிடமிருந்து எத்தனைக் கடிதங்கள் வந்தன? எத்தனைக் கேசட்டுகள் வந்தன ? தினந்தோறும் தந்திரமாக அவனுடன் தொடர்பு வைத்துக் கொண்டு — தொடர்புகளை முறித்துக் கொள்ளாமல் கலெக்டர் மூலமாகவும், காவல் துறை அதிகாரிகள் மூலமாகவும் அந்த கன்டினியுட்டி — தொடர்பை உயிர்ப்பித்து வைத்துக் கொண்டே இருந்ததால்தான், 28 நாட்கள் வரை இவர்கள் உயிருடன் இருந்தார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

தந்திரமாகப் பேசி அவர்களை நம்ப வைத்து, வீரப்பனின் வலதுகரமாகத் திகழ்ந்த அவனுடைய தம்பி அர்ச்சுனனைப் பிடித்து அவனைச் சிகிச்சைக்காக அனுப்புகிறோம் என்று சொன்னபொழுது, அனுப்புங்கள் என்று சொல்லி, அவனைக் கடைசி வரைக்கும் திருப்பி அனுப்பாமலேயே, இன்று அவனைக் கைது செய்து வைத்திருக்கிறோம். அதனால் வீரப்பனுடைய வலது கரம் முறிக்கப்பட்டது என்றே சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்றையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்துவிட்டார்கள். இந்த மூன்று பிணைக் கைதிகள் மீட்கப்பட்டபோது அவர்களோடு வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த இன்னும் மூன்று பேரும் கைது செய்யப்பட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுது வீரப்பன் கூட்டத்திலேயே 4 பேர்கள்தான் துப்பாக்கி ஏந்தக் கூடிய, அவனுக்குப் பயன்படக் கூடிய ஆட்களாக இருந்தார்கள். அவர்களில் இரண்டு பேர்களை எங்கள் காவல் துறையினர் பிடித்து விட்டார்கள். ஆக, இப்பொழுது வீரப்பனுக்கு ஆள் பலம் இல்லை ; ஆயுத பலம் இலலை. அவன் அந்தக் காட்டுப் பகுதியில் திரிந்து கொண்டிருக்கிறான். இனிமேல் அவனால் முன்பு செயல்பட்டதைப்போல செயல்பட முடியாத அளவிற்கு எங்கள் காவல் துறையினர், ஏன், நம் காவல் துறையினர்

என்றே சொல்லுகிறேன், நம்முடைய காவல் துறையினர் அந்தக் கூட்டத்தின் செயல்பாடுகளை ஒடுக்கிவிட்டார்கள்.

ஆகவே, 28 நாட்களாக அந்தப் பிணைக் கைதிகள் இருக்கின்ற சரியான லொக்கேஷன் கண்டுபிடிக்கப்பட வேண்டும். காட்டுப்பகுதியில் அது மிகவும் கடினமான பணி. அருகே நெருங்கினால் காவல் துறையினர் வந்து விட்டார்கள்; அதிரடிப் படையினர் வந்து விட்டார்கள் என்று அவர்களைச் சுட்டுக் கொன்று விடுவார்கள். அவர்களை உயிரோடு வைத்திருக்க வேண்டும். அதுவரையிலும் வீரப்பனை நம்ப வைத்து, அவன் என்ன கேட்கிறானோ அதையெல்லாம் இந்த அரசாங்கம் செய்யக் கூடும் ; அவனைத் திருப்திப்படுத்தக்கூடும் ; அவனுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படக் கூடும் என்ற நம்பிக்கையை ஊட்டி ஊட்டி, தந்திரமாக இந்த அரசாங்கமும், காவல் துறையும் செயல்பட்டதால்தான் உயிரோடு மூன்று பிணைக் கைதிகளும் மீட்கப்பட்டார்கள்; வீரப்பனுடைய கூட்டாளிகளும் பிடிபட்டார்கள் ; இன்று, வீரப்பன் கூட்டமே செயல்பட முடியாத அளவுக்கு அவனுடைய நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டன. இது நம்முடைய காவல் துறையின் திறமைக்குச் சான்று என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டேயாக வேண்டும் என்பதை மட்டும் இந்த நேரத்திலேயே சொல்லிக் கொண்டு, இன்னொன்றையும் சொல்கிறேன்.

நண்பகல் 12-00

இந்த நாட்டிலேயே மிகவும் கடுமையான பணி எதுவென்றால், இராணுவப் பணி; அதோடு, காவல்துறை பணி. இன்றைக்குக் காவல் துறை, எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும், மிகவும் கொச்சைப்படுத்தப்படுகிறது. அரசியல்வாதிகளுக்கு — எதிர்க்கட்சியிலுள்ள அரசியல்வாதிகளுக்கு — ஒரு அரசாங்கத்தைக் குற்றங்குறை கூறவேண்டுமானால், குற்றஞ் சாட்ட வேண்டுமென்றால், முதலில் காவல் துறையைப் பிடித்துக் கொள்கிறார்கள். அதனால், இன்றைக்குத் திறமையானவர்கள், திறமையுள்ள இளைஞர்கள், மனதிடம் உள்ள வாலிபர்கள் காவல் துறைக்கு வருவதற்கு அஞ்சுகிறார்கள். அவர்கள் உயிரைப் பணயம் வைத்துத்தான் ஒவ்வொருநாளும் பணியாற்ற வேண்டியிருக்கிறது. எந்த நிமிடம் அவர்களுடைய உயிர் போகுமென்பது அவர்களுக்கே தெரியாது. ஒவ்வொரு நாளும், காலையில் போய்வருகிறேன் என்று வீட்டை விட்டுக் கிளம்பும்போது, உயிரோடு அன்றிரவு திரும்பி வருவார்களா என்பது அவர்களுக்கும் தெரியாது ; அவர்களுடைய குடும்பத்திற்கும் தெரியாது. வெயிலானாலும், கொட்டும் மழையானாலும், கரடுமுரடான பாதையானாலும், காட்டுப் பாதையானாலும், எங்கேயும்

சென்று அவர்களுடைய கடமையை ஆற்றுகிறார்கள். வேறு எத்தனையோ சொகுசான பணிகள் இருக்கின்றன. எத்தனையோ சுலபமான தொழில்கள் இருக்கின்றன. காவல் துறையினர் என்ன செய்தாலும் தவறு ; நின்றாலும் தவறு ; உட்கார்ந்தாலும் தவறு ; சுட்டாலும் தவறு ; சுடாவிட்டாலும் தவறு ; (மேசையைத் தட்டும் ஒலி) கைது செய்தாலும் தவறு ; கைது செய்யா விட்டாலும் தவறு. இப்படி என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அவர்களைக் குற்றங்குறை சொல்லிக் கொண்டேயிருந்தால், அவர்கள் படுபாதகச் செயல்களைச் செய்கிறார்கள் என்று அவர்கள்மீது எப்போது பார்த்தாலும் பழி சுமத்திக் கொண்டே இருந்தால் — அவர்கள் என்ன எதிர்பார்த்து இத்தகைய ஆபத்தான பணிகளில் இறங்குகிறார்கள்? இதுபோன்ற ஒரு பயங்கரமான கொள்ளைக் கூட்டத்தை அவர்கள் பிடித்தால், அதற்காக என்ன பெரிதாக அவர்களுக்கு வந்துவிடப் போகிறது ? வேறு ஏதேனும் பட்டம், பதவி வரப் போகிறதா ? இல்லை, சம்பளத்தில்தான் உயர்வு வரப் போகிறதா ? அவர்களுக்கென்று ஒரு ஏற்பாடு செய்து, வரையறுக்கப்பட்டிருக்கிறது ; அந்தச் சம்பளத்தைத்தானே பெறப்போகிறார்கள் ? அதனால் ஒரு பத்தாண்டுகளுக்கு 'எக்ஸ்டென்ஷன்', சர்வீஸிலே கிடைக்கப் போகிறதா ? இல்லையே ! அவர்களுக்கு என்றிருக்கிற ஒரு 'லிமிட்'; அதுவரைக்கும்தானே சர்வீஸ். அப்படி இருக்கும்போது, அவர்கள் அரசியல்வாதிகளாக வந்தால்கூட, எத்தனையோ இலாபங்களை அடையலாமே ? (சிரிப்பு) வேறொன்றும் செய்ய வேண்டாம். சும்மா தோளிலே ஒரு துண்டு போட்டுக் கொண்டு, சட்ட சபைக்கு வந்து குற்றங்குறை சொல்லிக் கொண்டே இருக்கலாம். தினமும் பத்திரிகையிலே 'போட்டோ' வரும்; செய்தி வரும் ; விளம்பரம் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே படுகிற கஷ்டத்தையும் பட்டு, அல்லலையும் பட்டு, கடைசியில் ஒரு பாராட்டு வார்த்தைகூட இல்லாமல் எப்போதும் நிந்தனை, விமர்சனம், குற்றங்குறை சாட்டுதல் இவைதான் என்றால், கொஞ்சம் சிந்திக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவரும் இந்த நாட்டில் ஒரு பிரஜை. இந்த மாநிலத்தில் அவரும் ஒரு குடிமகன். இதே காவல்துறைதான் அவருக்கும், அவருடைய குடும்பத்திற்கும் பாதுகாப்பு அளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எல்லோரும் கேட்கிறீர்களே, ஏதாவது ஒரு மிரட்டல் கடிதம் வந்தது என்றால், ஏதாவது அரசியலில் நெருக்கடி சூழ்நிலை என்றால், எங்களுக்குச் 'செக்யூரிடி' வேண்டும்; எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் ; எங்களுக்கு ஒரு 'எஸ்.ஐ.' போடுங்கள்; பி.எஸ்.ஓ. போடுங்கள்; மூன்று, நான்கு கான்ஸ்டபிள்களை அனுப்புங்கள் என்று கேட்கிறீர்களே, காவல் துறை பணிக்கென்று யாராவது வந்தால்தானே, உங்களுக்கெல்லாம் அந்தப் பாதுகாப்பைக் கொடுக்க முடியும் ? (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இதையெல்லாம் நான்

சொல்வதற்குக் காரணம், காவல் துறைப் பணி என்பதே ஒரு 'thankless task', ஒரு 'thankless job' என்ற ஒரு நிலை இன்றைக்கு அரசியல்வாதிகளாலே உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை மிகவும் வருத்தத்துடன் நான் தெரிவித்துக் கொண்டு, இனிமேலாவது, எதிர்க்கட்சித் தலைவரைப் போன்றவர்கள், இத்தகைய கடமை வீரர்களுக்குச் செலுத்த வேண்டிய பாராட்டை, மனந்திறந்து செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

* **திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனுக்கு இப்போது ஆள்பலமும் இல்லை ; ஆயுதபலமும் இல்லை. செயல்பட முடியாத நிலையிலே இருக்கிறான், இருந்தாலும் அவன் பிடிபடவில்லேயே ? அதுதான் எங்களுக்குப் புதிராக இருக்கிறது. நாட்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த அவையிலே ஒருவார காலம், 30 நாட்கள், 3 மாதங்கள் என்று பலமுறை உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று வரையில் வீரப்பன் பிடிபடவில்லை. அது ஏன் ? அது ஒரு புதிராக இருக்கிறது.

அதேபோல் 3 பேரையும் காவல் துறையினர் கைது செய்தார்கள் என்று சொன்னார்கள். அந்த மூன்று பேரையும் அழைத்து வந்தவர்கள் பிணைக் கைதிகளே தவிர, நிச்சயமாக காவல்துறையினர் போய் அவர்களைக் கைது செய்யவே கிடையாது. ஏதோ 'It is a thankless job' என்று சொன்னார்கள். It is not a thankless job. It is their duty. அவர்களுடைய கடமை அது. நம்முடைய உயிருக்கும் உடைமைக்கும் அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கிறது என்று சொன்னால், அரசாங்கம் காவல் துறையின் மூலமாகத்தான் ஒவ்வொரு குடிமகனின் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் அளிக்கின்றது. காவல்துறை அவர்களுடைய கடமையைச் செய்ய வேண்டும். செயலாற்ற வேண்டும். எனவே, நடைபெறுகின்ற தவறுகளை அவையிலே சுட்டிக்காட்டுவது ஒரு எதிர்க்கட்சியின் கடமை என்கிற முறையிலே நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தப்பி வந்த பிணைக் கைதிகளுக்குப் பாராட்டு தெரிவித்திருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தப்பி வந்தது என்பதற்கு இப்போது எல்லோரும் விளக்கம் சொல்கிறார்கள். அதற்குப் பிறகும் நீங்கள், தப்பி வந்தவர்கள், தப்பி வந்தவர்கள் என்று, இவ்வளவு விளக்கத்திற்குப் பிறகும்

சொல்லிக் கொண்டிருந்தால், இது ஏதோ கதையிலே சொல்கிற மாதிரி முடியக் கூடாதே ? (குறுக்கீடு)

திரு. கி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கிறார், அவர் பேசட்டும். திரு. கி. பாலசுப்பிரமணியன்.

* *திரு. கி. பாலசுப்பிரமணியன் :* பேரவைத் தலைவர் அவர்களே, நமது எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பாலசுப்ர்மணியன் அவர்களுக்கு பாராட்ட எண்ணம் இல்லாவிட்டாலும், வீரப்பன் பிடிபடவில்லேயே என்று சொல்கிறார். வீரப்பன் பிடிபடவில்லையே என்று சொல்லியதற்கு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லிய பதிலிலேயே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, ஹிட்லர்-அவரைப் பிடிக்கும்போதுகூட அவருக்கு நெருக்கடியான நிலை ஏற்பட்ட போது அவரே suicide பண்ணிக் கொண்டார் என்ற நிலை இருக்கிறது. அந்த மாதிரி நிலை நமது வீரப்பனுக்கும் வந்தால் ஆச்சரியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாலசுப்பிரமணியன், இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனுடைய பிரச்சினையில் உள்நோக்கம் கற்பிக்கின்ற விதத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினாலும், நான் சொல்கிற தன்மை என்னவென்றால், 3 உயிர்களைப் பிணைக் கைதிகளாக வைத்திருக்கிற நேரத்தில், ஒரு மாநிலத்தின் தலைமைப் பொறுப்பேற்றிருக்கிற முதல்வர் அவர்களும், காவல் துறையும், மாவட்ட நிர்வாகமும் அந்த உயிர்களைக் காப்பாற்றுவதற்கு 28 நாட்கள் எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தயவு செய்து அவர் பாராட்டவில்லை என்றாலும், அந்த உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வளவு தூரம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்வதற்கு அடிப்படைக் காரணம் இந்திய நாட்டினுடைய மீனவர்களுடைய பிரச்சினையை ஒப்பிட்டுப் பேசுவதற்குத்தான் எடுத்துக் காட்டினேன்.

மூன்று பேர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக 28 நாட்கள் ஒரு அரசினுடைய நிர்வாகம் எவ்வளவு துரிதமாகச் செயல்பட்டு, அவர்களைக்

காப்பாற்றி இருக்கிறது. அதே போல வீரப்பனுடைய கையாட்களைப் பிடித்திருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தில் வயிற்றுப்பிழைப்புக்காக தமிழக எல்லைக் கடற்கரைப் பகுதியிலே மீன்பிடித்துத் தான் வாழவேண்டும் என்கிற நிலையின் காரணமாக மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களுடைய நிலை, மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிற கடற்கரையில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் 34 பேர்களை இலங்கை அரசு சுட்டுக் கொன்றிருக்கிறதே, மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் இதற்காகக் குரல் கொடுத்தார்களா ? (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காகக் கண்டனம் தெரிவித்தார்களா ? இதற்காகப் போராடினார்களா ? இதற்காக எந்த முயற்சியை மேற்கொண்டார்கள் ? ஒரு மாநிலத்தினுடைய 3 உயிர்களைக் காப்பாற்றுவதற்காக இந்த அரசு எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஒரு இந்திய நாட்டினுடைய பிரஜையை அடுத்த நாட்டுக்காரன் சுட்டுக் கொல்கிறான் என்று சொன்னால், அது இந்திய நாட்டுக்கு ஒரு தலைக் குனிவு அல்லவா ? 34 பேர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கு இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2 முறை கடிதம் எழுதி, அவர்களுக்கு ஒரு நிரந்தரப் பாதுகாப்பு தேவை என்று எழுதியும்கூட, அவர்கள் நிரந்தரமாக தொழில் செய்ய, தொழில் பாதுகாப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று சொல்லியும்கூட, அவர்களுக்கு இழப்புத் தொகை பெற்றுத் தரவேண்டும் என்று எழுதியும்கூட, இதுவரை மத்திய அரசு உரிய நடவடிக்கையும், பாதுகாப்பும் தந்திருக்கிறதா என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் தயவு செய்து சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். அதுமட்டுமல்லாமல், 34 பேர்கள் இறந்தது மட்டுமல்லாமல், 138 பேர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தின் எல்லையோரத்திலே தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக மீன்பிடிக்கச் சென்றவர்களுக்குப் பாதுகாப்புத் தர முடியாமல், அவர்களை அடுத்த நாட்டுக்காரன் சுட்டுக் கொன்றிருக்கிறான் அதற்கு இன்றுவரை எந்தவிதமான பரிகாரமும், தீர்வும் காணவில்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-10

ஒரு மாநிலத்தினுடைய 3 உயிர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு எப்படி நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. ஆனால், அந்நிய நாட்டைச் சேர்ந்தவர்கள் நம்முடைய மீனவர்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். அதற்கு பிரகாரம் காண எந்த முயற்சியும் மேற்கொள்ளாதவர்கள்,

இன்றைக்கு இந்தப் பிரச்சினையில் உள்நோக்கம் கற்பிப்பது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை என்பதை தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும். காவல் துறையைப் பொறுத்த வரையில், இதே காவல் துறைதான் கடந்த காலத்திலேயும் இருந்திருக்கிறது. கடந்த அரசிலே இதே அதிகாரிகள்தான் பணியாற்றியிருக்கிறார்கள். அதிகாரிகள், ஆட்சி இயந்திரங்கள் மாறவில்லை. ஆனால், யார் தலைமைப் பொறுப்பேற்றிருக்கிறார்கள் ? யார் இயக்குகிறார்கள் ? சிறந்த தன்மையோடு இயக்குகின்ற ஆற்றல் யாரிடத்திலே இருக்கின்றதோ, அவர் கீழ் செயல்படுகின்ற அதிகாரிகள், சிறப்பாக செயல்படுவார்கள் என்பதன் எடுத்துக்காட்டாகத்தான்,-தமிழகத்தைப் பொறுத்தவரை இதே காவல் துறை அதிகாரிகள் கடந்த காலத்தினுடைய அரசினுடைய காலத்திலே இருந்தது, எவ்வளவு துயர்களை அடைந்திருப்போம் நினைத்துப் பாருங்கள் - எங்களது இதயத் தாயினுடைய தலைமையில் இந்த அரசு மட்டும் ஏற்படாமல் இருந்திருந்தால் தமிழகத்தினுடைய ஒவ்வொரு மனிதனும் ஆயுதங்கள் வைத்துத்தான் தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவல நிலை தமிழகத்தில் உருவாகி இருக்காதா ? கோயம்புத்தூர் மாவட்டம், திருச்சி மாவட்டம் என்பது பெரிய தொழில் கேந்திரம். பஞ்சாலைகளும், பருத்தி ஆலைகளும் உருண்டோடுகின்ற அந்தத் தொழில் கேந்திரத்தில் ஒரு வெடிகுண்டுத் தொழிற்சாலை இருக்கிறது என்று நாம் நினைத்துப் பார்த்தோமா ? யாருடைய அரசினுடைய காலத்திலே - அன்றைக்கும் இதே அதிகாரிகள்தான் செயல்பட்டிருக்கிறார்கள். திருச்சியிலே இருந்தது. வேதாரண்யத்திலே கடற்கரையிலே பல கோடி ரூபாய் ஆயுதங்களை எடுத்திருக்கிறோம். அப்போது யார் தலைமைப் பொறுப்பேற்றிருந்தார்கள்? அதைத்தான் முன்பே சொன்னேன். அந்தத் துருப்பிடித்த அரசு இயந்திரத்தைப் பழுதுபார்த்து, ஆற்றலோடு இயக்குகின்ற எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தலைமை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் இன்றைக்கு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளுக்காக இருந்த ஆயுதத் தொழிற்சாலைகள் மூடக்கப்பட்டிருக்கின்றன. விடுதலைப்புலிகள் தமிழகத்திலிருந்து ஓட ஓட விரட்டப்பட்டிருக்கிறார்கள். அப்படி விரட்டப்பட்டதனுடைய விளைவாகத்தான் இன்றைக்கு அவர்களால் அச்சம், பயம் என்கிற நிலையில்லாது, பாதுகாப்பான நிலை முதல்வருக்கு ஏற்பட்டிருக்கிறது. இதைத்தான் அண்மையிலே குறிப்பிட்டதைப்போல் வெளிநாடுகளுக்கு தமிழக முதல்வர் செல்ல வேண்டும், தொழில் அதிபர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று திட்டமிட்டு செல்ல முடிவு எடுத்த நேரத்திலே இதே மத்திய அரசு உங்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லையென்று அறிவித்திருக்கிறது. ஆனால், அதே நாட்டுக்கு உங்களுடைய பாரதப் பிரதமர் சென்றிருக்கிறார்.

சுற்றி வந்திருக்கிறார் என்றால், அவருக்கு பாதுகாப்பு இருக்கிறது என்று சொன்னால், விடுதலைப் புலிகளினுடைய நண்பன் யார் என்பதை தயவுசெய்து எதிர்க்கட்சிகள் சொல்லியாக வேண்டும். ஆகவே, காவல் துறையைப் பொறுத்தவரை, இன்றைக்குக் கடுமையான நடவடிக்கை எடுத்ததன் மூலமாகத்தான் இந்த மாநிலம் சிறந்த மாநிலமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. நவீனப்படுத்துகின்ற விதத்தில் ஒவ்வொரு காவல் நிலையங்களுக்கும் ஒரு ஜீப் வழங்க வேண்டும், நவீன ஆயுதங்கள் தரப்பட வேண்டும், அவர்கள் உற்சாகப்படுத்தப்பட வேண்டும். அவர்கள் உயிருக்கு பாதிப்பு ஏற்படாமல், அரசு அவர் குடும்பங்களை தத்தெடுத்ததுபோல், அவர்களுக்கு உதவிகளைச் செய்ய வேண்டுமென்ற தொலைத் தூர சிந்தனையோடு, இந்த அரசு செயல்பட்டதன் காரணமாகத்தான் இந்தக் காவல் துறை சிறந்த காவல் துறையாக, ஸ்காட்லாந்து காவல் துறைக்கு இணையான காவல் துறையாக செயல்பட்டு வருகிறது. ஆகவே, அரசியலிலே எதைச் சொன்னாலும், எப்படிச் சொன்னாலும் உள்நோக்கம் உருவாக்கலாம். அதை யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அதுவல்ல. பிரச்சினையினுடைய தன்மையை உற்றுநோக்கி நாம் பேச வேண்டுமே தவிர, பிரச்சினைக்கு அப்பாற்பட்டதைப் பேசுவது என்பது எதிர்க்கட்சித் தலைவருக்கு கைவந்தக் கலையாகிவிட்டது. இன்றைக்கு செய்தியைப் பார்த்திருப்பீர்கள். தமிழகத்தினுடைய நகராட்சி பஞ்சாயத்தினுடைய தேர்தல்களுக்குரிய மாதம் 1995 ஜூன் மாதம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு உள்நோக்கம். தேதி அறிவிக்கப்படவில்லையே ? நாங்கள் மாதத்தை அறிவித்திருக்கிறோம், தேதி அறிவிப்பு தேர்தல் ஆணையம்தானே அறிவிக்க வேண்டும். தேர்தலுக்கான பணிகள் நடைபெறுகின்றன. தேர்தல் பணிகள் முடிக்கப்பட்டால் அந்த மாதம் தேர்தல் நடைபெறும் என்றால் தேர்தல் தேதியை தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும். அதற்கு ஒரு உள்நோக்கத்தைக் கற்பித்திருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் உள்நோக்கம். தமிழகத்தைப் பொறுத்தவரை பஞ்சாயத்து, நகராட்சியினுடைய தேர்தல்களை, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட மூன்றாவது மாதத்திலேயே நடத்த வேண்டுமென்று திட்டமிட்ட நேரத்திலே மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த திரு. பழனிசாமி போன்றவர்கள் எல்லாம் தேர்தலை நடத்த வேண்டாம், அதை சந்திக்கின்ற தெம்பு, திறன் எங்களுக்கு இல்லையென்று இந்த மாமன்றத்திலே சொல்லியது குறிப்பிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், தேர்தலை சந்திக்க மறுத்தவர்கள் இன்றைக்கு வெளியிலே தேர்தல், தேர்தல் என்கிறார்கள். தேர்தல் மாதத்தை அறிவித்தும் அதற்கு உள்நோக்கம் கற்பிக்கும் சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். நீங்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகத்தினுடைய அரசைப் பொறுத்தவரை இயக்கத்தைப் பொறுத்தவரை, தேர்தலைக் கண்டு பின்வாங்கியதில்லை, பயந்து ஓடியதில்லை. இந்திய நாட்டினுடைய வரலாற்றிலே ஒவ்வொரு இடைத்தேர்தலிலும் அமோகமாக வெற்றியைப் பெற்றிருக்கிறது. அது மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்ற அந்தத் தொகுதியைக் கைப்பற்றி வெற்றி வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. தோல்வி என்பதே என்னுடைய தலைவியினுடைய வரலாற்றிலே இல்லை என்பதை நிரூபித்துக் காண்பிக்கப் போகிறோம். ஆகவே, பஞ்சாயத்து, நகராட்சி தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு களத்திற்கு வந்து பாருங்கள், புறமுதுகிட்டு ஓடக்கூடிய சூழ்நிலையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்கள் உருவாக்குவார்கள், அந்த நிகழ்ச்சியைப் பார்ப்பீர்கள். ஆகவே, உள்நோக்கம் என்பது அர்த்தமற்றது, தேவையற்றது. சந்திப்பதற்குத் தயாராக இருந்துகொண்டிருக்கிறோம். அதேபோல் கூட்டுறவுச் சங்கங்களுடைய பல்வேறு தேர்தல் பணிகள் முடிவடைந்தும்கூட, இன்றைக்கு வழக்குமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால், அந்தத் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது, சட்ட ரீதியாக. ஆனாலும், அதையெல்லாம் மக்கள் மத்தியிலே சொல்லாமல், பொதுவாக தேர்தல் நடத்தப் பயப்படுகிறது என்று போலித்தனமாக சொல்வது என்பது நாகரிகமான அரசியலா என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். ஆகவே, கூட்டுறவுச் சங்கத் தேர்தலாக இருந்தாலும், பஞ்சாயத்து நகராட்சித் தேர்தலாக இருந்தாலும், எந்தத் தேர்தலையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி இதயதெய்வம் புரட்சித் தலைவி இருக்கும்வரை நாங்கள் பயப்பட மாட்டோம், அஞ்சமாட்டோம், மக்கள் எங்கள் பக்கம் . மக்களுக்கு தேவையான அடிப்படைவசதிகள், தொழில் வசதிகள் அனைத்தும், சீரான உணவுகள், அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுத்திருக்கிறோம். மக்களின் அமோகமான செல்வாக்கைப் பெற்ற தலைவியாக புரட்சித் தலைவி வீற்றிருக்கிறார்கள். ஆகவே, எதைக் கண்டும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லையென்று கூறி, இந்த கவர்னர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை முன்மொழிந்து விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.வி. இராஜேந்திரன். தீர்மானத்தை முன்மொழிந்தவர் எடுத்துக்கொண்ட அளவுக்கு நேரத்தை மற்றவர்களும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணிவிடக்கூடாது. மற்றவர்களுக்கு பத்து, பத்து நிமிடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

திரு.பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பெருந்தன்மையோடு ஒதுக்கி தந்த இந்த பத்து நிமிடத்திற்குள் நிச்சயமாக என் உரையை நான் முடித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் லெஜிஸ்லேச்சர் பார்ட்டி-க்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரை என்பது, என்னை பொறுத்தவரையில் நான் இந்த மன்றத்திற்குள்ளே மூன்று, நான்கு ஆளுநர்களுடைய உரைகளைக் கேட்டிருந்தாலும், நேற்றைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை ; இன்றைக்கு 'ட்ரெஷரி பென்ச்'-லிருந்து அதற்கு முன்மொழியப்பட்டிருக்கிற தீர்மானம்; அதன்மீது பேசுகிற வாய்ப்பு ஆகியவை சற்று வித்தியாசமாகவே எனக்குப்படுகிறது. ஆளுநர் என்பவர் 'ஹெட் ஆஃப் தி ஸ்டேட்'. 'ட்ரெஷரி பென்ச்'-னுடைய தலைவராக இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'ஹெட் ஆஃப் தி அட்மினிஸ்ட்ரேஷன்'. — இவர்கள் இணைந்து போகின்ற, அலலது ஹெட் ஆஃப் தி கவர்ன்மென்ட் தருகிற பாலிசி டெக்ளரேஷன் — இந்த ஆண்டில் அரசாங்கம் என்னென்ன கொள்கைகளை, திட்டங்களைச் செயலாக்க இருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தருகிற கொள்கை அறிக்கையை மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்திலே படிக்கிறார்கள். இதற்கு இன்றைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தை நீங்கள் முன்மொழிந்திருக்கிறீர்கள். மேதகு ஆளுநர் அவர்களும், ஜனாதிபதி அவர்களும் பிரைம் மினிஸ்டருக்கும், சீப் மினிஸ்டருக்கும் 'பிரண்டு, கைட் அன்ட் பிலாசஃபர்' என்றுதான் நாடாளுமன்ற ஜனநாயத்திலே கூறுவார்கள். அதனை ஏற்று இந்தத் தீர்மானம் சம்பிரதாயத் தீர்மானமாக இருந்தாலும் இதன்மீது அதாவது இந்த அரசாங்கம் வைத்திருக்கிற கொள்கைகளில் நாங்கள் எங்களது கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எல்லாவற்றிலும் எதிர்க்கட்சிகள் அதாவது குறிப்பாக எதிர்க்கட்சித்தலைவர் குற்றம், குறைகளைக் கண்டுபிடித்துக்கொண்டே இருக்கிறாரே, ஏன் பாராட்டக்கூடாது என்கிற ஆதங்கம் ஆளும் கட்சித் தரப்பிலே ஒருசில நண்பர்களுக்கு இருக்கிறது. நாங்களும் பாராட்டிவிட்டால், எல்லோரும் பாராட்டிவிட்டால் ஜனநாயகம் மரித்துப் போய்விடும். நாடாளுமன்ற ஜனநாயகம் வீழ்ந்துபோய்விடும். எனவே உங்களுக்கு ஒருபுறம் தெரிந்து, எங்களுக்கு ஒருபுறம் தெரிந்தால் அதை பார்க்கவேண்டியதும், அதைப்பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டியதும் எங்களுடைய பொறுப்பு. அதனால் நீங்கள் அதைத் தாங்குகிற பக்குவம் படைத்தவர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக ஆளுநருடைய உரையில் புதிய பொருளாதாரக் கொள்கையை இந்த அரசு வரவேற்றிருக்கிறது. லிபரலைசேஷன்;

டீரெகுலேஷன் ஆகிய அத்தனையையும் வரவேற்றிருக்கிறது. இது மிகவும் பாராட்டத்தக்க வரவேற்கத்தக்க அரசாங்கத்தினுடைய கொள்கையாக இருக்கிறது. அதைப்போல மத்திய அரசினுடைய அமைச்சர்களான அதாவது ஜவுளித்துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு வெங்கடசாமி அவர்கள், 'மினிஸ்டர் ஆஃப் ஸ்டேட் பார் பெட்ரோலியம் மாண்புமிகு கேப்டன் சதிஷ்சர்மா, ப்ளானிங் கமிஷன் டெபுட்டி சேர்மன் மாண்புமிகு பிரணாப் முகர்ஜி ஆகிய இவர்களைப் பற்றியும் இவர்களோடு இந்த அரசு நடத்திய பேச்சுவார்த்தைகள், அதில் வந்த ஆக்கப்பூர்வமான விளைவுகள் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிட்டு நன்றி தெரிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

நீங்கள் எந்த அளவுக்கு மத்திய அரசினுடைய பல்வேறு அமைச்சுகளை பயன்படுத்திக்கொள்கிறீர்களோ அந்த அளவுக்கு இந்த மாநிலத்திற்கு பலன்கள் இருக்கின்றன என்று நாங்கள் நம்புகிறோம். அதைப்போல ஏழை, எளிய மக்களை இந்த புதிய பொருளாதாரக் கொள்கை விட்டுவிடக்கூடாது; இந்த பாலிசி அன்ட் புரோக்ராம்ஸ் மாற்றிவிடக்கூடாது என்பதிலேயும் அக்கறையாக இருக்கிறீர்கள். அதைத்தான் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களும், பிரதமர் மாண்புமிகு நரசிம்மராவ் அவர்களும் இன்றைக்கு தீவிரமாக ஆராய்ந்து இதிலே எந்தெந்த இடங்களில் ஏழை எளிய மக்களைப் பாதிக்கிற வகையில் செயல் திட்டங்கள் வந்திருக்கின்றனவோ அவற்றை நிவர்த்தி செய்துகொண்டு வருகிறார்கள். இந்த மாநில அரசும் தங்களுடைய பங்காக அதிலே இறங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாக மத்திய அரசின்மீது பழிசுமத்தவேண்டியதில்லை. இந்த லிபரலைசேஷன் ப்ராசஸிலே ஒரு ஏழு நன்மைகள் வந்தால் 10 இடையூறுகளும் வந்துதான் தீரும். இந்தியா அவமானப்பட்டிருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், இந்திய அரசுக்கு சொந்தமான தங்கம் பம்பாயிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு லண்டன் பார்க்கிலேஸ் பேங்கில் அடமானம் வைக்கப்பட்டு, நம்முடைய பாரின் எக்சேஞ்ச் ரிசர்வு ஒன்றுமே இல்லாத காலத்தில் வெளிநாட்டிலே அடகு வைத்து விட்டு, தங்கத்தை வைத்துவிட்டு பாரின் எக்சேஞ்ச் வாங்கிக் கொண்டு வந்தது நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அறியாதது அல்ல. இன்றைக்கு இந்தியாவினுடைய பாரின் எக்சேஞ்ச் ரிசர்வ் மிக அதிகமாக இதுவரையில் இல்லாத அளவுக்கு உயர்ந்து கிடக்கிறது என்று சொன்னால் நாம் பெருமைப்பட வேண்டிய ஒரு அம்சம்தான். இந்த லிபரலைசேஷன் பிராசஸ் என்கிற அதிலே வருகின்ற ஒன்றிரண்டு இடைஞ்சல்களை களைவதற்கு தன்னுடைய செயல் திட்டங்களிலே மாநில அரசு பப்ளிக் செக்டார் அன்டர்டேக்கிங்ஸ் மூலமாக — அதன்

மூலமாக இன்றைக்கு லிபரலைசேஷன், டிஸ்-இன்வெஸ்ட்மென்ட் எல்லாம் செய்கிறோம் — அதனுடைய பலன்கள் மக்களுக்குச் சென்று அடைகிறதா என்று பார்க்க வேண்டும். அதனுடைய பலன்கள் எல்லாம் முதலாளிகளுக்குச் சென்று கொண்டிருந்தால், நிச்சயமாக இந்த லிபரலைசேஷன் பிராசஸ் அர்த்தம் இல்லாமல் மாறிவிடும்.

பிற்பகல் 12-20

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நான் சொல்ல வருவது, தமிழக அரசு மிகுந்த கண்காணிப்புடன் இருக்க வேண்டும். லிபரலைசேஷன் பிராசஸ் மற்றும் டீ—ரெகுலேசன் பிராசஸ் ஆகிய அனைத்திலும் நீங்கள் பலன்களை முதலாளிகளுக்கு மட்டும் கொடுத்துவிட்டால் ஏழை எளியவர்கள் இன்புற்று இருக்க முடியாது. அவர்களுடைய வேலை வாய்ப்பு, அவர்களுடைய சாப்பாட்டுப் பிரச்சினை அத்தனையும் பாதிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. இதுபோல் இன்றைக்கு ஒரு நாட்டினுடைய கலாச்சாரத்தின் கண்ணாடி அந்த நாட்டினுடைய சாலைகள் என்று சொல்லலாம். பண்டித ஜவகர்லால் நேரு அவர்களும் இதைத்தான் சொன்னார்கள். 'ஒரு நாடு நன்றாக இருக்கிறதா சாலையை பார் என்று சொன்னார்கள்'. நம்முடைய மேதகு ஆளுநர் தந்திருக்கின்ற அறிக்கையில் சாலைகளைப் பற்றி ஆளும் கட்சி சொல்லியிருக்கிறது. கிட்டத்தட்ட 950 கோடி ரூபாயை உலக வங்கியிலிருந்து கேட்டிருக்கிறார்கள். அந்தப் பணம் கிடைத்தவுடன் அதனை எப்படி செலவிடுவது, என்னென்ன இனங்களில் செலவிடுவது என்பதைப் பற்றி கண்டறிவதற்காக ஒரு கன்சல்டன்ட் நியமனம் செய்திருக்கிறார்கள். அது அரசு சார்பானதா, அல்லது அரசுக்கு வெளியே இருக்கிற ஒரு கன்சல்டன்சி ஏஜென்சியை அணுகியிருக்கிறார்களா என்பது குறிப்பிடப்படவில்லை. அவர்கள் சாலைகளை கண்டுபிடித்து, இனம் கண்டு அந்த 950 கோடி ரூபாயில் எப்படி சாலைகளை மேம்பாடு செய்வது என்பதற்கு ஆலோசனை நல்குவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். தனியார் துறையோடு கூட்டாக சேர்ந்தோ, அல்லது தனியாகவோ, 'எக்ஸ்பிரஸ் வேஸ்' உருவாக்குவதற்காக, நீண்டதூர சாலைகளை, இன்றைக்கு மேலை நாடுகளில் இருக்கின்ற பாணியில், தூரக் கிழக்கு நாடுகளிலே இருக்கின்ற பாணியில் உருவாக்க இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதுபோல் 'அர்பன் பெல்ட் வேஸ்', இன்றைக்கு சென்னையில் கூட 100 கோடி ரூபாய் செலவில் அண்ணா சிலையிலிருந்து சைதாப்பேட்டை வரை உருவாக்கப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். மேற்கண்ட திட்டங்களை எல்லாம் மேற்கொள்ளப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய சந்தேகம் எல்லாம் சுரைக்காய் என்று சொல்லிவிட்டால்,

ஏட்டிலே போட்டுவிட்டால், அது கறிக்கு உதவாது. 950 கோடி ரூபாய் உலக வங்கியிடம் கேட்டிருக்கிறோம், இனம் கண்டு கொள்வோம் என்று சொன்னால், அதைச் சொல்கிற அரசின் கடந்த கால நடவடிக்கைகளை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏற்கனவே மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தனது 1993-94-ம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 9-ல் சொல்லியிருக்கிறார்கள். 'இன்புராஸ்டக்சுரல் லீசிங் அண்டு பைனான்ஷியல் சர்வீசஸ்' பம்பாயிடம் நாங்கள் பூர்வாங்க ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம் என்றும் பூர்வாங்கப் பணிகள் துவங்கி விட்டோம் என்றும் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தினுடைய சாலைகளை எல்லாம் அதனுடன் சேர்ந்து, இணைந்து உடனடியாக இம்ப்ரூவ் செய்ய இருக்கிறோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்காக 'டோல்' வசூலிக்கின்ற தன்மையையும் அந்த பப்ளிக் செக்டார் 'இன்புராஸ்டக்சுரல் லீசிங் அண்டு பைனான்ஸ் சர்வீசஸ் லிமிட்டெட்டிடம்' தந்திருக்கிறோம் என்று எல்லாம் சொன்னார்கள். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜேந்திரன் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற சாலைப் பணிகளைப் பற்றி ஒரு சில விளக்கங்களை இங்கே கேட்டிருக்கிறார்கள், அதற்கு ஆக்கப்பூர்வமான பதிலைத் தருவது என் கடமை என நினைக்கின்றேன். நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிற 950 கோடி ரூபாய் என்பது குறிப்பாக ரோடு செக்டார் புராஜக்ட் என்ற ஒரு தனி திட்டம். நம்முடைய ரெகுலர் மெயின்டனென்ஸ் என்று சொல்லப்படுகின்ற வருடாந்திர பராமரிப்பிலோ அல்லது நாம் வருடா வருடம் மேற்கொள்கின்ற திட்டங்களிலோ சேர்க்கப்பட்ட திட்டம் அல்ல. அது ஒரு சிறப்பு திட்டம். காலங்காலமாக பாழடைந்த சாலைகளை சீரமைக்க வேண்டும் என்றதற்கு பின்னாலேதான், நம்முடைய ஆட்சி காலத்திலே நம்முடைய தங்கத் தலைவி இந்த நாட்டுக்கு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே (மேசையைத் தட்டும் ஒலி) மெயின்டெனென்ஸ் அலாட்மென்டை மூன்று மடங்கு உயர்த்தித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் பலமுறை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன். பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நிறைய சாலைகள் பராமரிக்கப்பட வேண்டியுள்ளன. அந்தத் திட்டங்களுக்கு போதுமான நிதி ஆதாரம் நம்மிடம் இல்லை. ஆகவேதான் புதிய

திட்டங்களை உருவாக்குவதற்காக பல்வேறு நிதி நிறுவனங்களிடம், தனியார் நிதி நிறுவனங்களாக இருந்தாலும் சரி, உலக வங்கியாக இருந்தாலும் சரி, ஆசிய டெவலப்மென்ட் வங்கியாக இருந்தாலும் சரி பல்வேறு நிலைகளிலே இன்றைக்கு நாம் சாலை பணிகளை செய்கிறோம். உதாரணமாக, நம்முடைய ஆட்சியில் 'ஈஸ்டு கோஸ்ட்' ரோடுக்கு ஆசிய டெவலப்மென்ட் வங்கி பணம் கொடுக்கிறார்கள். அதுபோல் உலக வங்கித் திட்டத்தில் நாம் ஏன் செயலாற்றக்கூடாது என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான சிந்தனையின் அடிப்படையில் எந்த ஆட்சி காலத்தில் இல்லாத அளவுக்கு ஒரு திட்டம் உலக வங்கி நிபுணர்கள் எல்லாம் வந்து பார்த்து பிறகு கொள்கை அளவில் ஒப்புதல் தந்தார்கள்.

பிற்கல் 12-25

அதற்கு பின்னாலே, கன்சல்ட்டேடிவ் கமிட்டி என்று போட்டு, அந்த ஆலோசனைக் குழு ஒன்றினைப் போட்டு, தீர்மானிக்கின்ற அந்த குழுவிடம் நாங்கள் டெண்டர் கேட்டு, அதிலே பல்வேறு நிபுணர்கள் கலந்துகொண்டு, அதிலே ஒரு முறையானவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவரிடத்திலே ஒப்படைத்திருக்கிறோம். அவர்கள் இடங்களைத் தேர்வு செய்வார்கள். எந்த எந்த சாலைகளை மேம்படுத்தவேண்டும், அதிலே அதிகமான டிராபிக் ஃப்ளோ என்று சொல்லப்படுகின்ற, வாகனங்கள் அதிகமாகப் போகின்ற சாலைகளை எல்லாம் தேர்ந்தெடுத்து அதை உலக வங்கி திட்டத்தில் செயல் ஆக்குவதற்காக அங்கே செய்து இருக்கிறோம். மைய அரசினுடைய ஒப்புதலையும் பெற்று உலக வங்கிக்கு அந்த திட்டம் போய் இருக்கிறது. ஆகவே விரைவில் வரும் என்ற அளவில் அதற்கான பணிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

நாகை காயிதே மில்லத் மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே, ஏற்கனவே ஒரு ஒப்பந்தத்தை நாங்கள் பம்பாய் நிறுவனத்தோடு உருவாக்கினோம். அவர்களிடத்திலே நாம் எத்தனை வருடங்களுக்கு லீஸ் போடுவது ? எவ்வளவு ரூபாய் அங்கே டோல் கலெக்ஷன் செய்வது என்பதிலே சில முரண்பாடுகள். அதிலே அவர்கள் அதிகமாகக் கேட்டார்கள். நாம் முடியாது என்று சொன்னோம். ஏனென்று சொன்னால், அங்கே இருப்பவர்கள் டோல் செலுத்த வேண்டும். அதிலே பிரச்சினை எதுவும் வந்துவிடக்கூடாது. அதிலே பிரச்சினை வந்தால் அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவான முடிவினை எடுத்து இப்படித்தான் செய்ய வேண்டும் என்று சொல்லி ஒரு வரைமுறையிட்டார். அதிலே அவர்களுக்கு கொஞ்சம் கருத்து வேறுபாடு இருந்தது. இருந்தாலும் கூட, நாங்கள் அவர்களை

மீண்டும் மீண்டும் அழைத்து நீங்கள் 30 கோடி ரூபாய் இன்வெஸ்ட் செய்யுங்கள் என்று சொல்லி அவர்களை அழைத்தோம். நம்முடைய நிபந்தனைக்கு அவர்கள் ஒப்புக்கொண்டு அதற்கெல்லாம் ஒரு கமிட்டி போட்டு முறையாக ஜீ.ஓ.-வும் போட்டோம். அதற்கு ஒப்புதலும் தந்தார்கள். கையெழுத்திட்டோம். அவர்கள் பணம் கொண்டு வருவதிலே, இன்றைக்கு அவர்களுக்கு கொஞ்சம் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறோம். வெளியிலே இருந்து வருபவர்கள் பணம் போடுகிறார்கள். ஆகவே அவர்களை எப்படியாவது தன்வயப்படுத்தி முதலீடு செய்யவேண்டும் என்றுதான் முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே அந்த பணி நின்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான், காயிதே மில்லத் மாவட்டத்திற்கு இன்றைக்கு நம்முடைய இதயதெய்வத்தின் ஆட்சியிலே 18 கோடி ரூபாய் இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பணம் வராவிட்டாலும் பரவாயில்லை, அந்த மாவட்டத்தின் சாலைகள் சீர்கெட்டுக் கிடக்கின்றன, உடனடியாக ஸ்பெஷல் அலாட்மென்ட், தனி சிறப்பு நிதி என்று ஒதுக்கி, அந்த பணிகளுக்கு நிதி வரும்வரையில் நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை என்று சொல்லி, நம்முடைய நிதியிலிருந்து, நமக்கு எவ்வளவோ நிதி இடர்பாடுகள் இருந்தாலும் அதைச் செய்யவேண்டும் என்று இன்றைக்கு நிதி ஒதுக்கீடு செய்து, இன்றைக்கு அதற்கான எஸ்டிமேட்டுகளும் தயாரிக்கப்பட்டு, டெண்டர்ஸ் விட்டிருக்கிறோம். முதல்கட்டமாக ஏனென்றால் ஒரே நேரத்தில் அத்தனையையும் செய்துவிட முடியாது. தவறுகள் வந்துவிடும். ஆகவே பார்ட் பார்ட்-ஆக, 'ஃபேஸ்ட் மேனர்' என்று சொல்லப்படுகின்ற அளவிலே ஓராண்டுக் காலத்திலே 18 கோடி ரூபாயிலே அந்த சாலைகளை பராமரிக்க இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த நிறுவனம் பணம் போடுவதிலே நிதி ஆதாரத்தைத் திரட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்று சொன்னால் பணத்தைக் கொண்டு வந்தால்தான் இங்கே வேலை நடத்தமுடியும். டெண்டர்ஸ் விட்டுவிட்டு பேமெண்ட் கொடுக்கவில்லை என்று சொன்னால் அதிலே பிரச்சினை வந்துவிடும். ஆகவே நிதியை முழுமையாகப் பெற்றுக்கொண்டு முறையோடு வாருங்கள், நீங்கள் வேலையை ஆரம்பிக்கலாம் என்று சொல்லி இருக்கிறோம். ஆகவே விட்டுவிடவில்லை. நாங்கள் தொடர்ந்து அவர்களோடு பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணத்தோடு வந்தால்தான் இங்கே வேலை நடைபெறும் என்று அவர்கள் உணர்ந்ததால்தான் அவர்கள் பணம் இல்லாததால், இன்றைக்கு அங்கே போகிறார்கள். வேறு ஒருவரைப் பார்த்து இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் அவர்களையே தன்வயப்படுத்தி அவர்களையே வேலைப் பார்க்க செய்கின்றோம் என்று சொன்னார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக எளிதாகச் செய்யமுடியும். காரணம் இன்றைக்கு நாகை காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய அந்த புதிய திட்டம், பிரைவேட்டைசேசன், ஒரு மாடர்ன் ஸ்கீம் அதற்கு தேவையே 30 கோடி ரூபாய்தான். அது ஒன்றும் உங்களுக்குப் பெரிய காரியம் அல்ல. நீங்கள் யாரையோ ஒருவரை அணுகி, ஏதோ மற்றொரு நிறுவனத்தை அணுகி இருக்கிறீர்கள். நீங்கள் நிச்சயமாக அதை முடிக்கமுடியும். Where there is will, there is a way.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "Where there is will, there is a way" என்று சொல்லியிருக்கிறார். அதுவே அவர்களுடைய கட்சி ஆட்சி செய்கின்ற மத்திய அரசாங்கத்திற்கும் பொருந்தும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் இதற்கு முன்னால் பேசுகின்றபோது குறிப்பிட்டார். லிபரலைசேசன் பாலிசியை மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. ஏழை மக்கள் பாதிக்கப்படாமல் மாநில அரசு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இரண்டையும் பிரித்துச் சொன்னார். அவருக்கு நான் சொல்ல விரும்புகிறேன். பாரின் எக்ச்சேன்ஞ் ரிசர்வ்ஸ் எல்லாம் பெருகி உள்ளது என்று மத்திய அரசு பெருமையாகப் பேசிக்கொள்கின்றதே, இதனால் நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு என்ன லாபம் ? நான் கேட்பது எல்லாம் இந்த 20 பில்லியன் யு.எஸ். டாலர் பாரின் எக்ஸ்சேன்ஞ் ரிசர்விலிருந்து ஒரு 5 பில்லியன் டாலர் அளவுக்கு பணத்தை எடுத்து பப்ளிக் டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டத்தில் அரிசி விலையைக் குறைத்து ஏழை மக்களுக்கு கொடுத்தால் என்ன ? (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எந்தத் திட்டத்தைச் சொன்னாலும் பணத்தோடு வாருங்கள் என்று சொல்கின்றீர்கள் என்கிறார். ஆமாம். ஏனென்றால், மாநில அரசிடம் போதுமான அளவுக்குப் பணமில்லை. பெருமளவில் ஜாயின்ட் செக்டார் வென்ச்சரையும் வரவேற்கிறோம். கூட்டுறவுத் துறையில் ஒரு

கோ-புரொமோட்டர் வந்தால் பணம் கொண்டு வருவார் அல்லது பிரைவேட் செக்டாரிடம் ஒரு திட்டத்தை ஒப்படைத்தால் பணம் கொண்டு வருவார். ஏனென்றால் மாநில அரசிடம் போதுமான அளவு பணம் இல்லை. ஏன் இல்லை ? மத்திய அரசு லிபரலைசேசன் பாலிசியைக் கொண்டு வந்தது. டிரெகுலேசன் பாலிசியைக் கொண்டு வந்தது. அதனால் பெரிய முதலாளிகளும், பணக்காரர்களும், முதலீட்டாளர்களும் பயனடைகிறார்கள். அதேசமயத்தில் மத்திய அரசு அரிசியின் விலையை உயர்த்திக்கொண்டே போகிறது. ஆகவே, பொது வினியோக முறையின்கீழ் சாதாரண ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்படுகின்ற ரேசன் அரிசியின் விலையைக் குறைக்க வேண்டும் என்பதற்காக மாநில அரசு 440 கோடி ரூபாய் அளவுக்கான மானியச் சுமையை ஏற்றுக்கொண்டு அவதிப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இப்பொழுது எப்படிப் பிரித்திருக்கிறார்கள் என்றால் லிபரலைசேசன், டிரெகுலேசன் கொண்டு வந்து, நாங்கள் மத்தியில் பெரிய முதலீட்டாளர்களுக்கு, பணக்காரர்களுக்கு, முதலாளிகளுக்கு உதவி செய்கிறோம். நீங்கள் மாநில அளவில் உங்களால் முடிந்த சப்சிடியைக் கொடுத்து, மானியத்தைக் கொடுத்து, ஏழை எளிய மக்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், நாட்டிலுள்ள ஏழையெளிய மக்களைக் காப்பாற்றுவது, அவர்களைக் கைத்தூக்கி விடுவது என்பது ஒரு கூட்டு முயற்சியாக இருக்க வேண்டும். மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து இதைச் செய்ய வேண்டும். ஆகவே, சுமை பூராவையும், சுமை முழுவதையும் எங்கள்மீது சுமத்தினால் எப்படி முடியும் ? அதனால்தான் சொன்னேன், தினந்தோறும் பிரச்சாரத்திற்காக பேசுவதைப் போல, அன்று நாட்டிலிருந்த தங்கத்தை எல்லாம் கொண்டு வெளிநாட்டில் வங்கியில் வைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் இன்றைக்கோ நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடையச் செய்திருக்கிறோம். 20 பில்லியன் டாலர் அளவுக்கு Foreign Exchange Reserve built up செய்திருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக்கொள்வதால், தம்பட்டம் அடித்துக்கொள்வதால் ஏழை எளிய மக்களுக்கு வயிறு நிரம்பப்போகிறதா ? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, உங்கள் ஆளுகையின் கீழ் இருக்கின்ற மத்திய அரசிடம் சொல்லி, இந்த 20 பில்லியன் டாலர் பாரின் எக்ஸ்சேஞ்ச் ரிசர்வ்ஸ்-ல் ஒரு 5 பில்லியன் டாலர் மட்டும் எடுத்து நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் பொது வினியோக முறையின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையைக் குறைக்கச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.வி. இராஜேந்திரன்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசுக்கு இன்றைக்கு இருக்கின்ற ரைஸ் சப்சிடியில் இருக்கின்ற பொருளாதார இக்கட்டுகளைப் பற்றி சொன்னார்கள். நான் சொல்ல வந்தது எல்லாம், சென்ட்ரலுக்கு ரெஸ்பான்ஸ்சிபிலிட்டியே இல்லை. இவை அத்துணையையுமே ஸ்டேட் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மட்டும் நான் சொல்லவில்லை. நம்முடைய கான்ஸ்ட்டிட்யூசனுக்கு எதிராக நான் பேசவும் விரும்பவில்லை. அதேசமயம் இங்கே இருக்கின்ற அமலாக்கம், இன்றைக்கு நீங்கள் டிஸ்இன்வெஸ்ட்மென்ட் செய்கிறீர்கள் என்று சொன்னால், நான் அரிசியை அரிசியாகக் கொடுங்கள் என்று சொல்லவில்லை. அதனுடைய பலன், டிஸ்இன்வெஸ்ட்மென்டினுடைய பலன், நீங்கள் டிக் மூலமாக கொடுக்கிற லோனை எக்ஸ்டென்ட் பண்ணுவதுடைய பலன், அதனால் அதிகமாக ஆகின்ற உற்பத்தி, வேலைவாய்ப்பு, அதனால் கிடைக்கின்ற சம்பளம், இதனால் ஒருவனுடைய வாழ்க்கை மேலே வருகிறது என்பதைத்தான் சொல்கிறேன்.

லிபரலைசேசனுடைய பலன் அரிசியாகத் தான் வர வேண்டும் என்பதல்ல. அது வேலை வாய்ப்பாக வரவேண்டும். நீங்கள் டிஸ்இன்வெஸ்ட்மென்ட் என்று சொன்ன உடன், இன்றைக்கு ஸ்பிக்கினுடைய ஷேர்களை அரசாங்கம் விற்றிருக்கிறது. டிட்கோ விற்றிருக்கிறது. அதுபோல டிக், எஸ். ஆர் ஷிப்பிங் கார்ப்பரேசன், ஷிப்பிங் கார்ப்பரேசன் ஆப் இந்தியாவினுடைய ஷேரை டிக் வாங்கியிருந்தது. எஸ்.ஆர். ஷிப்பிங் கார்ப்பரேசனுக்கு விற்றிருக்கிறது. இப்படி எல்லாம் டிஸ்இன்வெஸ்ட்மென்ட் செய்கிறீர்கள். பல கோடி ரூபாய் உங்களுடைய கைக்கு வருகிறது. அதை மீண்டும் அட்வான்ஸ் செய்கிறீர்கள். உங்களைப் பார்த்து ஐ.டி.பி.ஐ. பாராட்டியிருக்கிறது. அதிகமாக அட்வான்ஸ் தந்திருக்கின்ற ஒரு மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. 3—வது இடத்திலே இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

தொழில் துறையிலே 3—வது இடத்திலே இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. அது பின்னுக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதிகம் லென்டிங், இன்றைக்கு டிக் அதிகமாக லென்ட் பண்ணியிருக்கிறது என்பதை ஐ.டி.பி.ஐ. பாராட்டியிருக்கிறது. ஆனால் கடன் அதிகமாகக் கொடுத்திருந்தாலும் தொழில் முன்னேற்றத்தில் 3—வது இடம், 5—வது இடத்திற்கு தமிழகம் வந்தால் அதன் பலன் சாதாரண மக்களுக்குக் கிடைத்ததாக அர்த்தம். அப்பொழுதுதான்

அவர்களுடைய வாழ்வு மேம்படும் என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆனால், இப்படி பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில் 950 கோடி ரூபாய்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

* *மாண்புமிகு திரு. துரை ராமசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டபொழுது 13—வது இடத்திலே இருந்த தமிழகம் இன்று 3—வது இடத்திற்கு வந்திருக்கிறது என்பதைத்தான் நாங்கள் சொல்கின்றோம். ஆகவே, தொழிலிலே பெரும் முன்னேற்றத்தை நாம் அடைந்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல, ஒரு லட்சம் சிறு தொழில்களை 5 ஆண்டுகளிலே ஆரம்பிப்போம் என்று அறிவித்த புரட்சித்தலைவியினுடைய அறிவிப்பின்கீழே இன்று 87 ஆயிரம் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஏற்கெனவே, இன்னும் 1½ ஆண்டுக்காலம் இருக்கிறது. ஆக, தொழில் துறையிலே வேகமான முன்னேற்றத்தைத்தான் இந்த அரசு கண்டுகொண்டிருக்கிறது. ஆகவே, அதன்மூலம் வேலைவாய்ப்புகளையும் நாம் லட்சோப லட்சம் மக்களுக்கு இன்று ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம். அது ஒருபுறம் நடந்துகொண்டிருந்தாலும் இன்று வினியோக முறையிலும் மக்களுக்கு அரிசி குறைந்த விலையில் கொடுக்கப்பட வேண்டும் என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு தக்க பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும். இங்கே டி.ஐ.ஐ.சி.-யைப் பொறுத்தவரைக்கும் மிகச் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.

பிற்பகல் 12-35

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் பேசியதற்கு வருகிறேன். சாலைகளைப் பொறுத்தவரையில் வெறும் திட்டங்கள்தான் இருக்கின்றன. 1991-92 பட்ஜெட் உரையில், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வருகிறோம், அங்கே 'பிரைவேட் பார்ட்டிசிபேஷன்' வரப் போகிறது, இதைக் கேட்டு இந்த மாமன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன் என்று 4 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த மாமன்றத்தில் பட்ஜெட் உரையாற்றினார்கள். 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. அது நடக்கவில்லை. அதைப்போல இப்போது சொல்லுகிறார்கள், 950 கோடி ரூபாய் என்று. இதற்கான பூர்வாங்க வேலைகளைத் துவக்கி, சாலைகள் வருவதென்பது எப்போது என்று தெரியாது. அதனால் நாம் எதையாவது சொல்லிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் :

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். நம்முடைய நிதி ஆதாரங்களின் அடிப்படையிலே சாலைகளைப் பராமரிப்பது என்பது ஒன்று. நமக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படுகின்றபோது தனியாரை வரவழைத்து, புதிய முறையிலே அவர்களை ஈடுபடுத்தி, அவர்கள் மூலம் சாலைகளைச் செப்பனிடுவது, அதற்கு டோல் வசூலிப்பது என்பது இரண்டாவது முறை. நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே முதல் முறையிலே 3 மடங்கு நிதி ஒதுக்கீடு தந்திருக்கிறார்கள். அதைப் புள்ளிவிவரமாக நான் சட்டமன்றத்திலே பேசி இருக்கிறேன். குறிப்புகளும் இங்கே இருக்கின்றன. அது தவிர அந்த மாவட்டத்தினுடைய சாலைகளை மேம்படுத்துவதற்கு தனியார்கள் வந்தார்கள். நாமும் பேசினோம். அதிகாரிகள் மட்டத்தில் — செக்ரட்டரீஸ் லெவலில் - மீட்டிங் போட்டோம். திட்டங்களை ஒப்புதல் செய்து, இத்தனை கோடி ரூபாய் நாங்கள் இன்வெஸ்ட் செய்கிறோம், அதற்கான முதலீடுகளைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். நாங்கள் அவர்களோடு பேசி, அவர்களை விட்டுவிடாமல், எப்படியும் அவர்கள் வர வேண்டுமென்ற எண்ணத்தில் தான் செயல்பட்டோம். அதற்கான உத்தரவையும் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். அதற்காக அவர்கள் என்ன கண்டிஷன்கள் போட்டார்களோ அதன்படி அதிகாரிகள் மட்டத்தில் பேசி முடிவு செய்தோம். ஆனால் பணம் அவர்களுக்குக் கிடைப்பதில் கொஞ்சம் தாமதம் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் பணம் கொண்டு வந்தால்தான் வேலை என்று சொன்னார்கள். ஆமாம். பணம் கொண்டுவந்தால்தான் வேலை செய்ய முடியும். தனியாரிடத்தில் சாலை ஒப்பந்தம் போட்டுவிட்டு, இங்கே கான்ட்ராக்டர்கள் வேலை செய்கிறார்கள். அரசின் சார்பிலே நம்மோடு அவர்கள் சேர்ந்து செய்கிறார்கள். அவர்களுடைய ஒப்பந்தப்படி நாம் பணம் கொடுக்கவில்லை என்று அவர்கள் கோர்ட்டுக்குப் போனால் யார் பணம் கொடுப்பது? ஆகவே தனியார்கள் முதலீடு செய்தால்தானே வேலைகளை கான்ட்ராக்டர்களிடம் விட முடியும். ஒப்பந்தம் செய்கிறோம். இன்றைக்கு இந்தியாவிலே பல்வேறு ஒப்பந்தங்களை மேலை நாடுகளோடு செய்து கொண்டிருக்கிறார்கள். பல்வேறு திட்டங்களை, பிராஜக்டுகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அத்தனையையும் இன்றைக்கு நிறைவேற்றி விட்டதாகச் சொல்ல முடியாது. எத்தனையோ திட்டங்களுக்கு நாம் இன்றைக்குக் கையை நீட்டிக் கொண்டிருக்கிறோம் மத்திய

அரசிடத்திலே. அத்தனையும் இங்கே வந்துவிட்டதா ? நெடுஞ்சாலைத் துறையிலே இன்றைக்கு நிறைய செய்து கொண்டிருக்கிறோம். தேசிய நெடுஞ்சாலைத் துறையிலே இன்றைக்கு எத்தனையோ ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன. அத்தனையும் இன்றைக்குச் செயல்படுத்த முடியாது. ஆனால் பணம் கொண்டு வருகிறபோது, நிதி ஆதாரங்களைத் திரட்டும்போது, இந்த வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. இதற்கிடையிலேதான் அந்தப் பகுதி பாதிக்கப்படக்கூடாது என்ற நல்லெண்ணத்திலேதான், மிகவும் மோசமாக இருக்கும் பகுதிகளைச் சீரமைக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் 'ஸ்பெஷல் அலாட்மென்ட்' — சிறப்பு நிதி என்ற அடிப்படையிலே அந்த மாவட்டத்திற்கு மாத்திரம் 18 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு மிகப் பெரிய நிதி ஒதுக்கீடு ஒரு மாவட்டத்திற்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே தனியார் நிதி நிர்வாகத்தினுடைய முதலீடு இல்லையென்றாலும், நான் இருக்கிறேன் என்று அந்த மக்களுக்காகச் சாலைகளைப் போடுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். இந்த ஆண்டுக்குள் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு நல்ல சாலைகளைப் போட்டுத் தருவோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை அறிவிப்புகள், அறிவிப்புகள் வெளியிடப்பட வேண்டுமென்பதற்காக வெளியிடுவது கிடையாது. அது செயல்படுத்தப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு, தைரியத்தோடு அதனை நீங்கள் அறிவிக்கிறீர்கள். நான் அந்தத் திட்டம் பற்றித்தான் கேட்டேன். நான் பட்டுக்கோட்டைக்கு வழிக்கேட்டால், நீங்கள் கொட்டைப்பாக்குக்கு விலை சொன்னால், அது பிரயோசனமாக இருக்காது. நான் அந்தத் திட்டம் பற்றித்தான் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகள் கேட்டார்கள். தனியாருக்கு விடப்பட்ட நிலை என்ன என்று கேட்டார்கள். அதற்கு விளக்கம் சொல்லியிருக்கிறேன். மறுபடியும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் வரவில்லை என்றாலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லி

இருக்கிறேன். அவர்கள் வரவில்லை என்றாலும், பணிகள் பாதிக்கப்படாது என்று நான் உறுதி அளித்து, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் சிறப்பு நிதி ஒதுக்கி, டெண்டர்கள் விடப்பட்டு, பணிகள் தொடங்குகின்றன என்றும் சொல்லியிருக்கிறேன். இதற்குமேலே என்ன எதிர்பார்க்கிறார் ? 960 கோடி ரூபாய் ரோட் செக்டார் பிராஜக்ட் என்று சொன்னால், மற்ற ஆட்சிக் காலத்தில் இப்படி திட்டம் தீட்டினார்களா ? பணம் இல்லை என்றால், பேசாமல் இருந்தார்கள். நாங்கள் வந்ததற்குப் பின்னாலேதான் புதிய முறையில் உலக வங்கியை அணுகி, திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம். திட்டங்களைப் போட்டுவிட்டாலே பணம் வந்துவிடாது. உலக வங்கியிலே கடன் வாங்க வேண்டுமென்றால், மத்திய அரசு ஒப்புதல், அதற்குப் பின்னாலே வங்கியினுடைய ஒப்புதல் பெற வேண்டும். அங்கே இருந்து கமிட்டி வந்து பார்வையிடுகிறது. அதற்குப் பின்னாலே நம்முடைய அதிகாரிகளோடு டிஸ்கஸ் செய்கிறார்கள். அவர்கள் சில கண்டிஷன்ஸ் போடுகிறார்கள். இன்னின்ன கன்சல்டன்டை நியமிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்துகிறோம். இதற்குப் பின்னாலே ரீஅப்ரெய்சல் மிஷன் என்று வந்து, எல்லாவற்றையும் தெரிவு செய்ததற்குப் பின்னாலே, நிதி ஆதாரத்திற்கு உதவி செய்கிறார்கள். இதுதான் உலக வங்கியிலே கடன் வாங்குகிற முறை. இதில் எல்லாம் உடனடியாக மந்திரத்தாலே மாங்காய் காய்க்காது, போட்டவுடனே. இதற்கெல்லாம் கால அவகாசம் வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நாங்கள் முறைகளைப் பின்பற்றி, உலக வங்கியினுடைய நிபந்தனைகள், கொள்கைகள்படி நாங்கள் சரி செய்து கொடுத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று இன்றைக்கு முழுமையாக நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அனுமதி கிடைத்தவுடன் பணிகள் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பட்டுக்கோட்டைக்குத் தான் வழியைச் சொன்னார். நீங்கள் வேப்பந்தட்டையில் போய் நின்றால் அவர் என்ன செய்வார் ?

திரு. பி.வி. இராஜேந்திரன் : நாங்கள் சென்னையில் பி.சி.சர்க்காரின் மாயாஜால வித்தையைப் பார்த்திருக்கிறோம். ஜூனியர் சர்க்காரின் மாயாஜால வித்தைகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த சர்க்காருடைய ஜால வித்தகைள் - நேற்று ஒரு ஸ்கீம், இன்று ஒரு ஸ்கீம் என்று ஒரு ஸ்கீமும் வருவதில்லையே. (குறுக்கீடு) ஒரு ஸ்கீமும் வரவில்லையே !

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : நான் அதைத்தான் சொன்னேன். மீண்டும் மீண்டும் உறுப்பினர் அவர்கள் தவறான திசையிலேயே பேசிக்கொண்டிருக்கிறார். நான் என்ன சொல்கிறேன் என்றால், ஏற்கெனவே திட்டம் அறிவித்தோம். இப்போது கூட ப்ராஜெக்ட்டில் கொடுத்திருக்கிறோம். நெய்வேலியிலே இன்றைக்கு 250 மெகாவாட்டுக்கு நாம் அனுமதி கொடுத்துவிட்டோம். பவர் பர்ச்சேஸ் அக்ரிமென்ட் கூட போட்டுவிட்டோம் எஸ்.டி.சி. நிறுவனத்தோடு. மத்திய அரசிலே அனுமதி பெறுவதற்காக அவர்கள் காத்துக் கிடக்கிறார்கள். யார் பொறுப்பு இதற்கு? காலதாமதத்திற்கு யார் பொறுப்பு ? நாம் அனுமதி கொடுத்து, அதற்காக மத்திய அமைச்சர் அஜீத் பாஞ்சா அவர்கள் கூட வந்து, அடிக்கல் நாட்டிவிட்டுப் போனார்கள். அவ்வளவு செய்ததற்குப் பிறகும் இன்னும் அவர்களுக்கு கிளியரன்ஸ் கிடைக்கவில்லை. அங்கே மத்திய அரசாங்கததிலே போய் காத்துக்கிடக்கிறார்கள். நாம் பவர் பர்ச்சேஸ் அக்ரிமென்ட் போட்டு நம்முடைய கடமையை நாம் செய்து விட்டோம். உலக வங்கியிலே கடன் வாங்குவது என்பது இங்கேயிருந்து நேரடியாக வாங்குவது இல்லை. பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. பல்வேறு வழிமுறைகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட திட்டத்தைப் பற்றி இன்னொரு சுவாராஸ்யமான, ருசிகரமான தகவலையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி மாநில அரசு ஒப்புதல் தந்து, மத்திய அமைச்சரே வந்து அடிக்கல் நாட்டிய ஒரு திட்டத்திற்கு, அவர்கள் கட்சியைச் சேர்ந்த ஒரு எம்.பி.யே. கோர்ட்டுக்குச் சென்று தடையாணை வாங்கிவிட்டார் என்பதுதான் அந்த ருசிகரமான தகவல். (மேசையைத் தட்டும் ஒலி). அதனால் அந்தத் திட்டம் இத்தனை காலம் தாமதப்பட்டது. இப்போது நீதி மன்றத்திலே அந்த ஸ்டே வெக்கேட் ஆகி, அந்த ரிட் பெட்டிஷன் தள்ளுபடி செய்யப்பட்டு, 'இதில் கோர்ட் தலையிட முடியாது, இத்தகைய திட்டங்களை வகுப்பதற்கு, அனுமதி கொடுப்பதற்கு மாநில அரசாங்கத்திற்கு எல்லா உரிமையும் இருக்கிறது ' என்று கோர்ட் தெளிவாகத் தீர்ப்பளித்துவிட்டது. ஆகவே இன்று மத்திய அரசாங்கம் தான் அதற்குத் தேவையான ஒப்புதலைத் தராமல் தாமதப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அறிக்கையில், சென்னை, ஆட்டோமொபைல் இன்டஸ்டிரியினுடைய ஹெட்குவார்ட்டர்ஸாக - இந்தியாவின் தலைமை இடமாக மாற்றப்படும் என்றும், அதற்குத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே முதலாவது கார் தொழிற்சாலை நமது ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தான். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் மூடப்பட்ட பிறகு நமது முதலமைச்சர் அவர்கள் அதைத் தன்னுடைய கவனத்தில் எடுத்துக்கொண்டு பலமுறை அவர்களோடு பேசி அரசாங்கமும் உதவி செய்து அந்தத் தொழிற்சாலையைத் திறக்க வைத்தார்கள். அரசாங்கத்தின் பணமும் அதற்காக விடுவிக்கப்பட்டிருக்கிறது. ஆர்டர்ஸ், கிட்டத்தட்ட 1000 வண்டிகளுக்கு இருக்கின்றன. தந்திருக்கிறார்கள். ஆனால் அப்படித் திறக்கப்பட்ட தொழிற்சாலை ஒரு ஆண்டுகூட நடைபெறவில்லை. அது இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. கடந்த 7-11-1994 அன்று, 'Board of Industrial and Financial Reconstruction (BIFR)' இந்த வழக்கை விசாரித்து, ஒரு தீர்ப்பைச் சொல்லியிருக்கிறது. அந்தத் தீர்ப்பை ** (Interruption) This is not sub-judice.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

** மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ ஒரு காகிதத்தை வைத்துப் படித்துக்கொண்டிருக்கிறார். ஆனால் (குறுக்கீடு) அதற்குத்தான் வருகிறேன். எந்த ஆவணத்தை வைத்துக்கொண்டு படித்துக் கொண்டிருக்கிறார்களோ அந்த ஆவணத்தினுடைய நகலை மாண்புமிகு தலைவர் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதைக் கொடுக்காமல் படித்துக் கொண்டே போனால், அவையினுடைய குறிப்பேடுகளில் அந்தச் செய்திகள் அத்தனையும் ஏற்றப்பட்டுவிடும். நாளைக்கு இந்த அவையினுடைய குறிப்புகளைப் படிக்கின்றபோது, இதை உண்மையாக இந்த அவை ஏற்றுக்கொண்டது என்கின்ற ஒரு கருத்தினை உருவாக்கிவிடும். ஆகவே, அவையினுடைய சட்டதிட்டங்களுக்குட்பட்டு, படிக்கின்ற ஆவணத்தினுடைய நகலைப் பேரவைத் தலைவருக்குக் கொடுத்துவிட்டு படிப்பது நல்லது.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் அல்போன்ஸ்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது உறுப்பினர் பி.வி. இராஜேந்திரன் அவர்கள் சில தகவல்களைச் சொல்கிறார். ஒரு தீர்ப்பு பற்றி சொல்லி, அந்தத் தீர்ப்பிலே சொல்லப்பட்டு இருப்பதாகச் சொல்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தீர்ப்பில் அந்த வார்த்தைகள் சொல்லப்படவில்லை என்று சொன்னாலொழிய, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அமைச்சர் கேட்பது வேறு. (குறுக்கீடுகள்) ஒரு ஆவணத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, அந்த ஆவணத்தின் சில பகுதிகளை அவர் சொல்கிறார் அல்லவா? (குறுக்கீடுகள்) அவர் அந்த ஆவணத்தை நம்பி, அந்த ஆவணத்தின் அடிப்படையில் இத்தனையாவது 'பாரா' என்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, நம்முடைய விதியில் என்ன இருக்கிறது என்று பாருங்கள் (குறுக்கீடுகள்) அதற்கு இடையிலே அவர் சொல்லி முடிக்கட்டும் என்று இருந்தேன். (குறுக்கீடுகள்) இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. இராஜேந்திரன் : நான் பொறுப்பு எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் முடித்துவிடுகிறேன். அவர் பாயின்ட் ஆஃப் ஆர்டருக்குப் பதில் சொல்லவில்லை. அதாவது பல முறை நான் பேரவையில் விதிகளைச் சுட்டிகாட்டி அறிவித்து இருக்கிறேன். ஏதேனும் ஒரு குறிப்பை அல்லது ஆவணத்தை உறுப்பினர்கள் ஆதாரமாக வைத்து இங்கே பேச வேண்டுமென்று சொன்னால், அந்தக் குறிப்பை அல்லது ஆவணத்தை முன்கூட்டியே எனக்குக் கொடுத்து, என்னுடைய அனுமதியைப் பெற்று இங்கே குறிப்பிடவேண்டும். (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. இராஜேந்திரன் : ஆதாரத்தைப்பற்றிப் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதைத்தானே பேசுகிறீர்கள்? அந்த 'பாரா' இருக்கிறதா இல்லையா என்பது எனக்கு எப்படித் தெரியும்? (குறுக்கீடுகள்) இப்போது நீங்கள் படித்த வாசகம் அதிலே இருக்கிறதா, இல்லையா என்பது எனக்கு எப்படித் தெரியும் ?

திரு. பி. வி. இராஜேந்திரன் : I will resign if he proves what I said is wrong.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இப்போது பிரச்சினை அல்ல. ஏதோ ஒரு குறிப்பை நீங்கள் ஆதாரமாக வைத்து இங்கே பேச வேண்டுமென்று சொன்னால், எனக்கு முன்கூட்டியே கொடுக்கவேண்டும் என்று விதி இருக்கிறது.

திரு. பி.வி. இராஜேந்திரன் : இது என்னுடைய நோட்ஸ்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நோட்ஸ் அல்ல. நீங்கள் இந்த தீர்ப்பினுடைய இத்தனையாவது பத்தி, இத்தனையாவது பக்கம் என்று சொல்கிறீர்கள். அந்தப் பக்கமா, இல்லையா என்பதை நான் எப்படிச் சரிபார்க்க முடியும் ? இதை நீங்கள் இங்கே குறிப்பிடும்போது, நான் அனுமதிப்பதற்கு எளிதாக, நான் முன்கூட்டியே அதைப் பார்த்து, உங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த விதியையே கொடுத்து இருக்கிறார்கள். எனவே, நீங்கள் முன்கூட்டியே கொடுத்திருந்தால் நீங்கள் அதுபற்றி இங்கே குறிப்பிடலாம். (குறுக்கீடுகள்) இல்லாவிட்டால், நீங்களாகச் சொல்கிறேன் என்றால், நீங்கள் பொதுவாகச் சொல்லிவிட்டுப் போகலாம், பொதுவாகச் சொன்னால் அதைப்பற்றிக் கவலை இல்லை. குறிப்பிட்டு, இந்தக் குறிப்பிட்ட ஒரு தீர்ப்பினுடைய நகல் என்று நீங்கள் சொல்கிறபோது அந்த நகலை முன்கூட்டியே என்னிடம் கொடுத்து இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை எக்ஸ்பஞ்ச் பண்ணவேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் கொடுக்காமல் செய்து இருப்பதை நான் நீக்குவதைத் தவிர வேறு வழியில்லை. எனவே, அந்தத் தீர்ப்பினுடைய இத்தனையாவது பக்கத்தில் உள்ளது என்று அவர் ஆரம்பித்ததிலிருந்து, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) விதியின்படி எனக்கு முன்கூட்டிக் கொடுத்து இருக்க வேண்டும். எனக்குக் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்)

THIRU S. PETER ALPHONSE : He is not relying upon

THIRU P.V. RAJENDRAN: Your are supposed to protect our privilege.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை புரடெக்ட் பண்ணுவதற்குத்தான் சொல்கிறேன் ; உங்களுடைய இன்டரஸ்ட்டை புரடெக்ட் பண்ணுவதற்குத்தான் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ``Hon. Speaker is always prepared to protect the interests of the Hon. Members." என்பது Hon. Members அனைவருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு உண்மையிலேயே அவர் பதில் பெற

விரும்பினார் என்றால், அந்த ஆவணத்தைப் பேரவைத் தலைவரிடம் கொடுத்து இருக்க வேண்டும். அப்போது பேரவைத் தலைவர் அதனை சம்பந்தப்பட்ட இலாகா அமைச்சர் அவர்களிடம் கொடுத்து அதற்கான பதிலையும் இந்த அவைக்குப் பெற்றுத் தருவார்கள். விரும்பினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விதிமுறைகள்படி விளக்கத்தைக் கேட்டுப் பெறலாம்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்லிவிட்டேன். நீங்கள் முன்கூட்டியே கொடுத்து இருக்க வேண்டும். நான் பலமுறை இந்த அவையிலே தெரிவித்து இருக்கிற கருத்து. அந்த விதியை நீங்கள் பின்பற்ற வேண்டும். அந்த விதியின்படி ஏதேனும் ஒரு ஆவணத்தை அல்லது செய்தியை (குறுக்கீடு) நீங்கள் ஆதாரமாக வைத்திருந்தால் அதை என்னிடம் முன்கூட்டியே கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதைக் கொடுக்காமல் பேசியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் ஏற்கெனவே நான் கொடுத்த நேரத்திற்குமேல் பேசிவிட்டீர்கள். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தைப்பற்றி சொல்ல வேண்டுமென்று சொன்னால், ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியதை நீங்கள் திரும்பவும் . . . (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. இராஜேந்திரன் : ஸ்டாண்டர்டு மோட்டார்ஸைப் பற்றிப் பேசக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பேசலாம். 3 கோடி ரூபாய் டைவர்ட் பண்ணி இருக்கிறார்கள் என்கிறீர்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்வார். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் இராஜேந்திரன், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் கம்பெனிக்கு டி.பி.எல். நிறுவனத்திலிருந்து 6.03 கோடியை ஸ்டாண்டர்டு மோட்டார்ஸுக்கு டி.பி.எல். வழங்கியது இல்லை. அதில் 4 கோடி ரூபாயை ஷேர்ஸ்ஸாக வழங்கிவிட்டு மீதியிருக்கிற 2 கோடி சொச்சம்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ரூபாயை வங்கியில் டெபாசிட்டாக அந்த நிறுவனம் வைத்திருந்தது. பிறகு டி.பி.எல். நிறுவனம் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டது என்பது தான் உண்மையே தவிர, யாரும் அதை 'மிஸ்யூஸ்' பண்ணவில்லை என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன். அதை விவரம் தெரிந்த உறுப்பினர் திரு. ராஜேந்திரன் போன்றவர்கள் இப்படித் தவறாகப் பேசக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : **

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) உங்கள் நேரம் முடிந்தது. சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்) பேசுகிறபோது 10 நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன் என்று சொன்னார். 12.15 மணிக்கு ஆரம்பித்தார். 12.23 மணி வரையில் எத்தகைய குறுக்கீடும் கிடையாது. மேற்கொண்டு அவர் இரண்டு நிமிடங்கள் வேண்டுமானால் பேசியிருக்கலாம். இப்போது எவ்வளவு நேரம் பேசி இருக்கிறார் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

திரு. எஸ்.எம். கிருஷ்ணன் : பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிளாரிபிகேஷன் நீங்கள் கேட்க முடியாது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : சென்னைக்கு குடிநீர் என்று சொன்னால் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களையும், அன்னை இந்திராகாந்தி அவர்களையும், இன்றைக்கு ஆந்திர முதல்வராக இருக்கிற, அன்றைக்கும் இருந்த என்.டி.இராமராவ் அவர்களையும் நாம் மறந்து விட முடியாது. அன்னை இந்திரா காந்தி அவர்கள் தலைமையில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அவர்களுடைய கவுண்டர்-பார்ட் திரு. என்.டி. ஆர். அவர்களோடு பேசி, அவர்கள் முன்னிலையில் வைத்து ஒரு தொகையைக் கொடுத்து அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இன்றைக்கு அந்தத் திட்டத்தைப் பற்றி ஆளுநர் உரையில் சொல்லி இருக்கிறீர்கள். அதில் நான் சொன்ன பெயர்கள் எல்லாம் விடுபட்டிருந்தாலும் திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் ஜூன் மாதத்தில் தண்ணீர் வரும் என்று சொன்னீர்கள். தற்போது டிசம்பரில் வரும் என்று சொல்லி இருக்கிறீர்கள். எப்படியாவது அந்தத் திட்டம் விரைவு பெறவேண்டும்.

அதைப்போல பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு.வி.கே. சின்னசாமி அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

டுவார்டு போர்ட் சேர்மனாக கூட இருக்கிறார். பல திட்டங்கள் இன்றைக்கு கிடப்பிலே கிடக்கின்றன. டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டிய வேதாரண்யம் - முத்துப்பேட்டை கூட்டு குடிநீர்த் திட்டம் 18 கோடி ரூபாய் திட்டம். அவர் கையால் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம். 1990-ல், அதற்கு பிறகு சப்சிகுவண்ட்டாக 199-ல் ஒரு ஜீ.ஓ. போட்டு ஒரு 'எக்ஸ்பர்ட் கமிட்டி' இந்த அரசாங்கம் போட்டிருக்கிறது. அந்த எக்ஸ்பர்ட் கமிட்டியினுடைய அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்டுக்கோட்டைக்கு வழி தேடிவிட்டு மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டுக் கொண்டிருக்கிறார். காரணம் அவர் குறிப்பிட்டிருக்கிற திட்டத்தைப் பற்றி அவர் அறியாமல் இல்லை. அங்கே எந்த அளவுக்கு மக்கள் பிரச்சினை இருந்தது, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை இருந்தது. அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலே, நிறைவேற்றுவதிலே என்று. இன்றைக்கும் அது பரிசீலனையில் இருக்கிறது. அங்கேயிருக்கிற மக்கள் பிரச்சினை காரணமாக தொடங்கப்படாமல் இருக்கிறதேயொழிய வேறு எந்தக் காரணமும் இல்லை. அதனால் அரசுக்கோ மக்கள் பணத்திற்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம், அவர் ஊர் பிரச்சினை என்கிறார்.

திரு. ஆர். சிங்காரம் : நான் சம்பந்தப்பட்ட விஷயம் இது. அவர் சொல்கிற சப்ஜெக்ட்டைத் தடுத்தது நாங்கள் தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கிற சப்ஜெக்டிற்கு உரியவரான நான் தானே அதற்கு பதில் சொல்ல வேண்டும் ? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குச் சம்பந்தப்பட்டவர் என்று சொல்கிறார். சம்பந்தப்பட்டவர் என்று சொல்கிறபோது அனுமதிக்காமல் இருக்க முடியாது.

THIRU P.V. RAJENDRAN : If it is point of clarification. I am not yielding.

திரு. ஆர். சிங்காரம் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்வதால்

பாயின்ட் ஆப் ஆர்டர். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பி.வி. இராஜந்திரன் அவர்கள் சொன்ன வேதாரண்யம் கூட்டு குடிநீர்த் திட்டத்தை தடுத்தவர்களே பட்டுக்கோட்டை, பேராவூரணி மற்றும் தம்பிக்கோட்டைப் பகுதி மக்கள் தான். (குறுக்கீடு) சாட்சாத் நாங்கள் தான். காரணம் என்னவென்று சொன்னால் அந்தப் பகுதியில் பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதியிலே ராட்சத போர்வெல் போடப்படுகிறது. ராட்சத போர்வெல் போடுவதால் சமுதாயத்தில் ஆங்காங்கு இருக்கிற நீர்நிலைகளில் குடிநீர் கீழே இறங்கிவிடுகிறது. இந்த போர்வெல்லில் வேதாரண்யம் தண்ணீர் வருகிறபோது பட்டுக்கோட்டை, பேராவூரணி மற்றும் 6 தாலுக்காக்களில், ஒரத்தநாடு வரை தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. கேணியில் இருக்கிற தண்ணீர் 150, 200, 300 அடி கீழே போய் விடுகிறது. ஆகவே, அந்தப்பகுதி மக்கள் அத்தனைபேரும் ஒன்றாகச் சேர்ந்து நாங்கள் அத்தனைபேரும் போராட்டம் செய்து, அந்தத் திட்டத்தை கைவிடும்படி கேட்டுக்கொண்டோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலும் போராட்டம் செய்தோம். பிறகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் கூட நாங்கள் போராட்டம் செய்தோம். அப்போது தான் எங்களுக்கு நீதி கிடைத்தது. அன்றைக்கு இருந்த அமைச்சர் அவர்கள் கூட இங்கே பதில் சொல்லி இருக்கின்றார். இங்கே நம்முடைய பி.வி.ஆர். அவர்கள் சொன்னார்கள். பட்டுக்கோட்டையில் யாரோ பங்காரப்பா தடுக்கிறார், எனவே, தயவுசெய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுங்கள் என்று சொன்னார்கள். நான் சொன்னேன். பங்காரப்பா தடுக்கவில்லை. சிங்காரப்பாதான் தடுக்கிறார் என்று நான் அன்றைக்கே பதில் சொன்னேன். ஆகவே, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்தவரையில், பேராவூரணி பட்டுக்கோட்டைப் பகுதியிலேயிருந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம். காவிரியிலிருந்து நடைமுறைப் படுத்துவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யலாம் என்று அன்றே இந்த அரசு சொல்லியிருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தை அப்படிச் செய்யலாம் என்று ஆலோசனை சொல்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு) அவர் சொன்ன கருத்து, அரசாங்கம் ஒன்றும் தடுக்கவில்லை, நாங்கள்தான் தடுக்கிறோம் என்று சொல்கிறார். திரு.வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜேந்திரன் அவர்கள், பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் உள்ளதாக இங்கே தெரிவித்தார்கள். அது தவறான தகவல். மாண்புமிகு மறைந்த முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், வாகைக்குளம் துப்பாக்கிச் சூடு நடந்து. நிறுத்தப்பட்ட திட்டங்கள் கூட இப்போது நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய முயற்சியால், அவர்களுடைய ஆலோசனையின் பேரில், இன்றைக்கு ராஜகம்பீரம் பகுதியிலிருந்து சாயல்குடி, கடலாடி, முதுகளத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், இப்போது நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. நிறுத்தப்பட்ட திட்டங்கள் கூட, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சீரிய முயற்சியினால், அவர்களுடைய ஆலோசனையின் பேரில், இன்றைக்கு 70 கிராமங்களுக்கு மேலாக, சாயல்குடி வரை இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதை பத்திரிகைகள் கூட பாராட்டி உள்ளன என்பதை நான் பணிவன்போடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தத் திட்டங்களும் நிறுத்தப்படவில்லை. பல்வேறு நிறுத்தப்பட்ட திட்டங்கள், புரட்சித் தலைவியின் ஆலோசனையின் பேரில், அவர்களுடைய சீரிய முயற்சியினால், நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி.வி. இராஜேந்திரன் : நான் பொதுவாக ஒன்றைச் சொல்லவேண்டும் என்று சொன்னால், குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் சற்று கூர்மையாகவும், அதிகமான நேரங்களைச் செலவழித்தும், இதைப் பார்க்க வேண்டும். இவை முக்கியமான அத்தியாவசியமான பிரச்சினைகள். டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அடிக்கல் நாட்டிய திட்டத்தை இங்கே சொன்னேன். வேதாரண்யம் காம்ப்ரெஹென்சிவ் ஸ்கீம். மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் சொன்னதைப் போல, அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் அதற்கு ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். எக்ஸ்பர்ட் கமிட்டி ஒன்று சொல்கிறது. நீங்கள் ஒரு ஜீ.ஓ. போட்டு, எக்ஸ்பர்ட் கமிட்டியை கான்ஸ்டிடியூட் செய்கிறீர்கள். அது அறிக்கை தருகிறது. அங்கே எடுக்கலாம், எடுக்கக்கூடிய அளவிற்கு தண்ணீர் இருக்கிறது, மேலும் இன்டஸ்ட்ரி கூட அங்கே வரலாம் என்று அறிக்கையைத் தருகிறது. பட்டுக்கோட்டையிலிருந்து வேதாரண்யத்திற்கு நாம் தண்ணீர் தர முடியவில்லை என்று சொன்னால், நமக்கு எந்த அளவிற்கு தார்மீக உரிமை கர்நாடகத்தைப் பார்த்துக் கேட்பதற்கான தைரியம் எங்கே இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. ஆளுநர் அறிக்கையிலே முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எதற்கோ போய் எதையோ சொல்கிறீர்கள். கர்நாடகம் தராமல் இருப்பதை நியாயப்படுத்துவதைப்போலப் பேசுவது சரியல்ல. (குறுக்கீடு) இல்லை. நீங்கள் பேசுவது அப்படித்தான் இருக்கிறது. நியாயப்படுத்துகிறீர்கள். நியாயப்படுத்துவதைப்போல பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) இது பட்டுக்கோட்டையிலிருந்து ஆழ்குழாய்ப் போட்டு, வேதாரண்யத்திற்கு தண்ணீர் எடுக்கிற பிரச்சினை. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் உறுப்பினர் திரு. ராஜேந்திரன் அவர்கள் காவிரியிலிருந்து தண்ணீர் விடவேண்டாம் என்று சொல்கிறாரா என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இருக்கின்ற இந்தப் பிரச்சினையோடு அதை ஒப்பிடுவது மிகுந்த வேதனைக்குரிய ஒன்றாகும். (குறுக்கீடு). ஏற்கெனவே கர்நாடக மாநிலம், நமக்கு இருக்கிற உரிமையைத் தட்டிப்பறிக்கின்ற முறையிலே நடந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் பலமுறை வலியுறுத்தி இருக்கிறோம். நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் பலமுறை இதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். இப்போது கூட இதிலே தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே, நீதிமன்றத்திலேயிருந்து நமக்குக் கிடைத்த தீர்ப்பைக் கூட நிறைவேற்றுவதற்கு மத்திய அரசாங்கம் முழுமையாக நமக்கு உதவி செய்யவில்லை என்ற ஆதங்கத்தையும் நாம் தெரிவித்திருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில், நீங்கள் நியாயப்படுத்துவது, வேதாரண்யத்திலே நடக்கிற பிரச்சினையை வைத்து நியாயப்படுத்துவது, கொஞ்சம்கூட பொருத்தம் இல்லை.

இன்னும் ஒன்று. நிலத்தடி நீர் போய்விட்டால், அங்கே எங்களுக்கு பாதிப்பு வந்துவிடும் என்று அந்த ஊர் பொதுமக்கள் சொல்கிறார்கள். எனவே, அவர்களுடைய உரிமையைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஆனால், கர்நாடகத்தைப் பொறுத்தவரையில், நமக்கு வருகின்ற நீர் அங்கே எங்கே வீணானாலும் சரி ஆனால் நமக்குக் கொடுக்கக்கூடாது என்பது அவர்களுடைய நோக்கம். எனவே, அதைப் போய் நீங்கள் இதோடு ஒப்பிட்டுப் பேசுவது இந்த நாட்டுக்கு, தமிழகத்திற்கு நீங்கள் விரோதமாக நடந்து கொள்கிறீர்கள் என்பதைத் தவிர, வேறு ஒன்றும் சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவிரியிலே வருகிற தண்ணீர் உருண்டோடி தமிழகத்திற்கு வரவேண்டிய தண்ணீர், அதைத் தடுக்கிறார்கள். பட்டுகோட்டையிலிருந்து நீங்கள் எடுக்கவேண்டும் என்று சொன்னால், அங்கே இருக்கிற நிலத்தடி நீரை உருண்டோடி உங்களுக்கு வந்து கொண்டிருக்கிற நீரை அவர்கள் தடுக்கவில்லை. அதையும் இதையும் ஒப்பிடாதீர்கள். ஏதோ காங்கிரசே இதற்கு விரோதமாக இருப்பது மாதிரி இருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் அவர்கள் சற்றுமுன் பேசும்போது, குடிநீர்ப் பிரச்சினைகளை, குடிநீர்த் திட்டங்களை இந்த அரசு சற்றுக் கூர்மையாகவும், கவனமாகவும் எடுத்துக்கொள்ள வேண்டும்; கூர்மையாகவும், கவனமாகவும் செயல்படுத்தவேண்டும் என்று சொன்னார். நாங்கள் மிகவும் கூர்மையாகவும், கவனமாகவும்தான் பார்த்துக் கொண்டிருக்கறோம். என்ன செய்வது ? இப்போது கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது முழுவதும் எங்கள் கட்டுப்பாட்டில் இல்லையே ? நானும் கரும சிரத்தையோடு ஒவ்வொரு ஆண்டும் ஹைதராபாத் சென்று, அங்கே உள்ள ஆந்திர முதலமைச்சரைச் சந்தித்து விரைவில், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளை நீங்கள் முடுக்கிவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். என்ன செய்வது? காங்கிரஸ், ஆட்சியில் இருந்தபோது ஒவ்வொரு ஆண்டும் புதிய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு ஆண்டு செல்கிறேன்; ஆந்திர முதலமைச்சரைச் சந்திக்கிறேன்; பேச்சுவார்த்தை நடத்துகிறோம்; அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் தண்ணீர் வரும் என்ற உத்தரவாதம் அளிக்கிறார்கள்; அடுத்த ஆண்டு அந்தக் காலகட்டம் வருவதற்குள் அங்கே முதலமைச்சரை மாற்றிவிடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சரி. நாம் என்ன செய்வது என்று நம் விதியை நொந்துகொண்டு (சிரிப்பு) நானும், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும், அதிகாரிகளையும் அழைத்துக்கொண்டு, மீண்டும் ஹைதராபாத் செல்கிறேன். மீண்டும் அங்கே அப்போதைய காங்கிரஸ் முதலமைச்சரை சந்திக்கிறேன். அப்போது அவர் உத்தரவாதம் கொடுக்கிறார். 1995 ஜூன் மாதத்திற்குள் உங்களுக்கு கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் கிடைக்கும் என்று. அதை நம்பி நாங்களும் திரும்பி வருகிறோம். இந்த ஜூன் 1995 வருவதற்குள் அங்கே ஆட்சியே மாறிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) வேறு முதலமைச்சர், வேறு கட்சியைச் சேர்ந்த முதலமைச்சரே வந்துவிட்டார். இப்போது அவர்

கொடுத்த உத்தரவாதம், டிசம்பர் 1995-க்குள் உங்களுக்கு, சென்னை மாநகருக்கு தண்ணீர் கிடைக்கும் என்று அவர் சொல்லியிருக்கிறார். நாங்கள் என்ன செய்வது ? இதற்கு முன்னாலே இந்தத் திட்டம் இவ்வளவு தாமதப்பட்டதற்குக் காரணம், எங்களால் அல்ல. தமிழக அரசைப் பொறுத்தவரையில், அவ்வப்போது நாங்கள் செலுத்த வேண்டிய நிதிக்கும் அதிகமான நிதியைக் கொடுத்திருக்கிறோம். இந்த மாநில எல்லைக்கு இப்பக்கம் - தமிழகத்திலுள்ள பகுதியில் என்னென்ன பணிகளைச் செய்யவேண்டுமோ, நாங்கள் முடுக்கிவிட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். வேகமாக நடைபெறுகின்றன. ஆனால் இத்தனை ஆண்டுக்காலம் இந்தத் திட்டம் தாமதப்பட்டதற்கு முக்கிய காரணம், ஆந்திரப் பகுதியில் அந்தக் கால்வாய் காட்டுப் பகுதிகளுக்குள் வருகிறது. அந்த "பாரஸ்டு கிளியரன்ஸ்' என்பது மத்திய அரசிடமிருந்து வரவேண்டும். ஒவ்வொரு முறையும் இத்தகைய கிளியரன்சுகளை மத்திய அரசுதான் தாமதப்படுத்தியிருக்கிறது. அதுவும் இந்தத் திட்டம் இத்தனை ஆண்டுக்காலம் தாமதப்பட்டுள்ளதற்கு ஒரு முக்கிய காரணமாகும். ஆகவே அதுமட்டுமல்ல, எப்படியாவது உத்தரவாதத்தைக் காப்பாற்றவேண்டும், இந்த டிசம்பர் 1995-க்குள்ளாவது எப்படியாவது தண்ணீரைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார். அந்த ஆதங்கம் எங்களுக்கு நிரம்பவே உள்ளதால்தான் ஒவ்வொரு பேச்சுவார்த்தையின்போதும், முதலமைச்சர்கள் சந்தித்துக்கொள்ளும்போதும், அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்போதும், ஒவ்வொரு நிதியாண்டிற்கும், இந்தக் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திற்காக ஆந்திர அரசு இத்தனைக் கோடி ரூபாயை ஒதுக்கவேண்டும், தமிழக அரசு இத்தனைக் கோடி ரூபாய் செலவிட வேண்டுமென்று நாங்கள் முடிவு செய்கிறோம். எங்களைப் பொறுத்தவரை, தமிழக அரசைப் பொறுத்தவரை நாங்கள் செலவிட வேண்டிய தொகைக்கும் அதிகமாகவே செலவு செய்துள்ளதால்தான் இன்று நம்முடைய பணம் 'அட்வான்ஸ்' பணம் 72 கோடி ரூபாய் ஆந்திர அரசிடம் இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும் ஆந்திர அரசு செலவிட வேண்டிய தொகையை முழுவதுமாகச் செலவிடவில்லை. மிகவும் குறைத்தே அவர்கள் செலவிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டம் நிறைவேறாமல் இந்த அளவிற்கு தாமதப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கு மத்திய அரசும் ஆந்திர அரசும்தான் காரணமே தவிர, தமிழக அரசு அல்ல என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அக்கறையோடு செயல்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகப் புரிந்திருப்பார் என்று கருதுகிறேன். சென்னை மாநகரில் 60 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். எவ்வளவு பெரிய கடுமையான குடிநீர்ப் பஞ்சம், இயற்கை பொய்த்த காரணத்தாலே இந்த மாநகர மக்களுக்கு உருவாகியது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் உணர்ந்திருப்பார். வேறு ஒரு அரசு இங்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்திருந்தால் லட்சக்கணக்கான மக்கள் இந்த மாநகரத்திலேயிருந்து வெளியேறி இருப்பார்கள். ஆனால் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய சிந்தனை, அவர்களுடைய நேரடிப் பார்வையால் (மேசையைத் தட்டும் ஒலி) ரயில் மூலமாக, லாரி டிரக்கர்கள் மூலமாக ஈரோடு, நெய்வேலியிலிருந்து குடிநீர் கொண்டுவரப்பட்டு இந்த மாநகர மக்களுடைய பிரச்சினையைத் தீர்த்த ஒரு சாதனை இங்கே இருக்கிறது.

இரண்டாவது, அந்தச் சூழ்நிலையிலும் பள்ளிகளைக் கூட மூடவில்லை. அலுவலகங்களை மூடியிருப்பார்கள். பள்ளி மாணவர்கள் பள்ளிக்குக் கூட சென்றிருக்க முடியாது. அதையெல்லாம் தவிர, எவ்வளவு செலவானாலும், தினந்தோறும் தன்னுடைய நேரடிப் பார்வையிலே அதிகாரிகளை அழைத்து, சம்பந்தப்பட்ட அமைச்சரான என்னை அழைத்து, அந்தச் சிரமத்தைப்போக்கினார்கள். ஒரேயொரு விளக்கத்தை மட்டும் சொல்கிறேன், இந்த அரசினுடைய குடிநீர்த் திட்டம் எந்த அளவிற்குச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்காக. இன்றைக்கு கோவைக்கும் மதுரை மாநகருக்கும் குறித்த காலத்திலே குடிநீர் வழங்கியிருக்கிறோம், உலக வங்கி திட்டத்தினுடைய, உலக வங்கி நிதியுதவியுடன். அன்றைய சூழ்நிலையிலே உலக வங்கி தமிழகத்திற்கு மட்டும்தான் அந்த நிதி ஒதுக்கீட்டை நீட்டித்துக் கொடுத்தது. காங்கிரஸ் ஆளுகின்ற மகாராஷ்டிராவிற்கும் குஜராத்திற்கும் நீடிப்பை மறுத்தது. அது அப்பட்டமான உண்மை. அதற்கு இங்கே இருக்கிற குடிநீர்த் திட்டங்களைப் பார்த்து, இங்கே செயல்படுகின்ற அந்தத் திட்டத்தினுடைய விதத்தைப் பார்த்துத்தான் உலக வங்கி கால அவகாசத்தை நீடித்துக் கொடுத்ததே ஒழிய இங்கே ஏதோ குறைபாடு இருக்கிற காரணத்தால் அல்ல. மகாராஷ்டிராவிலேயும் குஜராத்திலேயும் காங்கிரஸ் ஆளுகின்ற இடத்திலே குறைபாடு இருக்கிற காரணத்திலேதான் உலக வங்கி அங்கே நீடிப்பை மறுத்தது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-05

திரு. ச. அழகிரி : என்ன ஆதாரத்தோடு சொல்கிறார் ?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : ஆவணங்கள் எல்லாம் இல்லையா ? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அழகிரி உட்காருங்கள். ஆதாரத்தோடுதான் பேசுகிறார். அமைச்சர் பேசுகிறபோது, அவர்களுடைய துறையிடத்திலே உள்ள தகவல்களை வைத்துக் கொண்டு ஆதாரத்தோடு தான் பேசுவார்கள். இராஜேந்திரன் பேசுவதாக இருந்தால் பேசலாம், இல்லையெனில் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, It is an authenticated record given by the World Bank. உலக வங்கியிலே தெளிவான உத்தரவாக போடப்பட்டதை நான் சொல்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துறையினுடைய தகவல்களைத் தெரிவிக்கின்றபோது அமைச்சர் என்னிடத்திலே கொடுக்கவேண்டும் என்றில்லை. உறுப்பினர்கள் பேசுகிறபோதுதான் அந்த முறை. துறையிலே இருப்பதைத்தான் அமைச்சர் சொல்கிறார். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயம் ஏற்கெனவே அவைக் குறிப்பிலேயே இருக்கிறது. இரண்டாவதாக, சம்பந்தப்பட்ட தெளிவான தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. மூன்றாவது, நான் அதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பொறுப்பேற்றுக் கொள்ள இருக்கிறார்களா ?

திரு.பி.வி. இராஜேந்திரன் : நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துறைகளைப் பொறுத்தமட்டில் அமைச்சர்களுக்கு முழு உரிமை உண்டு. (குறுக்கீடு) வேறு மாநிலம் என்றாலும், அவருடைய துறையிலே இருக்கிற தகவல்களைத்தான் சொல்லுகிறார். திரு.பி.வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு விவாதத்திற்கே காரணம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிநீர் வழங்கல் அமைச்சர் அவர்கள் முதலிலேயே

சொன்னார்கள். பியூப்பிள் அஜிடேட் பண்ணுகிறார்கள் பட்டுக்கோட்டை ஏரியாவில், அதுதான் பிரச்சினை என்று சொன்னார். அதற்குத்தான் நான் சொல்கிறேன். ஏதோ ஒன்றை சொல்கிறீர்கள் என்று சொன்னால், எக்ஸ்பர்ட் கமிட்டி என்ன சொல்கிறது என்று பார்க்க வேண்டும். (குறுக்கீடு) Viability study and sustainability study ஒன்றைச் செய்கிறீர்கள். அது சரியாக இருக்கிறது என்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜவஹர்லால் நேரு யூனிவர்சிட்டியிலே படித்தவர்கள், நீங்கள் முதலிலே You apply science in command and execute.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முடித்து விடலாம். நீங்கள் ஊருக்குத் தண்ணீர் கேட்டீர்கள், போதும். திரு.ஓ.எஸ். அமர்நாத்.

**திரு. ஓ.எஸ்.அமர்நாத் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆளுநர் உரையின்மீது கொண்டு வந்திருக்கிற நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றியைக் கூறி என்னுடைய உரையைத் துவக்குகிறேன். தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டிலே அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பாக வளர்ச்சித் திட்டங்கள், விரிவான பாதுகாப்பு, சிறப்பு நலத் திட்டங்கள், ஏழை எளியவர்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக தமிழகம் முழுவதும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பலமுறை நேரடியாகச் சென்று நலத் திட்டங்களை அள்ளி வழங்கியிருக்கிறார்கள். இதை இந்த கவர்னர் உரையிலேயும் சொல்லியிருப்பது பாராட்டத் தக்க அம்சமாக இருக்கிறது. தமிழகத்திலே இதற்கு முன்பாக ஆட்சி செய்தவர்கள் செய்து வைத்த நிலைகளையெல்லாம், சட்டம் ஒழுங்கு இதற்கு முன்பாக சீர்கெட்டு போயிருந்ததையெல்லாம் நன்றாக இந்த நாட்டு மக்கள் அறிவார்கள். சட்டம் ஒழுங்கை மிகச் சிறப்பான முறையிலே பராமரிப்பதற்கு தலையாய முன் உரிமையை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு அளித்ததை அடுத்து இங்கு காவல் துறை நவீனமயமாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இங்கே 3.37 கோடி செலவில் கடலோரப் படை அமைக்கப்பட்டு தீவிரவாதிகளையும், விடுதலைப் புலி இயக்கத்தையும் எங்கேயும் தமிழகத்தில் தலை தூக்காத அளவுக்கு பாதுகாப்புப்படை அமைக்கப்பட்டு தமிழகத்தினுடைய மக்களுக்காக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்றால், அந்த நடவடிக்கையைப் பற்றி இங்கே மேதகு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருப்பது பாராட்டத்தக்க அம்சமாக இருக்கிறது.

பிற்பகல் 1-10

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்தியாவிலேயே 3 மாநிலங்களிலேதான் இந்தத் திரைப்படத் தொழில் மிகப் பெரிய அளவிலே இருக்கிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திருக் கையால் 31-8-94 அன்று இங்கே புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரிலே திரைப்பட நகரை உருவாக்கி, தமிழகத்திலே உள்ள திரைப்படக் கலைஞர்களுக்கெல்லாம், ஏன், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் எட்டிப் பார்க்காத அளவுக்கு இங்கே திரைப்படத் தயாரிப்பு நிலையம், நவீனத் தொழில் நுட்பத் திறனுடைய திரைப்படக் கருவிகள் மற்றும் மின் ஒலிப்பதிவு அரங்கு, அரங்க அமைப்பு, வெளிப்புற படப்பிடிப்பு போன்றவற்றிற்கெல்லாம் வெளிநாட்டிற்குச் செல்லாத அளவுக்கு இங்கே தமிழகத்திலேயே திரைப்படத்தை தயாரிக்கக்கூடிய அளவுக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதமாக இந்தத் திரைப்பட நகரை உருவாக்கியிருக்கிறார்கள். சென்னையிலே பன்னாட்டு விளையாட்டுப் போட்டி நடத்தப்படக்கூடிய ஒரு மையமாக ஜவஹர்லால் விளையாட்டு அரங்கம் ஒன்று உருவாக்கப்பட்டு அதில் நடக்க இருக்கின்ற ஏழாவது தெற்கு ஆசிய விளையாட்டினுடைய போட்டியை நடத்துவதற்காக அந்த விளையாட்டுக் குழு அனுமதி கேட்டிருப்பது உண்மையிலேயே நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய முயற்சியால் என்பதை இந்தக் கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருப்பதும், அதே நேரத்திலே சுமார் 2500 வீரர்கள் இந்த நிகழ்ச்சியிலே கலந்துக் கொள்வார்கள் என்பதும் தமிழகத்திற்கு ஒரு பெருமை சேர்க்கக் கூடியதாகத்தான் இருக்கிறது. இதையெல்லாம் பாராட்ட மனம் இல்லாத எதிர்க் கட்சித் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் எப்படியேனும் தரிசனம் என்ற பெயரிலே தமிழகத்திலே தொண்டர்களே இல்லாத ஒரு கட்சியை வைத்து தமிழக மக்களுடைய கரிசனத்தை பெற முயற்சிக்கிறார்கள். அது ஒரு காலத்திலும் நடக்காது. தரிசனம் என்ற பெயரிலே அல்லது ஆட்சி அமைப்போம் என்று எதிர்க்கட்சிக் காரர்கள் சொன்னால் உடனடியாக டெப்பாசிட் போகின்ற நிலைமைதான் வருகிறது. வருகின்ற தேர்தலில் எல்லாம் டெப்பாசிட் போய்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது எங்கள் கட்சியை மறைமுகமாக டெப்பாசிட் போகின்ற கட்சி என்றும் ஏதோ தொண்டர்களுடைய....... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல கட்சிகளுக்கு டெப்பாசிட் போய் இருக்கிறது. (சிரிப்பு) ஆனால் ஏன் நம்முடைய டேனியல்ராஜ் அவர்கள் இவ்வளவு வேகமாக எழுந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஜமீன்தார் கட்சியெல்லாம் ஜாமீன் இழக்கின்ற கட்சிகளாக மாறியிருக்கின்றது காலத்தின் கட்டாயம்.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிய சொற்றொடர்கள் எல்லாம் மறைமுகமாக எங்களைப் பற்றிக் குறிப்பிடுவதாக இருக்கின்றன. ஆகவே அவருடைய கருத்துக்களை சபைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டெப்பாசிட் போய் இருக்கிறது என்று கடந்த தேர்தல்களிலே ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளை வைத்து அவர் பேசி இருக்கலாம். அதனாலே அவர் உங்களைத்தான் குறிப்பிடுகிறார் என்று நீங்களாக ஏன் நினைத்துக் கொள்கிறீர்கள் ? அது வேண்டாம். திரு. ஓ. எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொதுவாகச் சொன்னேன். தாங்கள் அதை ஏற்றுக் கொண்டால் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம். நெசவுத் தொழில் பிரச்சினையிலே நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நூல் விலை ஏறுகிறது, அதை எப்படியேனும் கட்டுப்படுத்த வேண்டும், அதனுடைய பொறுப்பு மத்திய அரசிடம்தான் இருக்கிறது, மாநில அரசினுடைய நடவடிக்கை நிச்சயமாக நெசவுத் தொழிலாளர்களுக்கு உதவியாக இருக்கும் என்று அன்றைக்கே 20-1-95-ம் தேதி மத்திய தொழில் துணி அமைச்சரைச் சந்தித்து உடனடியாக நூல் விலையைக் குறைக்க வேண்டும், தமிழகத்தில் உள்ள நெசவுத் தொழிலாளர்கள் எல்லாம் ஏராளமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நேரடியாகப் பேசியதன் காரணமாக இன்றைக்கு சிட்டா நூல் உதவித் தொகையாக கிலோ ஒன்றுக்கு ரூ. 15-லிருந்து 20 ஆக உயர்த்தியுள்ளது மிகவும் பாராட்டத்தக்கது என்று இந்தக் கவர்னர் உரையிலே சொன்னது உண்மையிலேயே வரவேற்கத்தக்கதாக இருக்கிறது.

பிற்பகல் 1-15

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் தொழில் உற்பத்தியினுடைய குறியீடு 1994-95 ஆம் ஆண்டில் வலுவான புத்துயிர் பெற்றிருக்கிறது. 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5.1 சதவீதமாக அந்த வளர்ச்சிக் குறியீடு காட்டுகிறது. புதிய தொழில்களைத் துவக்குவதற்கும், புதிய தொழில் துவங்குவதற்கு அனுமதி வழங்குதலும், உரிமம் வழங்குதலும் ஆகியவற்றைப் பார்க்கும்போது இந்தியாவிலேயே தமிழகம் 3-வது இடத்தில் தொழில் வளர்ச்சியில் இருக்கிறது என்றால் உண்மையிலேயே தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் எடுக்கின்ற நடவடிக்கைதான்.

சமூக நீதிக்காத்த வீராங்கனை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கல்வி, தொழில் மற்றும் வேலை வாய்ப்பிலே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் ஆகியவர்களுக்கு 69 சதவீத இட ஒதுக்கீடு பெற்று தந்தார்கள். காலம் காலமாக இருந்து வந்த இந்தப் பிரச்சினையைப் பற்றிப்பேச இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் டெல்லிக்கு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்தார்கள். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர்கள் யாருமே செல்லவில்லை. எங்களுடைய தோழமைக் கட்சித் தலைவர்கள்தான் புரட்சித் தலைவி அவர்களோடு சென்று அங்கே பாரதப் பிரதமரோடு பேசி, அங்கே இருக்கிற இந்தியக் குடியரசு தலைவரோடு பேசி உடனடியாக இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும், அரசியல் அமைப்புச் சட்டத்திலே உடனடியாக இதை 9-வது அட்டவணையில் சேர்க்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பாரதப் பிரதமர் அவர்களும், இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களும் 1994 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19 ஆம் நாள் இசைவை அளித்தார்கள் என்பதை நாமெல்லாம் மறக்க முடியாது. எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் உடனடியாக குறை சொல்லுவதைத்தான் எதிர்க்கட்சியினர் ஒரு வேலையாகக் கொண்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த மாதிரி Vague ஆகச் சொல்ல வேண்டாம்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் எந்த ஒரு மாநிலமும் செய்யாத அளவுக்கு இந்த இட ஒதுக்கீடு பிரச்சினையில் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிறப்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் ஆகிய சமுதாயத்தினருக்கு அவர்கள் பயன்படுகிற அளவுக்கு இன்றைக்குப் பேரறிஞர் அண்ணா, பெருந்தகை பெரியார்,

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோருடைய அரசியல் உருவாக, அரசியல் வாரிசாக இருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் காவலனாக, சமூக நீதிக் காத்த வீராங்கனையாக இருக்கிறார்கள் என்பதற்கு இந்த 69 சதவீத இட ஒதுக்கீடு ஒரு சான்று ஆகும். இதற்கெல்லாம் மாற்றுக் கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பாராட்டுத் தெரிவிக்காமல், எதிர்க்கட்சித் தலைவர் இன்றைக்கு இதையே குறை கூறுகின்ற அளவுக்குத்தான் இருக்கிறார்கள். குறை கூறினால் அவர்களுக்கு என்ன வரப் போகிறது. வடக்கிலே இரண்டு மாநிலங்கள் அவுட் ஆகியிருக்கின்றன. ஏற்கனவே தெற்கிலே இருக்கின்ற இரண்டு........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஓ. எஸ். அமர்நாத், அதுவெல்லாம் வேண்டாம். கவர்னர் உரையிலுள்ள பொருள்பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறை கூறுகின்ற அரசியல் தலைவர்கள்தான் இருக்கிறார்கள். வடக்கிலே இரண்டு மாநிலங்கள் இன்றைக்கு அவுட் ஆகியிருக்கின்றன. தெற்கிலே இருக்கின்ற ஆட்சியை இழந்து இருக்கிறார்கள். இப்படி இருக்கின்ற ஆட்சியை இழந்துவிட்டு இங்கே தமிழகத்திலே ஆட்சி அமைப்போம் என்றால்.......

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரிசாவில் ஜனதா ஆட்சி இருந்தது, அது அகற்றப்பட்டு அங்கே இப்போது காங்கிரஸ் ஆட்சியை அமைத்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ், உட்காருங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் வரும்போதுதான் தெரியும், யார் ஆட்சிக்கு வருவார்கள்; யார் தோற்பார்கள் என்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை இடைத் தேர்தலிலேயே யார் ஆட்சிக்கு வருவார்கள் என்பதை மக்கள் கணித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ், உட்காருங்கள். நீங்கள் சொன்னதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். திரும்ப எழுந்திருந்தால் எப்படி ? உறுப்பினர் பேசி முடிக்கட்டும் (குறுக்கீடு).

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைத் தேர்தலில் ஆளுங்கட்சிதான் வெற்றி பெறும்.

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் : சரி, இதையெல்லாம் ஒரு பொதுக்கூட்ட மேடையில் பேசிக் கொள்ளுங்கள். விவாதம் மாறி, மாறிப்போய்க் கொண்டிருப்பது சரியல்ல. அமைச்சர் பதில் சொல்லிய பிறகு, மேலும் அதில் விவாதம் வேண்டாம். திரு. அமர்நாத் பேசுங்கள்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொதுச் செயலாளர் என்ற முறையில் எந்தத் தேர்தலையும் சந்திக்க எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடியற்ற மரம் போல் அல்லலுறுகின்ற எதிர்க்கட்சிகள்தான் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்றனவே தவிர அதிக ஆசை, அதிக நஷ்டம் என்று சொல்லுவார்கள்; ஆனால், அதிக ஆசைப்பட்டு, அதிக நஷ்டம் அடைந்ததுதான் இன்றைக்கு அரசியல் வரலாற்றின் எடுத்துக்காட்டாக இருக்கிறதே தவிர, மற்றபடி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பக்கம்தான் மக்கள் இருக்கின்றார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் நடந்து முடிந்த இடைத் தேர்தல்களில் எல்லாம் நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிவாகை சூடியது என்பதை நீங்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள்.

பிற்பகல் 1-20

அடுத்தபடியாக, தமிழகத்திலே இருக்கின்ற எரிசக்தித் துறை. எந்தத் தொழிலாக இருந்தாலும் எரிசக்தி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. கடந்த 15-2-95 ஆம் நாளன்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், வடசென்னையிலே 210 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல்மின் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். இதை மிகப் பெரிய சாதனை என்றே சொல்லலாம். மத்தியிலே உள்ள மத்தியப் பேரரசும், மத்திய அமைச்சர்களும் பாராட்டுகின்ற அளவிற்கு இந்த அனல் மின் திட்டம் அமைந்து இருக்கிறது என்பதை இந்தக் கவர்னர் உரையிலே சொல்லி இருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாக

இருக்கிறது. இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பை நல்கியமைக்கு முதலில் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன். நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பு ஏற்று 4 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 4 ஆண்டுக் காலத்திலே இந்தியாவில் எந்த முதல் மந்திரியும் சாதிக்க முடியாத பல அற்புத சாதனைகளையெல்லாம் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்துகொண்டு வருகிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி).

புரட்சித் தலைவி அவர்கள் இதே மாமன்றத்திலே 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்குத் தீர்மானம் கொண்டு வந்து செய்தபோது, பேரவையிலே இருந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம், சட்டமன்றத்திலே தீர்மானம் போட்டுவிட்டால் மட்டும் போதுமா ? அதைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்; ராஜ்ய சபையிலே நிறைவேற்ற வேண்டும்; பிறகு ஜனாதிபதியின் கையெழுத்து ஆக வேண்டும் என்றெல்லாம் பேசினார்கள். ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த முடிவை, இங்கே தீர்மானம் போட்டு நிறைவேற்றி, ஜனாதிபதியினுடைய கையெழுத்தையும் வாங்கி இருக்கிறார்கள் என்பதை நான் பெரு மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சமூக நீதிக்காக தந்தை பெரியார் பாடுபட்டார். தந்தை பெரியாருடைய வாரிசான பேரறிஞர் அண்ணா அவர்கள் பாடுபட்டு வந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாரிசான நம்முடைய இதய தெய்வம் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடுபட்டு வந்தார்கள். அந்தத் தலைவருடைய உருவத்திலே நமக்குக் காட்சி அளிக்கின்ற நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சமூக நீதிக்காக பாடுபட்டு, சமூகநீதி காத்த வீராங்கனையாக (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் திகழ்ந்து கொண்டு வருகிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

காஷ்மீரில் இருக்கிற அந்தத் தீவிரவாதிகளை அந்த மாநில அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. பஞ்சாபில் இருக்கிற அந்தத் தீவிரவாதிகளை

அந்த மாநில அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. அஸ்ஸாமில் இருக்கிற அந்தத் தீவிரவாதிகளை அந்த மாநில அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஏன்? தமிழகத்தின் அருகில் இருக்கிற ஆந்திராவில் இருக்கிற அந்தத் தீவிரவாதிகளை அந்த மாநில அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட 3 மாத காலத்திலே விடுதலைப் புலிகளை ஓட ஓட விரட்டிய பெருமை எங்கள் புரட்சித் தலைவிக்கு உண்டு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மிக்க மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை (குறுக்கீடு).

திரு. எஸ். டேனியல்ராஜ் : பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். டேனியல்ராஜ், இதிலே என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் ? (குறுக்கீடு) பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷனா ? (குறுக்கீடு) அவர் என்ன சொல்கிறார் என்பதற்கு நீங்கள் கடைசியில் பதில் சொல்லலாம். (குறுக்கீடு) பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷனுக்கு உறுப்பினர் ஒத்துக்கொள்ளவில்லை. (குறுக்கீடு) திரு. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை ஆயுதக் கலாச்சாரமாக ஆக்கினர் முன்னாள் அரசினர். ஆனால், புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பு ஏற்ற மூன்று மாத காலத்திலே விடுதலைப் புலிகளை ஓடஓட விரட்டிய பெருமை எங்கள் புரட்சித் தலைவிக்கு உண்டு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

தமிழகத்திலே சுமார் 1,300 காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஆனால் முந்தைய முதலமைச்சர் 1989-90 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது 22 ஜீப்புகளைத்தான் வழங்கி இருந்தார். ஆனால் புரட்சித் தலைவி பொறுப்பேற்ற இந்த 4 ஆண்டுக் காலத்திலே 1000 ஜீப்புகளுக்கு மேலே வழங்கி இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் இந்த மார்ச் மாதத்திலே ஜீப்புகளை வழங்க இருக்கிறார்கள் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, ஒரு நாட்டில் சட்டம் ஒழுங்கோடு மக்கள் நிம்மதியோடு வாழ வேண்டும் என்றால், சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும். அதை உணர்ந்துதான் புரட்சித் தலைவி அவர்கள், காவல் துறையினருக்குப் பல நல்ல காரியங்களைச்

செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

பிற்பகல் 1-25

அனைத்து மகளிர் காவல் நிலையங்களைப் பொறுத்தவரையில், இந்தியாவிலே, ஏன், உலகத்திலேயே இல்லாத அளவிற்குப் புரட்சித் தலைவி அவர்கள் 31 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டதன் கருத்து என்ன ? மாமியாருக்கும், மருமகளுக்கும் பிரச்சினைகள் வரலாம்; வீட்டிலே பெண்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள் வரலாம். அவர்கள் ஆண்கள் காவல் நிலையத்திலே மனம் விட்டுச் சொல்ல முடியாது என்பதால்தான், புரட்சித் தலைவி அவர்கள் மகளிர் காவல் நிலையங்கள் இருந்தால்தான், அவர்கள் என்ன கொடுமை செய்தார்கள் என்பதைச் சொல்வதற்கு எடுத்துக்காட்டாகத்தான் மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

நான் கேட்கிறேன்: புரட்சித் தலைவி ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் இந்தக் காவல் துறையை நவீனப்படுத்த வேண்டுமென்பதற்காக 80 கோடி ரூபாய்க்காக மத்திய அரசுக்கு எழுதியிருந்தார்கள். ஆனால் அவர்கள் கொடுத்ததோ 10 கோடி ரூபாய்தான். காவல் துறையைப் பலப்படுத்த வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் சொன்னால், அந்தப்பாக்கி 70 கோடி ரூபாயை அவர்கள் வாங்கிக் கொடுக்க வேண்டியதுதானே ? பாரதப் பிரதமர் கொடுக்க இருந்தாலும், இவர்கள் கொடுக்க வேண்டாமென்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோலத்தான், நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டுவதற்கும், நீதிபதிகளுக்குத் தேவையான குடியிருப்புகளைக் கட்டுவதற்கும் 17.23 கோடி ரூபாயைப் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். சென்ற வாரம்கூட, நம்முடைய சட்ட அமைச்சரவர்களும், சமூக நலத் துறை அமைச்சரவர்களும் வேலூருக்கு வந்திருந்து, மூன்றரை கோடி ரூபாயிலே வேலூரிலே புதிய நீதிமன்றக் கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு முன்பிருந்த முதலமைச்சர்களெல்லாம் ஆசாமிகளைத்தான் கவனித்துக் கொண்டிருந்தார்கள்; சாமிகளை யாரும் கவனிக்கவில்லை.

ஆனால் எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்னால் 5500 கோவில்களுக்கு இதுவரை 25,000 ரூபாய் கொடுத்து ஒரு கால பூஜையாவது செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, வருகின்ற ஆண்டிலே 1995-96 ஆம் ஆண்டிலே அனைத்துக் கோவில்களிலும் ஒரு கால பூஜையாவது செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் மிகப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், உலேமாக்களுக்கு உதவித் தொகை 250 ரூபாயிலிருந்ததை 400 ரூபாய் என்று உயர்த்தி அம்மக்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அரசுத் தொட்டில் குழந்தைத் திட்டம் என்பது இந்திய நாட்டிலே உலக நாடுகளிலே பாராட்டுகின்ற அற்புதமான திட்டம். பெற்ற தாய்மார்களே, பெற்ற பெண் குழந்தையை எருக்கம்பால் வைத்து, நெல்லைக் கொடுத்துக் கொன்று வந்தார்கள். அதை உணர்ந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தாய்மார்களே, பெண் குழந்தைகளைக் கொல்ல வேண்டாம்; உங்களுக்கு வேண்டாமென்றால் எங்கள் அரசுத் தொட்டிலிலே போட்டு விடுங்கள், நான் தாயாக இருந்து வளர்த்துக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி, இந்த நான்காண்டுகளில் மட்டும் 85 பெண் குழந்தைகள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. நான் கேட்கிறேன், தமிழகத்தின் முதலமைச்சராகப் புரட்சித் தலைவி இல்லாதிருந்தால் அந்த 85 பெண் குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சாவூரிலே உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்கள். பிரதமர் வருவாரா, இவர் வருவாரா என்று பேசியவர்கள் உண்டு. ஆனால் புரட்சித் தலைவி சொன்னவரை அழைத்து வந்து உலகத் தமிழ் மாநாட்டை வெற்றிகரமாக முடித்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, 1101 அறிஞர்களை அழைத்து வந்து உலகத் தமிழ் மாநாட்டைப் பிரம்மாண்டமான முறையில் செய்தார்கள். நான் கேட்கிறேன், 9 ஆண்டு காலம், 7 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தவர்களெல்லாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியிருக்கிறார்களா?

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த பொழுது 1968 ஆம் ஆண்டு சென்னையிலே உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்கள். நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1981 ஆம் ஆண்டு மதுரையிலே நடத்தினார்கள். தமிழ் மொழியின் மீதும், தமிழ் மக்களின் மீதும் அன்பும் பாசமும் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் ஜனவரி 1 ஆம் தேதி முதல் நடத்தியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, புரட்சித் தலைவியினுடைய திரைப்பட நகர் இன்று அத்தனைப் பேர்களாலும் பாராட்டப்படுகிறது. 24.67 கோடி ரூபாயிலே 87 ஏக்கரிலே அந்தத் திரைப்பட நகர் உருவாக்கப்பட்டிருக்கிறது. நான் இரண்டாண்டுகளுக்கு முன்பாக, சிங்கப்பூர், மலேஷியா சென்றிருந்தேன். அங்கு பார்த்த அந்தக் கட்டிடங்களும், இயற்கைக் காட்சிகளெல்லாம் இந்தத் திரைப்பட நகரத்திலே இருக்கின்றன. நாம் இனிமேல் அங்கே சென்று பார்க்க வேண்டியதில்லை, எல்லாமே திரைப்பட நகரிலே அற்புதமாக இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு படம் எடுக்க வேண்டும் என்றால் ஊட்டி, கொடைக்கானல் என்று அங்கேதான் செல்ல வேண்டும். இனி அப்படித் தேவையில்லை. ஒரு படம் எடுப்பது என்றால், திரைப்பட நகரத்திற்குச் சென்று விட்டாலே படத்தை எடுத்து விடலாம். அந்த அளவிற்கு இந்தத் திரைப்பட நகர் சீரோடும், சிறப்போடும் இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போலத்தான்....... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள். ஒரு நிமிடம்தான்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : 40 கோடி ரூபாயிலே நேரு விளையாட்டரங்கம் கட்டியிருப்பதால் இளைஞர்களெல்லாம் விளையாட்டு ஆர்வத்திலே சீரோடும் சிறப்போடும் இருக்கிறார்கள். வருகிற 1995 டிசம்பரிலே, 7 'சார்க்' நாடுகளிலிருந்து 2,500 விளையாட்டு வீரர்கள் வந்து விளையாட இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 1-30

மேலும், இலவச வேட்டி சேலை திட்டத்தின் மூலம் ஒரு கோடியே இருபது இலட்சம் ஏழைகள் பயனடைகிறார்கள். பண்டைய நாளிலே

பணக்காரர்கள்தான் புதிய ஆடைகளை அணிந்து வந்திருந்தார்கள். ஆனால், புரட்சித் தலைவியின் ஆட்சியில்தான் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலேயும் இல்லாத ஒரு திட்டத்தை - இலவச வேட்டி சேலை திட்டத்தை - அறிவித்து, ஏழைகளுக்கு இலவச வேட்டி சேலை வழங்கி, அதேபோல, கைத்தறி நெசவாளர்கள் வாழ வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கும் வேலைவாய்ப்பதாய் அதனைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நூற்பாலைகளுக்குப் புத்துணர்ச்சி அளிப்பதற்காக 25 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நாம் பாராட்டியே ஆகவேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்குக் கைத்தறிக் கூடங்கள், வீடுகளிலேயே கொடுக்க வேண்டும் என்பதற்காக, இரண்டாயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உரையை முடித்துக் கொள்ளலாம். நேரம் இல்லை. ஒரே ஒரு 'பாயின்ட்' தான் பேசலாம்; அதோடு முடித்து விடுங்கள்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தை, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது பாராட்ட வேண்டியது. ஏனென்றால், என்னுடைய திருப்பத்தூர் தொகுதியில், திருப்பத்தூர் தாலுகாவிலே, பீடித் தொழிலாளர்கள், பீடித் தொழிலை நம்பியிருக்கிறார்கள். அந்தப் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கிடையாது. ஆகவே, இந்தத் திட்டத்தின் பிரகாரம், திருப்பத்தூர் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி. கே. லட்சுமணன் :* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கவர்னர் உரையை மிகக் கவனமாகக் கேட்டு, படித்துப் பார்த்து, அதற்கு நன்றி சொல்ல வேண்டும் என்று எண்ணுகிறபோது, அந்த உரையிலே நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றி எதுவுமே இல்லை என்பதை எண்ணிப் பார்த்து, நான் மிகவும் வேதனையடைந்தேன். குறிப்பாக, கோவை மாவட்டத்திலே, நான் அடிக்கடி சொல்லிவருவது, பாண்டியாறு—புன்னம்புழா திட்டம். அவினாசி,

பல்லடம் தாலுகாக்கள், அந்தத் திட்டத்தினால் பயன்பெற வேண்டிய தாலுக்காக்கள். நான் கையிலே ஒரு கடிதத்தை வைத்திருக்கிறேன். இந்தக் கடிதம் மைய அரசினுடைய நீர்வளத் துறை அமைச்சர் திரு. வித்யாசரன் சுக்லா அவர்கள் எழுதியக் கடிதம். இது 'ஒரிஜினல்' கடிதம். நகல் அல்ல. இந்தக் கடிதத்திலே அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. லட்சுமணன், நீங்கள் கடிதம் மற்றும் அதுபோன்ற குறிப்புகளை மையமாக வைத்து, இந்த அவையிலே பேச விரும்பினால்கூட, அவற்றை முதலிலேயே அவைத் தலைவரிடத்திலே நீங்கள் கொடுக்க வேண்டும். கொடுத்து, முன் அனுமதி வாங்கித்தான் சொல்ல வேண்டுமே தவிர, இப்படி திடீரென்று அதைச் சொல்லக் கூடாது. ஏனென்றால், அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர், பதிலை சரியாகத் தர வேண்டும். இப்போது இந்தக் குறிப்பை விட்டுவிட்டு, இது சம்பந்தமாக 'ஓரல்'-ஆகச் சொல்லலாம். மத்திய அமைச்சர் அனுப்பியிருப்பதாகச் சொல்லியுள்ள கடிதத்திலுள்ள விவரங்களைத் தவிர, மற்ற விவரங்களைப் பொதுவாக நீங்கள் சொல்லுங்கள். அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிற பிரச்சினைகளை, பின்னர் வேண்டுமானால் பேரவைத் தலைவரிடம் கொடுத்து சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சருக்குத் தெரிவித்து அதற்குப் பிறகு, தாங்கள் விளக்கமாகப் பேசலாம்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலேயுள்ள ஒரே ஒரு குறிப்பை மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

(திரு. வி. கே. லட்சுமணன் சில தாள்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரிடம் அளித்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இல்லை; நீங்கள் குறிப்பிடுகிற குறிப்பை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு நான் கொடுத்த பிறகுதான் நீங்கள் அதுபற்றிப் பேச வேண்டுமே தவிர, ஏதோ திடீரென்று அதை இங்கே கொடுத்துவிட்டு, அது உண்மையா, பொய்யா என்று தெரியாமல் எப்படி அனுமதிக்க முடியும் ? ஒரு 'போட்டோஸ்டட் காப்பி', 'ஜெராக்ஸ் காப்பி' கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் அதற்கு முன்அனுமதி வாங்க வேண்டும். திரு. வி. கே. லட்சுமணன், நீங்கள் அவையின் சில விதிமுறைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் — திரு. வி. கே. லட்சுமணன் - மட்டுமல்ல; மற்ற எல்லா உறுப்பினர்களுக்கும் நான் சொல்லிக் கொள்வது, எந்தக் கடிதமாக இருந்தாலும், அவைத் தலைவருடைய முன் அனுமதியோடுதான் அதனை அவையிலே

கொடுக்க வேண்டும். முன் அனுமதி பெற்ற பிறகுதான், அந்தக் கடிதத்தினுடைய பிரச்சினைகளைப் பேசவேண்டும். இப்படித் திடீரென்று அதனைக் கொண்டுவந்து கொடுத்தால், சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே அதுபற்றி எந்தவிதமான தகவலும் சொல்லாமல், உறுப்பினர் பேசுவது என்பது முறையாக இருக்காது. இந்தக் கடிதத்திலுள்ள சாராம்சங்களைப் பற்றி நீங்கள் பொதுவாகப் பேசலாம். கடிதத்தினுடைய வரிகளை அப்படியே குறிப்பிடுவதற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடிதத்தில், மத்திய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், இதுவரை மாநில அமைச்சர், பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் பற்றி மத்திய அரசோடு ஏதும் பேசவில்லை என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அதைத்தான் நான் குறிப்பிட விரும்பினேன். (குறுக்கீடு).

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்; சொல்லுங்கள்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது நீங்கள் சொல்லியபடி, பொதுவாக ஒரு ஆவணத்தைக் கொடுக்கிறபோது, மாண்புமிகு தலைவரிடத்திலே கொடுத்துவிட்டுத்தான் பேச வேண்டுமென்று சொன்னீர்கள். மீண்டும் அவர்கள், இவ்வளவு வலியுறுத்தியும், அந்தக் கடிதத்தின்படி என்று கூறி, பேசுகிறார்கள். இது முன்உதாரணமாக ஆகிவிடக் கூடாது என்பதைத் தெரிவித்து, அப்படி அனுமதிக்க முடியுமா என்பதையும் தெரிந்து கொள்ள விழைகின்றேன்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விஷயத்தைப் பேசலாம். அது இந்தக் கடிதத்திலே இருக்கிறது; இப்படி இருக்கிறது என்பதை விட்டுவிட்டு விஷயத்தை மட்டும் பேசுமாறு கேட்டுக் கொள்ளலாம்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன், நான் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். நீங்கள் அவையிலே, குறிப்பிட்ட ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து பேசுவதற்கு முன்பாக அவைத் தலைவரின் அனுமதி பெறவேண்டும். ஆனால், நீங்கள் பேசிய பின்பு அந்தக் கடிதத்தைக் கொடுக்கிற காரணத்தினால், தற்போது அந்தக் கடிதத்தில் உள்ள பிரச்சினைகளைப் பற்றிப் பேசவேண்டாம். பொதுவாகக் கருத்துக்களைச் சொல்லலாம்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏதாவது பேசினால்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நான் தெளிவான விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் என்பது இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற உடனே வரவேண்டிய திட்டம் அல்ல. நீண்ட நெடுங்காலமாகப் பேசப்படுகின்ற திட்டம். அதேபோல கங்கை-காவிரி இணைப்பு, பம்பா-அச்சன்கோவில் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள், all of them involve inter-state problems. இவை எல்லாம் மற்ற மாநிலங்களோடு தொடர்புடைய பிரச்சினைகள். பல்வேறு திட்டங்களைப் பற்றி நாம் பேச்சு வார்த்தை நடத்தி, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள். பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப் பற்றி ஒரு வரலாறே இருக்கிறது. அதைப் பற்றி நான் தெளிவாக பட்ஜெட் கூட்டத் தொடரிலே தெரிவிக்கின்றேன். ஆகவே, இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுகின்றபோது, மைய அரசுடன் தொடர்பு கொள்ளவில்லை என்று சொன்னார்கள். பல்வேறு திட்டங்களை அவர் 'ப்ராஜக்ட் புரபோசல்' என்று சொல்லியிருக்கிறார். 'ப்ராஜக்ட் புரபோசல்' எப்போது வரும் என்று சொன்னால் ஒரு திட்டத்தை ஆய்வு செய்து, எல்லோரும் முடிவு செய்து, அதை ஒப்புக்கொண்ட பின்னாலேதான் 'ப்ராஜக்ட் புரபோசல்' போட முடியும். இந்தத் திட்டத்திற்கு ஆரம்பத்திலேயே பிரச்சினை இருக்கிறது. அண்டை மாநிலங்களோடு பிரச்சினை ஏற்படுகின்றபோது இரண்டு மாநிலங்களுக்கும் அதிலே உடன்பாடு இல்லாதபோது, 'ப்ராஜக்ட் புரபோசல்' போட முடியாது. ஒரு தனி மாநிலமாக வந்து, இண்டிபெண்டன்ட்டாக ஒரு 'ப்ராஜக்ட் புரபோசல்' இன்டர்-ஸ்டேட் ப்ராபளம் இருக்கின்ற திட்டத்திலே நாம்

போட முடியாது. அதைத்தான் அவர் சொல்லியிருக்கிறார். ஆகவே, இதிலே மத்திய அரசிடத்திலே வலியுறுத்தவில்லை என்பது தவறு. தவறான கருத்து. இரண்டு மாநிலங்கள் உட்பட்ட பிரச்சினையில் நாம் முடிவுக்கு வந்த பின்னாலேதான் மத்திய அரசு முடிவு எடுக்க முடியும். இரண்டு மாநிலங்கள் பேசித் தீர்த்த பிரச்சினைகளிலேயே மத்திய அரசு முடிவு எடுப்பதற்கு காலதாமதம் ஆகிறது. இரண்டு மாநிலங்களுக்கிடையில் உள்ள பிரச்சினை தீராத நிலையில் எப்படி 'ப்ராஜக்ட் புரபோசல்' மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க முடியும்? சென்ட்ரல் வாட்டர் கமிஷனுக்கு எப்படி அனுப்ப முடியும்? ஆகவே, 'ப்ராஜக்ட் புரபோசல்' என்ற பேச்சுக்கே இடமில்லை. இதற்குத் தீர்வு கண்ட பின்னாலேதான் இதிலே முழுமையான ஒப்பந்தம் வந்த பின்னாலேதான், இந்த அரசு முழுமையான 'புராஜக்ட் புரபோசல்' அனுப்ப முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலம் மிக விரைவாக முன்னேற வேண்டும் என்ற நிலை வந்தபோது, நம் மாநிலம் முழுவதும், மாவட்டத்திற்கு ஒரு பள்ளியாக, 'சீர்மிகு பள்ளி' என்ற பள்ளிகள் ஆரம்பிப்பதாகச் சொல்லியிருந்தோம். இதுவரை அந்தச் சீர்மிகு பள்ளி எந்த மாவட்டத்திலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது? அது எவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி எந்தவிதமான விளக்கமும் இந்த ஆளுநர் உரையில் இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் ஆர்வமாக இருக்கிறார். முதன் முதலாக தர்மபுரி மாவட்டத்திலே அது தொடங்கப்பட்டது. அதன் செயல்பாட்டை ஆராய்ந்து அதன் அடிப்படையிலே அடுத்த மாவட்டங்களிலே தொடங்கலாம் என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்பதெல்லாம், ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு சீர்மிகு பள்ளி தொடங்கப்படுவதாகச் சொல்லப்பட்டதே, அது ஏன் இன்னும் தொடங்கப்படவில்லை என்றுதான்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதும் அதுதான். மாவட்டத்திற்கு ஒரு பள்ளி தொடங்க வேண்டும் என்பது அரசின் திட்டம். முதன்முதலாக தர்மபுரி மாவட்டத்தில் ஒரு பள்ளி தொடங்கப்பட்டு, அதன் அடிப்படையில் அடுத்த மாவட்டங்களிலே தொடங்குவதற்கு அரசு முடிவு எடுத்திருக்கிறது.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்தில் நுழையும்போதே சொன்னேன். தமிழ்நாட்டிற்கு பல்கலைக் கழக மானியக் குழுவினுடைய Regional Centre இங்கே துவங்கப்பட வேண்டுமென்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னே சொன்னேன். ஆனால் இன்றைக்கு ஏனோ அந்த Regional Centre இங்கே துவங்கப்படாமல், அது ஹைதராபாத் போய்விட்டது என்பதை அறிகின்றபோது மிகவும் வேதனையாக இருக்கிறது. எனக்குத் தெரிந்த செய்தியை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டை உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவின் தலைவர் இங்கே வந்தபோது என்னைச் சந்தித்தார். அவருக்கு ஒரு விருந்துகூட நாங்கள் எல்லாம் அளித்திருக்கிறோம். அதைப் போலவே தொழில் நுட்பக் கழகத்தின் தலைவர் இங்கே வந்தார். அவருக்கும் விருந்தளித்து அவரைச் சந்தித்துப் பேசியிருக்கிறோம். இது இன்று நேற்று இருக்கின்ற பிரச்சினையல்ல. 1989-லே (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமரலாம். நான் இன்னும் சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. 1989-லேயிருந்து இருக்கின்ற பிரச்சினை இது. அன்றைய கல்வி அமைச்சர் இதற்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதைத் தொடர்ந்து மற்றொரு கடிதத்தை அன்றைக்கு இருந்த முன்னாள் மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதி, இது தொடர்பாக நீங்கள் கல்வித் துறை அமைச்சராக இருக்கின்ற மரியாதைக்குரிய மேனன் அவர்களிடத்திலே பேச வேண்டுமென்று கேட்டு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குப்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பின்னால், மாண்புமிகு முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள் இது தொடர்பாக இரண்டு முறை எழுதியிருக்கிறார்கள். ஒவ்வொரு கடிதத்திலும் சென்னையில் இந்த மையம் அமைவது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்பதையும், சென்னைதான் தென் மாநிலங்கள் அத்தனைக்கும் மையப் பகுதியாக இருக்கிறது என்றும், இங்கே போக்குவரத்து வசதி மிகவும் சரியாக இருக்கிறது என்றும் சொல்லி, இங்கே அமைவதுதான் மிகச் சிறப்பானது என்று அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் அங்கிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. இப்போது பல இடங்களிலே, மையங்கள் அமைப்பதற்கு முடிவு எடுத்திருக்கிறோமே தவிர, எந்த இடங்கள் என்று முடிவு செய்யப்படவில்லை என்று பதில் வந்திருக்கிறது. அதற்குப் பின்பு மற்றொரு கடிதம் மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதப்பட்டு, அந்தக் கடிதமும் பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால், மற்றொரு கடிதம் இங்கேயிருந்து எழுதப்பட்டு அதற்கும் அத்தகைய பதிலே வந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் அவர்கள் கைப்படவே ஒரு கடிதம் மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதி, அதற்கு அவர் பதிலும் எழுதியிருக்கிறார். அதிலே உங்களது கடிதம் பல்கலைக் கழக நிதி உதவிக் குழுவின் தலைவருக்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார். அதற்குப் பின்பு சென்னைப் பல்கலைக் கழகத்திலேயிருந்து அதனுடைய துணை வேந்தர் அவர்கள் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அந்த மையம் சென்னையிலே அமைக்கப்பட்டால் ஒரு கட்டிடத்தை நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம். அதற்கு வேண்டிய உதவிகள் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார். அதைப் போலவே இங்கிருந்து தமிழக அரசின் சார்பிலேயும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் பின்னாலும் அண்மையில், சென்ற ஆண்டு 9-வது மாதத்திலே அது ஐதராபாத்திலே அமைக்கப்படவிருக்கிறது என்ற ஒரு தகவல் வந்தது. இதற்கிடையில் அவர்கள் சொன்னார்கள் இதற்கு ஒரு 'எம்பவர்டு கமிட்டி' அமைத்திருக்கிறோம், அந்தக் கமிட்டி பரிசீலித்துக் கொண்டிருக்கிறது, இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்று பதில் முதலிலே வந்தது. இறுதியாக ஐதராபாத்திலே வைத்திருக்கிறோம் என்று பதில் வந்தது. ஆகவே, 10-வது மாதத்தில் இங்கிருந்து ஒரு கடிதம், அதைப் போலவே ஒன்றாவது மாதத்திலே ஒரு கடிதம், சென்ற மாதத்திலே ஒரு கடிதம் இங்கிருந்து அனுப்பப்பட்டு அந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும், சென்னைதான் அதற்கு ஏற்ற இடம், சரியான இடம் என்று

சொல்லி, அனைத்து உதவிகளையும் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று இப்போது கடிதம் அனுப்பியிருக்கிறோம். நாங்கள் அவர்களுடைய முடிவின், மறுபரிசீலனையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழக அரசு இதிலே மெத்தனப் போக்கோடு இருந்தது என்பதைப் போலவும், அங்கிருந்து வந்தவர்களைச் சந்திக்காமல் ஏமாற்றத்தோடு திருப்பி அனுப்பிவிட்டது என்பது போலவும், கருத்து எடுத்து வைப்பது இந்த அவையின் மரபுக்கும், மாண்புக்கும் ஏற்றதல்ல என்பதையும் வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. லட்சுமணன், தாங்கள் பேசுகின்றபோது ** என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறீர்கள். இதை எந்த ஆதாரத்தின் அடிப்படையில் தற்போது சொன்னீர்கள் என்பதை இந்த அவைக்கு விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கான ஆதாரத்தை வைத்திருக்கிறீர்களா கையிலே ?

திரு. வி. கே. லட்சுமணன் : ஆதாரம் எழுத்து மூலமாக இல்லை. எனக்குக் கிடைத்த தகவல் எல்லாம். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் : நானே சொல்லிவிடுகிறேன். இப்படியெல்லாம் எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், ஆதாரத்தை கையிலே வைத்துக்கொள்ளாமல் முன்கூட்டியே அதற்கு அனுமதி பெறாமல் பேசக்கூடாது. அந்த மானியக் குழு தனியாக ஒரு கடிதம் உங்களுக்கு எழுதியிருக்க வேண்டும் அல்லது இது பத்திரிகையிலே வந்து அரசால் மறுக்கப்படாமல் இருந்தால் அந்தப் பிரச்சினையைப் பற்றி நீங்கள் எழுப்பியிருக்கலாம். எனவே, உங்களுக்குக் கிடைத்த தகவலின்படி என்று சொல்லியிருக்கின்ற கருத்தின் அடிப்படையில், இந்த அவைக்கு இது ஏற்றதாக இருக்காது என்று கருதி, ஆதாரமற்ற அந்தக் குற்றச்சாட்டையும், அவர்களுடைய அந்தக் கருத்துக்கள் அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) அமைச்சருடைய பதில் மட்டும் இருக்கும். (குறுக்கீடு) இது சம்பந்தமாக உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 1.45

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தகவலுக்காக நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பல்கலைக் கழக நிதியுதவிக் குழுவின் தலைவர் டாக்டர் ரெட்டி அவர்கள் இங்கே வந்தபோது அவருக்குத் தேனீர் விருந்து அளித்து அதிலே தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தைச் சார்ந்தவர்கள் கலந்துகொண்டோம். அப்போது இந்த விஷயம் பற்றியும், இங்கே அமைக்கப்பட இருக்கிற திறந்தவெளிப் பல்கலைக் கழகம் பற்றியும் பேசியபோது அவர் அதற்கு ஆதரவு தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் மற்றொரு செய்தியும் சொன்னார். இங்கே திறந்தவெளிப் பல்கலைக் கழகம் அமைப்பதாக இருந்தால் ``I will come and serve as an unpaid servant'' என்று கூட பெருந்தன்மையோடு சொன்னார். அவரைச் சந்திக்காமல் இருந்தால் இப்படிப்பட்ட விவாதங்கள் வந்திருக்க முடியாது என்பதையும், இதற்கு மரியாதைக்குரிய தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் அதாவது Tamilnadu State Council for Higher Education உறுப்பினர்கள் சாட்சி என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தகவலுக்காகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வி. கே. லட்சுமணன், சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே சந்தனக்கடத்தல் வீரப்பன் பற்றிய விவாதம் எழுப்பப்பட்டது. இந்த விவாதத்தில் அதிரடிப்படை பிணைக்கைதிகளை மீட்டதா அல்லது வேறு யாரேனும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. லட்சுமணன், ஏற்கெனவே இன்றைக்குக் காலையில் இது சம்பந்தமான விவாதம் எழுப்பப்பட்டு, சம்பந்தப்பட்ட வனத்துறை அமைச்சரும், காவல் துறையைத் தன்னுடைய பொறுப்பிலே வைத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெளிவான பதிலைச் சொல்லி இந்த விவாதம் முற்றுப்பெற்று இருக்கிறது. ஏற்கெனவே முடிந்துவிட்ட விவாதத்தை மீண்டும் ஒரு முறை அவையிலே எழுப்பி இந்த அவையின் நேரத்தை வீணடிக்க வேண்டாம். எனவே, இந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பேச நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இது ஏற்கெனவே பேசி முடிக்கப்பட்ட பிரச்சினை. ஏற்கெனவே ஒரு மணி நேரம் அளவுக்கு இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களும் தெளிவான பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே திரும்ப என்ன பிரச்சினையைப் பேசப்

போகிறீர்கள்? திரும்பத் திரும்பப் பேச முடியாது. இப்படி ஒரே சப்ஜக்ட்-லேயே ஒவ்வொருவரும் மாறிமாறிப் பேசிக் கொண்டே இருப்பதை அவையிலே அனுமதிக்க முடியாது.

திரு. வி. கே. லட்சுமணன்: துணைத் தலைவர் அவர்களே, வேறு சப்ஜக்ட் பற்றிப் பேசுகிறேன். ஐயன்துரை, ரங்கசாமி, அர்ஜுனன் ஆகிய மூன்று பேரும் பிடிபட்டிருக்கிறார்கள். இதிலே ஐயன்துரை தலைக்கு 10 இலட்சம் ரூபாயும், ரங்கசாமி தலைக்கு 10 இலட்சம் ரூபாயும், அர்ஜுனன் தலைக்கு 20 இலட்சம் ரூபாயும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அவர்களை அதிரடிப்படை பிடித்திருந்தாலும்கூட, அறிவிக்கப்பட்ட பணத்தை அந்த அதிரடிப்படைக்கு நாம் கொடுத்தோமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் பிடித்துத் தந்தாலோ அல்லது பொதுமக்கள் அந்தத் தகவலைத் தந்தாலோ அதாவது அந்தக் குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு சென்று பிடித்துத் தந்தால் மட்டுமேதான் என்ற வகையில் அந்த அறிவிப்பு இருக்கிறதே தவிர அதிரடிப்படை நடவடிக்கை மேற்கொண்டு பாராட்டுக்குரியவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பாராட்டி, இதுபோன்ற நடவடிக்கை எடுத்திருக்கிற அதிரடிப்படைக்கு ஊக்கம் தருகிற வகையில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பாராட்டியதற்குப் பிறகு நீங்கள் சொல்கிற கேள்வி எழாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள், திரு. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தினுடைய முதலமைச்சரின் பிறந்தநாளின்போது பத்தாண்டுக்கு மேலாக சிறையில் இருந்த கைதிகளை விடுதலை செய்வது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும் ஆயிரக்கணக்கான கைதிகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசம் அனுபவித்துவருகிறார்கள். எனவே அந்தச் சிறைக் கைதிகளை தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளில் விடுதலை செய்யாவிட்டாலும் கூட வருகிற தமிழ் வருஷப் பிறப்பிலாவது அவர்களை விடுதலை செய்ய இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கோயம்புத்தூரில் ஒரு மேம்பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அந்த மேம்பாலத்திற்கு என்னபெயர் வைக்கவேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இருந்தாலும்கூட அந்த மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசும் ஓரளவுக்கு உதவியாக இருந்திருக்கிறது. எனவே அந்தக் கட்டடத்திலே மத்திய அரசுக்கு நாம் நன்றி தெரிவிக்காவிட்டாலும் கூட இந்த மன்றத்திலேயாவது அந்த மேம்பாலம் கட்டுவதற்கு உதவியாக இருந்த அந்த மத்திய அரசுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலம் தமிழ்நாடு அரசின் அர்பன் டெவலப்மென்ட் ப்ராஜக்ட்-லே உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டது. உலக வங்கி நிதி கொடுக்கிறபோது மத்திய அரசு, மாநில அரசு எல்லாம் ஒன்றாகத்தான் வருகின்றன. கட்டி முடித்தது தமிழ்நாட்டினுடைய நெடுஞ்சாலைத்துறை சார்பில். ஆகவே உலக வங்கியிடமிருந்து பல்வேறு பணிகளுக்காகக் கடன்கள் வாங்குகிறோம். சிபாரிசின்பேரில். அதாவது மத்திய அரசு அவற்றை பார்வர்ட் செய்கிறார்கள். ஆகவே அதிலே போய் மத்திய அரசுக்குப் பாராட்டு, மாநில அரசுக்குப் பாராட்டு என்பதெல்லாம் கிடையாது. ஆகவே உலக வங்கியினுடைய நிதித்திட்டத்தில் நம்முடைய தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத்துறை குறித்த காலத்திலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடித்தார்கள் என்பதுதான் உண்மை.

பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்பது மாநிலத்திற்கு கிடைக்க வேண்டிய உரிமையை. எனவே அந்த உரிமையை அவர்கள் கொடுக்கிறபோது அதற்கு நன்றி என்று சொல்வது அவ்வளவு நியாயமாக இருக்க முடியாது. எக்ஸ்டிரார்டினரியாக ஏதாவது கொடுக்கும்போது நன்றி பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமே கடன் வாங்கி நாமே அங்கு செலுத்துகிறோம். ஆக, இது நகர்ப்புற வளர்ச்சித் துறையின், தமிழ்நாடு அர்பன் டெவலப்மெண்ட் புராஜக்ட்டின் கீழ் வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளூர் திட்டக் குழுமம் என்று ஒன்று இருக்கிறது. கிராமப்புறங்களிலே ஒரு சிறிய வீடு கட்டவேண்டுமென்று சொன்னால்கூட கிராமப்புற மக்கள் நகரத்திற்கு வந்து வீடுகட்டுவதற்காக உள்ளூர் திட்டக் குழுமத்தின் அனுமதியைப் பெற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதனால் கிராமங்களில் வீடுகட்டும் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே அதைக் கைவிடவேண்டுமென்று இந்த அரசைப் பார்த்து நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு உறுப்பினர் பேச இருக்கிறார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறானத் தகவலை தருகிறார்கள். கிராமப்புறங்களிலே கட்டப்படுகின்ற கட்டிடங்களுக்கு அனுமதி பெறவேண்டி உள்ளூர் திட்டக் குழுமத்திடம் வர வேண்டிய அவசியமில்லை. அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இடம் அல்லது திட்டம் பெற வேண்டிய இடம் உள்ளூர் குழுமத்தினுடைய ஆட்சியில் இருந்தால் உள்ளூர் திட்டக் குழுமத்தில் அவர்கள் அனுமதிக்காக வரவேண்டும். கிராமத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அவர்கள் இங்கே வரவேண்டிய அவசியம் இல்லை.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு ஆணையை அரசு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் தெளிவாகக் குறிப்பிடுகிறேன். ஒரு கட்டிடம் கட்டுவதற்கான இடம் உள்ளூர் திட்டக் குழுமத்தினுடைய வரையறைக்கு உட்பட்டு அந்த இடம் உள்ளூர் திட்டக் குழுமத்தின் ஏரியாவில் வருகிறது என்று சொன்னால் உள்ளூர் திட்டக் குழுமத்தின் அனுமதி வாங்க வேண்டும் என்பதுதான் சட்டம். அதற்கு அப்பாற்பட்டு, கிராமங்களிலிருந்து உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்று தெளிவாக ஆணை இருக்கிறது.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தல்களைப் பொறுத்தவரையில், ஆளுநர் உரையில் அரசு தேர்தலை நடத்த எண்ணுகிறது என்றுதான் ஒரு வாசகம் இருக்கிறது. எண்ணுகிறது என்று சொல்லும்போது அது உறுதியாக தென்படவில்லை. முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். எனவே இந்த அரசு தேர்தலை நடத்த எண்ணுகிறது என்பதை கண்டிப்பாக நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையை அளிக்கின்ற முறையிலே ஏதேனும் வாசகம் அளிக்கின்றது என்று சொன்னால் அது சிறப்பாக இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்ததாக கிருஷ்ணா நதி நீரைப் பொறுத்தவரையில் கிருஷ்ணா நதியிலிருந்து 3 டி.எம்.சி. தண்ணீர் வரும் என்று சொல்லப்படுகிறது. இந்தக் குறைந்த அளவு இதோடு நின்றுவிடுமா அல்லது ஏற்கெனவே ஒத்துக்கொண்ட அளவான 5 டி.எம்.சி. தண்ணீர் வருமா என்பதற்கு ஆளுநர் உரையில் விவரம் இல்லை. எனவே இது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் சந்தேகத்திற்கு இடமில்லை. ஏற்கெனவே செய்துள்ள ஒப்பந்தத்தின்படி ஆந்திர மாநிலம் தமிழகத்திற்கு கிருஷ்ணா நதி நீரிலிருந்து மொத்தம் 15 டி.எம்.சி. அளவு தண்ணீர் வழங்க உள்ளார்கள். அதில் எவாப்பரேசன் லாஸஸ் எல்லாம் போக நெட்டாக நமக்கு அவர்கள் 12 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும். அதுதான் ஒப்பந்தம். அதில் எந்த மாற்றமும் இல்லை. முதல் கட்டமாக இப்போது டிசம்பர் மாதத்திற்குள் 3 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுப்பதாக அவர்கள் உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். காவல் துறையைப் பற்றி மிகச் சிறப்பாக இங்கே சொல்லப்பட்டது. ஆனால் எனக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு கசப்பான அனுபவத்தை மட்டும் நான் இங்கே சொல்லியே தீரவேண்டும். என்னுடைய தொகுதியில் மாநகராட்சியின் அனுமதியோடு, மாநகராட்சியின் பணத்தில், மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்திலே ஒரு கல்யாண மண்டபம் கட்டுவதற்கு காவல் துறையே இடையூறாக இருந்து அதைக் கட்டக்கூடாது என்று சொல்லுகிற அளவுக்கு அங்கே நிலைமை இருக்கிறது என்பதை நான் வருத்தத்துடன் சொல்லிக்

கொள்கிறேன். ஏழை மக்களுக்காக அரிஜன மக்களுக்காகக் கட்டப்படுகிற அந்தக் கல்யாண மண்டபத்திற்கு காவல் துறை எதிராக இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்யாண மண்டபத்தைக் கட்டக்கூடாது என்று காவல் துறை சொல்வதற்கு என்ன காரணம் என்பதை முதலில் உறுப்பினர் தெளிவாகச் சொன்னால் அது நலமாக இருக்கும். டிராபிக் அதிகமாக இருக்கிறது என்ற காரணமும் இருக்கலாம். இதுபோன்ற இடையூறுகள் ஏதாவது இருக்கிறதா என்பதை நீங்கள் தெளிவாகச் சொன்னால்தான் சரியாக இருக்கும். நீங்கள் மொட்டையாகச் சொல்வது எப்படி இருக்கிறது என்றால், காவல் துறையினர் தடுக்கின்றனர் என்று சொல்வதுபோல் இருக்கிறது. அது எப்படி நியாயமாக இருக்கும் ?

பிற்பகல் 1-55

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தெரிவிப்பதில் ஆட்சேபணை ஒன்றும் இல்லை, நேரம் அனுமதித்தால்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் அனுமதித்தால் என்பதல்ல. நீங்கள் என்ன காரணத்திற்காக அவர்கள் அப்படிச் செய்கிறார்கள் என்று சொன்னால்தானே தெரியும் ?

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை புலியகுளத்தில் காவல்துறை நீண்டகாலமாக தனக்குச் சொந்தம் இல்லாத ஒரு இடத்திலே 'போலீஸ் பாய்ஸ் கிளப்' என்று ஒரு கிளப்-ஐ நடத்திக்கொண்டு வந்தது. அந்த இடத்திலே ஒரு பகுதியை மாநகராட்சி உரிய முறையிலே அரசாங்கத்திடமிருந்து பெற்று, அங்கே வரைபடங்கள் தயாரித்து மதிப்பீடுகள் தயாரித்து, அரிஜன மக்கள் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு திருமண மண்டபத்தை கட்டுவதற்கு ஏற்பாடு செய்தது. அப்படி ஏற்பாடு செய்திருக்கின்ற நேரத்திலே காவல் துறை அதிகாரிகள் மாநகராட்சி அலுவலர்களை மிரட்டுவதோடு மட்டுமல்லாமல், அங்கே கல்யாண மண்டபமே வரக்கூடாது என்று தடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கட்டடங்களை எழுப்புவதைப் பொறுத்தவரையில் முடிவு செய்யவேண்டியது மாநகராட்சிதான். ஏற்கனவே இந்தப் பிரச்சினை என் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை என் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார். இந்தக் கட்டடத்தைக் கட்டவிடாமல் காவல்துறையினர் தடுத்து வருகிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். ஆகவே இது குறித்து நான் விசாரித்து சரியானத் தகவலை இந்த அவைக்கு பின்னர் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே செல்கின்றபோது, அந்தக் குடிசைவாழ் மக்களுக்கு மாநகராட்சியும் மின்வசதி செய்து கொடுக்க முடியவில்லை. மின்சார இலாகாவும் மின் வசதி செய்து கொடுக்க முடியவில்லை. கேட்கின்றபோது நீங்களே கேட்பு வரி வாங்கி வைத்து இருக்கிறீர்களா, பி மெமோ போட்டிருக்கிறீர்களா என்றுதான் கேட்கப்படுகிறதேயொழிய எதுவுமே இல்லாமல் யாருக்கும்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு எல்லாம் 1,98,000 குடியிருப்புகளுக்கு உடனடியாக மின் இணைப்பு கொடுக்கவேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு, அதற்காக உள்ளாட்சி மன்றங்கள்கூட பணம் செலுத்தவேண்டிய சூழ்நிலைகள் இருந்ததையெல்லாம் மாற்றி இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனைப்படி அவர்களிடத்திலே பணம் கேட்கவேண்டாம் மின்சார வாரியமே அந்தச் செலவை ஏற்றுக்கொள்ளலாம் என்று ஒரு அனுமதியும் இப்போது வழங்கிவிட்டார்கள். ஆகவே ஆதிதிராவிடர்களைப் பொறுத்தமட்டில், அந்த 1,98,000 விளக்குகளையும் இந்த 1995-ம் ஆண்டுக்குள்ளாக போடவேண்டுமென்று உத்தரவிடப்பட்டு அதை முழுமையாக மின்சார இலாகாவே ஏற்றுக்கொண்டு இன்றைக்குப் பணியாற்றிக்கொண்டிருக்கிறது. ஆகவே ஆதாரபூர்வமாக பட்டா கொடுக்கப்பட்ட இடங்களிலே, குடியிருப்புகளைக் கட்டியிருக்கின்றபோது மனுக்கள் கொடுக்கும்போது,

அவர்கள் பணத்தை மாநகராட்சியின் சார்பிலே கட்டுகின்றபோது, அதற்குப் பின்னாலே மின்சார வாரியத்திலே கட்டுகிறோம். முறையாக அனுமதி இல்லாத இடங்களிலே, சில இடங்களிலே கட்டிவிட்டு மின்சார வாரியத்தை நாடுகின்றபோது, நாங்கள் என்.ஓ.சி. கேட்போம். நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட் கொடுத்தால்தான் செய்வோம். ஏனென்றால் மாநகராட்சி என்பது முக்கியமான பகுதி. அங்கே திடீரென்று குடிசைகளைப் போட்டுவிட்டு எங்களுக்கு அனுமதி தாருங்கள் என்று சொன்னால், நாங்கள் மின்சார இலாகா அனுமதி கொடுத்தால், அதை வைத்துக்கொண்டு கோர்ட்டுக்கு போய் இந்த இடம் எங்களுக்குச் சொந்தம். எங்களுக்கு மின்சார இலாகா அனுமதி கொடுத்து இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு போகிறார்கள். ஆகவே திடீரென்று பிரச்சினைகள் எல்லாம் ஏற்படுகிறது. ஆகவே இதுபோன்ற நடைமுறைச் சிக்கல்கள் இருக்கலாமே தவிர, வேறல்ல. ஆகவே ஏற்கனவே குடிசைகளுக்கு ஆதிதிராவிடர்களுக்கெல்லாம் கொடுக்கவேண்டும் என்று தெளிவாக உத்தரவுகள் அரசின் சார்பிலே போடப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி மன்றங்களிலே பணம் இல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை. மின்சார வாரியமே அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு அதை மின்சார வாரியமும் இன்றைக்கு ஏற்றுக் கொண்டு பிரச்சினை இல்லாமல் அந்த குடிசைகளுக்கு 1995-க்குள் இணைப்புக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதிலே அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகளிலே பணம் இருந்தும் வேலை செய்வதற்கு ஆள் இருந்தும்கூட பல மாநகராட்சிகளிலே குறிப்பாக கோவை மாநகராட்சியிலே 600 ஸ்கேவஞ்சர்ஸ் புதிதாக வேண்டுமென்று பலமுறைகள் விண்ணப்பம் செய்தும்கூட அரசு அனுமதி இல்லாத காரணத்தினாலே அந்த தெருக்கூட்டிகளை நியமனம் செய்ய முடியவில்லை. அதனாலே அந்த பகுதியிலே எல்லாம் குப்பைகள் நிறைந்து சுகாதாரக் கேடு ஏற்பட்டு வருகிறது. இதற்கு என்ன தடையாக இருக்கிறது என்பதை எங்களாலே புரிந்துகொள்ளமுடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, மாநகராட்சியிலே அங்கே சுகாதாரப் பணியாளர்கள் இல்லாத

காரணத்தினாலே குப்பைக்கூளங்கள் தேங்கியிருப்பதைப் போன்ற ஒரு பிரமையை உருவாக்குகிறார். அது அப்படி அல்ல. கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் இன்றைக்குச் சுத்தமாக இருக்கிறது. எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு அந்த மாநகராட்சியிலே இன்றைக்கு பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிக அளவுக்குப் பணியாளர்களை நியமிப்பது பொறுத்தவரையில் இன்றைக்கு 600 பணியாளர்களை, ஆயிரம் பணியாளர்களை நியமிக்கிறோம் என்று சொன்னால், அதன் நிதிச் சுமையை, அதற்குண்டான நிதிச் செலவை நாங்கள் கணக்கிடவேண்டி இருக்கிறது.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. சீக்கிரம் பேசி முடித்துவிடலாம்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது, ஆகவே, அது தேவைப்படும் என்று சொன்னால், அதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும். இது பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியைப் பொறுத்தமட்டிலே குப்பையும் இருக்கிறது, பணியாட்களை நியமிக்க பணமும் இருக்கிறது. ஆனால் அனுமதி தான் இல்லை என்பதைத்தான் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பணம் ஏராளமாக இருக்கிறது. அனுமதி மட்டும் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாக நான் குறிப்பிட்டேன். கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரை அந்த நிலைமை இல்லை. இன்றைக்கு அவர்கள் சில பணியாட்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரை சில சிக்கன நடவடிக்கைகளை கையாள வேண்டியிருக்கிறது. நீதிநிலைமையையும் நாம் அனுசரித்துதான் பணியாளர்களை நியமிக்க முடியும். காரணம், இன்றைக்கு இருக்கிற நிலைமை. மாநகராட்சி சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தமாதிரி புகார்கள் எல்லாம் இன்றைக்கு இல்லை.

இன்றைக்கு இந்தப் பணியாளர்கள் நியமனத்தைப் பொறுத்தவரை, அந்த கருத்துரு அரசினுடைய பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அதுசம்பந்தமாக நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே, குப்பையும் இருக்கிறது, அங்கே நிதிநிலைமையும் நன்றாக இருக்கிறது என்று சொல்வது, அரசுக்கு நன்றாக தெரியும், அங்கே நிதிநிலைமை எந்த அளவுக்கு இருக்கிறது என்பது. அதை எல்லாம் வைத்துதான் பரிசீலனை செய்ய இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லட்சுமணன் அவர்கள் பேசுகிறபோது ஒரு குறிப்பு இதோ ஆதாரம் என்று பேரவைத் துணைத் தலைவருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். இதைப்போன்ற சில தஸ்தாவேஜுகளோ, அறிக்கைகளோ அல்லது அறிவிப்புகளோ, நீங்கள் எதை பேஸ் செய்து பேச இருக்கிறீர்களோ, அதை ஆதாரமாகக் கொள்வீர்களேயானால் எனக்கு முன்கூட்டியே வந்து கொடுத்து என் அனுமதியைப் பெற்றுப் பேச வேண்டுமென்று ஏற்கெனவே நான் அறிவித்திருக்கிறேன். திரும்பத் திரும்ப, பல முறை இங்கே வந்து நான் இதோ கொடுக்கிறேன் என்று கொடுக்கிறபோது, நான் இதை அமைச்சருக்கு அனுப்பி அவர்களுடைய பதிலைப் பெற முடியாது. ஏதோ, பேரவைத் தலைவர் இங்கே வந்து நாட்டுப் பஞ்சாயத்துக்காரர் போல நடந்துகொள்ள முடியாது. விதிமுறைகளின்படி நடந்துகொள்ள வேண்டும். நீங்கள் அங்கேயிருந்து ஒரு காகிதத்தைக் கொடுக்க, நான் இங்கே கொடுக்க, உங்கள் பதில் என்ன என்று கேட்டுக்கொண்டிருக்க முடியாது. எனவே, முறைப்படி, விதிமுறைப்படி இதைப்போன்று குறிப்பிடுவதாக இருந்தால், விதிப்படி முன்கூட்டியே என்னிடத்திலே வந்து தகவல் கொடுக்க வேண்டும். திரு. தாமரைக்கனி அவர்கள் நடந்துகொள்வதற்கும், மற்றவர்கள் நடந்துகொள்வதற்கும் கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசம் இருக்க வேண்டும். எனவே, அவ்வாறு கொடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் அப்படி கொடுத்தாலும் கூட உடனடியாக அதற்கு பதில் கொடுப்பதே தவறு. முறைப்படி கொடுக்க வேண்டும் என்பது உண்மை. ஆனால் அவர் கொடுத்ததற்கு சரியான விளக்கத்தை நான் ஏற்கெனவே அவையிலே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கங்கள் நீங்கள் தரலாம். அந்தமாதிரிப் பேசக்கூடியதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதற்குத்தான் சொல்ல வந்தேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (15-3-1995) புதன்கிழமை காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

1. 1957-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 8-3-1994-ஆம் நாளிட்ட 258-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

2. 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 17/1994) எந்த தேதியிலிருந்து செயலுக்கு வரும் என்பதை குறிப்பிடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 23-8-1994-ஆம் நாளிட்ட 269-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

3. தமிழ்நாடு தொழிலியல் வெடி மருந்து நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்கள் மற்றும் துணைப் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 24-8-1994-ஆம் நாளிட்ட 271-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

4. 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 12-5-1994-ஆம் நாளிட்ட 333-ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

5. சென்னை, திருவாளர்கள் கெமாக் லேபோரடரீஸ் நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய விற்பனை வரியினை 1992-93-ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 20-6-1994-ஆம் நாளிட்ட 187-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

6. சென்னை, பெசன்ட் நகர், திருவாளர்கள் சுவாமி சிவானந்தா நினைவு டிரஸ்டினால் பராமரிக்கப்பட்டுவரும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் பத்தமடையிலுள்ள அறக்கட்டளை மருத்துவமனை மற்றும் ஊரக சுகாதார நல மையத்திற்கு விற்கப்படும் சில பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25-8-1994-ம் நாளிட்ட 273-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

7. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிமப் பொருட்கள் சலுகைகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து தொழில் துறையின் 26-10-1994-ஆம் நாளிட்ட 290-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1957-ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமப் பொருட்கள் (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 28 (1) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

8. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 25-11-1993-ஆம் நாளிட்ட 247-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

9. பெரியார் மாவட்டம் பன்னாரியிலுள்ள பன்னாரி மாரியம்மன் குண்டம் மறு பூஜை விழாவிற்காக 27-3-1994 முதல் 5-4-1994 வரை கர்நாடக மாநில சாலைப் போக்குவரத்துக் கழகத்தினால் தற்காலிக உரிமம் பெற்று இயக்கப்பெற்ற 10 பயணிகள் பேருந்துகளுக்கு வாகன வரிவிதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து உள் (போக்குவரத்துத்) துறையின்

9-3-1994-ஆம் நாளிட்ட 211-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

10. கோயம்புத்தூர், சேரன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பயணிகள் பேருந்துகளுக்காக அக்கழகத்தினால் 1-4-1985 முதல் 31-3-1986 வரையில் செலுத்தப்படவேண்டிய தண்டவரியில் ஐம்பது சதவீதத் தொகையை கைவிடுதல் குறித்து உள் (போக்குவரத்துத்) துறையின் 3-3-1994-ஆம் நாளிட்ட 241-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

11. 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (நீதிமன்றங்கள்) துறையின் 24-10-1994-ஆம் நாளிட்ட 1285-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 59/1992) 13 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

12. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டு மதுபான (உற்பத்தி) விதிகளை 16-7-1991-ஆம் தேதி முதல் திரும்பப் பெற்றுக் கொள்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 22-9-1994-ஆம் நாளிட்ட 153-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

13. 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 23-6-1993-ஆம் நாளிட்ட 362-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

14. திரைப்படக் கருவிக்குத் தேவையான கச்சா படச் சுருள்கள் விற்பனையின் மீது செலுத்த வேண்டிய வரிவீதத்தை 5 சதவீதத்திலிருந்து

3 சதவீதமாக குறைப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 27-9-1994-ஆம் நாளிட்ட 309-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

15. ஆறாவது பட்டியலின் கீழ் வருகின்ற சில பொருட்களின் இரண்டாவது விற்பனைக்கு 1-4-1994 முதல் 27-9-1994 வரையுள்ள காலங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 28-9-1994-ஆம் நாளிட்ட 312-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

16. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 3-10-1994-ஆம் நாளிட்ட 316-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

17. வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் சேத்துபட்டிலுள்ள திருவாளர்கள் ஷேம மறுவாழ்வு பயிற்சி மையத்தினரால் 1-4-1990 முதல் 31-3-1995 வரையில் நடத்தப்படும் பயிற்சியின் போது தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனைக்கு வரி விதிப்பதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 4-10-1994-ஆம் நாளிட்ட 319-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

18. 1994-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) விதிகளை வகுப்பது குறித்து பொதுப் பணித்துறையின் 27-4-1994-ஆம் நாளிட்ட 374-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1993-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1993) 9 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

19. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம்-மண்டலம்-1-ல் அடங்கியுள்ள நிலங்களுக்கு விவசாயத்திற்காக நீர் வழங்குகையை முறைப்படுத்துவது குறித்து பொதுப் பணித்துறையின் 27-4-1994-ஆம் நாளிட்ட 375-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1993-ஆம் ஆண்டு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (நீர் வழங்குகையை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1993) 9 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

20. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் பட்டியல்கள் 1, 3 மற்றும் 6-ல் திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 28-9-1994-ஆம் நாளிட்ட 311-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

21. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 11-8-1994-ஆம் நாளிட்ட 133-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

22. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் சங்கர் நகரிலுள்ள திருவாளர்கள் இண்டஸ்டிரியல் கெமிக்கல்ஸ் மற்றும் மனோமேர்ஸ் நிறுவனத்தினரால் செலுத்தப்படவேண்டிய வரியினை 22-9-1992 முதல் 21-8-1995 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25-4-1994-ஆம் நாளிட்ட 126-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

23. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் 20-2-1974 முதல் 16-5-1978 வரையிலான காலங்களில் கையினால் தயாரித்த சோப்புகளின் விற்பனையில் விற்பனை வரி, கூடுதல் வரி மற்றும் மேல் வரி ஆகியவைகளைத் தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 24-8-1994-ஆம் நாளிட்ட 270-ஆம் எண்

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு, 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவு மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4 (3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

24. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 18-8-1994-ஆம் நாளிட்ட 140-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

25. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 11-8-1994-ஆம் நாளிட்ட 131-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

26. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10-10-1994-ஆம் நாளிட்ட 331-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

27. 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 19-8-1994-ஆம் நாளிட்ட 759-ஆண் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

28. பதிவு எண் எம்.டி.எச். 3759 என்ற இயக்கூர்திக்கு 31-12-1984-ஆம் நாளுடன் முடிவடைந்த காலாண்டிற்கு நிலுவையாக உள்ள வரி மற்றும் தண்டத் தீர்வையை தள்ளுபடி செய்வது குறித்து உள் துறையின்

4-4-1994-ஆம் நாளிட்ட 385-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

29. ஆந்திர மாநிலம், புட்டபார்த்தி சத்யசாயி மேல் படிப்பு நிறுவனம் 10-4-1994 முதல் 11-5-1994 வரை தமிழ்நாட்டில் கல்வி சார்ந்த பயணத்திற்கு பயன்படுத்திய இயக்கூர்தி பதிவு எண் எபி.02/வி/0909-க்குச் செலுத்த வேண்டிய மோட்டார் வாகன வரிக்கு விலக்களிப்பது குறித்து உள் துறையின் 7-4-1994-ஆம் நாளிட்ட 406-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1993-94. The Tamil Nadu Energy Development Agency (TEDA) has been recognised as the best nodal agency for its outstanding contributions to the development of wind energy. Tuticorin and Mettur Thermal Power Stations of the Tamil Nadu Electricity Board have repeatedly won all-India awards for the achievement of a high Plant Load Factor. The Directorate of Handlooms and Textiles and the Kancheepuram Arignar Anna Silk Weavers' Co-operative Society were awarded the all-India first prize in the low-cost housing competition under the Weavers' House-cum-Workshed Scheme. The Tamil Nadu Police has proved its mettle in the field of modern scientific investigation, by winning the overall championship for Scientific Aids to Investigation in the All India Police Duty Meet held in January, 1995. Tamil Nadu has stood first among all states in the implementation of the Mahila Samriddhi Yojana, which is a scheme to encourage thrift amongst women. This Government will remain committed to providing an effective and sensitive administration.

36. With the bountiful harvest and the provision of adequate basic services through the self sufficiency scheme, rural Tamil Nadu has been blessed with unsurpassed prosperity. Hon'ble Members of the House are aware of the enactment of the Tamil Nadu Panchayats Act, 1994. A State Election Commission and a State Finance Commission as visualized under this Act have been constituted. This Government intends to hold elections to the local bodies by June 1995. The State Election Commission has been requested to draw up a detailed election schedule.

37. Elections to the co-operatives were notified by this Government in June 1992. Cases are pending before the Supreme Court. The conduct of the elections was stayed by the High Court in August 1992. The Division Bench of the High Court has to examine the various issues involved. This Government is taking positive steps to get the stay vacated. This Government will take appropriate action to conduct the elections to co-operatives after the judgement of the Madras High Court is received.

38. Tamil Nadu has successfully demonstrated that it can combine growth with stability. The perfect maintenance of law and order has provided the foundation for implementing accelerated development plans. The new action plan for securing accelerated industrial growth in the State will no doubt be widely welcomed. This Government shall always ensure

that under no circumstances is the condition of the poor and the down-trodden affected adversely. At the same time through meaningful and innovative programmes it shall be the endeavour of the Government to improve the quality of life of the poor and the down-trodden.

39. This Government has amply demonstrated that despite the severest challenges, it can take Tamil Nadu forward on the path of sustained development. In a period of nearly four years, this Government has emphatically established that peace and tranquillity in the State will be protected. This Government has also consistently exceeded the approved plan outlay and also taken Tamil Nadu above the national average in per capita plan outlay, despite severe financial constraints. The Government has successfully tackled every one of the difficult issues that it has faced, be it on the law and order front, the critical financial position, the challenges to social cohesion or the rights of the State. Tamil Nadu has been in the forefront in fostering the spirit of national integration and safeguarding communal harmony. Tamil Nadu is now well recognized among international agencies for its ability to put together innovative new projects and implement them successfully. Several delegations from foreign countries have visited the State to undertake new investments and further trade relations.

40. Hon'ble Members of this House will appreciate the several imaginative and courageous steps taken by this Government to take Tamil Nadu on an accelerated growth path. This Government will take all steps to ensure that Tamil Nadu's outstanding record as a model of all round economic development is sustained. Growth and prosperity for all shall be the watchword of this Government. Betterment of the lives of the poor and the down-trodden shall always remain the unshakeable commitment of this Government. I have no doubt that the deliberations in this House will be meaningful in securing continued prosperity for the State in the future. I have every confidence that the discussions will be objective, balanced and purposive.

VANAKKAM.

1995 மார்ச் 14]

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,

1995 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவர்க்கும் என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டில் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டுவரும் முக்கியத்துவம் நன்கு பாராட்டப்பட்டுள்ளது. விரிவான பாதுகாப்பு நலத்திட்டங்கள் ஏழை, எளியோரின் நலனைப் பாதுகாத்து வந்துள்ளன. சிறப்பு நலத் திட்டங்கள் ஏழை. எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவியுள்ளன. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடி மக்கள் ஆகியோர்க்குக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் தமிழ்நாடு சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று, அதற்கு அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பையும் பெற்றதன் மூலம், சமூக நீதியைப் பெற்றுத் தந்தது, 1994 ஆம் ஆண்டில் இவ்வரசின் அருஞ்சாதனையாகத் திகழ்ந்தது. இவ்வரசின் இன்னொரு மிகப் பெருஞ்சாதனை 1995 ஜனவரியில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியது ஆகும்.

3. சட்டம்-ஒழுங்கை மிகச் சிறந்த முறையில் பராமரிக்க தலையாய முன்னுரிமை அளிக்கப்பட்டது. இவ்வரசு பதவி ஏற்பதற்கு முன் நிலவிய சட்டம்-ஒழுங்கு நிலைமையை அனைவரும் நன்கறிவர். வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகளால் உருவான அச்சுறுத்தல், பல்வேறு அமைப்புகளை இப்பணியில் ஈடுபடுத்தி, விழிப்புடன் தொடர்ந்து மேற்கொண்ட கண்காணிப்பு, ஒருமித்த, ஒருங்கிணைந்த நடவடிக்கை ஆகியவற்றால் திறம்படச் சமாளிக்கப்பட்டு வருகிறது. சிறுசிறு சம்பவங்கள் ஏற்பட்ட போதெல்லாம் மாநிலக் காவல்துறை அவற்றைத் திறம்படச் சமாளித்தது. எந்தச் சூழலும் கட்டுமீறிப் போகும் அளவிற்கு அனுமதிக்கப்படவில்லை. வழிப்பறி, கொள்ளை போன்ற சம்பவங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, கண்டுபிடிக்கப்படாமல் இருந்த நெடுஞ்சாலைக் கொள்ளைகள், வழிப்பறிகள் குறித்த குற்றங்களைப் புலனாய்வு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிறப்புப் புலனாய்வுக் குழுவை நியமனம் செய்தார். மொத்தம் 47 குற்றங்கள் துப்புத் துலக்கப்பட்டு ரூ. 31.70 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. இவ்வாறு குற்றங்கள் துப்புத் துலக்கப்பட்டது, குற்றங்கள் தொடர்ந்து நிகழாமல் தடுப்பதற்குரிய சிறந்த பயனுள்ள விளைவைத் தோற்றுவித்தது. தமிழ்நாடு

மாநிலம், அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும் பெயர் பெற்ற மாநிலம் என்ற மரபைப் பேணிக்காக்க, இந்த அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

4. மாநிலக் காவல் துறையை மனிதாபிமானத்துடனும், கருணையுடனும் செயல்படும் ஓர் திறம் மிக்க அமைப்பாக உருவாக்கும் பொருட்டு, இதனை நவீனமயமாக்குவதற்குரிய விரிவான, பரந்த விளைவை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் பலவும் எடுக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள். காவல் துறையை நவீனமயமாக்குவதற்கான மாநிலத் திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. 1995 மார்ச்சுத் திங்கள் இறுதிக்குள், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், ஒரு ஜீப் வண்டி வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். ரூ. 3.37 கோடி செலவில் கடற்கரையோரப் பாதுகாப்புப்படை அமைக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை ரோந்துப்பணித் திட்டம் ரூ. 6.29 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. காவலர் வீட்டுவசதித் திட்டத்திற்குப் புதியவலிவும் பொலிவும் அளிக்கப்பட்டுள்ளன. ரூ. 28.50 கோடி செலவில் 1995 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதிக்குள் 2002 வீடுகள் கட்டி முடிக்கப்படும். அனைத்து மாவட்டத் தலைமையிடங்களையும் உள்ளடக்கி அமையும் காவல்துறை கணினிமயத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் ரூ. 54 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. காவல் துறையை வலுப்படுத்துவதற்கான பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை 31 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் திறந்ததன் மூலம் ஏற்படுத்திய முன்னுதாரணத்தை ஏனைய மாநிலங்களும், வளர்ந்து வரும் பிறநாடுகளும் கூடப் பின்பற்றியுள்ளன. இந்த அரசு பதவியேற்றபோது, ரூ. 80.45 கோடி செலவில் மாநிலக் காவல் துறையை நவீனமயமாக்குவதற்கான செயற்குறிப்பு, மத்திய அரசின் நிதியுதவி பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டது என்பதை இங்கு நினைவு கூரலாம். 1991-92 ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ. 10 கோடி வழங்கியபோதிலும், மேற்கொண்டும் தனி நிதியுதவி எதுவும் பெறப்படவில்லை. மாநிலக் காவல் துறையை நவீனமயமாக்குவதற்கான பல்வேறு திட்டங்களுக்காக இந்த அரசு இதுவரை ரூ. 43.08 கோடி வழங்கியுள்ளது. காவல் துறையை விரிவான முறையில் நவீனமயமாக்கும் பல்வேறு திட்டங்களை மாநில நிதியிலிருந்து செலவிட்டுச் செயல்படுத்துவதற்கு நிதி இடர்ப்பாடுகள் குறுக்கே நிற்க நாம் அனுமதிக்கவில்லை என்பதை அறிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

1995 மார்ச் 14]

5. நீதி நிருவாகத்திற்கு உயரிய முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கும், நீதிபதிகளுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்குமான ஒரு புதிய திட்டம் திட்டப்பணிகளின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் இந்தப் புதிய திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 5.82 கோடி ஆகும். அண்மையில் மொத்தம் 17.23 கோடி ரூபாய்க்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை இராமநாதபுரம், வேலூர், கோபிசெட்டிப்பாளையம், தாராபுரம் மற்றும் பிற இடங்களில் நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டவும், 35 குடியிருப்புகள் கட்டவும் வகை செய்யும். உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்ட தன் பேரில், வழக்குகளை விரைவில் முடிக்க, அரசு புதிய திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 43 நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், மாவட்ட முனிசீப்-நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களாக மாற்றியமைக்கப்படும். குடும்ப வழக்கு நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், 1994-95-ல் சென்னையில் ஒரு கூடுதல் நீதிமன்றமும், மதுரையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும் ஆகமொத்தம் புதிதாக மூன்று குடும்ப வழக்கு நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மாநிலத்திலுள்ள குடும்ப வழக்கு நீதிமன்றங்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆக ஆகியுள்ளது. 1994 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ள மாநிலச் சட்ட ஆணையம் தற்போதிருக்கின்ற சட்டங்கள் அனைத்தையும் விரிவாகப் பரிசீலனை செய்து சீரமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

6. தமிழ்நாடு கடற்கரைக்கு அப்பால் ஸ்ரீலங்கா கடற்படையினர் தொடர்ந்து இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பது குறித்து இந்த அரசு மிகவும் கவலை கொள்கிறது. இப்பிரச்சினை குறித்து ஸ்ரீலங்கா அரசிடம் எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் 3-11-94 அன்று மாண்புமிகு பிரதமருக்கு எழுதியுள்ளார். ஸ்ரீலங்கா கடற்படையினர் கடத்திச் சென்ற 20 மீனவர்களை விடுவிக்க இதில் தலையிடுமாறு கேட்டுக்கொண்டு, 15-2-95 அன்று நமது மாண்புமிகு முதலமைச்சர் மீண்டும் மாண்புமிகு பிரதமருக்கு எழுதியுள்ளார். மேலும், இனிமேல் இத்தகைய தாக்குதல்களை நடத்தாமலிருப்பதாக ஸ்ரீலங்கா அரசிடமிருந்து உறுதிமொழி பெறுமாறு நமது மாண்புமிகு முதலமைச்சர் மாண்புமிகு பிரதமரை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டுள்ளார். 1990 முதல் இதுவரை இத்தகைய 165 நிகழ்வுகள் நேர்ந்துள்ளன. இதில் 34 மீனவர்கள் இறந்துவிட்டனர். 127 மீனவர்கள் காயமுற்றனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம், இழப்பீடு வகையில் இந்த அரசு ரூ. 40.37 இலட்சம் அனுமதித்துள்ளது. மீனவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் முழுப் பொறுப்பும் இந்த அரசால்

ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை மத்திய அரசு மூலமாக ஸ்ரீலங்கா அரசிடமிருந்து இந்த அரசு கோரியுள்ளது. இது ஒரு தேசியப் பிரச்சினையாதலால், இப்பிரச்சினையில் மத்திய அரசு முனைப்பாகத் தலையிட வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதில் உள்ள சுமையை ஏற்க வேண்டுமென்றும் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

7. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் இட ஒதுக்கீடு செய்யும் திட்டத்திற்கு அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பு வழங்க வகை செய்ததன் மூலம், இம்மாநிலத்தில் சமூக நீதி மேம்பாட்டுக்காக இவ்வரசு மேற்கொண்ட தன்னிகரற்ற முயற்சிகளுக்காக 1994 ஆம் ஆண்டு நினைவில் நிற்கும். இந்த அவை, மாநில அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு மொத்தம் 69 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டம் ஒன்றை, 1993 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்று இயற்றியுள்ளதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற்காக இச்சட்ட முன்வடிவு, 1994 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 19 ஆம் நாளன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அனைத்துக் கட்சித் தூதுக்குழு ஒன்றின் தலைமையேற்று 1994 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளன்று புது டில்லிக்குச் சென்று மாண்புமிகு பிரதமரிடம் தமிழ்நாடு இட ஒதுக்கீடு தொடர்பான சட்டமுன்வடிவிற்குக் குடியரசுத் தலைவர் விரைவில் இசைவு அளிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி முறையீடு ஒன்றினை அளித்தார். இந்தியக் குடியரசுத் தலைவர் அச்சட்ட முன்வடிவுக்கு, 1994 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19 ஆம் நாள் இசைவளித்தார். அச் சட்டமுன்வடிவு சட்டமாக்கப்பட்டது. ஆக்கபூர்வமாகச் செயற்பட்டுப் பரந்த அளவில் விளைவை ஏற்படுத்தும் வகையில் அமைந்த இட ஒதுக்கீட்டுச் சட்ட நடவடிக்கைக்கு நிரந்தரத் தன்மை அளிக்கும் பொருட்டு, இச்சட்டத்திற்கு அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பை வழங்க இவ்வரசு முயற்சி மேற்கொண்டது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட தளராத முயற்சிகளினால், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு 45 ஆம் சட்டம், நாடாளுமன்றம் இயற்றிய 1994 ஆம் ஆண்டு அரசமைப்புச் (எழுபத்தாறாவது திருத்தம்) சட்டத்தின் மூலம், அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டு வருகிறது

1995 மார்ச் 14]

என்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அரசமைப்புத் திருத்தச் சட்டமுன்வடிவிற்கு, இந்தியக் குடியரசுத் தலைவர் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31 ஆம் நாள் இசைவளித்தார். வரலாற்றுப் புகழ்பெற்ற இச் சாதனை, ஆக்கபூர்வமாகச் செயற்படவும் அதன் மூலம் சமுதாய மக்கள் தம்மிடையே பகைமை உணர்ச்சியும், காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல் செயற்படவும் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடையவும் வழி வகுத்துள்ளது. பூசல்களும் தொல்லைகளும் பெருக இடமளிக்கக் கூடிய இப்பிரச்சனைக்கு இத்தகைய சிறப்பாக எண்ணிச் செய்த இணக்கமான தீர்வு கண்டுள்ளது உண்மையிலேயே பெருமை கொள்ளத்தக்க சாதனையாகும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்குச் சமூக நீதி வழங்குவதில் தமிழ்நாடு உண்மையிலேயே சிறந்த வழிகாட்டியாக முன்னேறிச் சென்றுள்ளது.

8. சமுதாயத்தில் உள்ள பல்வேறு வகுப்பினர்க்கும் இடையே அமைதியையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்கு "மதச் சார்பின்மைக்" கொள்கை நேர் பயன்தரும் கோட்பாடாகும் என்றறிந்து அதனையே இவ்வரசு எப்போதும் பின்பற்றி வந்துள்ளது. இந்த அரசு பதவியேற்றபோது சில கோவில்களில்தான் அன்றாடம் ஒரு கால பூஜையாவது நடத்தி வர முடிந்தது. மிகச் சிறிய கோவில்களாக இருந்தாலும் சரி, அவற்றிற்கென்று போதுமான அறக்கட்டளைகள் இல்லாத கோயில்களாக இருந்தாலும் சரி, எல்லாக் கோவில்களுக்கும் அன்றாடம் பூஜை உறுதியாக நடைபெறச் செய்வதற்குரிய ஒரு புதிய திட்டத்தை இந்த அரசு தொடங்கிவைத்தது. இது வரை 5500 கோவில்களுக்கு மேல் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் அனைத்துக் கோவில்களும் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும். தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் பணிகளுக்காக இவ்வரசு இதற்கு முன்னர் வழங்கப்பட்டிராத சாதனையளவாக ரூ. 1 கோடி மானியம் வழங்கியுள்ளது. உலேமாக்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், உலேமா உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 250 என்பதிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 400 என்னும் அளவிற்கு 1994, டிசம்பர் திங்கள் முதல் உயர்த்தப்பட்டது. இதன்கீழ் 1700 உலேமாக்கள் பயன்பெறுவார்கள். இதற்காக ஆண்டுக்கு ரூ. 30.60 இலட்சம் கூடுதல் செலவு பிடிக்கும். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்-சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம், கிறித்தவர் உட்பட சிறுபான்மையினருக்குக் கடன்கள் வழங்கக் கூடிய வகையில் வலுப்படுத்தப்பட்டுள்ளது. அரசு தொட்டில் குழந்தைகள் திட்டத்திற்கு ஆசிகள் வழங்கிய அன்னை தெரசா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சென்னையில் தமிழ்நாடு வீட்டுவசதி

வாரியத்திற்குச் சொந்தமான ஒரு கட்டிடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிஷினரீஸ் ஆப் சாரிடி நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். மிஷினரீஸ் ஆப் சாரிடி நிறுவனம் ஆற்றுகின்ற உயர்ந்த அறப்பணிகளுக்கு ஆதரவு தருகின்ற வகையில், அதற்குச் சொத்துவரி, தண்ணீர் வரி, தண்ணீர்க் கட்டணம், மோட்டார் வண்டி வரி, நுழைவு வரி ஆகிய வரிகளனைத்தும் செலுத்த வேண்டியதில்லை என்று அவை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

9. தஞ்சாவூரில் 1995 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு உறுதி செய்ய, இவ்வரசு மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து 1101 அறிஞர்களும் மாநிலத்தின் மூலை முடுக்குகளிலிருந்து இலட்சக்கணக்கான தமிழர்களும் வந்து கலந்து கொண்ட இம்மாநாடு உண்மையிலேயே தமிழ்மொழி மற்றும் பண்பாட்டின் தொன்மைச் சிறப்பையும், உயர் தனிச் செம்மை நிலையையும் புலப்படுத்துகின்ற பன்னாட்டு முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகத் திகழ்ந்தது. பண்டைத் தமிழ்ப் பண்பாட்டின் உறைவிடமாகத் திகழும் தஞ்சை நகரம் தமிழ்மொழி, பண்பாட்டு மணி மகுடத்தில் பதித்த இரத்தினமாக ஒளி வீசித் திகழ்ந்தது. சாலைகள், சாலைப் பாலங்கள், பேருந்து நிலையம், வீட்டுவசதி, குடிநீர் வழங்கல், நகர்ப்பகுதி அடிப்படை வசதிகள் ஆகியவற்றில் ஆழ்ந்து சிந்தித்துச் செய்யப்பட்ட முதலீடுகள், தஞ்சாவூரை நவீன நகரமாக மாற்றி, இந்நாள் தமிழ் மக்களின் பேரார்வத்தையும், எழுச்சியையும் முழுவதுமாகப் பிரதிபலிக்கச் செய்திட உதவியுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டில் பேசுகின்றபோது, தமிழில் தொன்றுதொட்டு இருந்துவரும் இயல், இசை, நாடகம் என்கிற முத்தமிழ்ப் பகுப்புடன், நான்காவதாக 'அறிவியல் தமிழ்' என்னும் பகுப்பினையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், வருங்கால வளமை, அறிவியல் தமிழ் வளர்ச்சியில்தான் உள்ளது என்றும் வலியுறுத்தினார். தமிழ்மொழி, பண்பாடு ஆகியவற்றை மேம்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்பாக வகுத்திட்ட ஒன்பது அம்சச் செயல் திட்டம் ஒன்றை அறிவித்தார். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இம் மாநாட்டில் அறிவித்த "இன்றும் தமிழ், என்றும் தமிழ்" என்ற முழக்கம், நவீனகாலத் தமிழ் உணர்வில் பொங்கிப் பெருகும் எழுச்சியையும் புதுமைப் பொலிவையும் பிரதிபலிக்கிறது.

10. தமிழ் நாட்டுத் திரைப்படத் தொழில், இந்நாட்டிலுள்ள மிகப் பெரிய தொழில்களில் ஒன்றாகும். இது ஏராளமான பேருக்கு வேலை

வாய்ப்பை அளிக்கிறது. டாக்டர் ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர் 87 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 24.67 கோடி செலவில் அமைக்கப்பட்டது. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31-8-94 ஆம் நாளில் திறந்து வைத்தார். இத்திரைப்பட நகரில் பன்னாட்டுத் தரத்தில் அமைந்த திரைப்படத் தயாரிப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன. இங்கு, சீர்வளி வசதி பெற்ற திரைப்படத் தயாரிப்பு நிலையங்கள், நவீன தொழில் நுட்பத் திறனுடைய திரைப்படக் கருவிகள், மீள் ஒலிப்பதிவு அரங்கு, கவர்ச்சிகரமாக அமைந்த நிரந்தர அரங்கமைப்புகள், வெளிப்புறப்படப்பிடிப்பு இடங்கள் ஆகியன அமைந்துள்ளன. இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களுடைய நீண்டகாலத் தேவை, இத்திரைப்பட நகரை நிறுவியதன் மூலம் நிறைவு செய்யப்பட்டது. இது இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று போற்றப்படுகிறது. இது, நாட்டிலேயே சென்னையை திரைப்படத் தயாரிப்பு முன்னோடி நகராக அழைக்க வழி வகுத்துள்ளது.

11. 1994-95 ஆம் ஆண்டில் சாதனையளவாக ரூ. 2750 கோடி திட்ட ஒதுக்கீட்டினைப் பெறுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட சிறப்பு முயற்சிகளைப் பேரவை உறுப்பினர்கள் யாவரும் நன்கு அறிவர். ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டு இலக்கை எய்திட இந்த அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், நமது நபர்வாரி திட்ட ஒதுக்கீடு தேசிய சராசரி அளவைக் காட்டிலும் உயர்வாக இருக்கும். சென்ற மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டினை விஞ்சியதன் மூலம், பொறாமைப் படத்தக்க சாதனையைத் தமிழ்நாடு புரிந்துள்ளது. பல மாநிலங்கள் தங்களுடைய ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை எய்த முடியாமல் இருந்த நிலையில், நமது மாநிலம் இச்சாதனையை எய்த முடிந்துள்ளது. இவ்வாறாகத் தமிழ்நாடு ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்கான ஒதுக்கீடுகளை உண்மையில் பாதுகாத்தும், அதே சமயம், தன் நிதி நிலைமையையும் நன்னிலையில் பேணிக்காத்தும் 1991-92-லிருந்து ஒவ்வோராண்டும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டினை விஞ்சுகின்ற சாதனையைத் தொடர்ந்து படைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 20-1-95 அன்று மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவரை சந்தித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அளித்த வாக்குறுதியைத் திறம்பட நிறைவேற்றிச் சாதனை படைத்துள்ளமைக்காத் திட்டக்குழுத் துணைத் தலைவர் அவரைப் பெரிதும் பாராட்டியுள்ளார். மாநிலம், கடந்த காலத்தில் ஆற்றிய சாதனை காரணமாகவே, 1995-96-க்கான மாநிலத் திட்ட ஒதுக்கீட்டினை ரூ. 3200 கோடி என நிர்ணயிக்க முடிந்தது. இந்த ஏற்பளிப்பைப் பெற்றதன் மூலம், எட்டாம்

ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ. 10,200 கோடி, குறித்த தொகையளவால் மட்டுமின்றி, பணவீக்கத்தை உள்ளடக்கி வரும் உண்மையான தொகையளவாலும் எய்தப்படும் என்று நாம் உறுதியாக நம்பலாம். கூர்த்த மதியுடன் நிதி நிருவாகம் செய்வதற்கு இடையீடின்றி வலியுறுத்தி வந்த காரணத்தாலும், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் பணியைத் தொடர்ந்து கண்காணித்து வந்ததாலும் இவ்வியத்தகு சாதனையை எய்த முடிந்துள்ளது.

12. மாநிலம் 1994 நவம்பர், டிசம்பரில் பெய்த பெரும் மழையாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட போதிலும், உணவு உற்பத்தியில் புதிய சாதனைகளை நிகழ்த்த வேண்டுமென்ற குறிக்கோளை உழவர்கள் சிறப்பான முறையில் செயற்படுத்தியுள்ளனர். தரமான வேளாண்மை இடுபொருள் வழங்கவும், உரிய காலத்தில் பாசன வசதியளிக்கவும், மண்வள, விதைத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தவும், உரிய நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட செயல்திட்டமும், இவற்றுடன் சிறப்பான முறையில் அமைந்த விரிவாக்கப் பணிகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன. நமது மாநில விவசாயிகள் 100 இலட்சம் டன் என்ற உணவு தானிய உற்பத்தி இலக்கையும் விஞ்சிட முனைந்துள்ளதன் மூலம் அவர்கள் நம்முடைய பெரும் பாராட்டுக்கு உரியவர்களாகிறார்கள். அரிசி உற்பத்தி 85 இலட்சம் டன் என்ற அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கரும்பு உற்பத்தி முன் எப்போதுமில்லாத அளவிற்கு 265 இலட்சம் டன் என்ற அளவை எட்டும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 14.75 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்குமென்றும், பயறுவகை உற்பத்தி 4 இலட்சம் டன்னாக இருக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பருத்தி உற்பத்தி 6.60 இலட்சம் பேலாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. உழவர்களுக்கு அதிக அளவு பயனளிக்கும் வகையிலமைந்த வேளாண்மை விலைக் கொள்கைகளும், கொள்முதல் கொள்கைகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து வகை நெல்லுக்கும் உரிய கொள்முதல் விலைகள் 1-9-1994 முதல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 30 அளவுக்கு உயர்த்தப்பட்டன. கரும்புக்கான மாநில அரசின் விலை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 525 ஆக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது. மிகுந்த நிதி இடர்ப்பாடு இருந்து வந்த சூழ்நிலையிலும் கூட, இவ்வரசு உழவர் பெருமக்கள் பெரும்பயன் அடையும் வகையில் அவர்களுக்குத் தொடர்ந்து எவ்விதத் தடுமாற்றமுமின்றி இலவச மின்சாரத்தை வழங்கி வந்துள்ளது. விவசாயத் துறையில் எல்லா நிலையிலும் வளம் கொழித்தது என்பது மிகவும் மனநிறைவளிக்கிறது. இத்துறை நம்மைப் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் முன்னோடி ஆற்றலாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. இவ்வரசு, வரும் ஆண்டில், விவசாயத்

1995 மார்ச் 14]

துறையில் உயரிய வளர்ச்சி எய்தும் பொருட்டுப் போதுமான ஆதரவுப் பணிகளுடன் செயற்படுத்தப்படுகின்ற, பயன்பாட்டு நோக்கில் அமைந்த இக்கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளும். தமிழ்நாட்டில் விவசாயத் துறையின் வளமைக்குக் காவிரி ஆற்றில் போதுமான அளவு தண்ணீர் வருவது முக்கியமானதாகும். காவிரி நதி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையில் இடம் பெற்றுள்ள விதித்துறைகளை கர்நாடக அரசு வரும் பருவத்தில் செயல்படுத்தும் என்று நாம் நம்புகிறோம். மேலும், வருகின்ற பருவத்தில் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்ற உறுதி செய்யுமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம்.

13. தொழில் உற்பத்திக் குறியீடு, தமிழ்நாட்டில் தொழில் உற்பத்தி 1994-95-ல் மீண்டும் வலுவாகப் புத்துயிர் பெற்றுள்ளதைக் காட்டியுள்ளது. 1994 செப்டம்பர் இறுதியுடன் முடிவடைந்த அரையாண்டில், அது 5.1 சதவீத வளர்ச்சியைக் காட்டியுள்ளது. 1993-94 ஆம் ஆண்டுக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி வெளியிட்ட "தொழில் வளர்ச்சிக்கு வங்கியின் பணிகள் குறித்த அறிக்கை", புதிய தொழில்களுக்குக் கடன் அனுமதித்தல், வழங்குதலைப் பொறுத்தவரை, இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாவது இடத்தில் இருந்து வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும், அந்த ஆண்டில், கடன் உதவிகள் வழங்குவதில் இந்தியாவின் 18 மாநிலங்களைச் சேர்ந்த அரசு நிதியுதவிக் கழகங்களின் 12 மாநிலங்களின் நிதியுதவிக் கழகங்கள் பின்னடைவு நிலையில் இருந்த சமயத்தில், அனைத்து மாநிலங்களிலும் மிக உயர்ந்த அளவாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கிய கடன் அனுமதிகள் 54.8 சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ளது என்றும் அந்த அறிக்கை காட்டுகிறது. இச்சாதனையின் மூலம், 'டிக்' நிறுவனம் தொழிற்கடன் அனுமதியில் அனைத்திந்திய அளவில் 4 ஆம் இடத்திலிருந்து 2 ஆம் இடத்திற்கு உயர்ந்துள்ளது. பொருளாதாரக் கொள்கையைத் தாராளமாக்கியதைத் தொடர்ந்து எழுந்துள்ள கடும்போட்டிகள் நிலவும் சூழ்நிலைகளில், மாநில அளவிலான சீர்திருத்தங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு மாநிலத்திற்குக் குறிப்பான செயல் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார். இச்செயல் திட்டத்தில், சிறப்பான, தரமான அடிப்படை வசதிகள் செய்துதருதல், தொழில்கள் தொடங்குவதற்கு விரைந்து அனுமதிகள் வழங்குவதற்கான நிருவாக அமைப்பை உருவாக்குதல், நிலம், நீர், மின்சக்தி ஆகியவற்றை எளிதில் கிடைக்கச் செய்தல், பிற மாநிலங்களுடன் ஒப்பிட, நமது மாநிலம் எந்தெந்தத் தொழில் தொகுதிகளை நிறுவுவதற்குரிய அனுகூலங்களைப் பெற்றுள்ளதோ, அத்தகைய குறிப்பிட்ட

தொழில் தொகுதிகளை இங்கு நிறுவி வளர்த்தல், தொழில் வளர்ச்சிக்கு உகந்த தொழில் நல்லுறவுச் சூழலை வளர்த்தல், தொழில் நுட்ப மனிதவளத்தை மேம்படுத்தல், நிலையான நிதிக் கொள்கை, நகர்ப்பகுதி அடிப்படை வசதியையும் வீட்டு வசதியையும் உருவாக்குதல் ஆகியவை அடங்கும். தற்போது உருவாகி வரும் தொழில்துறைப் போட்டிகள் நிலவும் சூழ்நிலையில், மாநிலத்தின் நிலையை உயர்த்துவதற்கு மாநில அரசு பல்வேறு தொழில் குழுக்களின் பிரதிநிதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தித் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறது.

14. புதிய தொழில்களை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதை விரைவுபடுத்தும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளும் வழங்கும் வகையில், உயர்நிலைக் குழு ஒன்று 1995 ஜனவரியில் ஏற்படுத்தப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான இக்குழு ரூ. 50 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்படும் புதிய பெருந்திட்டங்களுக்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்கும். சிறு தொழில்கள், மிகச் சிறிய தொழில்களுக்கான அனுமதிகளை விரைந்து அளிக்க மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

15. நாட்டின் "மோட்டார் தொழில் தலைநகர்" என்ற பெருமையை சென்னைக்கு மீண்டும் பெற்றுத்தர இந்த அரசு விழைகிறது. இத்துறையில் புதிய முதலீடுகளைத் திரட்டித் தருவதில், இந்த அரசு தன்னாலியன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளும். அண்மையில் புதிய கார் தயாரிப்பு குறித்த திட்டங்கள் சில தொழிலதிபர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில் கார் தயாரிப்புத் தொழிற்சாலைகளை நிறுவுமாறு கார் தயாரிப்பாளர்களை இந்த அரசு தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறது.

16. மாநிலத்தில் வெளிநாட்டார் நேரடியாக முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், தொழில் நகரமாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள சென்னை தொழில் பூங்கா, சென்னைக்கருகே சோளிங்கநல்லூரில் 1500 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்படும். இத்திட்டத்திற்கு திருவாளர்கள் "ஸ்பிக்" நிறுவனமும், பாலாஜி குரூப் நிறுவனமும் உள்ளூர் உடனுழைப்பாளர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு உடனுழைப்பாளர்களின் பட்டியல் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் 1995 ஜனவரியில் மனையை நேரில் பார்வையிட்டனர். தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள தொழில் நகரங்களுடன் ஒப்பிட, மிகச் சிறந்த தொழில் பூங்கா எனக் குறிப்பிடத்தக்க அளவுக்கு வசதிகள் அனைத்தையும்

கொண்டதாக இதனை நிறுவுவதே நமது நோக்கமாகும். ஊக்குவிப்புப் பணியில் அரசு ஆற்றவிருக்கும் பங்கின் ஒரு பகுதியாக ரூ. 20 கோடி செலவில் 211 ஏக்கர் பரப்பளவில் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா ஒன்று புதிதாகக் கும்மிடிப்பூண்டியில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் செய்யாற்றில் 600 ஏக்கர் பரப்பளவில் மொத்தம் ரூ. 17.80 கோடி செலவில் புதிய தொழில் பேட்டை ஒன்றை நிறுவும் பணியை "சிப்காட்" நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கை கொண்டானிலும், புதிய தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு வாக்களித்திருந்த நிதியுதவி முழுமையாகப் பெறப்படாத நிலையிலும், தமிழ்நாடு தொழில் அடிப்படைக் கட்டமைப்பு நிறுவனம் (டாசிட்) அவற்றை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டையிலும், தருமபுரி மாவட்டத்தில் பருகூரிலும், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஊத்துக்கோட்டையிலும் புதிய தொழில் வளர்ச்சி மையங்களை நிறுவ டாசிட் நடவடிக்கை எடுத்துவருகிறது. இந்தப் பெரிய தொழில் வளாகங்கள், புதிய முதலீடுகளுக்கு முழுமையாக மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளை வழங்கும்.

17. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய பெட்ரோலியம்-இயற்கை எரிவாயு இணை அமைச்சரான திரு. சதீஷ் சர்மாவுடன் சென்னையில் 8-2-1995 அன்று நடத்திய பேச்சுவார்த்தையில் தென் மாநில எரிவாயு இணைப்பு மையம் ஏற்படுத்துவது பற்றி விவாதித்தார். தென் மாநில எரிவாயு இணைப்பு மையத்தை ஏற்படுத்த விரைவில் நடவடிக்கை எடுப்பதாக மத்திய இணை அமைச்சர் உறுதி அளித்தார்.

18. எரிசக்தித் துறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தமிழ்நாட்டில் 1992 அக்டோபர் முதல் மின்வெட்டு அறவே இல்லை. இம்மகிழ்ச்சிகரமான நிலை மாநிலத்தில் புதிய தொழில்களைத் தொடங்கத் தொழிலதிபர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இந்த மகிழ்ச்சி ததும்பும் நிலை வருங்காலத்திலும் தொடர வேண்டும் என்பதற்காக இவ்வரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. வடசென்னை அனல் மின் திட்டத்தின் 210 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட முதல் பிரிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15-2-95 அன்று தொடங்கி வைக்கப்பட்டது என்பதை இப்பேரவையின் உறுப்பினர்கள் அறிவர். இது ஒரு குறிப்பிடத்தக்க அருஞ்சாதனையாகும். இந்த அனல் மின் திட்டத்தின் 210 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாவது, மூன்றாவது பிரிவுகள், முறையே 1995 மே மாதத்திலும், அக்டோபர் மாதத்திலும்

தொடங்கி வைக்கப்படும் என்பது இதனைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொன்றும் 30 மெகாவாட் வீதம் மொத்தம் 120 மெகாவாட் உற்பத்தித் திறன் உடைய 4 பிரிவுகள் அடங்கிய, எரிவாயுவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் பேசின்பாலம் அனல் மின் திட்டம் 1995-96-இல் முழுமையாகச் செயற்பட்டு மின் உற்பத்தி தொடங்கும். இத்திட்டத்தின் கட்டுமானப் பணி 1992-93-இல் தொடங்கப்பட்டு இவ்வளவு விரைவில் முழுமை பெற இருப்பது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். தொடர்ந்து மின் சக்திப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க, மின் சக்தி மேம்பாடு குறித்த நீண்ட காலத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டும் என்பதை இவ்வரசு அறியும். இந்த நோக்கத்துடன் தனியார் துறையில் சில புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. திருவாளர்கள் எஸ்.டி. - சி.எம்.எஸ். (ST-CMS) நிறுவனத்தால் ஏற்படுத்தப்படவுள்ள, பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 250 மெகாவாட் திறனுள்ள திட்டத்திற்குத் தேவையான எதிர் உத்தரவாதத்தை மத்திய அரசு விரைவில் அளிக்குமானால், திட்டத்தை உடனடியாகத் தொடங்க இயலும். கூட்டுத் துறையில், ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்க மின் உற்பத்தித் திட்டத்தின் நிதி வளவாய்ப்பு குறித்து விரைவில் விரிவாக இறுதி மதிப்பீடு செய்யப்படும். கடலூரில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 1320 மெகாவாட் திறனுள்ள அனல்மின் உற்பத்தி நிலையத்தையும் வடசென்னையில், நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 1000 மெகாவாட் திறனுள்ள (நிலை-II) அனல்மின் உற்பத்தி நிலையத்தையும் மற்றும் 500 மெகாவாட் திறனுள்ள (நிலை-III) அனல் மின் உற்பத்தி நிலையத்தையும், தூத்துக்குடியில், நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 500 மெகாவாட் திறனுள்ள அனல்மின் உற்பத்தி நிலையத்தையும், ஸ்ரீமுஷ்ணத்தில் 250 மெகாவாட் பழுப்பு நிலக்கரி அனல்மின் உற்பத்தி நிலையத்தையும் ஏற்படுத்த உடன்படிக்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த அனல் மின் உற்பத்தி நிலையங்கள் மொத்தம் 16,065 கோடி ரூபாய் முதலீட்டை உள்ளடக்கியவையாகும். கும்மிடிப்பூண்டியில் 1000 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தையும், தூத்துக்குடிக்கு அருகில் வேம்பாரில் 2000 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தையும் பிள்ளைப் பெருமாள் நல்லூரில் 300 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தையும் ஏற்படுத்தவும் உடன்படிக்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட இந்த மின் உற்பத்தி நிலையங்களில் செய்யப்படவுள்ள முதலீடு ரூ. 12,540 கோடியாக இருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1995 மார்ச் 14]

இவ்வாறு மொத்தம் 29,925 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில், மொத்தம் 7,120 மெகாவாட் திறனுள்ள புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவை தவிர, பேசின்பாலத்தில் 200 மெகாவாட் டீசல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையும், சமயநல்லூரில் 100 மெகாவாட் டீசல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையும், சாமளப்பட்டியில் 100 மெகாவாட் டீசல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையும் அமைப்பதற்கான உடன்படிக்கைகளும் கையெழுத்தாகியுள்ளன.

19. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் இவ்வரசு பெரிதும் வலியுறுத்தியுள்ளது. 100 மெகாவாட் இறுதி நிலைத் திறன் கொண்ட கடல்நீர் வெப்ப ஆற்றல் மின் உற்பத்தி நிலையத்தை மேம்படுத்தவும் உடன்படிக்கை வகுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு காற்றுச் சக்தியைக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் காற்றாலைகளை நிறுவும் முற்போக்குக் கொள்கையை ஏற்கெனவே செயல்படுத்தி 132 மெ.வா. திறனுள்ள காற்றாலைகளை நிறுவியுள்ளது. இத்துறையில் தமிழ்நாடு ஆற்றிய சாதனையின் விளைவாக, காற்றாலைச் சக்தி மேம்பாட்டுக்கான தேசிய விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் எரிசக்தித் துறையில் மத்திய அரசு புதிதாக முதலீடுகள் எதனையும் செய்யவில்லை என்பது கவலையளிக்கத் தக்கதாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையை, மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவரிடம் தெரிவித்து, 2000 மெகாவாட் கூடங்குளம் அணுமின் திட்டம், நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டும் திட்டம் ஆகியவை குறித்து விரைவில் முடிவு எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கான மூலதன நிதியில் முதலீடு செய்வதற்கான விருப்பத்தை தமிழ்நாடு அரசு ஏற்கெனவே தெரிவித்துள்ளது. இந்த இரண்டு முக்கியமான திட்டங்களைத் தொடங்குவது குறித்து மத்திய அரசு விரைவில் முடிவு எடுக்க வேண்டியது அவசியமாகும்.

20. எரிசக்தித் துறையைத் தவிர, விரைவான வளர்ச்சிக்காக ஏனைய முக்கிய அடிப்படை வசதித் துறைகளும் கண்டறியப்பட்டுள்ளன. எண்ணூரில், துணைத் துறைமுகம் உருவாக்கும் பணிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்துவோம். இதற்கான விரிவான வளவாய்ப்பு அறிக்கை தயாரிக்கும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்தி, அதனை ஆழமான, பல்விதச் சரக்குத் துறைமுகமாக மேம்படுத்தும் பணியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும். ரூ. 600 கோடி செலவிலான கடலூர் துறைமுக மேம்பாட்டுப் பணிகள், கடலூர்

அனல்மின் திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படும். நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்தும் பணியை, இந்த அரசு, சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்துடன் சேர்ந்து நிறைவேற்றும். சாலைகள் துறையில், ரூ. 950 கோடி ஒதுக்கீட்டிலான மாநிலச் சாலைகள் குறித்த பெருந்திட்டத்திற்கு உலக வங்கி ஆதரவு அளிப்பதாக உறுதி அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படக் கூடிய சாலைகளைக் கண்டறிந்து உதவ ஆலோசகர் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இத்துடன் விரைவுப் பேருந்து சாலைகள், முக்கியமான புறநகர்ச் சாலைகள் மேம்பாட்டிற்காக இந்த அரசு தனியார் துறையினருடன் விவாதங்கள் நடத்தியுள்ளது.

21. தமிழ்நாட்டில் தொழில் உறவு நிலை 1994-ல் குறிப்பிடத்தக்க அளவிற்கு மேம்பட்டிருந்தது. 1994-ல் மொத்த மனித உழைப்பு நாட்கள் இழப்பு கணிசமான அளவில் 39.2 சதவீதம் குறைந்துள்ளது. அதே நேரத்தில், இம்மாநிலத்தில் தொழில் நுட்பப் பணியாளர்களின் திறனை மேம்படுத்த இந்த அரசு, புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இம்மாநிலத்தில் தொழில் நுட்பப் பணியாளர் கல்வித் திட்டம் ரூ. 76 கோடி செலவிலும் தொழில் பயிற்சி நிறுவனங்களை மேம்படுத்துவதற்கான வாழ்க்கைத் தொழில் கல்விப் பயிற்சித் திட்டம் ரூ. 21.74 கோடி செலவிலும், உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் துறையுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருவதற்கு உறுதி செய்வதன் மூலம், நவீன தொழில் நுட்ப உத்திகள் தொழில் நுட்பப் பணியாளர் பயிற்சிப் பாடத் திட்டங்களில் சேர்க்கப்படும்.

22. சென்னை மாநகரத்திற்கு நீண்ட காலமாக இருந்து வரும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இது, கடந்த காலங்களில் முறையாக முதலீடு செய்யாததன் விளைவேயாகும். மாநகரின் குடிநீர் வழங்கல் பிரச்சினைக்கு நீண்ட கால அடிப்படையில் தீர்வு காண்பதில், இவ்வரசு, உயர் முன்னுரிமை அளித்துள்ளது. கிருஷ்ணா நதி நீரை, சென்னை மாநகருக்குக் கொண்டு வரும் தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர். ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1995 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27 ஆம் நாள் ஐதராபாத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆந்திரப் பிரதேச மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் விவாதித்தார். 1995 டிசம்பருக்குள் குறைந்த அளவு 300 கோடி கன அடி (3 டி.எம்.சி) தண்ணீராவது சென்னை மாநகருக்குக் கிடைக்கும் என்று ஆந்திரப் பிரதேச மாண்புமிகு முதலமைச்சர் உறுதியளித்தார். இறுதியில், இத்திட்டத்திற்காக எடுத்த முயற்சிகளின் பயனை அடையவிருக்கின்றோம் என்று தெரியவந்துள்ள நிலை உண்மையிலேயே மிகுந்த மனநிறைவை

ஏற்படுத்துகிறது. 1995 டிசம்பருக்குள் எதிர்பார்க்கின்ற கூடுதல் நீரைச் சுத்திகரித்து விநியோகம் செய்யும் பணிக்கு அதிக அளவு முதலீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது. நமக்கு 300 கோடி கன அடி நீர் கிடைக்கப் பெறும்போது அதனைச் சுத்திகரிப்பு செய்து விநியோகிக்கும் பணியை 1995 டிசம்பருக்குள் முடிக்கும் வகையில் ரூபாய் 177 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், முடிவாக எதிர்பார்க்கின்ற 1200 கோடி கன அடி கிருஷ்ணா நதி நீரைப் பயன்படுத்த, மொத்தம் ரூபாய் 1231 கோடி முதலீட்டுடனான மூன்றாவது சென்னைக் குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு உலக வங்கியை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. வடகிழக்கு பருவ மழை பொய்த்துவிடும் நிலையில் ஏற்படும் தொல்லையிலிருந்து சென்னைக் குடிநீர் வழங்கல் நிலைக்குக் காப்பளித்து சீரமைக்கும், நீண்டகால முயற்சியின் ஒரு பகுதியாக, புதிய வீராணம் திட்டத்திற்கு உலக வங்கியின் நிதியுதவியை இவ்வரசு ஏற்கெனவே கோரியுள்ளது. உலக வங்கி, இத் திட்டத்தை, முடிவாக 1995 பிப்ரவரித் திங்களில் மதிப்பீடு செய்துள்ளது. மொத்தம் ரூ. 1638 கோடி செலவிலான இத்திட்டம், கூடுதல் நீரை இரும்புக் குழாய்களில் எடுத்துவர வகை செய்வதுடன், வீராணம் ஏரியை முழுவதுமாக மேம்படுத்தவும், சென்னை மாநகர் குடிநீர் விநியோகத் திட்டத்தைச் சீரமைக்கவும் வகைசெய்யும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியதன் பேரில், இத்திட்டத்தில் ஒரு புதிய முக்கிய அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, இத்திட்டம் வழியிலுள்ள கிராமங்களுக்கு மாற்று நீர் வழங்கல் ஏற்பாடு அளிப்பதற்காக, இதற்குப் போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. பயன்படுத்திய நீரை மீண்டும் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு, மாநகரின் கழிவுநீரைச் சுத்திகரிக்க ரூ. 572 கோடி செலவு பிடிக்கும் திட்டம் ஒன்றை மேற்கொள்ள, ரூ. 509 கோடி உதவிகோரி, அண்மையில் ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. கழிவுநீரைச் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துவது இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும். சென்னை மாநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் பிரச்சினையைச் சமாளிக்க வகுக்கப்பட்டுள்ள இந்த விரிவான முதலீட்டுத் திட்டம் குறித்து அறிந்துகொள்வதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

23. மத்திய அரசு செயலுக்குக் கொண்டுவந்துள்ள புதிய பொருளாதாரக் கொள்கை பற்றி தேசிய அளவில் நடைபெற்றுவரும் விவாதம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். புதிய பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக தாராளமயமாக்குதல், ஒழுங்குமுறை

விதிகளை அகற்றுதல். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட பேரளவு பொருளாதார நிலைத் தன்மை ஆகியவற்றை வரவேற்கின்ற, அதே சமயத்தில், புதிய கொள்கைகளும், திட்டங்களும் எந்த ஒரு சூழ்நிலையிலும் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதிக்கக் கூடாது என்னும் நிலையை, இவ்வரசு உறுதியாக மேற்கொண்டுள்ளது. இந்த உறுதியான நம்பிக்கையுடன் தான், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பொது விநியோக முறையில், உணவு தானியங்களின் விலையை மத்திய அரசு உயர்த்தக் கூடாது என்று பல்வேறு தேசிய வளர்ச்சிக் கூட்டங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளார். பொருளாதார வளர்ச்சி மிக வேகமாக நிகழ வேண்டியது அவசியம் என்னும் அதே சமயம், அந்தப் பொருளாதார வளர்ச்சி, ஏழை, எளியோரின் நலனுக்குப் பாதகமாக இருக்கக் கூடாது. பொது விநியோகத் திட்டத்தில், அரிசி விலையை மேலும் உயர்த்தாதிருக்குமாறு இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்துகிறது. பொதுவிநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசி விலை, மத்திய அரசின் வழங்கல் விலையைவிட மிகக் குறைவாக இருக்குமாறு வைத்துவர வேண்டி, ரூ. 440 கோடி அளவிற்கு அரிசி உதவித் தொகைச் சுமையை ஏற்கெனவே இந்த அரசு தாங்கி வருகிறது, இச்சூழ்நிலையில், மத்திய அரசு மேற்கொண்டும் அரிசி விலையை உயர்த்துவதானது, இம்மாநில அரசுக்குத் தாங்கொணா நிதிச் சுமையினை ஏற்படுத்தும். பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி விலையை ஏழை, எளிய மக்களுக்குப் பயனளிக்கின்ற வகையில் நிர்ணயிப்பது குறித்து தேசியச் சூழலையொட்டிப் பரிசீலனை செய்ய, தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தை விரைவில் கூட்டுமாறும் இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

24. மாநில அரசுகள் குறிப்பாக, சமூக நலன் குறித்த துறைகளில் ஆற்றும் பங்கினை, மத்திய அரசு புரிந்து கொள்வது என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். இந்தியப் பொருளாதாரத்தில் நிலைத்தன்மையைப் பேணவும் அடிப்படைக் கட்டமைப்புச் சரிக்கட்டல்களைச் செய்யவும் நேரிட்ட சூழலில் பல மாநிலங்கள், பெயரளவிற்குக் கூட, சமூக நலம் சார்ந்த துறைகளுக்குரிய ஒதுக்கீட்டினைப் பாதுகாப்பதில் இடர்ப்பாடுகளை எதிர்ப்பட்டுள்ளன. தமிழ்நாடு, சமூக நலம் சார்ந்த துறைகளுக்குரிய ஒதுக்கீடுகள் உண்மையில் அதிகரிக்குமாறு பார்த்துக்கொண்டு பெருமைப்படுவதற்குரிய சாதனையைப் புரிந்துள்ளது. இவ்வகையில், ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட பயன்களின் அளவுகள் முற்றிலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதனால், பெரும் நிதி இடர்ப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும், இவ்வரசு, ஏழை, எளிய மக்களின் நலனைப் பாதுகாக்க, குறுகிய கால அளவிற்கு அதிகக் கடன்

சுமையை ஏற்க முன்வந்துள்ளது தெரிந்ததே. இத்தகைய கொள்கை முடிவினைத் எடுத்ததன் மூலம், இவ்வரசு பொருளாதாரச் சரிக்கட்டல் முறைகளிலிருந்து எழக் கூடிய, கொடுமைகளிலிருந்து தமிழ் நாட்டு மக்களைக் காக்க முடிந்துள்ளது என்பது இவ்வரசின் உறுதியான நம்பிக்கை. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாட்டினைச் செய்து கொடுத்துள்ளது குறித்து தமிழ்நாடு அரசு பெருமை கொள்ளலாம். இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டில், உணவுக்கு உறுதி, சத்துணவளித்தல், தொடக்கச் சுகாதாரப் பாதுகாப்பு, அனைவர்க்கும் தொடக்கக் கல்வி, ஆதரவற்ற, ஏலாமையுற்ற அனைவர்க்கும் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகள், ஏழை, எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கும் திட்டங்கள், ஏழை, எளியோருக்கு வீட்டு வசதி, உடைகள் வழங்குதல், குடிநீர் வழங்கல் முதலிய அடிப்படை வசதிகள் அளித்தல், நலிந்த பிரிவினர்களாகக் கண்டறியப் பட்டவர்களுக்குச் சிறப்பு உதவித் திட்டம் போன்றவை அடங்கும். ஏழை, எளியோருக்கும், வசதி வாய்ப்பற்றோருக்கும் இத்தகைய விரிவான சமூகப் பாதுகாப்பினை அளிப்பதில் ஏற்பட்ட நிதி நிலை இடர்களைக் கண்டு இந்த அரசு சிறிதும் கலங்கவில்லை.

25. இந்த அரசு, "1998-ல் அனைவர்க்கும் கல்வி" என்ற இலக்கினை எட்ட முடிவு செய்துள்ளது. தேசிய அளவில் இலக்கினை எய்துவதற்குக் குறிக்கப்பட்டுள்ள காலவரையறையைக் காட்டிலும் இம்மாநிலத்தின் இலக்குக் காலவரையறை மிக முன்னதாக அமைந்துள்ளது. உலக வங்கியின் உதவியுடன் கூடிய மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் ரூ. 125.8 கோடி மொத்தச் செலவில் 1994-95-ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முக்கியத் திட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், விழுப்புரம் இராமசாமிப் படையாச்சியார் மாவட்டம், தென்-ஆற்காடு வள்ளலார் மாவட்டம், தருமபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் 14 வயது வரையிலான அனைத்துச் சிறாரையும் சேர்த்துக் கொண்டு, அவர்கள் தொடக்கப் பள்ளியை விட்டு நின்றுவிடாமல் முழுமையாகப் பள்ளிக் கல்வியைப் பெறும் வகையில் தொடர்ந்து பள்ளிகளில் வைத்துக்கொள்ள வகை செய்வது மட்டுமல்லாமல், அவர்கள் கல்வி கற்றலில் குறைந்தபட்சத் தகுதியை எய்தும் பொருட்டு கல்வித் தரத்தின்மீது சிறப்பு நாட்டம் செலுத்துவதாகவும் அமையும். கட்டாயக் கல்வியினை அளிப்பதற்குச் சட்டமொன்றினைக் கொண்டுவரவும் இவ்வரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக 1994 ஜூலைத் திங்களில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வரசு, புதிய நெறி வகுக்கும் இப்புரட்சிகரமான

சட்டத்திற்கு மேலும் காலதாமதம் செய்யாமல் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்த விழைகிறது. இம் மாநிலத்தில் தொடக்கக் கல்வி முறையை வலுப்படுத்தக் கூடுதல் ஆசிரியர்கள் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தற்போது காலியாக உள்ள ஆசிரியர் பதவிகளில் ஆசிரியர்களை நியமிப்பதற்காகத் தேர்வு செய்யும் பணியை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொண்டு வருகிறது.

26. சென்னையை பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படக்கூடிய ஒரு மையமாக உருவாக்குவதற்கான முதல்படியே இங்கு ரூ. 40 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் ஆகும். சென்னை மாநகர் ஏழாவது தெற்காசிய நாடுகள் விளையாட்டுப் போட்டி விழாவை நடத்தும் பெரும் புகழைப் பெறவுள்ளது. 1995 டிசம்பரில் நடைபெற உள்ள இந்த மாபெரும் விளையாட்டுப் போட்டியில், 7 "சார்க்" நாடுகளிலிருந்து 2500 விளையாட்டு வீரர்கள் பங்குபெற உள்ளனர். பல்நோக்கு அகவிளையாட்டு அரங்கம், நீர்விளையாட்டு வளாகம். ஒரு டென்னிஸ் விளையாட்டு அரங்கம், செயற்கைப் புல்தரை ஆக்கி விளையாட்டு அரங்கம் ஆகியவை உள்பட பன்னாட்டுத் தரத்தில் அமையும் உயர் நவீனப் போட்டி விளையாட்டு அடிப்படை வசதிகள் ரூ. 45.56 கோடி செலவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. ரூ. 70 கோடி செலவில், ஒரு நவீன விளையாட்டுக் கிராமம் அமைக்கப்பட்டு வருகிறது. போட்டி விளையாட்டுகளுக்கும், உலகப் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களுக்கும் தொடர்ந்து ஊக்கமளிப்பதற்கு, இந்த அரசு உயரிய முன்னுரிமை அளிக்கும். போட்டி விளையாட்டுகள் குறித்த விரிவான ஒரு கொள்கையை இந்த அரசு விரைவில் அறிவிக்கும்.

27. ஆறு மாதம் முதல் 5 வயது வரையுள்ள சிறார்கள் அனைவருக்கும் முழு அளவில் துணைச் சத்துணவு அளிப்பதில், தமிழ்நாடு, நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்து வளர்ச்சி வட்டாரங்களிலும் உலக வங்கி ஆதரவுடன் கூடிய தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டமும், ஒருங்கிணைந்த சிறார் மேம்பாட்டுப் பணித் திட்டமும் செயல்படுத்துப்பட்டு வருகின்றன. அனைத்து வளர்ச்சி வட்டாரங்களிலும் இத்திட்டங்கள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருவது இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு சிறாருக்கும் வளர்ச்சி கண்காணிக்கப்படுவதற்கும் துணைச் சத்துணவு கிடைப்பதற்கும் உறுதி செய்துள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். இதற்காக நாம் பெருமை கொள்ளலாம். மகளிர் மேம்பாடு குறித்த கொள்கைகளைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இந்தச் சிறப்பாகச் சிந்தித்து வகுத்த கொள்கை, மகளிருக்கு உரிமை அளிக்க வகைசெய்வதுடன்,

அவர்கள் அனைத்து நிலையிலும் மேம்பாடு அடைய வேண்டுமென்பதை நோக்கமாக கொண்டுள்ளது. வாழ்க்கைத் தொழிலில் சுயவேலை வாய்ப்பு வழங்கப்படுவதற்கு ஒரு இலட்சம் மகளிர் பயனடைய வேண்டுமென இலக்கு வகுக்கப்பட்டிருந்த போதிலும். 1.50 இலட்சம் மகளிருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோருக்கான அரசுக் கொள்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1994 டிசம்பரில் வகுத்துள்ளார். இத்தகைய கொள்கையை வகுத்து முன்வைப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. இந்தக் கொள்கைத் திட்டமானது, உடல் ஊனமுற்றோருக்குக் கனிவுடன் ஆதரவு நல்கும் முன்னோடித் திட்டமாகத் திகழ்கிறது. இதனை இப்போது ஏனைய மாநிலங்களும் பின்பற்றி வருகின்றன.

28. கி.பி. 2000 ஆண்டில் "அனைவருக்கும் நல்வாழ்வு" என்ற குறிக்கோளை எய்தும் வகையில் தமிழ்நாடு செயல்பட்டு வருகிறது. பிறப்பு விகிதத்தைப் பொறுத்தமட்டில், கி.பி.2010 ஆம் ஆண்டில் அடைய வேண்டிய தேசியக் குறிக்கோள், ஆயிரத்திற்கு 21 ஆகும். தமிழ்நாடு. 1993 ஆம் ஆண்டிலேயே, அதாவது, தேசியக் குறிக்கோள் ஆண்டிற்கு 17 ஆண்டுகளுக்கு முன்னரே, பிறப்பு விகிதத்தை ஆயிரத்திற்கு 19.2 என்ற அளவிற்குக் கொண்டுவந்து மிகப் பெரிய சாதனை புரிந்துள்ளது. இதே போல, இறப்பு விகிதம் கி.பி.2010 ஆம் ஆண்டில் எய்த வேண்டிய தேசியக் குறிக்கோள் அளவு, ஆயிரத்திற்கு 9 என்றிருக்க, தமிழ்நாடு 1993 ஆம் ஆண்டிலேயே, இறப்பு விகித அளவை ஆயிரத்திற்கு 8 என்று குறைத்துள்ளது. குழந்தை இறப்பு விகிதமும், உயிருடன் பிறந்த ஆயிரம் குழந்தைகளில் 56 என்னும் அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கான அனைத்திந்திய சராசரி அளவு உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் 74 ஆகும். சிறார் நலனுக்கான 15 அம்சத் திட்டங்கள் உள்பட, விரிவான புதிய திட்டங்களைக் கொண்டு வந்து, தமிழ்நாடு குடும்பநலன் குறித்துப் பெரும் சாதனை புரிந்துள்ளது என்பதை இந்த அரசு பெருமையுடன் கூறிக் கொள்ளலாம். இந்நெறியில் மேலும் முனைப்புடன் செயல்பட்டு, குழந்தை இறப்பு விகிதத்தை மேலும் பெருமளவிற்குக் குறைக்க இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும்.

29. 1994-ல் தொடங்கப்பட்ட "டாக்டர் ஜெ. ஜெயலலிதா பள்ளிச் சுகாதாரத் திட்டம்" பெரும் வெற்றியை அடைந்துள்ளது. 62 இலட்சம் சிறார்கள் மருத்துவச் சோதனை செய்யப்பட்டுத் தேவையானவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு 8681 சுகாதாரத் துணை நிலையங்களையும் 1417 தொடக்கச் சுகாதார நிலையங்களையும் கொண்டு இயங்குகின்ற தொடக்க சுகாதாரக் காப்பு ஏற்பாடு குறித்து

[1995 மார்ச் 14

உண்மையில் பெருமை கொள்ளலாம். தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனம் உருவாக்கப்பட்டதையடுத்து மருந்துகள் வழங்கும் பணி முழுவதுமாகச் சீர்படுத்தப்பட்டுள்ளது. முறையாகச் சிப்பம் செய்யப்பட்டு, போதிய அளவிற்கு மருந்துகள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் நோயாளிகளிடையே நம்பிக்கை அதிகரித்துள்ளது. மருத்துவமனைகளில் கருவிகள், சாதனங்களின் இருப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த அரசு, சிறப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. பார்வையின்மை குறித்த தேசியக் கட்டுப்பாட்டுத் திட்டம் ரூபாய் 64 கோடி செலவில் உலக வங்கியின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1995 மார்ச் மாதத்திற்கு முன்னர் 2.5 இலட்சம் பேருக்குக் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்படும். புதிய ஒருங்கிணைந்த கண் காப்புத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதையொட்டி, 1995-96 ஆம் ஆண்டில் 3.5 இலட்சம் பேருக்குக் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்படும். இவ்வாறு விரைவுபடுத்தப்படும் வேகத்தில் கடந்த காலத்தில் செய்து முடிக்கப்படாமல் நிலுவையாக இருந்த கண்புரை சிகிச்சைகளும் 3 ஆண்டுகளில் செய்து முடிக்கப்படும். 1994 ஆம் ஆண்டு மனித உடல் உள்ளுறுப்புகள் மாற்று அறுவைச்சிகிச்சைச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 42/1994) ஏற்றுக்கொள்ளுவதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252(1) ஆம் பிரிவின் கீழ் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. இச்சட்டம், மருத்துவ சிகிச்சை நோக்கத்திற்காக மனித உடல் உள்ளுறுப்புகளை அகற்றுதல், சேமித்து வைத்தல், மாற்று அறுவைச் சிகிச்சை செய்தல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கும், மனித உள்ளுறுப்புகளை வணிக நோக்கில் கையாளுதலைத் தடுப்பதற்கும் வகை செய்கிறது.

30. ஆதி திராவிடர்-பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாடு இந்த அரசு வகுத்துள்ள கொள்கை நிரலில் தலையாய இடம் பெற்றுள்ளது. ஆதி திராவிடர்களுக்கு அடிப்படைத் தேவைகளைச் செய்து தருவதற்கான ஒரு திட்டம் செயல்படுவதை, தொடர்புடைய அமைச்சர்கள் அடங்கிய உயர்நிலை ஒருங்கிணைப்புக் குழு கண்காணித்து வருகிறது. குறித்த கால அளவிற்கு அதாவது, 1996 மார்ச்சுக்கு முன்னர் இத்திட்டம் முடிக்கப் பெறும் வகையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில், குடியிருப்புகளுக்குச் செல்லும் சாலைகள் அமைத்தல், வீட்டு மனைகள் வழங்குதல், இடுகாடுகள் அமைத்தல், இடுகாடுகளுக்குச் செல்லும் பாதைகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வழங்குதல், "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" என்ற திட்டத்தின் கீழ் குடிசைகளுக்கு இலவச மின் விளக்குகள் அமைத்தல் ஆகியன அடங்கும். ஆதி-திராவிடர்களின்

வாய்ப்பை அளிக்கிறது. டாக்டர் ஜெ. ஜெயலலிதா திரைப்பட நகர் 87 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 24.67 கோடி செலவில் அமைக்கப்பட்டது. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 31-8-94 ஆம் நாளில் திறந்து வைத்தார். இத்திரைப்பட நகரில் பன்னாட்டுத் தரத்தில் அமைந்த திரைப்படத் தயாரிப்பு வசதிகள் அளிக்கப்படுகின்றன. இங்கு, சீர்வளி வசதி பெற்ற திரைப்படத் தயாரிப்பு நிலையங்கள், நவீன தொழில் நுட்பத் திறனுடைய திரைப்படக் கருவிகள், மீள் ஒலிப்பதிவு அரங்கு, கவர்ச்சிகரமாக அமைந்த நிரந்தர அரங்கமைப்புகள், வெளிப்புறப்படப்பிடிப்பு இடங்கள் ஆகியன அமைந்துள்ளன. இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களுடைய நீண்டகாலத் தேவை, இத்திரைப்பட நகரை நிறுவியதன் மூலம் நிறைவு செய்யப்பட்டது. இது இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று போற்றப்படுகிறது. இது, நாட்டிலேயே சென்னையை திரைப்படத் தயாரிப்பு முன்னோடி நகராக அழைக்க வழி வகுத்துள்ளது.

11. 1994-95 ஆம் ஆண்டில் சாதனையளவாக ரூ. 2750 கோடி திட்ட ஒதுக்கீட்டினைப் பெறுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட சிறப்பு முயற்சிகளைப் பேரவை உறுப்பினர்கள் யாவரும் நன்கு அறிவர். ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டு இலக்கை எய்திட இந்த அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், நமது நபர்வாரி திட்ட ஒதுக்கீடு தேசிய சராசரி அளவைக் காட்டிலும் உயர்வாக இருக்கும். சென்ற மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டினை விஞ்சியதன் மூலம், பொறாமைப் படத்தக்க சாதனையைத் தமிழ்நாடு புரிந்துள்ளது. பல மாநிலங்கள் தங்களுடைய ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை எய்த முடியாமல் இருந்த நிலையில், நமது மாநிலம் இச்சாதனையை எய்த முடிந்துள்ளது. இவ்வாறாகத் தமிழ்நாடு ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்கான ஒதுக்கீடுகளை உண்மையில் பாதுகாத்தும், அதே சமயம், தன் நிதி நிலைமையையும் நன்னிலையில் பேணிக்காத்தும் 1991-92-லிருந்து ஒவ்வோராண்டும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டினை விஞ்சுகின்ற சாதனையைத் தொடர்ந்து படைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 20-1-95 அன்று மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவரை சந்தித்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அளித்த வாக்குறுதியைத் திறம்பட நிறைவேற்றிச் சாதனை படைத்துள்ளமைக்காத் திட்டக்குழுத் துணைத் தலைவர் அவரைப் பெரிதும் பாராட்டியுள்ளார். மாநிலம், கடந்த காலத்தில் ஆற்றிய சாதனை காரணமாகவே, 1995-96-க்கான மாநிலத் திட்ட ஒதுக்கீட்டினை ரூ. 3200 கோடி என நிர்ணயிக்க முடிந்தது. இந்த ஏற்பளிப்பைப் பெற்றதன் மூலம், எட்டாம்

ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ. 10,200 கோடி, குறித்த தொகையளவால் மட்டுமின்றி, பணவீக்கத்தை உள்ளடக்கி வரும் உண்மையான தொகையளவாலும் எய்தப்படும் என்று நாம் உறுதியாக நம்பலாம். கூர்த்த மதியுடன் நிதி நிருவாகம் செய்வதற்கு இடையீடின்றி வலியுறுத்தி வந்த காரணத்தாலும், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் பணியைத் தொடர்ந்து கண்காணித்து வந்ததாலும் இவ்வியத்தகு சாதனையை எய்த முடிந்துள்ளது.

12. மாநிலம் 1994 நவம்பர், டிசம்பரில் பெய்த பெரும் மழையாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட போதிலும், உணவு உற்பத்தியில் புதிய சாதனைகளை நிகழ்த்த வேண்டுமென்ற குறிக்கோளை உழவர்கள் சிறப்பான முறையில் செயற்படுத்தியுள்ளனர். தரமான வேளாண்மை இடுபொருள் வழங்கவும், உரிய காலத்தில் பாசன வசதியளிக்கவும், மண்வள, விதைத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தவும், உரிய நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட செயல்திட்டமும், இவற்றுடன் சிறப்பான முறையில் அமைந்த விரிவாக்கப் பணிகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன. நமது மாநில விவசாயிகள் 100 இலட்சம் டன் என்ற உணவு தானிய உற்பத்தி இலக்கையும் விஞ்சிட முனைந்துள்ளதன் மூலம் அவர்கள் நம்முடைய பெரும் பாராட்டுக்கு உரியவர்களாகிறார்கள். அரிசி உற்பத்தி 85 இலட்சம் டன் என்ற அளவை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கரும்பு உற்பத்தி முன் எப்போதுமில்லாத அளவிற்கு 265 இலட்சம் டன் என்ற அளவை எட்டும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 14.75 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்குமென்றும், பயறுவகை உற்பத்தி 4 இலட்சம் டன்னாக இருக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பருத்தி உற்பத்தி 6.60 இலட்சம் பேலாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. உழவர்களுக்கு அதிக அளவு பயனளிக்கும் வகையிலமைந்த வேளாண்மை விலைக் கொள்கைகளும், கொள்முதல் கொள்கைகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து வகை நெல்லுக்கும் உரிய கொள்முதல் விலைகள் 1-9-1994 முதல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 30 அளவுக்கு உயர்த்தப்பட்டன. கரும்புக்கான மாநில அரசின் விலை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 525 ஆக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது. மிகுந்த நிதி இடர்ப்பாடு இருந்து வந்த சூழ்நிலையிலும் கூட, இவ்வரசு உழவர் பெருமக்கள் பெரும்பயன் அடையும் வகையில் அவர்களுக்குத் தொடர்ந்து எவ்விதத் தடுமாற்றமுமின்றி இலவச மின்சாரத்தை வழங்கி வந்துள்ளது. விவசாயத் துறையில் எல்லா நிலையிலும் வளம் கொழித்தது என்பது மிகவும் மனநிறைவளிக்கிறது. இத்துறை நம்மைப் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் முன்னோடி ஆற்றலாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது. இவ்வரசு, வரும் ஆண்டில், விவசாயத்

1995 மார்ச் 14]

துறையில் உயரிய வளர்ச்சி எய்தும் பொருட்டுப் போதுமான ஆதரவுப் பணிகளுடன் செயற்படுத்தப்படுகின்ற, பயன்பாட்டு நோக்கில் அமைந்த இக்கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளும். தமிழ்நாட்டில் விவசாயத் துறையின் வளமைக்குக் காவிரி ஆற்றில் போதுமான அளவு தண்ணீர் வருவது முக்கியமானதாகும். காவிரி நதி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையில் இடம் பெற்றுள்ள விதித்துறைகளை கர்நாடக அரசு வரும் பருவத்தில் செயல்படுத்தும் என்று நாம் நம்புகிறோம். மேலும், வருகின்ற பருவத்தில் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்ற உறுதி செய்யுமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்துவோம்.

13. தொழில் உற்பத்திக் குறியீடு, தமிழ்நாட்டில் தொழில் உற்பத்தி 1994-95-ல் மீண்டும் வலுவாகப் புத்துயிர் பெற்றுள்ளதைக் காட்டியுள்ளது. 1994 செப்டம்பர் இறுதியுடன் முடிவடைந்த அரையாண்டில், அது 5.1 சதவீத வளர்ச்சியைக் காட்டியுள்ளது. 1993-94 ஆம் ஆண்டுக்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி வெளியிட்ட "தொழில் வளர்ச்சிக்கு வங்கியின் பணிகள் குறித்த அறிக்கை", புதிய தொழில்களுக்குக் கடன் அனுமதித்தல், வழங்குதலைப் பொறுத்தவரை, இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு தொடர்ந்து மூன்றாவது இடத்தில் இருந்து வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும், அந்த ஆண்டில், கடன் உதவிகள் வழங்குவதில் இந்தியாவின் 18 மாநிலங்களைச் சேர்ந்த அரசு நிதியுதவிக் கழகங்களின் 12 மாநிலங்களின் நிதியுதவிக் கழகங்கள் பின்னடைவு நிலையில் இருந்த சமயத்தில், அனைத்து மாநிலங்களிலும் மிக உயர்ந்த அளவாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கிய கடன் அனுமதிகள் 54.8 சதவீதம் அளவிற்கு உயர்ந்துள்ளது என்றும் அந்த அறிக்கை காட்டுகிறது. இச்சாதனையின் மூலம், 'டிக்' நிறுவனம் தொழிற்கடன் அனுமதியில் அனைத்திந்திய அளவில் 4 ஆம் இடத்திலிருந்து 2 ஆம் இடத்திற்கு உயர்ந்துள்ளது. பொருளாதாரக் கொள்கையைத் தாராளமாக்கியதைத் தொடர்ந்து எழுந்துள்ள கடும்போட்டிகள் நிலவும் சூழ்நிலைகளில், மாநில அளவிலான சீர்திருத்தங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு மாநிலத்திற்குக் குறிப்பான செயல் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார். இச்செயல் திட்டத்தில், சிறப்பான, தரமான அடிப்படை வசதிகள் செய்துதருதல், தொழில்கள் தொடங்குவதற்கு விரைந்து அனுமதிகள் வழங்குவதற்கான நிருவாக அமைப்பை உருவாக்குதல், நிலம், நீர், மின்சக்தி ஆகியவற்றை எளிதில் கிடைக்கச் செய்தல், பிற மாநிலங்களுடன் ஒப்பிட, நமது மாநிலம் எந்தெந்தத் தொழில் தொகுதிகளை நிறுவுவதற்குரிய அனுகூலங்களைப் பெற்றுள்ளதோ, அத்தகைய குறிப்பிட்ட

தொழில் தொகுதிகளை இங்கு நிறுவி வளர்த்தல், தொழில் வளர்ச்சிக்கு உகந்த தொழில் நல்லுறவுச் சூழலை வளர்த்தல், தொழில் நுட்ப மனிதவளத்தை மேம்படுத்தல், நிலையான நிதிக் கொள்கை, நகர்ப்பகுதி அடிப்படை வசதியையும் வீட்டு வசதியையும் உருவாக்குதல் ஆகியவை அடங்கும். தற்போது உருவாகி வரும் தொழில்துறைப் போட்டிகள் நிலவும் சூழ்நிலையில், மாநிலத்தின் நிலையை உயர்த்துவதற்கு மாநில அரசு பல்வேறு தொழில் குழுக்களின் பிரதிநிதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தித் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறது.

14. புதிய தொழில்களை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதை விரைவுபடுத்தும் ஒரு முக்கிய நடவடிக்கையாக, ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளும் வழங்கும் வகையில், உயர்நிலைக் குழு ஒன்று 1995 ஜனவரியில் ஏற்படுத்தப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான இக்குழு ரூ. 50 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்படும் புதிய பெருந்திட்டங்களுக்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்கும். சிறு தொழில்கள், மிகச் சிறிய தொழில்களுக்கான அனுமதிகளை விரைந்து அளிக்க மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

15. நாட்டின் "மோட்டார் தொழில் தலைநகர்" என்ற பெருமையை சென்னைக்கு மீண்டும் பெற்றுத்தர இந்த அரசு விழைகிறது. இத்துறையில் புதிய முதலீடுகளைத் திரட்டித் தருவதில், இந்த அரசு தன்னாலியன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளும். அண்மையில் புதிய கார் தயாரிப்பு குறித்த திட்டங்கள் சில தொழிலதிபர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில் கார் தயாரிப்புத் தொழிற்சாலைகளை நிறுவுமாறு கார் தயாரிப்பாளர்களை இந்த அரசு தொடர்ந்து தொடர்பு கொண்டு வருகிறது.

16. மாநிலத்தில் வெளிநாட்டார் நேரடியாக முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் வகையில், தொழில் நகரமாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ள சென்னை தொழில் பூங்கா, சென்னைக்கருகே சோளிங்கநல்லூரில் 1500 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்படும். இத்திட்டத்திற்கு திருவாளர்கள் "ஸ்பிக்" நிறுவனமும், பாலாஜி குரூப் நிறுவனமும் உள்ளூர் உடனுழைப்பாளர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டு உடனுழைப்பாளர்களின் பட்டியல் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் 1995 ஜனவரியில் மனையை நேரில் பார்வையிட்டனர். தென்கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள தொழில் நகரங்களுடன் ஒப்பிட, மிகச் சிறந்த தொழில் பூங்கா எனக் குறிப்பிடத்தக்க அளவுக்கு வசதிகள் அனைத்தையும்

கொண்டதாக இதனை நிறுவுவதே நமது நோக்கமாகும். ஊக்குவிப்புப் பணியில் அரசு ஆற்றவிருக்கும் பங்கின் ஒரு பகுதியாக ரூ. 20 கோடி செலவில் 211 ஏக்கர் பரப்பளவில் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா ஒன்று புதிதாகக் கும்மிடிப்பூண்டியில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் செய்யாற்றில் 600 ஏக்கர் பரப்பளவில் மொத்தம் ரூ. 17.80 கோடி செலவில் புதிய தொழில் பேட்டை ஒன்றை நிறுவும் பணியை "சிப்காட்" நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கை கொண்டானிலும், புதிய தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு வாக்களித்திருந்த நிதியுதவி முழுமையாகப் பெறப்படாத நிலையிலும், தமிழ்நாடு தொழில் அடிப்படைக் கட்டமைப்பு நிறுவனம் (டாசிட்) அவற்றை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டையிலும், தருமபுரி மாவட்டத்தில் பருகூரிலும், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஊத்துக்கோட்டையிலும் புதிய தொழில் வளர்ச்சி மையங்களை நிறுவ டாசிட் நடவடிக்கை எடுத்துவருகிறது. இந்தப் பெரிய தொழில் வளாகங்கள், புதிய முதலீடுகளுக்கு முழுமையாக மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளை வழங்கும்.

17. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய பெட்ரோலியம்-இயற்கை எரிவாயு இணை அமைச்சரான திரு. சதீஷ் சர்மாவுடன் சென்னையில் 8-2-1995 அன்று நடத்திய பேச்சுவார்த்தையில் தென் மாநில எரிவாயு இணைப்பு மையம் ஏற்படுத்துவது பற்றி விவாதித்தார். தென் மாநில எரிவாயு இணைப்பு மையத்தை ஏற்படுத்த விரைவில் நடவடிக்கை எடுப்பதாக மத்திய இணை அமைச்சர் உறுதி அளித்தார்.

18. எரிசக்தித் துறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தமிழ்நாட்டில் 1992 அக்டோபர் முதல் மின்வெட்டு அறவே இல்லை. இம்மகிழ்ச்சிகரமான நிலை மாநிலத்தில் புதிய தொழில்களைத் தொடங்கத் தொழிலதிபர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இந்த மகிழ்ச்சி ததும்பும் நிலை வருங்காலத்திலும் தொடர வேண்டும் என்பதற்காக இவ்வரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. வடசென்னை அனல் மின் திட்டத்தின் 210 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட முதல் பிரிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15-2-95 அன்று தொடங்கி வைக்கப்பட்டது என்பதை இப்பேரவையின் உறுப்பினர்கள் அறிவர். இது ஒரு குறிப்பிடத்தக்க அருஞ்சாதனையாகும். இந்த அனல் மின் திட்டத்தின் 210 மெ.வா. உற்பத்தித் திறன் கொண்ட இரண்டாவது, மூன்றாவது பிரிவுகள், முறையே 1995 மே மாதத்திலும், அக்டோபர் மாதத்திலும்

தொடங்கி வைக்கப்படும் என்பது இதனைக் காட்டிலும் குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொன்றும் 30 மெகாவாட் வீதம் மொத்தம் 120 மெகாவாட் உற்பத்தித் திறன் உடைய 4 பிரிவுகள் அடங்கிய, எரிவாயுவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் பேசின்பாலம் அனல் மின் திட்டம் 1995-96-இல் முழுமையாகச் செயற்பட்டு மின் உற்பத்தி தொடங்கும். இத்திட்டத்தின் கட்டுமானப் பணி 1992-93-இல் தொடங்கப்பட்டு இவ்வளவு விரைவில் முழுமை பெற இருப்பது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். தொடர்ந்து மின் சக்திப் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க, மின் சக்தி மேம்பாடு குறித்த நீண்ட காலத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த வேண்டும் என்பதை இவ்வரசு அறியும். இந்த நோக்கத்துடன் தனியார் துறையில் சில புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. திருவாளர்கள் எஸ்.டி. - சி.எம்.எஸ். (ST-CMS) நிறுவனத்தால் ஏற்படுத்தப்படவுள்ள, பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 250 மெகாவாட் திறனுள்ள திட்டத்திற்குத் தேவையான எதிர் உத்தரவாதத்தை மத்திய அரசு விரைவில் அளிக்குமானால், திட்டத்தை உடனடியாகத் தொடங்க இயலும். கூட்டுத் துறையில், ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்க மின் உற்பத்தித் திட்டத்தின் நிதி வளவாய்ப்பு குறித்து விரைவில் விரிவாக இறுதி மதிப்பீடு செய்யப்படும். கடலூரில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 1320 மெகாவாட் திறனுள்ள அனல்மின் உற்பத்தி நிலையத்தையும் வடசென்னையில், நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 1000 மெகாவாட் திறனுள்ள (நிலை-II) அனல்மின் உற்பத்தி நிலையத்தையும் மற்றும் 500 மெகாவாட் திறனுள்ள (நிலை-III) அனல் மின் உற்பத்தி நிலையத்தையும், தூத்துக்குடியில், நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 500 மெகாவாட் திறனுள்ள அனல்மின் உற்பத்தி நிலையத்தையும், ஸ்ரீமுஷ்ணத்தில் 250 மெகாவாட் பழுப்பு நிலக்கரி அனல்மின் உற்பத்தி நிலையத்தையும் ஏற்படுத்த உடன்படிக்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த அனல் மின் உற்பத்தி நிலையங்கள் மொத்தம் 16,065 கோடி ரூபாய் முதலீட்டை உள்ளடக்கியவையாகும். கும்மிடிப்பூண்டியில் 1000 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தையும், தூத்துக்குடிக்கு அருகில் வேம்பாரில் 2000 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தையும் பிள்ளைப் பெருமாள் நல்லூரில் 300 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தையும் ஏற்படுத்தவும் உடன்படிக்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட இந்த மின் உற்பத்தி நிலையங்களில் செய்யப்படவுள்ள முதலீடு ரூ. 12,540 கோடியாக இருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1995 மார்ச் 14]

இவ்வாறு மொத்தம் 29,925 கோடி ரூபாய் நிதியொதுக்கீட்டில், மொத்தம் 7,120 மெகாவாட் திறனுள்ள புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இவை தவிர, பேசின்பாலத்தில் 200 மெகாவாட் டீசல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையும், சமயநல்லூரில் 100 மெகாவாட் டீசல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையும், சாமளப்பட்டியில் 100 மெகாவாட் டீசல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றையும் அமைப்பதற்கான உடன்படிக்கைகளும் கையெழுத்தாகியுள்ளன.

19. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் இவ்வரசு பெரிதும் வலியுறுத்தியுள்ளது. 100 மெகாவாட் இறுதி நிலைத் திறன் கொண்ட கடல்நீர் வெப்ப ஆற்றல் மின் உற்பத்தி நிலையத்தை மேம்படுத்தவும் உடன்படிக்கை வகுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு காற்றுச் சக்தியைக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் காற்றாலைகளை நிறுவும் முற்போக்குக் கொள்கையை ஏற்கெனவே செயல்படுத்தி 132 மெ.வா. திறனுள்ள காற்றாலைகளை நிறுவியுள்ளது. இத்துறையில் தமிழ்நாடு ஆற்றிய சாதனையின் விளைவாக, காற்றாலைச் சக்தி மேம்பாட்டுக்கான தேசிய விருது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் எரிசக்தித் துறையில் மத்திய அரசு புதிதாக முதலீடுகள் எதனையும் செய்யவில்லை என்பது கவலையளிக்கத் தக்கதாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையை, மத்திய திட்டக்குழுவின் துணைத் தலைவரிடம் தெரிவித்து, 2000 மெகாவாட் கூடங்குளம் அணுமின் திட்டம், நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டும் திட்டம் ஆகியவை குறித்து விரைவில் முடிவு எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கான மூலதன நிதியில் முதலீடு செய்வதற்கான விருப்பத்தை தமிழ்நாடு அரசு ஏற்கெனவே தெரிவித்துள்ளது. இந்த இரண்டு முக்கியமான திட்டங்களைத் தொடங்குவது குறித்து மத்திய அரசு விரைவில் முடிவு எடுக்க வேண்டியது அவசியமாகும்.

20. எரிசக்தித் துறையைத் தவிர, விரைவான வளர்ச்சிக்காக ஏனைய முக்கிய அடிப்படை வசதித் துறைகளும் கண்டறியப்பட்டுள்ளன. எண்ணூரில், துணைத் துறைமுகம் உருவாக்கும் பணிகளை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்துவோம். இதற்கான விரிவான வளவாய்ப்பு அறிக்கை தயாரிக்கும் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்தி, அதனை ஆழமான, பல்விதச் சரக்குத் துறைமுகமாக மேம்படுத்தும் பணியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும். ரூ. 600 கோடி செலவிலான கடலூர் துறைமுக மேம்பாட்டுப் பணிகள், கடலூர்

அனல்மின் திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படும். நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்தும் பணியை, இந்த அரசு, சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்துடன் சேர்ந்து நிறைவேற்றும். சாலைகள் துறையில், ரூ. 950 கோடி ஒதுக்கீட்டிலான மாநிலச் சாலைகள் குறித்த பெருந்திட்டத்திற்கு உலக வங்கி ஆதரவு அளிப்பதாக உறுதி அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படக் கூடிய சாலைகளைக் கண்டறிந்து உதவ ஆலோசகர் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இத்துடன் விரைவுப் பேருந்து சாலைகள், முக்கியமான புறநகர்ச் சாலைகள் மேம்பாட்டிற்காக இந்த அரசு தனியார் துறையினருடன் விவாதங்கள் நடத்தியுள்ளது.

21. தமிழ்நாட்டில் தொழில் உறவு நிலை 1994-ல் குறிப்பிடத்தக்க அளவிற்கு மேம்பட்டிருந்தது. 1994-ல் மொத்த மனித உழைப்பு நாட்கள் இழப்பு கணிசமான அளவில் 39.2 சதவீதம் குறைந்துள்ளது. அதே நேரத்தில், இம்மாநிலத்தில் தொழில் நுட்பப் பணியாளர்களின் திறனை மேம்படுத்த இந்த அரசு, புதிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இம்மாநிலத்தில் தொழில் நுட்பப் பணியாளர் கல்வித் திட்டம் ரூ. 76 கோடி செலவிலும் தொழில் பயிற்சி நிறுவனங்களை மேம்படுத்துவதற்கான வாழ்க்கைத் தொழில் கல்விப் பயிற்சித் திட்டம் ரூ. 21.74 கோடி செலவிலும், உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் துறையுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருவதற்கு உறுதி செய்வதன் மூலம், நவீன தொழில் நுட்ப உத்திகள் தொழில் நுட்பப் பணியாளர் பயிற்சிப் பாடத் திட்டங்களில் சேர்க்கப்படும்.

22. சென்னை மாநகரத்திற்கு நீண்ட காலமாக இருந்து வரும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இது, கடந்த காலங்களில் முறையாக முதலீடு செய்யாததன் விளைவேயாகும். மாநகரின் குடிநீர் வழங்கல் பிரச்சினைக்கு நீண்ட கால அடிப்படையில் தீர்வு காண்பதில், இவ்வரசு, உயர் முன்னுரிமை அளித்துள்ளது. கிருஷ்ணா நதி நீரை, சென்னை மாநகருக்குக் கொண்டு வரும் தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர். ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1995 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 27 ஆம் நாள் ஐதராபாத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆந்திரப் பிரதேச மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் விவாதித்தார். 1995 டிசம்பருக்குள் குறைந்த அளவு 300 கோடி கன அடி (3 டி.எம்.சி) தண்ணீராவது சென்னை மாநகருக்குக் கிடைக்கும் என்று ஆந்திரப் பிரதேச மாண்புமிகு முதலமைச்சர் உறுதியளித்தார். இறுதியில், இத்திட்டத்திற்காக எடுத்த முயற்சிகளின் பயனை அடையவிருக்கின்றோம் என்று தெரியவந்துள்ள நிலை உண்மையிலேயே மிகுந்த மனநிறைவை

ஏற்படுத்துகிறது. 1995 டிசம்பருக்குள் எதிர்பார்க்கின்ற கூடுதல் நீரைச் சுத்திகரித்து விநியோகம் செய்யும் பணிக்கு அதிக அளவு முதலீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது. நமக்கு 300 கோடி கன அடி நீர் கிடைக்கப் பெறும்போது அதனைச் சுத்திகரிப்பு செய்து விநியோகிக்கும் பணியை 1995 டிசம்பருக்குள் முடிக்கும் வகையில் ரூபாய் 177 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், முடிவாக எதிர்பார்க்கின்ற 1200 கோடி கன அடி கிருஷ்ணா நதி நீரைப் பயன்படுத்த, மொத்தம் ரூபாய் 1231 கோடி முதலீட்டுடனான மூன்றாவது சென்னைக் குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு உலக வங்கியை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. வடகிழக்கு பருவ மழை பொய்த்துவிடும் நிலையில் ஏற்படும் தொல்லையிலிருந்து சென்னைக் குடிநீர் வழங்கல் நிலைக்குக் காப்பளித்து சீரமைக்கும், நீண்டகால முயற்சியின் ஒரு பகுதியாக, புதிய வீராணம் திட்டத்திற்கு உலக வங்கியின் நிதியுதவியை இவ்வரசு ஏற்கெனவே கோரியுள்ளது. உலக வங்கி, இத் திட்டத்தை, முடிவாக 1995 பிப்ரவரித் திங்களில் மதிப்பீடு செய்துள்ளது. மொத்தம் ரூ. 1638 கோடி செலவிலான இத்திட்டம், கூடுதல் நீரை இரும்புக் குழாய்களில் எடுத்துவர வகை செய்வதுடன், வீராணம் ஏரியை முழுவதுமாக மேம்படுத்தவும், சென்னை மாநகர் குடிநீர் விநியோகத் திட்டத்தைச் சீரமைக்கவும் வகைசெய்யும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியதன் பேரில், இத்திட்டத்தில் ஒரு புதிய முக்கிய அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, இத்திட்டம் வழியிலுள்ள கிராமங்களுக்கு மாற்று நீர் வழங்கல் ஏற்பாடு அளிப்பதற்காக, இதற்குப் போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. பயன்படுத்திய நீரை மீண்டும் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு, மாநகரின் கழிவுநீரைச் சுத்திகரிக்க ரூ. 572 கோடி செலவு பிடிக்கும் திட்டம் ஒன்றை மேற்கொள்ள, ரூ. 509 கோடி உதவிகோரி, அண்மையில் ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. கழிவுநீரைச் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துவது இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும். சென்னை மாநகர் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் பிரச்சினையைச் சமாளிக்க வகுக்கப்பட்டுள்ள இந்த விரிவான முதலீட்டுத் திட்டம் குறித்து அறிந்துகொள்வதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

23. மத்திய அரசு செயலுக்குக் கொண்டுவந்துள்ள புதிய பொருளாதாரக் கொள்கை பற்றி தேசிய அளவில் நடைபெற்றுவரும் விவாதம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். புதிய பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக தாராளமயமாக்குதல், ஒழுங்குமுறை

விதிகளை அகற்றுதல். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட பேரளவு பொருளாதார நிலைத் தன்மை ஆகியவற்றை வரவேற்கின்ற, அதே சமயத்தில், புதிய கொள்கைகளும், திட்டங்களும் எந்த ஒரு சூழ்நிலையிலும் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதிக்கக் கூடாது என்னும் நிலையை, இவ்வரசு உறுதியாக மேற்கொண்டுள்ளது. இந்த உறுதியான நம்பிக்கையுடன் தான், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பொது விநியோக முறையில், உணவு தானியங்களின் விலையை மத்திய அரசு உயர்த்தக் கூடாது என்று பல்வேறு தேசிய வளர்ச்சிக் கூட்டங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளார். பொருளாதார வளர்ச்சி மிக வேகமாக நிகழ வேண்டியது அவசியம் என்னும் அதே சமயம், அந்தப் பொருளாதார வளர்ச்சி, ஏழை, எளியோரின் நலனுக்குப் பாதகமாக இருக்கக் கூடாது. பொது விநியோகத் திட்டத்தில், அரிசி விலையை மேலும் உயர்த்தாதிருக்குமாறு இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்துகிறது. பொதுவிநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசி விலை, மத்திய அரசின் வழங்கல் விலையைவிட மிகக் குறைவாக இருக்குமாறு வைத்துவர வேண்டி, ரூ. 440 கோடி அளவிற்கு அரிசி உதவித் தொகைச் சுமையை ஏற்கெனவே இந்த அரசு தாங்கி வருகிறது, இச்சூழ்நிலையில், மத்திய அரசு மேற்கொண்டும் அரிசி விலையை உயர்த்துவதானது, இம்மாநில அரசுக்குத் தாங்கொணா நிதிச் சுமையினை ஏற்படுத்தும். பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி விலையை ஏழை, எளிய மக்களுக்குப் பயனளிக்கின்ற வகையில் நிர்ணயிப்பது குறித்து தேசியச் சூழலையொட்டிப் பரிசீலனை செய்ய, தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தை விரைவில் கூட்டுமாறும் இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

24. மாநில அரசுகள் குறிப்பாக, சமூக நலன் குறித்த துறைகளில் ஆற்றும் பங்கினை, மத்திய அரசு புரிந்து கொள்வது என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். இந்தியப் பொருளாதாரத்தில் நிலைத்தன்மையைப் பேணவும் அடிப்படைக் கட்டமைப்புச் சரிக்கட்டல்களைச் செய்யவும் நேரிட்ட சூழலில் பல மாநிலங்கள், பெயரளவிற்குக் கூட, சமூக நலம் சார்ந்த துறைகளுக்குரிய ஒதுக்கீட்டினைப் பாதுகாப்பதில் இடர்ப்பாடுகளை எதிர்ப்பட்டுள்ளன. தமிழ்நாடு, சமூக நலம் சார்ந்த துறைகளுக்குரிய ஒதுக்கீடுகள் உண்மையில் அதிகரிக்குமாறு பார்த்துக்கொண்டு பெருமைப்படுவதற்குரிய சாதனையைப் புரிந்துள்ளது. இவ்வகையில், ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட பயன்களின் அளவுகள் முற்றிலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதனால், பெரும் நிதி இடர்ப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும், இவ்வரசு, ஏழை, எளிய மக்களின் நலனைப் பாதுகாக்க, குறுகிய கால அளவிற்கு அதிகக் கடன்

சுமையை ஏற்க முன்வந்துள்ளது தெரிந்ததே. இத்தகைய கொள்கை முடிவினைத் எடுத்ததன் மூலம், இவ்வரசு பொருளாதாரச் சரிக்கட்டல் முறைகளிலிருந்து எழக் கூடிய, கொடுமைகளிலிருந்து தமிழ் நாட்டு மக்களைக் காக்க முடிந்துள்ளது என்பது இவ்வரசின் உறுதியான நம்பிக்கை. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாட்டினைச் செய்து கொடுத்துள்ளது குறித்து தமிழ்நாடு அரசு பெருமை கொள்ளலாம். இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டில், உணவுக்கு உறுதி, சத்துணவளித்தல், தொடக்கச் சுகாதாரப் பாதுகாப்பு, அனைவர்க்கும் தொடக்கக் கல்வி, ஆதரவற்ற, ஏலாமையுற்ற அனைவர்க்கும் சமூகப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகள், ஏழை, எளிய மக்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கும் திட்டங்கள், ஏழை, எளியோருக்கு வீட்டு வசதி, உடைகள் வழங்குதல், குடிநீர் வழங்கல் முதலிய அடிப்படை வசதிகள் அளித்தல், நலிந்த பிரிவினர்களாகக் கண்டறியப் பட்டவர்களுக்குச் சிறப்பு உதவித் திட்டம் போன்றவை அடங்கும். ஏழை, எளியோருக்கும், வசதி வாய்ப்பற்றோருக்கும் இத்தகைய விரிவான சமூகப் பாதுகாப்பினை அளிப்பதில் ஏற்பட்ட நிதி நிலை இடர்களைக் கண்டு இந்த அரசு சிறிதும் கலங்கவில்லை.

25. இந்த அரசு, "1998-ல் அனைவர்க்கும் கல்வி" என்ற இலக்கினை எட்ட முடிவு செய்துள்ளது. தேசிய அளவில் இலக்கினை எய்துவதற்குக் குறிக்கப்பட்டுள்ள காலவரையறையைக் காட்டிலும் இம்மாநிலத்தின் இலக்குக் காலவரையறை மிக முன்னதாக அமைந்துள்ளது. உலக வங்கியின் உதவியுடன் கூடிய மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் ரூ. 125.8 கோடி மொத்தச் செலவில் 1994-95-ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முக்கியத் திட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், விழுப்புரம் இராமசாமிப் படையாச்சியார் மாவட்டம், தென்-ஆற்காடு வள்ளலார் மாவட்டம், தருமபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் 14 வயது வரையிலான அனைத்துச் சிறாரையும் சேர்த்துக் கொண்டு, அவர்கள் தொடக்கப் பள்ளியை விட்டு நின்றுவிடாமல் முழுமையாகப் பள்ளிக் கல்வியைப் பெறும் வகையில் தொடர்ந்து பள்ளிகளில் வைத்துக்கொள்ள வகை செய்வது மட்டுமல்லாமல், அவர்கள் கல்வி கற்றலில் குறைந்தபட்சத் தகுதியை எய்தும் பொருட்டு கல்வித் தரத்தின்மீது சிறப்பு நாட்டம் செலுத்துவதாகவும் அமையும். கட்டாயக் கல்வியினை அளிப்பதற்குச் சட்டமொன்றினைக் கொண்டுவரவும் இவ்வரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக 1994 ஜூலைத் திங்களில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வரசு, புதிய நெறி வகுக்கும் இப்புரட்சிகரமான

சட்டத்திற்கு மேலும் காலதாமதம் செய்யாமல் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்த விழைகிறது. இம் மாநிலத்தில் தொடக்கக் கல்வி முறையை வலுப்படுத்தக் கூடுதல் ஆசிரியர்கள் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தற்போது காலியாக உள்ள ஆசிரியர் பதவிகளில் ஆசிரியர்களை நியமிப்பதற்காகத் தேர்வு செய்யும் பணியை ஆசிரியர் தேர்வு வாரியம் மேற்கொண்டு வருகிறது.

26. சென்னையை பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படக்கூடிய ஒரு மையமாக உருவாக்குவதற்கான முதல்படியே இங்கு ரூ. 40 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் ஆகும். சென்னை மாநகர் ஏழாவது தெற்காசிய நாடுகள் விளையாட்டுப் போட்டி விழாவை நடத்தும் பெரும் புகழைப் பெறவுள்ளது. 1995 டிசம்பரில் நடைபெற உள்ள இந்த மாபெரும் விளையாட்டுப் போட்டியில், 7 "சார்க்" நாடுகளிலிருந்து 2500 விளையாட்டு வீரர்கள் பங்குபெற உள்ளனர். பல்நோக்கு அகவிளையாட்டு அரங்கம், நீர்விளையாட்டு வளாகம். ஒரு டென்னிஸ் விளையாட்டு அரங்கம், செயற்கைப் புல்தரை ஆக்கி விளையாட்டு அரங்கம் ஆகியவை உள்பட பன்னாட்டுத் தரத்தில் அமையும் உயர் நவீனப் போட்டி விளையாட்டு அடிப்படை வசதிகள் ரூ. 45.56 கோடி செலவில் உருவாக்கப்பட்டு வருகின்றன. ரூ. 70 கோடி செலவில், ஒரு நவீன விளையாட்டுக் கிராமம் அமைக்கப்பட்டு வருகிறது. போட்டி விளையாட்டுகளுக்கும், உலகப் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களுக்கும் தொடர்ந்து ஊக்கமளிப்பதற்கு, இந்த அரசு உயரிய முன்னுரிமை அளிக்கும். போட்டி விளையாட்டுகள் குறித்த விரிவான ஒரு கொள்கையை இந்த அரசு விரைவில் அறிவிக்கும்.

27. ஆறு மாதம் முதல் 5 வயது வரையுள்ள சிறார்கள் அனைவருக்கும் முழு அளவில் துணைச் சத்துணவு அளிப்பதில், தமிழ்நாடு, நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. இம்மாநிலத்திலுள்ள அனைத்து வளர்ச்சி வட்டாரங்களிலும் உலக வங்கி ஆதரவுடன் கூடிய தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டமும், ஒருங்கிணைந்த சிறார் மேம்பாட்டுப் பணித் திட்டமும் செயல்படுத்துப்பட்டு வருகின்றன. அனைத்து வளர்ச்சி வட்டாரங்களிலும் இத்திட்டங்கள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருவது இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு சிறாருக்கும் வளர்ச்சி கண்காணிக்கப்படுவதற்கும் துணைச் சத்துணவு கிடைப்பதற்கும் உறுதி செய்துள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். இதற்காக நாம் பெருமை கொள்ளலாம். மகளிர் மேம்பாடு குறித்த கொள்கைகளைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இந்தச் சிறப்பாகச் சிந்தித்து வகுத்த கொள்கை, மகளிருக்கு உரிமை அளிக்க வகைசெய்வதுடன்,

அவர்கள் அனைத்து நிலையிலும் மேம்பாடு அடைய வேண்டுமென்பதை நோக்கமாக கொண்டுள்ளது. வாழ்க்கைத் தொழிலில் சுயவேலை வாய்ப்பு வழங்கப்படுவதற்கு ஒரு இலட்சம் மகளிர் பயனடைய வேண்டுமென இலக்கு வகுக்கப்பட்டிருந்த போதிலும். 1.50 இலட்சம் மகளிருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோருக்கான அரசுக் கொள்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1994 டிசம்பரில் வகுத்துள்ளார். இத்தகைய கொள்கையை வகுத்து முன்வைப்பதில் நாட்டிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. இந்தக் கொள்கைத் திட்டமானது, உடல் ஊனமுற்றோருக்குக் கனிவுடன் ஆதரவு நல்கும் முன்னோடித் திட்டமாகத் திகழ்கிறது. இதனை இப்போது ஏனைய மாநிலங்களும் பின்பற்றி வருகின்றன.

28. கி.பி. 2000 ஆண்டில் "அனைவருக்கும் நல்வாழ்வு" என்ற குறிக்கோளை எய்தும் வகையில் தமிழ்நாடு செயல்பட்டு வருகிறது. பிறப்பு விகிதத்தைப் பொறுத்தமட்டில், கி.பி.2010 ஆம் ஆண்டில் அடைய வேண்டிய தேசியக் குறிக்கோள், ஆயிரத்திற்கு 21 ஆகும். தமிழ்நாடு, 1993 ஆம் ஆண்டிலேயே, அதாவது, தேசியக் குறிக்கோள் ஆண்டிற்கு 17 ஆண்டுகளுக்கு முன்னரே, பிறப்பு விகிதத்தை ஆயிரத்திற்கு 19.2 என்ற அளவிற்குக் கொண்டுவந்து மிகப் பெரிய சாதனை புரிந்துள்ளது. இதே போல, இறப்பு விகிதம் கி.பி.2010 ஆம் ஆண்டில் எய்த வேண்டிய தேசியக் குறிக்கோள் அளவு, ஆயிரத்திற்கு 9 என்றிருக்க, தமிழ்நாடு 1993 ஆம் ஆண்டிலேயே, இறப்பு விகித அளவை ஆயிரத்திற்கு 8 என்று குறைத்துள்ளது. குழந்தை இறப்பு விகிதமும், உயிருடன் பிறந்த ஆயிரம் குழந்தைகளில் 56 என்னும் அளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கான அனைத்திந்திய சராசரி அளவு உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் 74 ஆகும். சிறார் நலனுக்கான 15 அம்சத் திட்டங்கள் உள்பட, விரிவான புதிய திட்டங்களைக் கொண்டு வந்து, தமிழ்நாடு குடும்பநலன் குறித்துப் பெரும் சாதனை புரிந்துள்ளது என்பதை இந்த அரசு பெருமையுடன் கூறிக் கொள்ளலாம். இந்நெறியில் மேலும் முனைப்புடன் செயல்பட்டு, குழந்தை இறப்பு விகிதத்தை மேலும் பெருமளவிற்குக் குறைக்க இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும்.

29. 1994-ல் தொடங்கப்பட்ட "டாக்டர் ஜெ. ஜெயலலிதா பள்ளிச் சுகாதாரத் திட்டம்" பெரும் வெற்றியை அடைந்துள்ளது. 62 இலட்சம் சிறார்கள் மருத்துவச் சோதனை செய்யப்பட்டுத் தேவையானவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு 8681 சுகாதாரத் துணை நிலையங்களையும் 1417 தொடக்கச் சுகாதார நிலையங்களையும் கொண்டு இயங்குகின்ற தொடக்க சுகாதாரக் காப்பு ஏற்பாடு குறித்து

உண்மையில் பெருமை கொள்ளலாம். தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனம் உருவாக்கப்பட்டதையடுத்து மருந்துகள் வழங்கும் பணி முழுவதுமாகச் சீர்படுத்தப்பட்டுள்ளது. முறையாகச் சிப்பம் செய்யப்பட்டு, போதிய அளவிற்கு மருந்துகள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் நோயாளிகளிடையே நம்பிக்கை அதிகரித்துள்ளது. மருத்துவமனைகளில் கருவிகள், சாதனங்களின் இருப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த அரசு, சிறப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. பார்வையின்மை குறித்த தேசியக் கட்டுப்பாட்டுத் திட்டம் ரூபாய் 64 கோடி செலவில் உலக வங்கியின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1995 மார்ச் மாதத்திற்கு முன்னர் 2.5 இலட்சம் பேருக்குக் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்படும். புதிய ஒருங்கிணைந்த கண் காப்புத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதையொட்டி, 1995-96 ஆம் ஆண்டில் 3.5 இலட்சம் பேருக்குக் கண்புரை அறுவைச் சிகிச்சை செய்யப்படும். இவ்வாறு விரைவுபடுத்தப்படும் வேகத்தில் கடந்த காலத்தில் செய்து முடிக்கப்படாமல் நிலுவையாக இருந்த கண்புரை சிகிச்சைகளும் 3 ஆண்டுகளில் செய்து முடிக்கப்படும். 1994 ஆம் ஆண்டு மனித உடல் உள்ளுறுப்புகள் மாற்று அறுவைச்சிகிச்சைச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 42/1994) ஏற்றுக்கொள்ளுவதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252(1) ஆம் பிரிவின் கீழ் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. இச்சட்டம், மருத்துவ சிகிச்சை நோக்கத்திற்காக மனித உடல் உள்ளுறுப்புகளை அகற்றுதல், சேமித்து வைத்தல், மாற்று அறுவைச் சிகிச்சை செய்தல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கும், மனித உள்ளுறுப்புகளை வணிக நோக்கில் கையாளுதலைத் தடுப்பதற்கும் வகை செய்கிறது.

30. ஆதி திராவிடர்-பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாடு இந்த அரசு வகுத்துள்ள கொள்கை நிரலில் தலையாய இடம் பெற்றுள்ளது. ஆதி திராவிடர்களுக்கு அடிப்படைத் தேவைகளைச் செய்து தருவதற்கான ஒரு திட்டம் செயல்படுவதை, தொடர்புடைய அமைச்சர்கள் அடங்கிய உயர்நிலை ஒருங்கிணைப்புக் குழு கண்காணித்து வருகிறது. குறித்த கால அளவிற்கு அதாவது, 1996 மார்ச்சுக்கு முன்னர் இத்திட்டம் முடிக்கப் பெறும் வகையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தில், குடியிருப்புகளுக்குச் செல்லும் சாலைகள் அமைத்தல், வீட்டு மனைகள் வழங்குதல், இடுகாடுகள் அமைத்தல், இடுகாடுகளுக்குச் செல்லும் பாதைகள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், குடிநீர் வழங்குதல், “ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு” என்ற திட்டத்தின் கீழ் குடிசைகளுக்கு இலவச மின் விளக்குகள் அமைத்தல் ஆகியன அடங்கும். ஆதி-திராவிடர்களின்

நலனுக்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1994 டிசம்பரில் ஒரு புதிய தொகுப்புத் திட்டத்தை அறிவித்தார். ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் ஆதரவுத் திட்டத்தை ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டு வரும் ஐந்து மாவட்டங்களுடன் மேலும் ஐந்து மாவட்டங்களுக்கு நீட்டித்தல், ஆண்டு வருமானம் ரூ. 50,000 என்னும் வரம்புடன் புதிய சிறப்பு படிப்புதவித் தொகைத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல், 1000 மாணவியர், 1000 மாணவர் பயன்பெறும் தகுதிப்பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருதல், மறைந்த மேயர் சிவராஜ் பெயரில் ரூ. 10 லட்சம் அறக்கட்டளை நிதி ஏற்படுத்தல். தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவித் தொகையை ரூ. 15,000-லிருந்து ரூ. 25,000 ஆக உயர்த்துதல். மற்றும் தொடக்க உதவித் தொகையை ரூ. 85,000-லிருந்து ரூ. 1.25,000 ஆக உயர்த்துதல், கடன் உதவித் தொகையுடன் ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு 1000 லாரிகள் வழங்குதல், 10,000 ஆதி திராவிடர் மகளிருக்குப் பயன் கிட்டும் வகையில் புதிய சுய வேலைவாய்ப்புத் திட்டத்தைச் செயற்படுத்துதல், 30,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பயன்கிட்டும் வகையில் வீடுகளை நிலையுயர்த்தும் திட்டத்தைச் செயற்படுத்துதல், 5 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டத்தை செயற்படுத்துதல், 2000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டி வழங்குதல், 1000 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குச் சமுதாயக் கூடங்கள் கட்டுதல் ஆகியவை இந்தச் சிறப்பு திட்டத்தில் அடங்கும். இத்துடன், ஆதி திராவிடர் மேம்பாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு பணிபுரியும் ஒருவர்க்கு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பெயரில் ஆண்டு தோறும் ரூ. 1 இலட்சம் பரிசு வழங்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்த இத் தொகுப்புத் திட்டங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் நலனுக்காக இந்த அரசு பல்வேறு புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்-சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம், சுயவேலைவாய்ப்பிற்கு ஆதரவு நல்க புதிய கடனுதவிப் பணிகளை மேற்கொண்டுள்ளது. ரூ. 13.81 கோடி செலவில் நரிக்குறவர்கள் உட்பட கிராமப்புற ஏழை மக்களுக்காக வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றை இந்த அரசு தொடங்கியுள்ளது.

32. ஏழை மக்களுக்குக் குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, உடை உள்பட அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் மாநிலத்தின் முதன்மைத் திட்டமாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு கட்டி தருதல் என்ற

நோக்கத்தை எய்தும் வகையில், வீட்டு மனைகள் வழங்கும் பெருந்திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. அண்மையில் எடுத்த ஆய்வின்படி, 1162 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் வசதி இல்லை. இக்குடியிருப்புகளுக்கு 1995 டிசம்பருக்குள் குடிநீர் வழங்க அரசு முயற்சி மேற்கொள்ளும். பொருளாதாரச் சரிக்கட்டல்களுக்கிடையில், ஏழை மக்களுக்கு ஆதரவு அளிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏழை மக்களுக்கு வேட்டி, சேலைகளை இலவசமாக வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். கைத்தறி நெசவாளர்கள் தொழில் செய்து வாழ்க்கை நடத்த உறுதியளித்தல், அதேசமயம் ஏழை, எளிய மக்களுக்கு உடுக்க உடை கிடைக்கச் செய்தல் என்ற இரண்டு நோக்கங்களையும் இத் திட்டம் கொண்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், மொத்தம் ரூபாய் 57 கோடி செலவில், 62.26 இலட்சம் பெண்களுக்கு சேலையும், 61.72 இலட்சம் ஆண்களுக்கு வேட்டியும் வழங்கப்பட்டுள்ளது.

33. தொழிற்சங்க அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு ஆதரவு அளிக்கும் சிறப்புத் திட்டத்திற்கு இவ்வரசு எப்போதும் உயர்ந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. கைத்தறி மேம்பாட்டு நிலையங்கள், தரமான சாயம் தோய்க்கும் பிரிவுகள் ஆகியவற்றை ஏற்படுத்தும் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு நன்கு உதவும் வகையில், கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் புத்தூக்கம் அளிக்க தனியாக ரூ. 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்குத் தறிக்கூடம் இணைந்த வீடுகள் 2000 கட்டிக் கொடுக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20-1-1995 அன்று மத்திய துணித் தொழில் அமைச்சரை டில்லியில் சந்தித்த போது, நூலின் விலையைக் குறைக்க மத்திய அரசும் முனைப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். முதலமைச்சர் அவர்களின் கருத்தை ஏற்றுக் கொண்டு மத்திய அரசும் சிட்டா நூலுக்கான உதவித் தொகையை கிலோ ஒன்றுக்கு ரூ. 15-லிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ. 20 ஆக உயர்த்த ஒப்புக்கொண்டது. பதுக்கலைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல், நூற்பு ஆலைகள் குறிப்பிட்ட நூலை மட்டுமே உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கோட்பாட்டை பின்பற்றச் செய்தல், பருத்தி மற்றும் குறைந்த தர நூல்களின் ஏற்றுமதியைத் தடைசெய்தல் போன்ற முதலமைச்சர் அவர்களின் கருத்துகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க மத்திய அமைச்சர் ஒப்புக்கொண்டார். இத் தலையீட்டினைத் தொடர்ந்து, நிலைமை தற்போது கணிசமான அளவிற்கு மேம்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில், சென்னையில் ஆடை வடிவமைப்புத் தேசிய தொழில் நுட்ப நிறுவனத்தை (National

Institute of Fashion Technology) ஏற்படுத்த மத்திய துணித் தொழில் அமைச்சர் ஒப்புக் கொண்டுள்ளார். மீனவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான புதிய முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொண்டுள்ளது. மீனவர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 4.82 கோடி நிதியொதுக்கத்தில் 1853 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சேமிப்பு-நிவாரணத் திட்டத்தின் கீழ் 1.35 இலட்சம் மீனவர்கள் பயனடைந்துள்ளனர். ரூபாய் 15.88 கோடி செலவில் ஒருங்கிணைந்த கடல் மீனளத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. கட்டுமானத் தொழிலாளர்களின் நலனைக் காக்க, இவ்வரசு, 1994 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதலாம் நாளிலிருந்து புதிய நலத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. பீடித் தொழிலாளர்கள் 1000 பேர் பயனடையும் வகையில் வீட்டு வசதித் திட்டம் ஒன்றை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. வல்லுநர்குழு அறிக்கையின் அடிப்படையில் இம்மாநிலத்தில் கடலோர மீன் பண்ணைகளை நிறுவுதல், நிருவகித்தல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்குச் சட்டம் கொண்டுவர அரசு கருதுகிறது.

34. பொதுமக்களின் நியாயமான தேவைகள், குறைபாடுகள் குறித்து மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்ய, நிருவாகத்தின் பல கட்ட முறையை விடுத்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், நேரடி நடவடிக்கை எடுத்துள்ளார். மிக விரைவாகச் செயல்படவும், தொடர் நடவடிக்கை முறையாக எடுக்கப்படுவதை உறுதி செய்யவும் முதலமைச்சர் தனிப் பிரிவு முழுவதுமாக கணினி மயமாக்கப்பட்டுள்ளது. 1992 மார்ச்சிலிருந்து தொடங்கி முதல் கட்டமாக குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட மாவட்டம் என்று, அனைத்து மாவட்டங்களும் அடங்கும் வகையில் திட்டம் வகுத்துக் கொண்டு, அதற்கேற்ப முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து சென்னையில் மனுக்களைப் பெற்றுக் கொண்டு, பெருமளவிலான மக்களுக்கு உதவிகளை அளித்துள்ளார். இரண்டாவது கட்டமாக, 1992 ஜூலையிலிருந்து தொடங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகவே அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று, ஏழை மற்றும் உதவி தேவைப்படக்கூடிய மக்களின் குறைகளை நேரில் கேட்டு, அவர்களுக்கு உதவிகளை அளித்துள்ளார். மாவட்டங்களுக்குச் செல்லும் இந்தத் திட்டம், 1994 செப்டம்பரில் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. மொத்தத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களுக்கு 46 முறை நேரில் சென்று வந்துள்ளார். 1994-ல் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16 முறை சென்று வந்துள்ளார். இத்திட்டத்தால் 7.74 இலட்சம் மக்கள் பயன் அடைந்துள்ளனர். ரூ. 518.76 கோடி மதிப்பிற்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1994 இல் மட்டும் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் 6.59 இலட்சம் பேருக்கு ரூ. 397.37 கோடி மதிப்புள்ள உதவிகளை நேரடியாக வழங்கியுள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துள்ள இந்த நேரடித் தொடர்புத் திட்டமானது, பொதுமக்களின் குறைகளை அரசு உடனடியாகத் தீர்த்து வைக்கவும், வளர்ச்சிப் பணித்திட்டங்களின் பயன்கள் ஏழை, எளிய வசதி வாய்ப்பற்ற மக்களை உண்மையில் சென்றடையவும் உறுதி செய்துள்ளது.

35. நிருவாகப் பணிச் செயற்பாட்டில் உயர்ந்த தரம் பேணி வரப்படுவதற்கு உறுதி செய்வதற்காக இந்த அரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. அரசின் பல துறைகள், பல பொதுத் துறை நிறுவனங்கள் தேசிய அளவில் விருதுகளைப் பெற்றதன் மூலம் அவற்றின் செயற்பாட்டிற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. தமிழ்நாடு கனிம நிறுவனம், கிரானைட் கற்கள் ஏற்றுமதிக்காகத் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக 1993-94-லிலும் சிறப்பு ஏற்றுமதி விருது வழங்கப் பெற்றுள்ளது. இதைப் போன்றே, அரசு போக்குவரத்து நிறுவனங்களும், உயர்ந்த சாதனை அளவைப் பேணி வந்ததன் மூலம், பல்வேறு பணிச் சாதனைகளுக்காக, தேசிய அளவில் ஆறு விருதுகளைப் பெற்றுள்ளன. வேளாண்மைத் துறை வானவாரி வேளாண்மை மற்றும் நீர்வரத்துப் பகுதி மேம்பாடு ஆகியவற்றில் மிகச் சிறந்த பணி ஆற்றியமைக்காக அத்துறைக்கு மத்திய அரசும் தேசிய உற்பத்தித் திறன் மன்றமும் தகுதிச் சான்றிதழ்களை வழங்கியுள்ளன. தமிழ்நாடு மாநில நிலவள வங்கி 1993-94 ஆம் ஆண்டில், அனைத்திந்திய அளவில் கடன் வழங்கும் பணியில் ஆற்றிய மிகச் சிறந்த சாதனைக்காகச் சுழற்கோப்பை விருதைப் பெற்றுள்ளது. காற்றுச் சக்தி ஆற்றல் மேம்பாட்டிற்காகத் தன்னிகரற்ற பணி ஆற்றிய வகையில், சிறப்பான தொடர்பு முகவரமைப்பு என்ற பாராட்டைத் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் பெற்றுள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்தின் தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின்நிலையங்கள், மின் நிலைய உயர் உற்பத்தி மின் சுமைத்திறனை (High Plant Load Factor) எய்திய சாதன்னக்காக மீண்டும் மீண்டும் அனைத்திந்திய அளவிலான பரிசுகளைப் பெற்றுள்ளன. நெசவாளர்களுக்குத் தறிக்கூடம் இணைந்த வீடுகளை கட்டித்தரும் திட்டத்தின் கீழ்க் குறைந்த செலவில் தறிக்கூடம் இணைந்த வீடுகள் கட்டித்தரும் போட்டியில் கைத்தறி-துணித் தொழில் இயக்ககமும், காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் அனைத்திந்திய அளவில் முதற் பரிசை வென்றுள்ளன. தமிழ்நாடு காவல் துறை நவீன அறிவியல் முறையிலான புலனாய்வுத் துறையில் தனது ஆற்றலை மெய்ப்பித்துள்ளது. 1995 சனவரியில் நடைபெற்ற அனைத்திந்தியக் காவலர் பணிப் போட்டிகளில், புலனாய்வுக்குத் துணை

புரியும் அறிவியல் சாதனங்களுக்கான போட்டிப் பிரிவில், ஒட்டு மொத்த முதலிடத்தை வென்றது. மகளிரிடையே சிக்கனத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, மகளிர் சேமிப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அனைத்து மாநிலங்களிலும் முதலிடத்தைப் பெற்றது. அரசு செவ்விய முறையில் தேவை உணர்ந்து செயல்படுகின்ற நிருவாகத்தை வழங்குவதற்கு என்றும் போல் தொடர்ந்து பொறுப்பேற்றுச் செயல்படும்.

36. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகள் அறுவடையில் நல்ல விளைச்சல் கண்டுள்ளதாலும், தன்னிறைவுத் திட்டத்தின் வாயிலாகப் போதிய அடிப்படைப் பணி வசதிகளைப் பெற்றுள்ளதாலும், முன்னெப்போதும் கண்டிராத வகையில் வளம் நிறைந்துள்ளன. தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இச்சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ளவாறு மாநிலத் தேர்தல் ஆணையம் ஒன்றும், மாநில நிதிக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரசு 1995 ஜூனில் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்த எண்ணுகிறது. தேர்தல் நடத்துதல் குறித்த விரிவான கால அட்டவணையை வகுத்துத் தருமாறு மாநிலத் தேர்தல் ஆணையத்தை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது.

37. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் இந்த அரசால் 1992 ஜூனில் அறிவிக்கப்பட்டன. உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் முடிவுறாமல் உள்ளன. தேர்தலை நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் 1992 ஆகஸ்டில் தடைவிதித்தது. உயர் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட ஆயம் இது சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகளைப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. அரசு தடையாணையை நீக்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து வருகிறது. சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு வந்த பின்னர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

38. ஒரே சமயத்தில் வளர்ச்சியையும் பெற்றுக் கொண்டு நிலைத் தன்மையையும் பேணி வர முடியும் என்பதைத் தமிழ்நாடு வெற்றிகரமாகச் செயற்படுத்திக் காட்டியுள்ளது. சிறந்த முறையில் சட்டம்-ஒழுங்கைப் பேணிக்காத்தது. விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த அடித்தளமாக அமைந்தது. மாநிலத்தில் விரைவான தொழில் வளர்ச்சியினைப் பெற்றுத் தருவதற்கான புதிய செயல் திட்டம் அனைவராலும் வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை. எந்தச் சூழ்நிலையிலும் ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைமை மோசமாகப் பாதிக்கப்படாதவாறு இந்த அரசு எப்போதும் பார்த்துக் கொள்ளும். அதே சமயத்தில் பயனுள்ள புதிய திட்டங்கள் மூலமாக,

தமிழ்நா...
16 அக் 2000
சென்னை-600 009

ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் உயருமாறு செய்ய இவ்வரசு பாடுபடும்.

39. மிக்க கடுமையான சோதனைகளுக்கிடையேயும், தமிழ்நாட்டை இடையறாத வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல முடியும் என்பதை இவ்வரசு சிறப்பாகச் செயல்படுத்திக் காட்டியுள்ளது. ஏறத்தாழ நான்காண்டு கால அளவில் மாநிலத்தில் அமைதியையும், ஒழுங்கையும் பாதுகாக்க முடியும் என்பதை இந்த அரசு உறுதியாக நிலை நிறுத்தியுள்ளது. மேலும் பல்வேறு நிதி இடர்ப்பாடுகள் இருந்த போதிலும் இவ்வரசு தொடர்ந்து ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுக்கு மிகையாக திட்டச் செலவைச் செய்துள்ளதோடு, நபர் வாரித் திட்ட ஒதுக்கீட்டில், தேசிய சராசரியளவை தமிழ்நாடு விஞ்சுமாறும் செய்துள்ளது. சட்டம்-ஒழுங்கைப் பேணிப் பாதுகாப்பதிலாகட்டும், கடும் நிதி இடர்ப்பாட்டினைச் சமாளிப்பதிலாகட்டும், சமூக ஒருமைப்பாட்டை நிலை நாட்டுவதிலாகட்டும், மாநிலத்தின் உரிமைகளைப் பெற்றுத் தருவதிலாகட்டும் இவ்வாறு எத்தனை பிரச்சினைகள் எதிர்ப்பட்ட போதிலும், அவை அத்தனையையும் இவ்வரசு வெற்றிகரமாகச் சமாளித்துள்ளது. தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்ப்பதிலும், சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதிலும் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. தற்போது புதிய திட்டங்களை வகுத்து அவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் தமிழ்நாட்டின் திறமையை வெளிநாட்டு நிறுவனங்கள் அனைத்தும் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளன. புதிய முதலீடுகளைச் செய்யவும் வர்த்தக உறவை வலுப்படுத்தவும் பல வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள் நமது மாநிலத்திற்கு வருகை தந்துள்ளன.

40. தமிழ்நாட்டை விரைந்த வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல இவ்வரசு கற்பனைத் திறனுடனும், துணிவுடனும் எடுத்த பல நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள், தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் பொருளாதார மேம்பாட்டிற்கு முன் மாதிரியாகத் திகழ்ந்து படைத்துள்ள தன்னிகரற்ற சாதனையை நிலைப்படுத்துவதற்கு உறுதி செய்ய இவ்வரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். அனைவரும் வளர்ச்சியும் வளவாழ்வும் பெற்றுத் திகழ வேண்டும் என்பது இவ்வரசின் தாரக மந்திரமாகும். மேலும், இவ்வரசு ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை நிலை மேம்பாடடைய வேண்டும் என்பதில் அசைக்க முடியாத உறுதியுடன் பாடுபடும். இம் மாமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் பொருளார்ந்த முறையில் அமைந்து எதிர்காலத்தில் இம்மாநிலம் தொடர்ந்து வளம்பெறச் செய்வதற்கு உதவுமென்பதில் எனக்கு ஐயம் ஏதுமில்லை. இம்மாமன்றத்தில் நீங்கள் முன் வைக்கும் விவாதங்கள் ஆக்கபூர்வமானதாகவும், சமநிலையுடையதாகவும், பயனுடையதாகவும் அமையும் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

வணக்கம்.

3342